2917

T.N.L.A. Debates

Official Report

VOL 20 (C) No 1

1st April 1986

V211,31 N86
N86.20.1
136442

வெளியீடு 14-10-1986

Issued 14-10-1986

882/87.
2917

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 1, 1986-தொகுதி 20 எண். 1

Tuesday the April 1, 1986-Volume 20 No. 1

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009**

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras-600009**

[Price Rs. 3

விலை ரூ. 3]

136462

## உள்ளடக்கம்.

**1 –4–1986**

பக்கங்கள்.


1. வினாக்கள்—விடைகள்— உடுக்குறியிட்ட வினாக்கள் — 1—33
2. ஒழுங்குப் பிரச்னைகள் அனுமதிப்பது குறித்து — 34—40
3. அறிவிப்புகள்—
   - (அ) அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே. செ.) — 40
   - (ஆ) உறுப்பினர்கள் திரு. ஆர். செங்காளியப்பன், திரு கு. ரமணி ஆகியோர் விடுதலை செய்யப்பெற்றது. — 68
   - (இ) 1986–87ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளை மொழிதல் (ஆ.இ.) — 73
4. ஒத்தி வைப்புத் தீர்மானம்— மதுரை மாவட்டம் தேவதானப்பட்டியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து. — 40—53
5. கவன ஈர்ப்பு— மூடிக்கிடக்கிற பஞ்சாலைகளைத் திறத்தல். — 53—67
6. அரசினர் சட்ட முன்வடிவு— கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு 1986. — 68—73
7. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—
   - (அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை
   - (ஆ) கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்
   - (இ) கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு — 73—119, 119—203
   - மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து — 73—76, 91, 92, 187—202
   - திரு டி. என். முருகானந்தம் — 77—83
   - *திரு துரை கோவிந்தராசன் — 83—90
   - *திரு ஆ. நடராசன் — 90—96

| | பக்கங்கள். |
|---|---|
| *திரு வே. கு. சின்னசாமி | 97—102 |
| *திரு கே. அன்பழகன் | 102—109 |
| *திரு இரா. சண்முகம் | 109—118 |
| *திரு ஆர். கோவிந்தசாமி | 119—127 |
| திரு கோ. வீரய்யன் | 127—135 |
| திரு எம். அண்ணாதாசன் | 136—143 |
| *திரு பொ. உத்திராபதி | 143—150 |
| திரு ஆதிமூலம் என்கிற தில்லைகாந்து | 150—154 |
| *திரு மு. இரா[illegible]கம் | 154—159 |
| திரு ஏ. தங்கராசு | 159—164 |
| *டாக்டர் அ. பொன்னுசாமி | 164—169 |
| *திரு எஸ். என். இராமசாமி | 169—172 |
| *திரு பி. கே. எம். முத்துராமலிங்கம் | 172—176 |
| *திரு சு. பாலன் | 176—181 |
| திரு மா. சின்னராசு | 181—186 |
| பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 203—204 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்)— இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணி யாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (நிதி அமைச்சர்) — நிதி, வருவாய், பொது நிர்வாகம், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணு வத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (மின்துறைஅமைச்சர்)— மின்சாரம், இரும்பு, எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப் பாடு, எழுது பொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன்: (செய்தி—அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அருந்த அனுமதி வழங்கல், திட்டம், தொல் பொருள் இயல், மற்றும் பயண இசைவுச் சீட்டு.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழில்துறை அமைச்சர்)— பெருந்தொழில்கள். சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப் பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (கல்வி அமைச்சர்)— கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (சட்ட அமைச்சர்)— சட்டம், நீதி மன்றங்கள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப் பட்டவை, சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற் றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள்பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் சர்க்கரைப்பாகு கழிவு.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ் சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (உணவு அமைச்சர்)— உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: (ஆயத்துறை மற்றும் கைத்தறி துறை அமைச்சர்)— மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) ஆயத்துறை, கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: (சத்துணவு அமைச்சர்)— சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்

17. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (வீட்டு வசதித்துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு.கோ. ஜெகதீசன்: (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. க. இராமசாமி: (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளி யேற்றப்பட்டவர்கள்.

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங் குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.



22. மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன்: (சமூக நலத்துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூகநலம், பிச்சைக் காரர் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (கதர்த்துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (பொதுப்பணித்துறை அமைச்சர்)—பொதுப்பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

## THIRU SUNDER LAL KHURANA.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS:

1. The HON. DR. M. G. RAMACHANDRAN: (Chief Minister)—Indian Administrative Service and other All India Services, Police, Prevention of Corruption,

2. The HON. DR. V. R. NEDUNCHEZHIAN: (Minister for Finance)—Finance, Revenue, General Administration, Legislature, Election, Statistics, Youth Service Corps and Ex-Service men.

3. The HON. THIRU S. RAMACHANDRAN: (Minister for Electricity): Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The HON. THIRU K. A. KRISHNASAMY: (Minister for Labour)—Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The HON. THIRU R. M. VEERAPPAN: (Minister for Information and Religious Endowments): Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Public, District Revenue Officers, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowment, Forest, Cinchonas and grant of Liquor permits, Planning, Archaeology and Passports.

6. The HON. THIRU K. RAJARAM: (Minister for Industries)—Large scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The HON. THIRU P.U. SHANMUGAM: (Minister for Local-Administration)—Municipal Administration, Panchayats, Panchayat Unions Community Development and Rural Indebtedness.

8. The HON. THIRU. C. ARANGANAYAGAM: (Minister for Education)— Education, Official, Language, Tamil Development and Culture.

9. The HON. DR. K. KALIMUTHU: (Minister for Agriculture) Agriculture, Agricultural Refinance, Agriculture Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

10. The HON. THIRU C. PONNAIYAN: (Minister for Law)—Law, Courts, Prisons, Deputy Collectors Legislation on Weights and Measures, Registration of Companies, Dept Relief including Legislation on Money Lending, Legislation on Chits and Molasses.



11. The HON. Dr. H. V. HANDE: (Minister for Health)—Health and Environmental Pollution Control.

12. The HON. THIRU S. MUTHUSAMY: (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act Ports and Highways.

13. The HON. THIRU. S. THIRUNAVUKKARASU: (Minister for Food)—Food, Price Control and Census.

14. The HON. THIRU V. V. SWAMINATHAN: Minister for Excise and Handlooms)— Prohibition (excluding grant of Liquor Permits, Excise, Handloom & Textiles.

15. The HON. THIRU R. SOUNDARARAJAN: (Minister for Nutritious)—Meals Nutritious Meals.

16. The HON. THIRU T. VEERASAMY: (Minister for Commercial Taxes)—Commercial Taxes.

17. The HON. THIRU N. NALLUSAMY: (Minister for Housing)—Housing, Slum clearance Board, Town planning and Accommodation control.

18. The HON. THIRU ANOOR P.G. JAGADEESAN: (Minister for Rural Industries)—Rural Industries including village, Cottage and small industries.

19. The HON. THIRU T. RAMASAMY: (Minister for Rehabilitation and employment): Employment and training, Indians Overseas, Refugees, and Evacuees.

20. The HON. THIRU A ARUNACHALAM: (Minister for Adi dravidar welfare)—Adi dravidar Welfare, Hill tribes and bonded Labour.

21. The HON. THIRU M.R. GOVENDAN: (Minister for Backward classes)—Backward classes and Fisheries

22. The HON. TMT. GOMATHI SRINIVASAN: (Minister for Social welfare)—Social welfare including women and children welfare Beggars home, orphanages, and correctional administration.

23. The HON. TMT. VIJAYALAKSHMI PALANISAMY: (Minister for Khadi)—Khadi, Bhoodan and Gramdhan.

24. The HON. THIRU Y.S.M. YUSUF: (Minister for Public works)—Public works department, Irrigation including minor irrigation and wakf.

25. The HON. THIRU K. K.S. S. R. RAMACHANDRAN: (Minister for Co-operation)—Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல். **

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி. ஏ. பி. எல்.,

இணைச் செயலாளர்.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ. பி. ஜி. எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. வெ. சீதாராமன், பி. காம், பி. ஜி. எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி. ஏ. பி. எல்.

குழு அலுவலர்கள்.

திரு சா சீனிவாசன், பி. எஸ்.சி.

திரு. கு. அ. சீனிவாசன், பி. ஏ.

சார்புச் செயலாளர்கள்

திரு. ப. பாலகிருஷ்ணன், பி. காம்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி. ஏ., பி. எல்.

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி. எல்.

திரு. வ. சா. ஜான், பி. ஏ.

திரு. கா. செ. சுந்தரராஜன், பி. ஏ., பி. ஜி. எல்.

திரு. டி. சாலமன் ஜெயபால், பி. எஸ்.சி., பி. எல்.

திரு. மா. கு. ஜோசப், பி.ஏ.,

எஸ்டேட் அலுவலர்கள்

திரு. கேசவராம், பி. ஏ.

திரு. டி. ஜேக்கப் ஆர்தர், பி.ஏ.பி.எல்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. கோ. வெங்கட்டராமன்.

தலைமை நிருபர்

திரு. வை. இராமச்சந்திரன், எம். ஏ., எல் எல். பி.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், எம். ஏ. (தமிழ்)



## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அண்ணாதாசன் திரு. எம். | திருவரம்பூர் |
| 2 | அப்துல் சமத் திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 3 | அப்துல் மஜீத் திரு. எச். | வாணியம்பாடி |
| 4 | அரங்கநாயகம் திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 5 | அரிக்குமார் திரு. இரா. | பெரணமல்லூர் |
| 6 | அருணாசலம் திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 7 | அருணாசலம் திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 8 | அன்பழகன் திரு. க. | பார்க் டவுன் |
| 9 | அன்பழகன் திரு. கே. | ஓமலூர் |
| 10 | அன்பழகன் திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 11 | அன்பழகன் திரு. பொ. | இளையான்குடி |
| 12 | ஆண்டி அம்பலம் திரு. மெ. | நத்தம் |
| 13 | ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி திரு. | ஆண்டிமடம் |
| 14 | ஆபிரகாம் திரு. ம. | ஆலந்தூர் |
| 15 | ஆறுமுகம் திரு. அ. | வந்தவாசி |
| 16 | ஆறுமுகம் திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 17 | ஆறுமுகம் திரு. ஆர். எஸ். | ஓட்டபிடாரம் (செ. வ.) |
| 18 | ஆறுமுகம் திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 19 | ஆறுமுகம் திரு. செ. | மதுராந்தகம் |
| 20 | ஆறுமுகம் திரு. மு. | சேலம்-2 |
| 21 | ஆனந்த கிருஷ்ணா திரு. ஜி. | பூந்தமல்லி |
| 22 | ஆனந்தன் திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 23 | இரகுபதி திரு. கோ. | காட்பாடி |
| 24 | இரத்தினம் திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25 | இரத்தினவேலு திரு. செ. | முசிறி |
| 26 | இராசமாணிக்கம் திரு. ஆர். | அரூர் (செ. வ.) |
| 27 | இராசமாணிக்கம் திரு. எல்ல. | தாம்பரம் |
| 28 | இராசரத்தினம் திரு. எப். எம். | கொளச்சல் |
| 29 | இராசரத்தினம் திரு. எம். | விழுப்புரம் |
| 30 | இராசாங்கம் திரு. மு. | திருவிடைமருதூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 31 | இராசாம்பாள் திருமதி த. | தலைவாசல் (செ.வ.) |
| 32 | இராசாராம் திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33 | இராசாராமன் திரு. எஸ். | பாபநாசம் |
| 34 | இராசு திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 35 | இராசேந்திரன் திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36 | இராமச்சந்திரன் டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37 | இராமச்சந்திரன் திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38 | இராமச்சந்திரன் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39 | இராமச்சந்திரன் திரு. ச. | பன்ருட்டி |
| 40 | இராமச்சந்திரன் திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 41 | இராமச்சந்திரன் திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42 | இராமசாமி திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43 | இராமசாமி திரு. த. | இராமநாதபுரம் |
| 44 | இராமநாதன் திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45 | இராமலிங்கம் டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46 | இளங்கோவன் திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |
| 47 | ஈஸ்வரன் திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48 | உச்சி திரு. கே. | கூடலூர் |
| 49 | உத்திராபதி திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50 | எத்திராசன் திரு. இ. | அச்சரப்பாக்கம் (செ. வ.) |
| 51 | கணபதி திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 | கதிர்வேலு திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53 | கந்தசாமி திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54 | கந்தசாமி திரு. பி. | பொங்கலூர் |
| 55 | கல்லன் திரு. கே. | உதகமண்டலம் |
| 56 | கலிதீர்த்தான் திரு. சோ. | சங்கராபுரம் |
| 57 | காளிமுத்து டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58 | கிருஷ்ணசாமி திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 59 | கிருஷ்ணசாமி திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60 | கிருஷ்ணமூர்த்தி திரு. இ. | கும்பகோணம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 61 | கிருஷ்ணராஜ் திரு. ஜி. | சேலம்-1 |
| 62 | குப்புசாமி திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 63 | குப்புசாமி திரு. வே. | செய்யாறு |
| 64 | குமர குருபர ராமநாதன் திரு. ச. | விளாத்திகுளம் |
| 65 | குமரி அனந்தன் திரு. | ராதாபுரம் |
| 66 | குமாரதாஸ் டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 67 | கோமதி சீனிவாசன் திருமதி | வலங்கைமான் (செ.வ) |
| 68 | கோவிந்தசாமி திரு. ஆர். | குடியாத்தம் |
| 69 | கோவிந்தசாமி திரு. ச. | எடப்பாடி |
| 70 | கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 71 | சங்கரலிங்கம் திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ.வ) |
| 72 | சண்முகம் திரு. இரா. | திருத்தணி |
| 73 | சண்முகம் திரு. என். | சோளிங்கர் |
| 74 | சண்முகம் திரு. ப. உ. | மேல்மலையனூர் |
| 75 | சண்முகையா பாண்டியன் திரு. எம். | ஆலங்குளம் |
| 76 | சந்திரசேகரன் திரு. ஆ. | சோழவந்தான் |
| 77 | சந்திரசேகர் திரு. மு. | முகையூர் |
| 78 | சம்சுல் ஆலம் திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79 | சமரசம் டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 80 | சரோஜா திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா) |
| 81 | சாமிக்கண்ணு திரு. தா. | செங்கம் (செ.வ) |
| 82 | சித்தன் திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83 | சிந்தன் திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 84 | சிவக்குமார் திரு. ஆ. | சமயநல்லூர் (செ.வ) |
| 85 | சிவக்குமார் திரு. எம். | கூனூர் (செ.வ) |
| 86 | சிவஞானம் திரு. ந. | திருவோணம் |
| 87 | சிவப்பிரகாசம் திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா) |
| 88 | சிவராமன் திரு. எஸ். | சின்னசேலம் |
| 89 | சிவராஜ் திரு. சு. | ரிஷிவந்தியம் |
| 90 | சின்னக்குழந்தை திரு. மு. | ஆரணி |
| 91 | சின்னச்சாமி திரு. ரா. | தர்மபுரி |
| 92 | சின்னசாமி திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93 | சின்னராசு திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 159 பாரமலை திரு. க. | மானாமதுரை (செ. வ) |
| 160 பாலகிருஷ்ணன் திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161 பாலகிருஷ்ணன் திரு. வி. | சிவகாசி |
| 162 பாலச்சந்திரன் திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163 பாலசுப்பிரமணியன் திரு. க. | சீர்காழி (செ. வ) |
| 164 பாலசுப்பிரமணியன் திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165 பாலசுப்பிரமணியன் திரு. வி. பி. வேடசந்தூர் | வேடசந்தூர் |
| 166 பாலன் திரு. சு. | எழும்பூர் |
| 167 பாலாஜி திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168 பாலுச்சாமி திரு. ஏ. | பரமக்குடி (செ. வ) |
| 169 பாலுசாமி திரு. அ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 170 பிச்சை திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171 பிரணவநாதன் திரு. அ. | கடலாடி |
| 172 பிரேம்குமார் திரு. ஆ. | திண்டுக்கல் |
| 173 புருசோத்தமன் திரு. எஸ். | அரியலூர் |
| 174 புஷ்பராசு திரு. த. | திருமயம் |
| 175 பெரியசாமி திரு. அ. | தாராபுரம் (செ. வ) |
| 176 பெரியசாமி திரு. ரா. | தொட்டியம் |
| 177 பெருமாள் திரு. தெ. | கடையநல்லூர் |
| 178 பெருமாள் பிள்ளை திரு. கோ. | கன்னியாகுமரி |
| 179 பொன் முத்துராமலிங்கம் திரு. | மதுரை மேற்கு |
| 180 பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ். | பழனி (செ. வ.) |
| 181 பொன்னுசாமி டாக்டர் அ. | பெருந்துறை |
| 182 பொன்னுரங்கம் திரு. ப. | ராயபுரம் |
| 183 பொன்னையன் திரு. சி. | திருச்செங்கோடு |
| 184 மணவாளன் திரு. எஸ். பி. | திருப்பத்தூர் |
| 185 மணிமாறன் திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186 மலர்மன்னன் திரு. அ. | திருச்சிராப்பள்ளி—1 |
| 187 மனோகரன் திரு. கி. | புரசைவாக்கம் |
| 188 மனோகரன் திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 189 மாசிலாமணி டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 190 மாதவன் திரு. செ. | திருப்பத்தூர் |
| 191 மாதையன் திரு. யு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 192 மாரிமுத்து திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 193 மாரிமுத்து திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 194 மீனாட்சி சுந்தரம் திரு. மா. | வேதாரண்யம் |
| 195 முகம்மது கனி திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 196 முகம்மது சலீம் டாக்டர் த. | பெரியகுளம் |
| 197 முசிறிபுத்தன் திரு. பி. | குளித்தலை |
| 198 முத்துசாமி திரு. சு. | ஈரோடு |
| 199 முத்துராமலிங்கம் திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 200 முத்துவேல் திரு. கே. | முதுகுளத்தூர் |
| 201 முத்தையா திரு. இரா. | சேடப்பட்டி |
| 202 முருகானந்தம் திரு. டி. என். | செஞ்சி |
| 203 முனிரத்தினம் திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 யசோதா திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ) |
| 205 ரகுமான்கான் திரு. அ. | சேப்பாக்கம் |
| 206 ரமணி திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207 ரவீந்திரன் திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208 ராமஜெயம் திரு. ம. நா. | வானூர் (செ.வ) |
| 209 ராமன் திரு. கி. | ராஜபாளையம் (செ.வ) |
| 210 ராஜாபாபு திரு. ஜெ. | போளூர் |
| 211 ரெங்கசாமி திரு. ஆர். | கோவில்பட்டி |
| 212 ரெத்தினராஜ் திரு. எஸ். | நாகர்கோவில் |
| 213 லட்சுமி திருமதி பி. | அவினாசி (செ.வ) |
| 214 வடிவேல் திரு. கு. | கரூர் |
| 215 வளர்மதி திருமதி பா. | மயிலாப்பூர் |
| 216 விஜயபாலன் திரு. என். | பூம்புகார் |
| 217 விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி | வீரபாண்டி |
| 218 வீரானம்பலம் திரு. க. வெ. | மேலூர் |
| 219 வீரய்யன் திரு. கோ. | நாகப்பட்டினம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 220 | வீராசாமி திரு. தா. | ஒரத்தநாடு |
| 221 | வெங்கடரெட்டி திரு. டி. | ஒசூர் |
| 222 | வெங்கடாசலம் திரு. அ. | ஆலங்குடி |
| 223 | வெங்கடாசலம் திரு. கி. | லால்குடி |
| 224 | வெங்கடாசலம் திரு. டி. எம். | பரகூர் |
| 225 | வேங்கடரமணன் திரு. டி. ஆர். | தென்காசி |
| 226 | வேணுகோபால் திரு. எஸ். | டாக்டர் இராதாகிருஷ்ண நகர் |
| 227 | வேணுகோபால் திரு. கே. வி. | தல்லி |
| 228 | வேலு திரு. கூடலூரார் இ. வி. | தண்டராம்பட்டு |
| 229 | ஜகதீசன் திரு. ஆரூரார் பு. கோ. | செங்கல்பட்டு |
| 230 | ஜான் வின்செண்ட் திரு. மு. | நாங்குநேரி |
| 231 | ஜெகதீசன் திரு. க. | அரவக்குறிச்சி |
| 232 | ஜெயச்சந்திரன் திரு. சா. | காட்டுமன்னார் கோவில் (செ.வ) |
| 233 | ஜெயராமன் திரு. வே. இரா. | தேனி |
| 234 | ஹேமச்சந்திரன் திரு. ஜே. | திருவட்டாறு |
| 235 | பிரான்சிஸ் திரு. ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் | அமைச்சர் |
| 2 | மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே | அமைச்சர் |
| 3 | மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் | அமைச்சர் |
| 4 | திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, ஏப்ரல் 1, செவ்வாய்க்கிழமை

பங்குனி 18, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''

உழவு செய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றனர்: மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுகுறியிட்ட வினாக்கள்.

### பாபநாசத்தில் புதிய மின் திட்டம்.

325—(* வினா எண். 5676,) திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் பாநாசம் மலையில் புதிய மின் திட்டத்திற்காக அணைகள் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) மைய அரசின் அனுமதி பெற்றதும் இத்திட்டம் செயலாக்க எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம் என்று சொன்னதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் மின்சாரப் பற்றாக்குறை காரணமாக புரட்சித் தலைவரின் அரசு நடப்பு நிதியாண்டில் மின் உற்பத்திக்கென அதிகமான பணம் ஒதுக்கி இருக்கிறது. எனவே இந்த ஆண்டு இந்தத் திட்டம் செயல்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முண்டந்துறையாடு புலிகள் வாழ்கின்ற சரணாலயமாக இருக்கிறது. ஆகவே இது குறித்த ஆய்வினை மின் வாரியம் பெறுவதில் வனத் துறையின் அனுமதியை இன்னும் பெறவில்லை.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த பாபநாசம் மலையிலே பாபநாசம் மின் உற்பத்தித் திட்டம் என்றும், சேர்வலாறு மின் உற்பத்தித் திட்டம் என்றும் மாபெரும் திட்டங்களை உருவாக்கி முடிக்கக்கூடிய அளவில் உள்ளதால் மேலும் இந்த இரண்டு அணைகளையும் கட்டினால் இந்தப் பகுதியில் இன்னும் அதிகமான மின்சார உற்பத்தி தமிழகம் முழுவதற்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதால் கூடிய விரைவில் இந்தத் திட்டத்தை முடிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை அமைச்சரோடு கலந்துகொண்டு இதிலே புலிகள் முக்கியமா மின்சாரம் முக்கியமா, அல்லது இரண்டையும் காப்பாற்றுவதற்கு வழி இருக்கிறதா என்று ஆய்ந்து பார்த்து அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துகொள்கிறேன்.

விருப்ப அடிப்படையில் மின் கட்டணம் வசூலித்தல்.

*326*—(*வினா எண். *6038*) திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Flat rate மூலம் வழங்கப்படும் மின்சாரம் விவசாயிகளுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், Optional system ஆக முகவர்கள் தேர்ந்து எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இலவச மின்சாரம் பெறும் சிறு விவசாயிகளைத் தவிர்த்த மற்ற விவசாய மின் இணைப்புகள் பெருவாரியாக (ஒன்பது லட்சத்து முப்பத்தெட்டாயிரம்) இருப்பதினால் Optional system நுகர்வோர்கள் தேர்ந்தெடுக்கும் கட்டண முறையை நடைமுறைப்படுத்த இயலாது.

மேலும் இத்தகைய விருப்பத்தின் அடிப்படையில் நுகர்வோர்கள் தேர்ந்தெடுக்கும் முறை, மின் நுகர்வோருக்கும் மின்சார வாரியத்திற்கும் பிணக்குகள் உண்டாக ஏதுவாகும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Flate rate system மூலமாக ஹார்ஸ்பவருக்கு 75 ரூபாய் என்று இன்றைக்கு வசூலிக்கப்படுகிறது. தண்ணீர் செழிப்பாக உள்ள பகுதிகளில் மின்சார மோட்டார் வைத்திருப்பவர்கள் அதாவது அவற்றை உபயோகப்படுத்தாத விவசாயிகள் கூட இன்றைக்கு மின்சாரக் கட்டணத்தைக் கண்டிப்பாகச் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் ஒரு பக்கத்தில் இந்த அரசு சிறு விவசாயிகளுக்கு இலவசமாக



மின்சாரம் வழங்குகிறது. இன்னொரு பக்கத்திலே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. எனவே ஒரு கண்ணில் வெண்ணையும் இன்னொரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பது போன்ற நிலைமை இருக்கிறது. பிளாட் ரேட் என்று வைத்து உபயோகப்படுத்தாத விவசாயிகளிடத்திலிருந்தும் கட்டாயமாக வசூல் செய்வதன் காரணத்தால் விவசாயிகள் மன வருத்தம் அடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பிணக்கு வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். பிணக்கு வருவதற்கான சந்தர்ப்பமே இல்லை. எனவே அது என்ன பிணக்கு என்பதையும் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் பரிசீலனை செய்து பிளாட் ரேட் சிஸ்டத்தை ஆப்ஷனல் சிஸ்டமாக மாற்றி தேவைப்படுபவர்களுக்கு மட்டும் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் என்பது சிறிய விவசாயிகளுக்கு Flate rate மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்பதைப் பொறுத்த வரையில் பெரிய விவசாயிகளுக்குத்தான். ஆகவே ஒரு கண்ணிலே சுண்ணாம்பும், மற்றொரு கண்ணுக்கு வெண்ணையும் என்று சொல்வது சரியாக இருக்காது. ஒருவர் சுமந்திருக்கிற பளுவை இறக்கி இன்னொருவருக்கு இருப்பதை அப்படியே விடுகிறோம் என்றுதான் பொருள். 75 ரூபாய் குதிரைத்திறன் ஒன்றுக்கு என்று ஒரே கட்டணமாக விதிக்கப்படுகிற போது ஒரு பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு அதனால் இழப்பு ஏற்படலாம். ஆனால் மறு பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு அதனால் பலனும் ஏற்படுகிறது. எனவே ஒட்டு மொத்தமாகத்தான் நாம் அதைப் பார்க்க வேண்டும். மீண்டும் அளவை எடுத்துத்தான் மின் கட்டணம் விதிக்க வேண்டும் என்றால் இந்த பிளாட் ரேட் சிஸ்டம் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்றுதான் ஆகிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே குறிப்பிடும்போது ஒருவருக்கு பயன் ஏற்பட்டால் மற்றவருக்கு பாதிப்பு ஏற்படத்தான் செய்யும் என்ற கருத்தைச் சொன்னார்கள். It amounts to robbing Peter and paying Paul என்பது போல ஆகிறது. சமுதாயத்திற்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து மக்களுக்கு நன்மை கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நிலைமையிலே நாம் திட்டங்களைத் தீட்டி போடுகிறபோது எல்லோருக்குமே பலன் கிடைக்கிற முறையிலேதான செய்ய வேண்டுமே தவிர, ஒருவரை பாதித்து மற்றவர்களுக்கு நன்மை என்ற வகையில் திட்டங்களை தீட்டுவது, நல்ல அரசாக அமையாது என்ற கருத்தை அமைச்சர் ஏற்றுக்கொள்வார்களா? அந்த அடிப்படையிலே எங்கே ஆழ் கிணற்றிலே இருந்து தண்ணீரை மின்சாரம் மூலமாக எடுக்க வேண்டுமோ, அவர்களுக்கு மட்டும் பிளாட் ரேட்டாக வைத்துக்கொண்டு—(மணியடிக்கப்பெற்றது)

I am coming to the point. மற்றவர்களுக்கு அவர்களுடைய விருப்பம் போல ஃபிளாட் ரேட்டாகவோ அல்லது மீட்டரின் அடிப்படையிலோ கட்டணம் வசூலிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, சிறு விவசாயிகளைப் பொறுத்தவரையில்தான் பலன் தரக்கூடிய திட்டமாக இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. பெரிய விவசாயிகளை பொறுத்தவயைில் ஒட்டு மொத்தமாக கட்டணம் செலுத்த வேண்டி வருகிறபோது அவர்களுக்கு செலுத்துவதற்கு வசதி ஏற்படுகிறது. நீரூற்று நிறைந்த கிணற்றிலே ஆதாயம் அதிகம். நீரூற்று இல்லாத கிணற்றிலே பாதகம் ஏற்படுகிறது என்ற கருத்திலேதான் சொன்னேன். பீட்டரும், பாலும் இருவருமே பெரிய விவசாயிகள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்திற்கு அதிக செலவு இல்லாத வகையிலும் விவசாயிகளுக்கு விரைவாக மின் இணைப்பு கிடைக்கிற வகையிலும் இதுவரையில் கொடுக்கப்பட்டு வந்த ஆன் தி லைன் சர்வீஸ் முறை மீண்டும் கொண்டுவரப்படுமா? அந்தச் சலுகையை விவசாயிகள் பெற அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே. ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு பம்பு செட்டுகள் என்ற வகையில் ஆன் தி லைன் சர்வீஸ் தரப்படுகிறது வருகிற ஆண்டில் இது பற்றி முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆன் தி லைன் சர்வீஸ் கொடுக்கிறபோதுகூட அதற்கான தகுதியுடைய விவசாயிகளாக இருந்தாலும்கூட சம்பந்தப்பட்ட பம்ப் செட்டுகள் உள்ள பகுதியில் டிரான்ஸ்பார்மர்களுக்கு கெப்பாசிட்டி இல்லை என்றால் கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறதே. டிரான்ஸ்பார்மர்களின் கெப்பாசிட்டியை அதிகரிப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று துறையினர் சொல்லிவிடுகிறார்கள், ஆகவே அரசு சலுகையைக் கொடுத்தாலும் கூட டிரான்ஸ்பார்மர்களுடைய கெப்பாசிட்டியை உயர்த்தாததினால் விவசாயிகள் சலுகையை இழக்கிறார்கள், அதைப் போக்க டிரான்ஸ்பார்மர் சக்தியை உடன் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசு இந்தக் கருத்தை கவனத்திலே கொள்ளும். ஆனால் தகுதி உடையவர்கள் எல்லோருக்குமே வாய்ப்பு தருவது என்பது இயலாத காரியம்.





**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மின்சாரம் கொடுக்கின்ற வகையில் ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் என்று வசூல் செய்கிறார்கள். ஆனால் விவசாயிகள் விண்ணப்பம் கொடுக்கிற நேரத்தில் 10 எச்.பி. என்று விண்ணப்பத்தில் போடுகிறார்கள். ஆனால் மின்சார மோட்டார் கொடுக்கிறபோது 5 எச்.பி. என்று தருகிறார்கள். ஆகவே இப்படி அக்ரிமென்ட் போடுகிற நேரத்தில் 10 எச்.பி. என்றும் கனெக்ஷன் கொடுக்கிறபோது வேறு மாதிரியாகவும் தந்து விடுகிறார்களே, ஆகவே உண்மையிலேயே எத்தனை பவரில் மீட்டர்கள் வைத்திருக்கிறார்கள் என்று பார்த்து அதன் அடிப்படையில் வசூல் செய்வதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்காவது குறை இருந்தால் அதைக் கூறினால் போக்குவதற்கு முயற்சி செய்துக் கொள்ளலாம். ஆனால் அதே நேரத்தில் விவசாயிகள் தங்களுக்கு எத்தனை ஹார்ஸ்பவர் தேவை என்று உண்மையாக கருதுகிறார்களோ அதையே மனுவாக கொடுப்பது நலம்.

**திரு. க. இரா. சின்னராசு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தருவது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. பெரிய விவசாயிகள் ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் கொடுக்கிறபோது நீர்த்தேக்கங்களுக்கு கீழேயோ, ஏரிகளுக்கு கீழேயோ இருக்கிற பம்ப் செட்டுகள் வருடத்தில் 6, 7 மாதம்— நிறைந்து விடுகிற காரணத்தால் பம்ப் செட்டுகளை ஓட்டுவதே இல்லை. அப்படிப்பட்ட இடங்களைப் பரிசீலித்து அவர்களுக்கு ஏதாவது மின்சார சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நீரூற்று சரியாக இல்லாத இடத்திலேதான் விவசாயிகளுக்கு கஷ்டம், ஆகவே குறைகள் என்று இதுவரை கேட்டார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் ஏரிகளுக்கு கீழே இருக்கிற காரணத்தால் பாசனம் நிறைந்திருக்கிறது, பம்ப் செட்டுகளை ஓட்ட முடியவில்லை, ஆகவே அவர்களுக்கும் சலுகை வேண்டுமென்று சொல்லுகிறார்கள். நாம் இப்போது பசி ஏப்பக்காரர்களுக்கே இல்லை என்று சொல்லுகிறபோது, புளி ஏப்பக்காரர்களுக்கு நிச்சயமாக இல்லை என்பதுதான் பதில்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சிறிய விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுக்கிறீர்கள் வரவேற்கிறோம். ஆனால் 5 ஏக்கர்கள், 7 ஏக்கர்கள், 10 ஏக்கர்களுக்கு கீழே வைத்திருக்கக்கூடிய விவசாயிக்கு, அவனுடைய கிணற்றிலே தண்ணீரே இல்லாமல் போய்விட்டால், பம்ப் செட்டை கழற்றி வீட்டிலேயே கொண்டு போய் வைத்து விடுகிறான். அவர்களுக்கும் ஃபிளாட் ரேட் சிஸ்டத்தில் ஒரு எச்.பி. 75 ரூபாய் என்றால் அவன் உண்மையிலேயே கட்ட முடியாத நிலைமை இருக்கிறது.

இதை மீண்டும் மறுபரிசீலனை செய்து ஏழைகளுக்கு அப்படியே விட்டு விடுங்கள்; மற்றவர்களுக்கு உபயோகித்த அளவிற்கு மின் கட்டணத்தை வசூலிக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கட்டமுடியாத நிலை என்பதை அரசு ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. மின்சாரமே இல்லாமல் டீசல் பம்ப்செட்டு வைத்திருப்பவர்கள் நிலைமையைப் பார்க்கிறபோது இது எவ்வளவோ மேல்.

திரு. தி. அன்பழகன்: தலைவர் அவர்களே, சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் மூலமாக அரசு எவ்வளவு இழப்பை ஏற்றுக்கொள்கிறது. சிறு விவசாயிகளைப் பெரிய விவசாயிகளிடமிருந்து பிரிக்கிற பொழுது பல இடங்களில் சிறு விவசாயிகள் பலனை அனுபவிக்கமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அது சம்பந்தமாக அரசு நல்லதொரு முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பொதுவாக வேளாண்மை மின் கட்டண வீதங்கள் மூலம் நமக்கு வருவாய் இழப்பு 221 கோடியே 25 லட்சம் ரூபாய். சிறு விவசாயிகள் ஆனாலும் சரி, பெரிய விவசாயிகள் ஆனாலும் சரி ஆண்டு ஒன்றிற்கு 221 கோடியே 25 லட்சம் ரூபாய் நமக்கு வருவாய் இழப்பு ஆகிறது. இலவச மின்சாரம் பெறும் சிறு விவசாயிகள் இப்போது 99,850 பேர்கள். மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை கருத்தில் கொள்ளப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே சிறுவிவசாயிகள் என்று அறிவிக்கப்பட்ட சிறுவிவசாயிகளுக்கு மீண்டும் சிறு விவசாயிகள் சர்டிபிகேட் கொடுக்கப்பட்டு அந்தச் சலுகையைப் பெற வேண்டுமென்று புதியதாக மின்வாரியத்திலிருந்து ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதன் வாயிலாக சிறு விவசாயிகளுக்கு சலுகையைப் பெறுவதில் சங்கடங்கள் இருக்கின்றன. இந்த விவரம் அரசாங்கத்திற்குத் தெரியுமா? இது குறித்து மின்வாரியத்திற்கு அறிவுரை வழங்கி முன்பு இருந்த சிறு விவசாயிகள் பட்டியலில் இருந்தவர்களுக்கு சலுகை வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே நிலத்தை வைத்து சிறு விவசாயிகள் என்று கணக்கிடப்பட்டது. இப்போது சிறு விவசாயிகள் என்பது அவர்களின் ஒட்டு மொத்த உடைமையை வைத்து கணக்கிடப்படுகிறது. அதனால் இந்த வேறுபாடு.





திரு. ஆர். ரெங்கசாமி: தலைவர் அவர்களே, தற்போது ஒரு ஹ்ரார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்று வசூலிக்கப்படுகிறது. இப்படி வசூலிப்பது அதிகமாக இருக்கிறதென்று விவசாயிகள் குறிப்பிடுறார்கள். எனவே அதனை 50 ரூபாய் என்று மாற்ற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச.இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல உரிய கட்டணத்தின்படி நாம் வசூலிக்காமல் அவர்களுக்கு சலுகை அளிப்பதால் 200 கோடி ரூபாய்க்கு மேலே விவசாயிகளுக்காக அரசு செலவு செய்கிறது. அப்படி இருக்கிறபொழுது 75 ரூபாய் என்பதை 50 ரூபாயாகக் குறைக்கின்ற உத்தேசம் நிச்சயமாக அரசுக்கு இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் வீடுகளுக்கு மீட்டர் ரீடிங் எடுப்பதற்கு பணியாளர்கள் வீட்டிற்கு வந்து எவ்வளவு யூனிட் மின்சாரம் உபயோகித்திருக்கிறார்கள் என்று புத்தகத்தில் குறித்துவிட்டு சென்று விடுகிறார்கள். பிறகு புத்தகத்தை எடுத்துச்சென்று வீட்டினுடைய உரிமையாளர்கள் மின் கட்டணம் செலுத்துகிறார்கள். இந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும். உதாரணமாக ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி இருவரும் அரசு அலுவலர்களாக இருந்தால் அவர்கள் இருவரும் வேலைக்குச் சென்றுவிடுகிறார்கள். கட்டணத்தைச் சென்று கட்டுவதற்கு சிரமப்படுகிறார்கள். ஆகவே பில் கலெக்டர்களுக்கு காலை 10 மணிக்குள்ளாக ஒரு நேரத்தை ஒதுக்கி மீட்டர் ரீடிங் எடுக்கும் பணியாளர்களே மின் கட்டணத்தை வசூலிக்கிற முறையை நடைமுறைபடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குச் சம்பந்தமில்லையென்றாலும் இது ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று.

திரு. அ. பாலுசாமி: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு தேதி குறிப்பதால் விவசாயிகள் பம்ப் செட்டுகளை கடனுக்கு வாங்கி விடுகிறார்கள். அந்தத் தேதியில் மின் இணைப்பைக் கொடுக்க முடியாத காரணத்தால், டிரான்ஸ்பார்மர் போன்றவற்றை அமைத்து மின்சாரம் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதால், விவசாயிகள் கடனுக்கு வாங்கிய அந்த பம்ப் செட்டுகளை ஆறு மாதம், ஒரு வருடமென்று பெட்டியிலே வைத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே மின் இணைப்பிற்கு தேதி கொடுத்தவுடன் அந்த பம்ப் செட்டுகளுக்கு குறித்த காலத்தில் மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட துறையிலிருந்து அதை அனுப்பினால் அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து பருவ மழை பொய்த்து வருகிற காரணத்தாலே ஆண்டுதோறும் விவசாயிகள், விவசாயத்தை செய்ய முடியாத நிலையில் இருக்கிற காரணத் தாலே, தமிழகத்திலே இன்றைக்கு பல இடங்களில் விவசாயிகள் கோழிப் பண்ணை வைத்து இருப்பதை ஒரு உப தொழிலாகக் கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்த பிரத்யேக நிலையை உத்தேசித்து அந்தக் கோழிப் பண்ணையை வைத்திருப்பவர் களுக்கு அதை வளர்ப்பதிலே ஊக்கம் கொடுக்கின்ற முறையிலே மின்சாரம் அளிப்பதிலே ஏதாவது சலுகை அளிக்க அரசு முன் வருமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராயச்சந்திரன்: தலைவர் அவர்களே• ஏற்கனவே, இதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று நான் ஒரு நிகழ்ச்சியிலே சொல்லியிருக்கிறேன். இங்கும் அந்தப் பதில் பொருத்தமானது.

### சின்ன சேலம் ஆட்டுப் பண்ணை.

327—(*வினா எண். 3962) திருமதி த. இராசாம்பாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சின்னசேலம் ஆட்டுப்பண்ணையை சேலம் கால்நடை வைத்தியக்கல்லூரியுடன் இணைத்து இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இல்லை.

### திருப்பூர் டெக்ஸ்டைல் நிறுவனத் தொழிலாளர்கள்

328—(*வினா எண். 6582) திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரிலுள்ள திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் பி.லிட்., ஸ்பின்னிங் யூனிட்—3 மில்லில் இருந்து தொழிலாளர்கள் சார் பாக அரசுக்கு ஏதாவது புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, சட்டபூர்வமான உரிமை என்ற முறையில் சங்கத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுடைய உரிமையைப் பறிக்கின்ற வகையில் நிர்வாகம் தொடர்ச்சியாக தொழிலாளர்களை வேலை





நீக்கம் செய்வதும், சட்ட விரோதமாக நிர்ப்பந்திப்பதும் போன்ற நடவடிக்கைகளில் இறங்கி இருப்பது தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கிறது. இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களிடம் தொழி லாளர் துறை அதிகாரிகள் மூலமாக ஒரு நேரடி விசாரணை நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்திற்கு உட்பட்டு ஏதாவது பிரச்சனை இருந்தால், சம்பந்தப்பட்ட தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளிடம் செல்லலாம். அவர்கள் ஆவன செய்வார்கள்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களின் விருப்பத்திற்குப் புறம்பான முறையிலேயும், சட்ட பூர்வமான உரிமைகளைப் பறிக்கின்ற முறையிலேயும் தொழிலாளர்களில் 5 பேர்களை சட்டவிரோத மாக நிர்பந்தித்து, 12(3) ஒப்பந்தத்தை நிர்வாகம் செய்துள்ளது. இந்த 12(3) ஒப்பந்தத்திற்கு எதிராக சமீபத்தில் 1½ மாத கால மாக தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். எனவே சட்டவிரோதமாக நிர்ப்பந்தித்து செய்யப்பட்டு இருக்கிற அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வந்த தகவல் வேறு விதமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் பற்றி வேறு ஒரு தகவலைச் சொல்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலை மன்றத்திற்குச் சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன். அங்கே 4 தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். கோயம்பத்தூரிலே உள்ள டி.சி. லேபர் அவர்கள் கூடி பேசிய பிறகு, ஜனவரி மாதம் அந்த வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டு, இன்றைக்கு அங்கே அமைதி நிலவுகிறது.

### பரம்பரை அறங்காவலர் நிர்வாகத்திலுள்ள கோயில்கள்

329—(*வினா எண். 4056) திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பரம்பரை அறங்காவலர்களின் கீழ் உள்ள கோயில்கள் எத்தனை?

(ஆ) எத்தனை ஏக்கர் நிலம் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) தமிழகத்தில் பரம் பரை அறங்காவலர்களின் கீழ் உள்ள திருக்கோயில்கள் மொத்தம் 3850.

(ஆ) அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள மொத்த நிலங்களின் பரப்புளவு 89,979 ஏக்கர், 82 சென்ட்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருப்பதைப் போலவே, விலை மதிப்புள்ள சொத்துக்களும் இப்படிப்பட்ட கோயில்களுக்கு நிறைய உள்ளன. அவைகளைக் கண்காணிக்கவும், பாதுகாக்கவும் அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையச் சட்டத்தின்படி, அவர்களுடைய வரவு—செலவுகள் அறநிலையத்துறைக்கு அனுப்பப்படுகிறது. ஆனால் இந்த பரம்பரை அறங்காவலர் உள்ள ஆலயங்களுக்கு நிர்வாக அலுவலர்களை சில இடங்களில் அரசு நியமித்து இருக்கிறது. ஆனால் மிகப் பெரிய அளவிலே நிலங்களும் சொத்துக்களும் இருக்கின்ற ஆலயங்களில் பரம்பரை அறங்காவலர்களாக இருக்கின்ற ஆதினகர்த்தர்கள் இந்த நிர்வாக அலுவலர்களைப் போடக்கூடாது என்று உயர்நீதி மன்றத்திலே தடை பெற்றிருக்கிறார்கள். ஆகவே என்ன நிர்வாகம் நடத்துகிறோம் என்று அவர்கள் கொடுக்கிற அந்த வரவு—செலவு கணக்குகளை அறநிலையத்துறை இப்போது பெற்றுக்கொண்டு இருக்கிறது.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பரை அறங்காலவர்கள் உள்ள கோயில்களின் சொத்துக்களையும் வருமானங்களையும் இன்றைக்கு தனிப்பட்டவர்கள் அனுபவித்துக்கொண்டு வருகிற காரணத்தால், கோயில்களின் திருப்பணிகள் சரியாக நடைபெறாமல் இருக்கின்றன என்ற குற்றச்சாட்டு பரவலாக இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட கோயில்களுடைய நிர்வாகங்களை அரசு மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதைப்போன்ற பரவலான குற்றச்சாட்டுக்கள் சமீபகாலத்திலே மாத்திரமல்ல, பல ஆண்டுகாலமாகவே எழுப்பப் பெற்று வருகின்றன. அப்படி எழுப்பப்பட்டதினுடைய தொடர்பாக மத்திய அரசு சர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்தது, ராமசாமி ஐயர் அவர்களுடைய குழு, பரிசீலனை செய்து, அதற்கான பரிந்துரைகளைக் கூட வழங்கி இருக்கிறது. ஆகவே இந்த ஆதினகர்த்தர்கள் அல்லது பரம்பரை அறங்காவலர் பொறுப்பிலே இருக்கின்ற ஆலயங்கள், அதற்கான சொத்துக்கள் எல்லாம் அரசினுடைய நிர்வாகங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.



அந்த அடிப்படையில் அறநிலையத் துறையினுடைய சட்டத்தின் படி அங்கே மேல் அதிகாரிகளை அனுப்புகிறபோது அல்லது நியமிக்கிறபோது அவர்கள் அரசியல் சட்டத்தினுடைய அடிப் படை உரிமையைப் பயன்படுத்தி நீங்கள் எங்களைக் கண்காணிக்க முடியாது என்று தடுத்திருக்கிறார்கள். அப்படி மீறி நியமிக் கின்ற நேரத்தில் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அரசியல் சட்டத்திலே ஏற்பட்டிருக்கின்ற அந்த இடையூறுகளை அல்லது தடைகளை போக்குகின்ற வகையில் நம்முடைய அரசு இந்த இரண்டு அவை களிலும் ஒரு சட்டத் திருத்ததை நிறைவேற்றி மத்திய அரசினு டைய ஒப்புதலுக்கு அனுப்பியது. அநேகமாக மூன்று ஆண்டு களுக்கு மேல் ஆகியும் அதற்கு ஒப்புதல் கிடைக்கவில்லை. ஆனால் அதிலே இருக்கின்ற ஒரு ஆச்சரியம் என்னவென்றால் அந்தச் சட்ட திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முன்பே இந்த பொருள் கன்கரண்ட் லிஸ்ட்டிலே இருக்கிற காரணத்தால், இதை மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்றுத்தான் நாம் இந்த சட்ட மன்றத்திலே அறிமுகப்படுத்தி நிறைவேற்றினோம். அப்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட அந்த சட்டத் திருத்தத்தை நிறைவேற்றிய தற்குப் பிறகு முறையான அனுமதி வழங்குவதற்கு அனுப்பியும் ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் அது கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே அரசினுடைய கைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 9·20)

## வைகை அணைப்பகுதியில் திறந்தவெளிப் பூங்கா

330—(*வினா எண் 4125) டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை (டாம்) அணை அருகில் மான்களுக்கென திறந்தவெளி Zoo அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): 1985–86 ஆம் ஆண்டுக்கான மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Western Ghat Development Programme) ரூ 1.15 இலட்சம் செலவில் வைகை அணைப் பகுதியில் மான்களுக்கு என ஒரு திறந்தவெளிப் பூங்கா (Herbivorous Park) அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிவிரைவில் நிறைவேற்றப்படும்.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கின்ற அந்த ஜூவானது (Zoo) நாளுக்கு நாள் அங்கு இருக்கின்ற மிருகங்கள் அழிந்து வருவதால் அதன் பராமரிப்பு சரியில்லாததாலும், அதை மேலு

பராமரித்து அந்த இடத்திலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலேயே முடித்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது முறையாக அமைக்கப்பெற்ற மிருககாட்சி சாலை—ஜூ—(Zoo) அங்கே இல்லை. ஒன்றிரண்டு மிருகங்களை வைத்திருக்கிறார்கள் என்று எண்ணு ஏதோ கிறேன். ஆனால் இந்தத் திட்டம் என்பது திட்டமிட்டு அங்கே மான்களுக்காகவே அல்லது மான்களைப்போன்ற சில மிருக இனங் களை வைத்து வளர்ப்பதற்காகவே உருவாக்கப்படுகிற திட்டம். இந்த ஆண்டிலேயே அது நிறைவேற்றப்பட இருக்கிறது.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் நகருக்கு அருகிலுள்ள கும்பக்கரை நீர்வீழ்ச்சியை மிகவும் சூழ்ந்துள்ள காடுகளில், அங்கே ஒரு சுற்றுலா மையம் வைத்து அங்கேயே இப்படிப்பட்ட வன விலங்குகளை வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு, பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை நதியினுடைய உற்பத்திப் பகுதி யான வருசைநாட்டு பகுதியில் வனவிலங்கு சரணாலயம் அமைப் பதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் மிகப்பெரிய வன விலங்கு சரணாலயம் அமைக்கின்ற ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதற்குத் தொடர்பு இல்லாத கேள்வி என்றாலும், விவரத்திற்காகத் தெரிவித்திருக்கிறேன். மேற் கொண்டு விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மான்களுக்கென திறந்த வெளி உயிரியல் பூங்கா அமைப்பதற்காக செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோன்று தேனிக்கு அருகேயுள்ள சிவலிங்கநாய்க்கன்பட்டியில் மயில்கள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைக் காப்பதற்கு உடனடியாக பெருமளவில் திறந்தவெளி உயிரியல் பூங்கா அந்த கிராமத்திலே அத்தகைய பணி அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்பு அமைக்கின்ற கிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயில்கள் அந்தப் பகுதியிலே அதிகமாக இருக்கிற விவரம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லித் தான் தெரிகிறது. ஆனால் மயில்களுக்கு பூங்காக்கள் அமைப் பதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன, ஏற்கனவே விராலி மலைப் பகுதியிலே இப்படிப்பட்ட ஒரு பூங்கா அமைக்கலாம் என்கிற முயற்சி எடுக்கிறபோது நடைமுறைச் சிக்கல்கள் வந்திருக்கிற காரணத்தால் அது பரிசீலனையில்தான் இருக்கிறது. ஆகவே தமிழகத்திலே மயில்களுக்கு என்று ஒரு பூங்கா அமைக்க முடியுமா என்கிற அந்தப் பிரச்சினையை இறுதி செய்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## வால்பாறை சின்கோனாத் தொழிலாளர்கள்.

*331—(*வினா எண் 4884)* திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள சின்கோனாத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அளிக்கும் ஊதியம் மிகவும் குறைவு என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஊதிய உயர்வு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) சின்கோனாத் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அளிக்கப் படும் ஊதியம் குறைவானதல்ல.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## தீர்த்தமலையை சுற்றுலா மையமாக்கல்.

*332—(*வினா எண் 5771)* திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம் தீர்த்தமலையை சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) மற்றும் (ஆ); மாவட்ட உலாத்தலமாக மேம்பாடு செய்ய திட்ட மதிப்பீடுகள் அனுப்பும்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 1

திரு. எச். ஜி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் 1979-ல் தர்மபுரி மாவட்டத்திற்கு வந்திருந்த நேரத்தில் தீர்த்தமலையில் அந்த நீர்விழ்ச்சிக்கு நாங்கள் அவர்களை அழைத்துச் சென்றிருந்தோம். இப்போதுள்ள சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. தீர்த்தகிரி கவுண்டர் அவர்களும் அந்த மலைக்கு வந்தார்கள். அந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்தே அந்தத் திருக்கோயிலைப் பார்வையிட்டார்கள். அந்தக் கோவிலுக்கு நடைபாதை இருக்கிறது. வாகனங்கள் செல்வதற்கு பாதை அமைப்பதற்கு அப்போது மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள் மதிப்பீடு அனுப்பிவைத்தார்கள். அமைச்சர் அவர்கள் பார்வையிடும்போது அதை சுற்றுலா மையமாக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் 1979-ல் இருந்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே இந்த ஆண்டிலாவது அதற்கு முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களுக்கு குறைந்தளவு இரண்டு சுற்றுலாத் தலங்கள் உருவாக்க வேண்டுமென்று அரசாங்கம் கொள்கை முடிவு எடுத்ததையொட்டி தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டோம். அவர்கள் முதலில் ஹொகனக்கல்லையும் தீர்த்தகிரிப் பகுதியையும் குறிப்பிட்டு அனுப்பினார்கள். அதில் ஹொகனக்கல் ஏற்கனவே வளர்ச்சியுற்றிருக்கிற பகுதி என்பதால் அதை மாற்றி வாணியாறு அணைக்கட்டுப் பகுதியை எடுத்துக்கொள்ளலாம் என்ற கருத்து திரும்ப அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆகவே அந்த அணைக் கட்டுப்பகுதியையும் தீர்த்தமலைப் பகுதியையும் மாவட்ட உலாத் தலங்களாக வளப்படுத்தலாம் என்கிற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அதற்கு முதல் முயற்சியாக இந்தத் தீர்த்த மலைப் பகுதியை பத்து லட்சம் ரூபாய் செலவிலே அந்தத் திட்டங்களை எவ்வாறு நிறைவேற்றலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கேட்டிருக்கிறோம். மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களும் இந்திய நாடாளுமன்ற மக்கள் அவையினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு திரு. தம்பி துரை அவர்களும் இந்த வேண்டுகோளை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ஜி. ஆறுமுகம் அவர்கள் சொல்லியிருக்கிற அந்தக் கருத்தும் இந்தத் திட்டத்திற்குள்ளே இணைந்து விடுகிறது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்த்தமலை என்பது என்னுடைய குலதெய்வம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1979-ல் அந்த மலைக்கு வந்திருந்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நானும்



1986 ஏப்ரல் 1]

உடன்சென்று அமைச்சர் அவர்கள் அந்த மலைக்குச் சென்று பார்வையிட்டார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் புராதனமாக அமைக்கப்பட்டிருக்கிற அந்தக் கோயில் பிரசித்தி பெற்ற கோவிலாகும். அதிலே எந்தக் காலத்திலும் வடியாத தீர்த்தம் முப்பது அடி உயரத்திலே இருந்து விழுந்து கொண்டிருக்கிறது. பல மாவட்டங்களிலிருந்து யாத்திரீகர்கள் பலர் அங்கு தீர்த்த ஸ்நானத்திற்கும் தெய்வ வழிபாட்டுக்கும் வருகிறார்கள். அதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிலே பார்த்தார்கள். அந்தக் கோயில் இப்போது பழுதடைந்திருக்கிறது. அங்கே திருப்பணி செய்யவேண்டும் என்று நாங்கள் கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறோம். அந்தத் திருப்பணிக் காரியத்திற்காக பழனி கோவிலில் இருந்து கொஞ்சம் நிதி ஒதுக்கி திருப்பணி செய்வதற்காக உத்தரவு பிறப்பித்து அந்தப் பணம் கூட இன்றைக்கு அந்தக் கணக்கில் வரவு வந்ததாக அறிகிறேன். அப்படி வரவு வந்ததிலிருந்து ஏதாவது செலவு செய்யப்பட்டு புனருத்தாரண காரியங்கள் நடைபெற்றிருக்கின்றனவா? அப்படி நடைபெற்றிருந்தால் இதுவரை எவ்வளவு நடைபெற்றிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புவதோடு வாணியாற்றில் முள்ளிக்காட்டு அணையை சுற்றுலா மையமாக ஏற்படுத்துவதற்காக அந்த இடத்தை எடுத்துக்கொள்ளலாமா என்று நினைக்கிறார்கள். தீர்த்தமலை பிரசித்தமான இடம். அந்த இடத்திலே சுற்றுலா மையம் ஏற்படுத்தினால் பல யாத்திரீகர்கள் அங்கே வருவதற்கும் தெய்வ வழிபாட்டிற்காக வருகிறவர்களுக்கும் பிரதானமாக அது இருப்பதாலும் அரசாங்கம் அதற்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க ஆவன செய்யுமா?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு நீண்டநேரமாக ஒரு கேள்வியில் சிற்றுரை போன்று பலப் பிரச்னைகளை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். நான் சுருக்கமாகப் பதில் சொல்லவேண்டுமானால், வேறு கேள்வி கேட்க வேண்டுமென்று சொல்லியிருக்க வேண்டும். அப்படித்தான் சொல்ல முடியும். ஆனால், அவர்கள் இந்த அறநிலையத் துறையும், சுற்றுலாத் துறையும் ஒருவரிடம் இருக்கின்ற காரணத்தினாலும், சுற்றுலாத் துறையோடு அறநிலையத் துறையின் ஆலயச் சிறப்பும் இணைந்திருக்கின்ற காரணத்தினாலும் அவர்கள் இந்த இரண்டையும் இணைத்திருக்கிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு இந்த தீர்த்தமலையில், அந்த ஆலயத்திற்கு மலைமேல் பட்டப் பகலில் 12 மணிக்கு, வெய்யிலில் நாங்கள் ஏறி, இந்த அற்புதமான, புராதனமான இடத்தைப் பார்த்தோம். தமிழ்நாட்டு மக்களுக்கு இன்னும் அறிவிக்கப்படாத அற்புதமான மலைப்பகுதி, மிகச் சிறந்த தொன்மையான ஆலயம், இன்னும் வேறு சிறப்புகள் என்னென்ன இருக்கின்றன என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாத அளவில் அந்த ஆலயம் இருக்கின்றது. ஆகவே தான், அந்தப் பகுதி மாவட்ட சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்

பட்டிருக்கிறது. வாணியாறு அணைக்கட்டுப் பகுதியை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோமே தவிர, இந்த தீர்த்தமலை விடப்படும் பகுதி அல்ல. ஆகவே, தீர்த்தமலையை முதலில் எடுத்துக்கொள்ள இருக்கிறோம். சுற்றுலாவைப் பொறுத்தவரையில் 10 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டிருக் கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆலய திருப்பணியைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ஆலயத் திருப்பணியைப் பற்றி என்னிடம் விவரம் இல்லை. இதுகுறித்து அறநிலையத் துறையிடமிருந்து எனக்கு கிடைக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்காக ஒரு கேள்வி கேட்டால், அது ஒரு குறுகிய கால வினாவாக இருந் தாலும், அவர்களுடைய இந்த ஆர்வத்திற்கு ஏற்றவகையில் பதில் சொல்வேன். ஆனால், ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன், எந்த ஆலயத்திலிருந்து பணம் வந்திருக்கின்றது என்பது எனக்குத் தெரியாது. அப்படி வந்திருக்கவும் முடியாது. தீர்த்தமலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குலதெய்வம் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீர்த்தகிரி கவுண்டர் போன்ற பெருமக்களுக்கு குலதெய்வமாக இருக்கும் ஆலயம், அந்த ஆலயத்தில் திருப்பணி நடைபெறாமல் இருக்கிறது என்பது உங்கள் சிறப்புக்கு கொஞ்சம் குறைவு. ஆகவே, உங்களைப் போன்றவர்கள்தான் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆலயத் திருப்பணி என்பது அரசு மாத்திரம் செய்வதல்ல. அரசு மாத்திரம் அதைக் காப்பாற்றி விடமுடியாது. மக்கள்தான் அதைக் காப்பாற்றி ஆகவேண்டும். மக்கள்தான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உங்களைப் போன்றவர்கள் முயற்சி எடுக்கவேண்டும். இதுபற்றிய விவரங்கள் தெரிய வேண்டு மானால், வேறு கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய, புரட்சித் தலைவர் ஆட்சியில் இன்றைக்கு அறநிலையத் துறையின் மூலமாக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அதைச் சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் வந்து, நண்பகல் 12 மணி நேரத்தில், மலை ஏறி, அந்தக் கோயிலுக்கு வந்தார்கள். இதுவரையில் நானும் பல சுற்றுலா மையங்களுக்குச் சென்றிருக் கிறேன். அதுபோல நீர்வீழ்ச்சியும், தீர்த்தமும் உள்ள இடம் தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்று நான் கருதுகிறேன். அதே நேரத்தில் அமைச்சர் அவர்களும் இதுபோன்று எந்த ஒரு நீர்வீழ்ச்சியும் இல்லை என்று சொன்னார்கள். தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் அறிமுகப்படுத்துகின்ற அளவில், இதை மாவட்ட- ஆட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, உடனடியாக சுற்றுலா மையமாக ஆக்க முன்வருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னர் தெரிவித்ததுபோல் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில், வாணியாறுப் பகுதியை சுற்றுலா மையமாக ஏற்படுத்துவதற்கு அரசு முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறேன். அதேபோல், கிருஷ்ணகிரி, நீர்த்தேக்கப் பகுதியை சுற்றுலா மையமாக ஆக்க வேண்டுமென்று முன்னால் இருந்த அரசு காலத்திலே கேட்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப் பட்டு, அப்படியே நின்றிருக்கிறது. அதையும் சுற்றுலா மையமாக்கு வதற்கு, அங்கே நிறைய மான்களும், இயற்கை வளங்களும் இருப்பதாலும், பயணிகள் நிறைய வந்துகொண்டிருப்பதாலும், அதையும் சுற்றுலா மையமாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு இடங்களிலும் முதலில் செய்துவிட்டு, அதற்குப் பிறகு கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பகுதியைப் பரிசீலிக்கலாம்.

திருக்கோவிலூரில் கிடைக்கும் கருப்புக் கற்கள்.

333—(*வினா எண் 4038)—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் தாலுகாவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கருப்புக்கல் கிடைப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அரசே எடுத்து ஏற்றுமதி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(ஆ) திருக்கோவிலூர் தாலுக்காவில் பட்டா நிலங்களில் மட்டும் நடுத்தரம் வாய்ந்த கருப்புக்கற்கள் கிடைக்கிறது. அவைகளைத் தனியார்கள் மட்டும் வெட்டியெடுத்து வருகின்றனர். அரசு நிலங்களில் குறைந்த அளவு மற்றும் நடுத்தரம் வாய்ந்த கருங்கற்கள் கிடைப்பதால் கருங்கற்களை வெட்டியெடுக்க தமிழ்நாடு கனிம நிறுவனம் முன்வரவில்லை.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் தாலுக்காவில் கிடைக்கும் கருப்புக் கற்களை அரசு எடுத்து அதை செய்கிறதா? அல்லது தனியார் களுக்கு ஒரு கியூபிக் மீட்டர் 2,400 ரூபாய்க்கு எடுத்து அதை செயற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? எடுக்க வில்லை என்றால் இனியாவது அதுபோன்ற நிலையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு கருப்புக்கற்கள் மிகவும் குறைந்த நடுத்தரம் வாய்ந்த கற்கள் கிடைக்கின்றன. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிப்படி தனியார்கள் கருப்புக் கற்கள் வெட்டி எடுக்கும் உரிமையை வழங்குவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த விதி பட்டா நிலங்களுக்குப் பொருந்தாது என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. பட்டா நிலங்களில் கருப்புக் கற்களைத் தனியார் சிலர் வெட்டி எடுக்கிறார்கள்.

**செய்தித்தாள் காகிதங்கள் இறக்குமதி.**

*334*—(*வினா எண் 6103)— திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திற்குத் தேவையான நியூஸ் பிரிண்ட் காகிதங்கள் தன்னிறைவு பெறுவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் காகிதங்களின் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) நியூஸ் பிரிண்ட் காகிதங்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் பணியானது மத்திய அரசின் செய்தித்தாள் பதிவாளரால் செய்தித்தாள் கட்டுப்பாட்டு ஆணையின் கீழ் செய்யப்படுகிறது. தற்போதுள்ள நிலவரப்படி தமிழ்நாட்டில் மொத்த செய்தித்தாள் காகித தேவை 4 லட்சம் டன்களாகும். இதில் 2 லட்சம் டன் காகித தேவை, மைசூர் பேப்பர் மில்ஸ், இந்துஸ்தான் நியூஸ் பிரிண்ட்ஸ் லிமிடெட், நேபா (NEPA) ஆலைகள் ஆகியவை உற்பத்தி செய்யும் உள்நாட்டு காகிதத்திலிருந்து பூர்த்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள 2 லட்சம் டன்கள், ரூ. 123 கோடிக்கு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக இறக்குமதி செய்யப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து காகிதம் இறக்குமதி செய்வதைக் குறைக்கவும், நம் நாட்டின் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தும் வகையிலும், இவ்வரசு 1980-ம் ஆண்டு நவம்பரில், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (டி.என்.பி.எல்.) என்ற நிறுவனத்தை ஏற்படுத்தியது. இந்த ஆலை திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டாரத்தில் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்த ஆலை ஆண்டொன்றுக்கு 50,000 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன்கள் அச்சிடும் மற்றும் எழுதுதாள் காகிதமும் உற்பத்தி செய்யும் திறனுடையதாகும்.

(ஆ) ரூ. 123 கோடி.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கொடைக்கானல், கம்பம் போன்ற மலைப் பகுதிகளில் நியூஸ் பிரிண்ட் காகிதம் உற்பத்தி செய்வ



தற்கான மூலப்பொருட்கள் கிடைக்கின்றன. அந்தப் பகுதியில் இன்னொரு காகித ஆலையை நிறுவுவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் உள்ள சேஷசாயி காகித ஆலையிலிருந்து அரசு தற்போது ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு நியூஸ் பிரின்ட் காகிதத்தை வாங்குகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்காஸ் என்ற கரும்பு சக்கையில் இருந்து காகித உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை புகளூருக்குப் பக்கத்தில் அரசின் சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் மூலமாக நியூஸ் பிரின்ட்க்குத் தேவையான காகிதத்தை உற்பத்தி செய்ய முடியுமா? அப்படியானால் அதற்கான நடவடிக்கைகை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காகித ஆலை உருவாவதற்குக் காரணமே நியூஸ் பிரின்ட் உற்பத்தி செய்வதற்காகத் தான். அந்த வகையில் தற்போது கரும்பு சக்கையில் இருந்து நியூஸ் பிரின்டை தயாரிக்கிறோம் என்பதையும், அது நல்ல அளவுக்கு தயாரிக்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். செய்தித்தாள்களைத் தயாரிப்பதற்கு 82 சதவீதம் கரும்புச் சக்கை கூழும் 15 சதவீதம் கடின மர யூக்லிபிட்டஸ் இரசாயனக் கூழும் பயன்படுத்தி தற்போது இந்த செய்தித் தாட்கள் தயாரிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வயது வந்தோர் கல்வி திட்டப் பணியாளர்கள்.**

*123*—(*வினா எண் 2746) திரு. பொ. உத்திராபதி :—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் பணியாற்றுகிற மொத்த ஊழியர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஆறு ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்ட அவர்களது சம்பளத்தை, இன்றைய நிலைமைக்கு ஓப்ப அரசு மாற்றியமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(இ) மேற்பார்வையாளர்கள் அனைவரையும் நிரந்தரமாக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள் எண்ணிக்கை 847.

(ஆ) இவர்களுக்கு 4-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் 1-10-84 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

(இ) இல்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்கிறபோது நான்காவது ஊதியக் கமிஷன்படி 1-10-1984—லிலிருந்து அமலில் இருப்பதாகவும், மேலும் சம்பள உயர்வை அளிப்பதற்கு இயலாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது ஊக்குநர்களுக்கு மத்திய அரசு ரூ.335 வழங்குவதாகச் சொல்லப்படுகிறது. மாநில அரசு ரூ. 75 தான் வழங்குவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஒரே வேலை, ஒரே நிர்வாகத்தினரிடையே இப்படிப்பட்ட வேறுபாடு இருப்பதற்கு என்ன காரணம்? ஆகவே நான் கேட்டுக் கொள்வது, மத்திய அரசு வழங்குவதுபோல் இந்த மாநில அரசும் இந்த மதிப்பீட்டு ஊதியத்தை வழங்க முன் வருமா? இரண்டாவது இப்போது தொடர்ந்து பணியாற்றி வருகிற இந்த மதிப்பீட்டாளர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க அரசு பரிசீலிக்குமா?

(முற்பகல் 9-40.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த ஊதியத்தில் இருக்கிற வித்தியாசத்தைப்பற்றி அரசு பரிசீலிக்கும். இது தற்காலிகமான திட்டமானதால், இந்த அலுவலர்களை நாம் நிரந்தரமாக்கும் திட்டம் எதுவும் இல்லை.

திரு. கு. சுப்பராயன் : தலைவர் அவர்களே, பள்ளித் துணை ஆசிரியர்கள், உதவிக் கல்வி அலுவலர்கள், களப்பணியாளர்கள் மற்றைய கல்வி அலுவலர்கள் போன்று கல்வித் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் திங்கள் தோறும் ஆற்றப்படுகிற களப் பணியாளர்களுக்கும் 50 சதவீதம் அடிப்படைச் சம்பளம் ஊதியமாக வழங்கப்படுகிறது. அதே தன்மையில் களப்பணியாற்றக் கூடிய அலுவலர்களுக்கு மட்டும் ரூ. 200 என்று சீலிங் வைத்திருப்பதைத் தளர்த்த அரசு முன்வருமா என்பதோடு, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்களே, இந்தத் திட்டம் தற்காலிகம் என்று—தற்காலிகம் அதாவது முதியோர்களுக்கு கல்வியறிவு புகட்டுகிற பணி தற்காலிகம் என்றால், எந்த



காலவரம்பிற்குள் இத்திட்டம் செயல்படுகிறது? இந்தத் திட்டம் எதிர்காலத்தில் [illegible]டப்படும்போது, மாற்றுப்பணிகள் என்ற வகையில் வாய்ப்புகள் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது 10 மாதம் வரை நடைபெறக்கூடிய வயது வந்தவர்களுக்குக் கல்வி தரக் கூடிய திட்டமாகும். அதைத் தந்ததற்குப் பிறகு வேறு பஞ்சாயத்து யூனியன்களில், ஆரம்பிப்பார்கள். வேறு மாவட்டத்தில்கூட ஆரம்பிப்பார்கள். சில பணியாளர்கள் ஆங்காங்கே எடுக்கப்படுகின்ற காரணத்தால், தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெறும்போது, மாநில அளவிலே இந்த அலுவலர்களின் நிலை ஆங்காங்கே தற்காலிகமாக இருக்கிறது. நடைபெறும் இடத்தைப் பொறுத்தவரையில் அது தற்காலிகத் திட்டம் தான். இந்தக் காரணத்தினால்தான் அவர்களை நிரந்தரமாக்க முடியாமல் இருக்கிறது. மற்றபடி சம்பளப் பிரச்சினை, ஊதியப் பிரச்சினை எல்லாம் ஒரு நபர்க்குழு ஒன்று இருக்கிறது. அதனிடம் எழுதித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கிறபோது வயது வந்தவர்கள் கல்வித் திட்டத்தில் பணியாற்றுகின்ற மதிப்பீட்டாளர்கள் அனைவரையும் நிரந்தரமாக்கும் திட்டமில்லை என்று அறிவித்தார்கள். அவர்கள் ஆசிரியர்களாக பயிற்சி பெற்ற பின்னர்தான், இந்தத் திட்டத்தின் கீழ் அவர்கலள அனுமதித்திருக்கிறோம். ஆகவே அவர்களை ஆசிரியர் பணிகளில் நியமிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

பிஜி தீவில் உள்ள தமிழ் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள்.

124—(*வினா எண். 2127) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிஜி தீவில் வாழும் தமிழர்களுக்கு தமிழ் புத்தகங்களை அனுப்புவது குறித்த செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ): பிஜித் தீவு தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பிஜித் தீவில் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் குழந்தைகள் பயன்பெறும் பொருட்டு தமிழ் பாடப்புத்தகம் I மற்றும் புத்தகம் II தயாரித்து அவற்றில் ஒவ்வொன்றிலும்

10,000 படிகள் வண்ணத்தில் அச்சடித்து இலவசமாக
அரசு ஆணையிட்டுள்ளது. இப்புத்தகங்கள் தமிழ் அனுப்ப
நூல் நிறுவனத்தினால் அச்சிடப்பட்டு பிஜித் நாட்டுப் பாட
வைக்கதக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தீவிற்கு அனுப்பி
வருகின்றது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய முன்னாள் சபாநாயகரும், இப்போதைய
தொழிலமைச்சராகவும் இருக்கிற மாண்புமிகு திரு. இராசாராம்
அவர்கள் மொரிஷஸ் தீவிற்குச் சென்றபோது அவர்களுடைய
கோரிக்கைகளுக்கு இணங்க பல தமிழ்ப் பாடப் புத்தகங்களைப்
படிக்க தந்துள்ளதாகச் சொன்னார்கள். அதே போல் பிஜித்
தீவிலுள்ள தமிழர்களுக்கு அவர்களே முயற்சிகளை எடுத்து ஆவன
செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மொரிஷஸ் தீவிற்கு
அனுப்பப்பட்ட புத்தகங்கள் ஏற்கெனவே படித்தவர்கள் மேலும்
படிப்பதற்கான புத்தகங்கள். இது தமிழ் படிப்பதற்கான பாடப்
புத்தகங்கள். இதை அனுப்புவதற்கான முடிவு எடுத்து,
புத்தகங்கள் அச்சடித்து அனுப்பப்படும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அச்சடிக்கப்பட்ட
நூல்களைக் குறித்து அரசு சொன்னதற்காக பாராட்டை
மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழிலே உச்சரிப்பு
மிக முக்கியமானதினாலே மதுரை காமராசர் பல்கலைக்
கழகத்திலேயெல்லாம் நல்ல நாடாக்கள் பதிவு செய்து இருக்
கிறார்களாம். அதைப் போன்று தஞ்சைப் பல்கலைக் கழகத்திலும்
பதிவு செய்து இருக்கக்கூடும். அவைகளையும் அந்தத்
தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு அனுப்பி வைப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தேவைப்பட்டால் அனுப்பி வைக்கலாம்.
அவர்களுக்கு ஆசிரியர்கள் தேவை என்று சொல்லி அதற்காக
ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்
படுகிறது. இங்கிருந்து ஒன்றிரண்டு ஆசிரியர்களை நாம் அனுப்ப
நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மேலை நாடுகள் அனைத்திலும் தமிழர்கள் வாழுகிற
பகுதிகளுக்கு இந்தப் பாடப் புத்தகங்களை அரசுச் செலவிலே
அனுப்பி நம்முடைய கலாச்சாரத்தை அவர்கள் மறந்து விடாமல்
நினைவூட்டுவதற்கு வாய்ப்பாக ஒரு மையம் அமைப்பதற்கு அரசு
முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே ஓரளவுக்குத்தான் உதவி
செய்ய முடியும். உலகம் முழுவதும் இருக்கிற தமிழர்களுக்குத்





திட்டமிட்டு செய்வதற்கில்லை. விரைவிலே துவங்க இருக்கின்ற
உலகத் தமிழ் நிறுவனங்கள் போன்றவை அதைப் பற்றி
சிந்திக்கலாம்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பிஜி தீவிலே இருக்கிற தமிழ் குழந்தை
களுக்குப் பாடப் புத்தகங்கள் தருவதைப் போன்று தமிழர்கள்
அதிகமாக வாழ்கின்ற ஆப்பிரிக்கா, பர்மா, மலேஷியா மற்றும்
யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும்
இவ்வகையான பாடப்புத்தகங்களை அனுப்பத் திட்டம் அரசிடம்
உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற சில
நாடுகளிலே வாழுகின்ற தமிழர்கள் தமிழ்நாட்டிலே வாழ்கிற
தமிழர்களைவிட மிகவும் நல்ல நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்
கிறார்கள். அவர்களே இதைச் செய்து கொள்ள முடியும்.
செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தக் கேள்வியானது பிஜி தீவிலே வாழுகிற
மக்களுக்கு தமிழ் புத்தகங்களை அனுப்புவது என்பது பற்றியது,
அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலுரை கொடுக்கிறபோது பிஜி
தீவில் வாழுகின்ற இளம் பிள்ளைகளுக்கு பாடப் புத்தகங்கள்
அனுப்புவது என்பது பற்றி மாத்திரம் குறிப்பிட்டார்கள். ஆகவே
அங்கே உள்ள பிள்ளைகளுக்குத் தமிழ் இலக்கியம் சம்பந்தப்பட்ட
புத்தங்களை வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பிஜி தீவில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர்
கேட்டுக் கொண்டதற்கு இணங்க நாம் இந்தத் திட்டத்தைச்
செயல்படுத்தி வருகிறோம். இந்தப் புத்தகங்களை அனுப்பி
வைக்கிறோம். நாமாகப் பாடப் புத்தகங்களை அனுப்பி அதை
அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலையில்லை. இந்தத்
திட்டத்தை அமல்செய்கிறபோது அந்தப் பள்ளிகளிலே அதை
ஒத்துக் கொள்ள வேண்டும். அந்த நாட்டிற்குத் தகுந்தாற்
போல் பாட புத்தகங்கள் எழுதப்பட்டு அச்சடித்திருக்கிறோம்.
கேள்வி, தமிழ்ப் புத்தகங்களைப்பற்றி இருந்தாலும், தரப்
பட்டிருக்கிற பதிலைப் பொறுத்தமட்டில் ஒரு தெளிவான
நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதான். அனுப்பப்
படுகிற புத்தகங்கள் நம்முடைய புத்தகங்கள் அல்ல. பிஜித் தீவிலே
இருக்கிற குழந்தைகளுக்குத் தகுந்தாற்போல் எழுதப்பட்டு தயார்
செய்யப்பட்டு அச்சடிக்கப்பட்டிருக்கிற புத்தகங்கள். மற்றபடி
தேவைப்படும் புத்தகங்கள் வேண்டுமென்ற கோரிக்கை வந்தால்
அதைப் பற்றிப் பரிசீலிக்கும்.

## தமிழில் தந்தி அடிக்கும் முறை

125— (*வினா எண். 3308) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தமிழில் தந்தி அடிக்கும் முறையினை செயல்படுத்துமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) தமிழில் தந்தி அடிக்கும் முறை பற்றிய கருத்துரு ஒன்றினை அதற்கான திட்ட வரைவுடன் மைய அரசிற்கு அனுப்பித் தமிழில் தந்தி அடிக்கும் முறையைத் தமிழ் நாட்டில் செயல்படுத்தும்படி மைய அரசை இவ்வரசு கேட்டுக்கொண்டது. இத்திட்ட வடிவம் மோர்ஸ் முறையில் அமைந்துள்ளது என்றும், தற்போது தந்தி முறையானது நவீனமாக்கப்பட்டு ரோமன் வரிவடிவங்களை ஏற்று கணிப்புக் கட்டுப்பாடு தந்தி முறையின்படி (Computer Controlled Telegraph System) இயங்கி வருவதால் மோர்ஸ் முறைப்படி தமிழில் தந்தி அடிப்பது என்பது கடினமானதும் மற்றும் இயலாத ஒன்றாகும் எனவும், இருப்பினும் வாழ்த்துச் செய்திகளை ரோமன் வரிவடிவின் மூலமாக அனுப்பித் தமிழிலும் ஏனைய மொழியிலும் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மைய அரசு தபால் தந்தித் துறையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழில் தந்தி அடிக்கிற முறையைக் கொண்டு வரவேண்டுமென்பது தமிழகத்திலே நீண்ட நாட்களாக கோரிக்கையாக இருந்து வருகிறது. அதிலே மோர்ஸ் முறை இருப்பதால் அது முடியாது வாழ்த்துச் செய்திகளை மட்டும் தமிழ்மொழியில் கொடுக்கலாம் என்று தகவல் தெரிவித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தந்தி எல்லாவற்றிலும் அந்த மோர்ஸ் முறை இடையூறு ஆக இருக்குமானால் மொழி பெயர்ப்புத் துறையை அங்கே ஏற்படுத்தி மொழி பெயர்த்து, தந்தியைக் கொடுக்கிறபோது அதை தந்தி துறை அலுவலர்களே மொழி பெயர்த்துச் சேர்த்துக் கொடுக்க வேண்டும். இவ்வாறு மைய அரசை நமது மாநில அரசு மீண்டும் வற்புறுத்துமா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கேட்பதிலே சங்கடம் இல்லை, ஆனால் அதுவே கடிதமாக ஆகி விடும். கடிதங்களே நான்கைந்து நாட்கள் கழித்து வந்து கொண்டிருக்கின்றன.

## ஹோமியோபதி மருத்துவமனை வளர்ச்சி.

335—(*வினா எண். 2457)— திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85-ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவமனை வளர்ச்சிக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) படித்த ஹோமியோபதி டாக்டர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(இ) அதன் விபரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 1984–85 ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவமனை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 10.36 லட்சம்.

(ஆ) & (இ): 15 மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளிலும், சென்னை நகரில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி வளாகம் மற்றும் மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நல இயக்குநர் வளாகம் ஆகிய இடங்களிலும் ஹோமியோபதி மருத்துவமனை துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி மருத்துவமனைகளில் உள்ள மருத்துவர் பணியிடங்கள் யாவும் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களைக்கொண்டு நிரப்பப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹோமியோபதி படித்து தேர்ச்சி பெற்ற டாக்டர்களில் எத்தனை பேர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள்? பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியிருக்கின்ற திருமங்கலத்தில் இருக்கின்ற ஹோமியோபதி மருத்துவமனையைச் சொந்தக் கட்டிடத்திற்கு மாற்ற வேண்டுமென்று புதிய கட்டிடம் கட்டுவதற்கு வரைபடங்கள்கூட அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றனவே, அவைகளை அரசு ஏற்றுக் கொண்டு இந்த ஆண்டிலேயே சொந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 120 டிப்ளமோ ஹோல்டர்ஸ் இப்பொழுது தனியாகப் பிரைவேட் பிராக்டீஸில் ஈடுபட்டிருக்கிறார்கள். எத்தனை பேர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் பிரைவேட் பிராக்டீஸ் செய்யாமல் வேலைவாய்ப்பு தேவை என்று எதிர்பார்க்கிறார்கள்

என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை. திண்டுக்கல், தூத்துக்குடி, இராமநாதபுரம், வேலூர், கடலூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தர்மபுரி, கன்னியாகுமரி, உதகமண்டலம் ஆகிய இந்த 11 இடங்களிலும் நாம் இப்பொழுது புதிதாக — அதுமட்டுமல்ல, இன்னும் 6 இடங்களில் ஆக மொத்தம் 17 இடங்களில் ஹோமியோபதி டிஸ்பென்சரீஸ் துவக்கி நடந்து கொண்டு இருக்கின்றன. மூன்றாவதாக, திருமங்கலத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். இந்த வரைபடம் நம்மிடத்தில் வந்திருக்கிறது. எந்த இடத்திலே அமைப்பது என்ற பிரச்னை இருக்கிறது. மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் அது திருமங்கலத்தில் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாகத் தான் அரசு அதைக் கருதுகிறது. ஆகவே, அதுபற்றிய முடிவு எடுக்கப்பட்டவுடன் இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டிவனம் அரசு மருத்துவமனை.

336—(*வினா எண். 3243) திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் அரசு பொது மருத்துவமனையில் குழந்தைகள் நல வார்டு புதியதாக கட்ட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

நெல்லிக்குப்பம் நகராட்சி மருத்துவமனை.

337— (*வினா எண். 3769)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் நகரத்தில் இயங்கிவரும் நகராட்சி மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக ஆக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இது இருக்கிறது. நகராட்சி மருத்துவமனை நோயாளிகளுக்குப் பாதுகாப்பு இல்லாத மருத்துவமனையாக இருப்பதால், மக்களுடைய நன்மையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை அரசு மருத்துவமனையாக ஆக்கிட நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை இனிமேல் அரசு ஏற்றுக்கொள்வது இல்லை என்றும், புதிதாக மருந்தகங்களை திறக்க ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களுக்கு அனுமதி வழங்கவும் அவற்றின் பராமரிப்பு செலவினங்களுக்காக 100 விழுக்காடு வரை நிதி உதவி வழங்கலாம் என்றும் 18-1-84-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 83-இல் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, இதனைக் கருத்திற்கொண்டு, அரசின் தற்போதைய நிதி நிலையையும் கருத்திற்கொண்டு நகராட்சி மருந்தகங்களை அரசு ஏற்றுக்கொள்ள இயலாது. நாம் இந்த ஆணையின் அடிப்படையிலே நகராட்சி மன்றங்களே அதற்காக ஏற்பாட்டைச் செய்து மருந்தகங்களை அவர்களே நல்ல வகையிலே விஸ்தரிக்கும் வாய்ப்பு இருப்பதால்—அதுமட்டுமல்ல, நகராட்சி மன்றங்களுக்குப் புதிதாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். லோக்கல் அத்தாரிட்டீஸ் என்று இருக்கின்ற அவர்களுடைய எல்லைக்குள் அரசாங்கம் புகுந்துவிடக் கூடாது என்பதற்காக, We h ve t ken a decision not to t ke w y the ights of the loc l uthorities. அந்த வகையில் ஒரு முடிவெடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே நகராட்சி அதற்கான ஏற்பாட்டைச் செய்ய முன் வந்தால் அரசாங்கம் 100 விழுக்காடு அதற்காகப் பணம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது.

திரு. துரை அன்பரசன்: தலைவரவர்களே, நெல்லிக்குப்பம் நகராட்சி வருவாய் இல்லாத நகராட்சி என்பதை பல நேரங்களில் இந்த மன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து, தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்து, அதற்குப் பின்னால் நம்முடைய ஆட்சிக் காலத்திலிருந்து இன்றுவரையில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நெல்லிக்குப்பத்திற்கு வருகின்றபோதெல்லாம் அந்த மருத்துவமனையைக் காட்டி, அங்கே மருந்து இல்லாத சூழ்நிலையால் வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் அவஸ்தைப்படுவதையும் சுட்டிக்காட்டும்போது 'ஆவன செய்கிறோம், அரசு நடவடிக்கை எடுக்கும்' என்று சொன்னார்கள். ஆனால் இன்றுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே மக்களுடைய நன்மையைக் கருதி நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். வருவாய் இல்லாத நகராட்சி மருத்துவமனை அது என்பதை எண்ணிப்பார்த்து, அரசே அந்த மருத்துவமனையை ஏற்று நடத்த அவசியம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளும் அளவுக்கு நான் சொல்லவில்லையோ என்று கருதுகிறேன். நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். 18-1-1984-ல் நாம் புதிதாக ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறோம். நகராட்சி மன்றங்களிலுள்ள மருத்துவ மனைகளுக்காக ஏற்கெனவே அவர்கள் எவ்வளவு செலவழித்துக் கொண்டிருக்கிறார்களோ அதுபோதும் புதிதாக அவர்கள் செலவழிக்கவேண்டிய தேவையில்லை. மேலும் மருத்துவமனைகளை விஸ்தரிக்க வேண்டுமென்றால் அதற்கானத் திட்டத்தை தீட்டிஅரசாங்கத்திற்குஅனுப்பினால், அதற்கு எவ்வளவு செலவு ஆகிறதோ அந்தச் செலவு முழுவதையும் நூறு விழுக்காடு செலவையும்—அரசாங்கம் கொடுக்க தயாராக இருக்கிறது. இப்போது இருக்கின்ற மருத்துவ மனைகளை அரசாங்கம் ஏற்று நடத்தக்கூடாது என்ற முடிவை எடுத்திருப்பதற்குக் காரணம் நகராட்சி மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றியத்தினுடைய அதிகாரத்திற்குள்ளே அவை இருப்பதுதான். அவர்களுடைய அதிகாரத்திற்குள்ளே அரசாங்கம் போய் புகுந்தமாதிரி இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த முடிவினை எடுத்திருக்கிறோம். Interfering with the functioning of the Local authorities is not a desirable thing. அது நன்றாக இருக்காது என்பதால் நாம் இந்த முடிவிற்கு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நகராட்சி மன்றத்தை கலந்து, விஸ்தரிப்பு செய்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்து, அதற்கான பரிந்துரை செய்து அரசுக்கு வரக்கூடிய அளவுக்கு முயற்சி எடுத்துக் கொண்டால் நிச்சயமாக 100 சதவீத செலவையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்; அதற்கான ஆணையை அரசு பிறப்பிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### கைவினைப் பொருட்கள் நிறுவனம்.

338—(*வினா எண் 625)—திரு. இரா. தாமரைக்கனி:—மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டு நிறுவனம் மலேசியாவிற்கு வெள்ளிரதம் தயாரித்து கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், தமிழக அரசுக்கு கிடைத்த அந்நிய செலவாணி எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன். (அ) ஆம்.

(ஆ). அந்நிய செலாவணி மூலம் பெறப்பட்டது ரூ. 2,78,643.30 (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்தி எட்டாயிரத்து, அறுநூற்று நாற்பத்தி மூன்று மற்றும் முப்பது பைசா மட்டும்) ஆகும்.





திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, இதைப்போன்ற வெள்ளி ரதத்திற்கு வெளிநாடுகளிலிருந்து வேறு ஆர்டர் வந்திருக்கிறதா? அதற்கு அரசு முயற்சி செய்திருக்கிறதா? இந்த வெள்ளி ரதத்தினால் அரசுக்கு நிகர இலாபம் எவ்வளவு? இந்த வெள்ளி ரதம் இங்கு வைத்து செய்யப்பட்டதா? அல்லது நம்முடைய தொழிலாளர்கள் மலேசியாவுக்குப் போய் இதைச் செய்தார்களா? அதற்கான வெள்ளி இங்கேயிருந்து கொண்டு போகப்பட்டதா அல்லது அங்கே கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: தலைவரவர்களே, இந்த வெள்ளிரதத்தினுடைய மொத்த மதிப்பு ரூ. 3,78,643.30, இந்த வெள்ளிரதம் சுமார் 21 அடி உயரமுள்ள மரத்தேர். மரத்தேரை இங்கே தனித்தனிப் பாகங்களாக நாகர்கோவிலில் உள்ள உற்பத்தி நிலையத்தில் செய்து 1981 செப்டம்பரில் கோலாலம்பூருக்கு அனுப்பப்பட்டது. ஏறத்தாழ 16 பேர்கள் இந்தத் தேரை தயார் செய்தார்கள். இங்கிருந்து 8 பேர் மலேசியாவுக்குச் சென்று மரத்தேரை பொருத்தி பூர்த்தி செய்து கொடுத்தார்கள். திறமை மிக்க 6 வெள்ளி வேலை கைவினைஞர்கள் கோலாலம்பூருக்குச் சென்று வெள்ளிக்கவசம் பூட்டும் வேலையைச் செய்தார்கள். நிகர இலாபம் 89,200.30 ரூபாய். கிடைத்த அந்நியச் செலவாணி ரூ. 3,78,643.30.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, வெள்ளிரதம் செய்த தொழிலாளர்களுக்கு எவ்வளவு கூலி கொடுக்கப்பட்டது? எத்தனை நாள் இந்த வெள்ளிரதத்தைச் செய்தார்கள்? இலாபம் முழுவதும் அந்த தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: தலைவரவர்களே, கூலியாக மட்டும் 1,65,693 ரூபாய் கொடுக்கப்பட்டது. இதில் கூலிதான் அதிகமாகக் கொடுக்கப்பட்டது; தேவையான அளவுக்குக் கொடுக்கப்பட்டது. மேலும் தேவையான வெள்ளியை அங்கே இருக்கிற மாரியம்மன் கோவிலிலிருந்து, மரத்தேர் இங்கிருந்து சென்ற பிறகு, அங்கே கொடுத்தார்கள்.

### திண்டுக்கல் கூட்டுறவு பாலித்தீன் சங்கம்.

339—(*வினா எண். 3789) திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் கூட்டுறவு பாலிதீன் சங்கத்திற்கு பாலித்தீன் பைகள் தயாரிக்க வேண்டிய மூலப்பொருள்கள் (கிரானுவல்ஸ்) கடந்த இரண்டு மாதங்களாக கிடைக்காமல் வேலை இல்லாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்;** 'அ மற்றும் ஆ' பாலித்தீன் பைகள் தயாரிக்க பயன்படும் மூலப் பொருளான பாலிதீன் கிரானுவல்ஸ் கிடைப்பது தட்டுப்பாடாக இருந்தாலும், திண்டுக்கல் கூட்டுறவு பாலித்தீன் சங்கத்திற்கு மேற்படி மூலப் பொருளை சம்பந்தப்பட்ட வினியோகஸ்தர்கள் மூலம் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை கொடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10.00)

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, தமிழகத்தில் 75 பெண்களை வைத்து நல்லமுறையில் நடத்தப்படக்கூடிய கூட்டுறவுச் சங்கம்தான் இந்தப் பாலித்தீன் பை தயாரிக்கக்கூடிய சங்கமாகும். ஏப்ரல் ஒன்றாம் தேதி இன்று அதாவது முட்டாள்கள் தினம் இது என்பதற்காக நான் இவ்வாறு பொய் கூறுகிறேன் என்று நினைக்க வேண்டாம். மிக மிக இலாபகரமாக நடக்கக்கூடிய அந்தச் சங்கத்தில் கடந்த ஆண்டு ரூ. 5 இலட்சித்திற்கு மேல் அதிகமான இலாபத்தை ஈட்டித் தந்திருக்கிறார்கள். புரட்சித்தலைவருடைய சீரிய அரசு அங்கே இருக்கக்கூடிய பெண்களுக்கெல்லாம் இலவச சீருடை ஏற்கெனவே ஐந்தாண்டுக்காலமாக வழங்கி வருகிறது. அதுபோல் அங்கே இருக்கக்கூடிய பெண்களின் குழந்தைகளுக்கும் இலவசச் சீருடையும், இலவசநோட்டுப் புத்தகங்களும் கடந்த 5 ஆண்டுக்காலமாக வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இப்படிப்பட்ட நல்ல சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இன்சென்ட்டிவ் போனஸைத் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனை அரசு தருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் இரண்டு மாதம் பாலிதீன் கிரானுவல்ஸ் கிடைப்பது தட்டுப்பாடாக இருந்தது. அதனைவழங்கி வந்த இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனம் வழங்குவதை நிறுத்திவிட்டது. அதுபோல் மற்றொரு நிறுவனமான இன்டியன்மெட்ரோ கெமிக்கல்இண்டஸ்ட்ரீஸ் வழங்கி வந்த அளவைக் குறைத்துவிட்டது. அதனால் சிறு சங்கடம் ஏற்பட்டது. ஆனாலும் கூட அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து பாலித்தின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தொடர்ந்து தேவையான அளவுக்கு பாலித்தீன் கிரானுவல்லை வழங்கி வருகிறோம். அதிலே எந்தவிதமான சிக்கலும் இல்லை. அங்கே உள்ள சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்குப் போதிய அளவுக்குக் கூலிக் கொடுத்து, அவர்கள் திருப்தி அடையக்கூடிய அளவுக்கு இந்தச் சங்கம் நடந்து வருகிறது.



திரு. ஆ. பிரேம்குமார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்சென்டிவ் போனஸ் அவர்களுக்குத் தரப்படுமா என்று கேட்டேன். மேலும் இப்படிப்பட்ட நல்ல சங்கத்தை விரிவாக்கி இன்னும் அதிகமான பேர்களை சங்கங்களில் உறுப்பினர்களாக ஆக்கி அவர்களுக்கு வேலை தர அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த தொழில் கூட்டுறவுச் சங்கத்தில் 68 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். அவர்கள் எத்தனை பைகள் தயாரிக்கிறார்களோ அந்தப் பணிக்கேற்ற வகையில் ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே இன்சென்டிவ்-க்கு அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. தேவையானால் பரிசீலிக்கலாம்.

**மகளிர் கூட்டுறவு கடன் சங்கம்.**

*216—(* வினா எண். 3008)*—திரு. க. சோலைராசு, திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிருக்கான கூட்டுறவு கடன் வசதி சங்கங்கள் செயல்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், திருச்சி மாவட்டத்தில் எங்கெங்கு செயல்படுகின்றன?

(இ) புதிதாக தொடங்கும் எண்ணம் உண்டா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** (அ) மகளிருக்கான கூட்டுறவுக் கடன் வசதி சங்கம் ஒன்று சென்னையில் மட்டும் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) திருச்சி மாவட்டத்தில் மகளிருக்கான கூட்டுறவுக் கடன் வசதி சங்கங்கள் ஏதும் செயல்படவில்லை.

(இ) இல்லை.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நடத்திக் கொண்டிருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களைப் போல ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் புதிதாகத் தொடங்குவதற்குரிய எண்ணம் அரசுக்கு உண்டா? இந்த கூட்டுறவுச் சங்கங்களில் பெண்களுக்கு எந்த வகையில் உதவி செய்யப்படுகிறது என்பதையும் ஆதரவற்ற விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் வேலை வாய்ப்பினை இந்தச் சங்கத்தில் தருவதில் முன்னுரிமை வழங்கப்படுமா என்பதையும் அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு மகளிர் கூட்டுறவுச் சங்கம் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அமைக்க போதிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அங்கே மெம்பராக இருக்கிற அந்தத் தாய்மார்களைப் பொறுத்தவரையில் அவர்கள் அப்பளம், ஊறுகாய் போன்றவற்றைத் தயாரிக்கின்ற தொழில்களைச் செய்வதற்கு அதாவது அவர்கள் வீட்டிலே இருந்து கொண்டே தொழில் செய்யக்கூடிய வகையில் வசதி செய்திருக்கிறோம். மேலும் அங்கே உறுப்பினர்களாக இருப்பவர் களுக்கு கடன் வசதியும் செய்து கொடுத்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, பெண்களுக்குரிய கூட்டுறவுச் சங்கம் என்ற வகையில் சென்னையிலே ஒன்றுதான் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டின் மையப் பகுதியாக இருக்கிற திருச்சி மாநகரத்தில் இந்த ஆண்டில் பெண்களுக்கென கூட்டுறவுக் கடன் வசதிச் சங்கம் ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலும், கோவையிலும் இந்த சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஏற்று வருகிற ஆண்டில் திருச்சியிலே அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

**மதுக்கரை மற்றும் பேரூரில் கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள்.**

217—(* வினா எண். 4337)—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை மற்றும் பேரூர் கிராமங்களில் கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளை துவங்க திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ் ஆர். இராமச்சந்திரன் :
(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளை மதுக்கரையில் 6-9-1985 அன்று துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பேரூரில் கிளை துவக்க பாதுகாப்பான கட்டடம் வாடகைக்குப் பார்க்கப்பட்டு, கட்டடம் தேர்வு செய்யப்பட்டவுடன் கிளை துவக்கப்படும்.



திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மதுக்கரையிலே கிளை துவக்கப் பட்டு விட்டது என்று சொன்னார்கள். அந்தக் கிளை கட்டடத் திற்கு எப்போது ஒப்பந்தம் போட்டார்கள். எப்போது திறக்கப் பட்டது அதற்கான தாமதத்திற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரூரைப் பொறுத்தவரையில், வாடகைக் கட்டிடம் பார்த்து அலுவலர்களிடத்திலே சொல்லியும் 12 மாத காலம் ஆகியும் கூட கட்டிடத்திற்கு ஒப்பந்தம் போடாத காரணத்தால் அங்கே வங்கி ஆரம்பிக்கப்படாத நிலையில் இருப்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை எப்போது துவக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் கேட்க விரும்புகிறேன். அந்தக் காலதாமதத்திற்கு காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுக்கரையில் 6-9-1985 முதல் அந்த வங்கியினுடைய கிளை துவங்கி நடந்து கொண்டிருக்கிறது. பேரூரினுடைய கிளை அலுவலகத்திற்கு மெயின் ரோட்டிலேயே கட்டிடம் கிடைக்காத காரணத்தால், உள்ளூரிலே இருக்கிற காரணத்தால், அந்த இடம் வேண்டாம் என்று முடிவு செய்யப் பட்டு, மெயின் ரோட்டிலேயே எடுப்பதற்கு நடவடிக்கைகளை முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். நான் அதிகாரி களிடத்திலே பேசிய நேரத்தில் எப்படியும் ஒரு மாத காலத்திற்குள்ளாக பேசி ஏற்பாடு செய்யப்படும் என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள். உறுப்பினர் அவர்களின் ஆர்வத்தைப் பற்றி, இந்த வங்கியின் மீது அவர்கள் காட்டுகின்ற அக்கறையைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். வேகமாக அந்தக் கிளை துவங்கப்படும்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வங்கிகளைத் துவக்குவதற்கு ரிசர்வ் வங்கியிடம் இருந்து எப்போது அனுமதி அளிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே, எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்போது அனுமதி வழங்கப் பட்டது என்கிற சரியான தேதி விவரம் என்னிடத்திலே இப்போது இல்லை. தனியாக மாண்புமிகு உறுப்பினரிடத்திலே அந்தத் தகவலைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.**

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்னைகள் அனுமதிப்பது குறித்து.

(ஒரே நேரத்தில் பல உறுப்பினர்கள் எழுந்திருந்து பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முயன்றார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் நம்முடைய அவையில் எந்தவிதமான விவாதமும் நடைபெறவில்லை. விவாதம் ஏதாவது நடைபெற்றால் பாயின்ட் ஆப் ஆர்டர் எழ சந்தர்ப்பம் உண்டு. இப்போது எங்கேயிருந்து பாயின்ட் ஆப் ஆர்டர் வரும்? (கூச்சல், குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள் நான் பேரவையின் விதியில் இருப்பதை படிக்கிறேன்.

......''A point of order shall relate to the interpretati n or enforcement of the e rules or such Articles of the Constitution..'' (குறுக்கீடு) ''ஜீரோ அவர்'' (Zero Hour) என்று, நம்முடைய அவையைப் பொறுத்தவரையில் ஒன்றும் கிடையாது. வினாக்கள் விடைகள் முடிந்தவுடன், முன் வரிசையில் உள்ள தலைவர்கள் அவசர முக்கியமான பொருள் குறித்து தகவல் கோருவது என்றால், அடுத்த அலுவலை எடுத்துக் கொள்வதற்கு முன், அதை அனுமதித்து வருகிறோம். ஹவுஸ் ஆப் காமன்ஸ் போயிருந்தபோது பார்த்தேன். அங்கே அப்போசிஷனுக்கும் ரூலிங் சைடிற்கும் இடையே மைக்கே கிடையாது. மத்தியிலே ரெட் லைன் தான் இருக்கும். அந்தப் பாயிண்டிற்குள்ளே இருந்து தான் பேச வேண்டும். எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்திருந்து பேச முடியாது.

(முற்பகல் 10-10)

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : தலைவர் அவர்களே, முன் வரிசையில் இருப்பவர்களுக்கு மட்டும் தான் அனுமதியா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 7, 8 உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் எழுந்திருந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் என்ன செய்வது? பாயின்ட் ஆப் ஆர்டர் எழ சந்தர்ப்பமே யில்லை. ஏதாவது தகவல் கோர வேண்டுமென்றால் முன்வரிசை யிலுள்ள அவரவர்களது கட்சித் தலைவர்கள் எழுந்து கேட்க அனுமதிக்கலாம்; என அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்து அதைத்தான் நம் அவையைப் பொறுத்தவரை பின்பற்றி வருகிறோம். என்னுடன் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும்.



திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அவசரமான பிரச்னைகளைக் கேட்கிறோம். நியாயமாக இருந்தால் எல்லோரும் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிசினஸ் நடந்து கொண் டிருக்கிறபோது நடைமுறை சம்பந்தமாக முறை பிசகு இருக்கு மானால் யார் வேண்டுமானாலும் கேட்கலாம். ஆனால் நாம் இப்போது பிசினசை ஆரம்பிக்கவே இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இதுவரையில் இருந்த பழக்கம். இந்த நேரத்தில் நீங்கள் அனுமதி கொடுத் துள்ளீர்கள். அதை ஒட்டித்தான் இன்றைக்குக் கேட்டார்கள். தாங்கள் திடீரென்று அந்தப் பழக்கத்தை நிறுத்தியதால் உறுப்பினர்கள் மத்தியில் இந்த உணர்வுகள் ஏற்பட்டிருக் கின்றன. நீங்கள் சொல்கிற முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றால் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து வைத்துப் பேசி, புதிய ஒழுங்குமுறையை ஏற்படுத்தி, எப்படி எப்படி பேசலாம் என்று நிர்ணயம்' செய்கிற வரையில் இன்றைக்கு வழக்கம் போல் உறுப்பினர்களை இந்த நேரத்தில் தாங்கள் அனுமதிக்கலாமென்பது என்னுடைய கருத்து. எல்லா கட்சித் தலைவர்களையும் அழைத்து கலந்து பேசுவது நலமாக இருக்கும். இப்படி திடீரென்று தாங்கள் நிறுத்த தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று நிறுத்தவில்லை. (கூச்சல், குழப்பம்) இது தான் நாம் பின்பற்றி வருகிற முறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அவையை பொறுத்த நடைமுறையில் ஒழுங்கில் மாறுபாடு, முரண்பாடு, வேறுபாடு, நடைபெற வேண்டிய வகையில் நடைபெறாமல் இருந்தால் அதைச் சுட்டிக்காட்டி, ஏன் இப்படி நடைபெறுகிறது என்று கேட்பதற்கு தான் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று வருகிறது (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள். என்னைப் பேச விடாமல் செய்வதே சரியல்ல. நான் சில விளக்கங்களைச் சொல்லி விடுகிறேன். அந்த வகையிலே சாதாரணமாக சிலபல எதிர்பாராத ஐயப் பாடுகள் மரபுப்படி ஏற்கனவே திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் சபாநாயகராக இருந்த போதும் சரி, அதற்குப் பிறகு செல்லப்பாண்டியன் அவர்கள் தலைவராக இருந்தபோதும் சரி, முன்வரிசையில் இருக்கிற கட்சியினுடைய தலைவர்கள் சிலபல ஐயங்களை எழுப்புவார்கள். அதை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் ஏற்றுக் கொள்வார்கள். இல்லையென்றால் தள்ளி விடுவார்கள். அப்படியே யாராவது எழுப்புவதாக இருந்தாலும் ஒவ்வொரு கட்சிக்கும் தலைவர் முன்வரிசையில் இருக்கிறார் கள். முன்கூட்டியே தலைவரிடத்தில் சொல்லி, தலைவர்

*(மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)* [1986 ஏப்ரல் 1

மூலமாக எழுப்புகிற ஒரு முறை இருக்குமானால் அது கடைபிடிப்பதற்கு ஏற்றதாக இருக்கும். நம்முடைய அவையைப் பொறுத்தவரையில் ''ஜீரோ ஹவர்'' என்றே இல்லை. அப்படி ஒன்றை உண்டாக்குவது சரியாகவும் அமையாது. அது எங்கேயோ கொண்டு போய் விட்டுவிடும். என்றாலும் இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கிளப்பியதன் காரணமாக, அதனைக் கேளுங்கள். அது பாயிண்ட் ஆப் ஆர்டராக இல்லாவிட்டால் சொல்லியதையும் சேர்த்து தள்ளிவிடுங்கள். அதற்கு பிறகு தீர்ப்பு அளியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில உறுப்பினர்கள் என்னுடைய அறைக்கு வருகிறார்கள். They get prior permission to raise a point of order. அந்த முறையில் இருந்தாலும் பரவாயில்லை. திடீரென்று ஏழு உறுப்பினர்கள் இதை எழுப்புகிற போது யாருக்கு அனுமதி கொடுப்பது, யாரை நிறுத்துவது என்று முடிவு செய்வது சரியாக வராது. அதற்குதான் சொன்னேன்.

திரு. செ. ஆறுமுகம்; தலைவர் அவர்களே, முதலிலே பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்பது நான் தான்.

திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்கிறபோது 'ஜீரோ ஹவர்' என்று கிடையாது என்று சொன்னார்கள். இந்த அவையிலே பல பிரச்னைகள் பற்றி பேசுகிறபோது தாங்கள் புதிய வாய்ப்புகளை உறுப்பினர்களுக்கு உருவாக்கி கொடுக்க வேண்டும். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற முறையில் கிளப்புவது வேண்டுமானால் சரியாக இல்லாமல் இருக்கலாம். இந்த நேரத்தில் முக்கியமான பிரச்னைகளை எழுப்புவதற்கு பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்று எந்த வகையில் எழுப்புவது சரியாக இருக்கும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுகிறபோது தான் எழுப்ப முடியும். பாலிசி மேட்டரை பற்றி, அரசாங்கத்தின் முடிவைப் பற்றி பாயிண்ட் ஆப் ஆர்டரில் தெரிந்து கொள்ள முடியாது. (குறுக்கீடு)

திரு. என்.எஸ்.வி. சித்தன்; தலைவர் அவர்களே, எங்களுக்கு வாய்ப்புகளை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்' பிரமியர் பெர்மிஷன் வாங்கி வருபவர்களுக்கு அனுமதித்து விடுகிறேன். இப்படி ஏழு உறுப்பினர்கள் கேட்கிற போது இரண்டு உறுப்பினர்களை அனுமதித்து மற்றவர்களை அனுமதிக்காமல் இருக்க முடியாது



1986 ஏப்ரல் 1]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோக் சபாவிலே கூட, அங்கே உள்ள விதிமுறைகளில் கூட, சீரோ ஹவர் என்று ஒன்று கிடையாது. அங்கேயும் இது வந்துவிட்டது. ஆகவே இங்கேயும் ஏற்கனவே இருந்த முறைகளிலே எல்லா உறுப்பினர்களும் அவரவர்கள் கேட்கின்ற நிலைமையைவிட, அந்தந்தக் கட்சித் தலைவர்களிடத்தில் முக்கியமான பிரச்சனைகளை எடுத்துச் சொன்னால், அவர்கள் பாய்ன்ட் ஆப் கிளாரிபிகேஷன் அல்லது பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற அந்த வகையிலே எழுப்பினால், அதற்கான விளக்கங்கள் தருகின்ற அத்தகைய வாய்ப்பை நாம் ஏற்கனவே இருந்தபடி கடைப்பிடித்து வரலாம். ஆனால் இது ஒரு பிரச்சனையாக ஆகிவிட்டதன் காரணமாகவும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது மாதிரியும், திட்டவட்டமாகவும், தெளிவாகவும் ஒரு முறையை நாம் கையாளுவது பற்றி நாம் அலுவல் ஆய்வுக் குழு மூலமாக முடிவு எடுப்பது நல்லது. ஆகவே பாய்ன்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டு, எதையோ ஒன்றைப் பற்றிக் கேட்டுவிட்டு, அது செய்தியாக வெளியே வருவது, அதனால் பாதிக்கப்படுகின்ற நிலைமைகள் வருமானால் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது நல்லது. கேட்டு வையுங்கள், அது சரியாக இல்லையானால் நீக்கி விடுங்கள், அந்த வகையிலே அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய முன் அனுமதி பெற்று இங்கே உறுப்பினர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். (குறுக்கீடு) நான் சீக்கிரமாகவே வந்துவிடுகிறேன். என்னுடைய செயலகத்தைப் பற்றியோ இந்த அவையை நடத்துவது பற்றியோ இங்கே விவாதிப்பது நல்லதல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை நடந்துகொண்டிருக்கிற போது, நடைமுறை பற்றி, அதைப்பற்றி பாயின்ட் ஆப் ஆர்டர் யார் வேண்டுமானாலும் எழுப்பலாம்: ஆனால் கேள்வி நேரம் முடிந்தவுடன், ஒழுங்குப் பிரச்சனை என்ற தன்மையிலே எழுப்புவது பற்றி, (குறுக்கீடு) சீரோ ஹவர் என்று ஒரு கன்வன்சன் கிடையாது, சீரோ அவர் என்று ஒன்று இல்லை. இருக்கவும் கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லியது மாதிரி, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எந்த ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரும் எழுப்பக் கூடாது என்று நான் சொல்லவில்லை. எந்த உறுப்பினரும் எழுப்பலாம். பாயின்ட் ஆப் ஆர்டர் அல்லது பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன் எழுப்பலாம். கேள்வி நேரம் முடிந்தவுடன் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவதற்கு எந்த முகாந்திரமும் இல்லாத நேரம். அப்படிப்பட்ட நேரங்களில்தான், தலைவர்கள் எழுப்பலாம் என்று சொன்னேனே தவிர, மற்ற நேரங்களில் எழுப்புவது பற்றி அல்ல.

[ 1986 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனை குறித்து, ஏற்கனவே அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி முடிவு எடுத்து இருக்கிறோம். அதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம் என்று தான் கருதுகிறேன். ஒழுங்குப் பிரச்சனை என்பது வேறு. பொதுப் பிரச்சனை என்பது வேறு. ஒழுங்குப் பிரச்சனை என்று சொல்கிறபோது, எந்த நேரத்திலேயும், உறுப்பினர்கள் சட்ட சபை நடவடிக்கைகளைக் குறித்தோ அல்லது அலுவல்களில் ஒழுங்குக்கு மாறாக இருப்பது குறித்தோ, அவர்களுக்கு எழுப்புவதற்கு உரிமை உண்டு. மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் அதைத்தான் தெரிவித்தார்கள். பொதுவாக மற்ற சட்ட சபைகள், 11 மணிக்கு ஆரம்பித்து, கேள்வி நேரம் 12 மணிக்கு முடிந்து, அந்த 12 மணி நேரம் வருகிறபோது, அதை சீரோ ஹவர் என்று சொல்வது உண்டு. நம்முடைய சட்டசபையில் சீரோ ஹவர் வருவதில்லை. ஆனாலும் அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் எடுத்த முடிவு, பொதுப் பிரச்சனைகள் வருகிற போது, குறிப்பாக, திடீரென்று இலங்கை தமிழர் பிரச்சனை பற்றி பத்திரிகையில் ஏதாவது ஒன்று வந்துவிட்டது என்றால், அதைப் பற்றி இங்கே சொல்லி, பதில் வாங்க வேண்டும் என்றால், அதற்கு நேரமாகும், அதை விதிமுறைகள் எல்லாம் அனுமதிக்காது. அந்த மாதிரி சமயங்களில் முன்வரிசையிலே உள்ள கட்சித் தலைவர்கள் எழுந்து, அதாவது 'மென்சன்' என்ற வகையில் குறிப்பிட்டு அரசின் சார்பிலே ஏதேனும் தகவல் இருந்தால் தெரிவிக்கலாம் என்கிற வகையில் அதை நாம் ஏற்றுக்கொண்டோம். அதை அமுல்படுத்தினால் போதுமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு கட்சியிலேயும் 3 பேர்கள், 4 பேர்கள் என்று கேட்டால் எப்படி? I c nrot pick and choose.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: ஒழுங்குப் பிரச்சனை எழுப்புகிற உரிமை கட்சித் தலைவர்களுக்கு மட்டும்தான் உண்டா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் நடந்து கொண்டிருக்கிற போது, யார் வேண்டுமானாலும் எழுப்பலாம். ஆனால் 10 மணிக்கு கேள்வி நேரம் முடிந்தவுடன் எழுப்புகிற வாய்ப்பு முன் வரிசையிலே உள்ள தலைவர்களுக்கு மட்டும்தான் உண்டு. எனவே இந்தப் பிரச்சனையை இன்றைக்கு முடித்துவிடலாம். நசளையிலிருந்து நாம் ஒரு வரைமுறையைப் பின்பற்றலாம்.

(முற்பகல் 10 20)

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்தவரையில் இந்தக் குறிப்பிட்ட நேரத்தில், எல்லோரும் எழுந்து கேட்பதை தாங்கள் விரும்பவில்லை என்பது வேறு, ஆனால், நடைமுறையிலே பலமுறை கேட்கப்பட்டு பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. பதில்





அளிக்கப்படாவிட்டாலும் எழுப்பப்படுகிற அளவுக்குப் பல நேரங்களிலே வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அது சூழ்நிலையைப் பொறுத்து, அன்றைக்கு இருக்கிற பிரச்னைகளைப் பொறுத்து, தீவிரமான உணர்வுகளைப் பொறுத்து அனுமதிக்கப்படுகிறது. இங்கே சாதாரணமான உணர்வுகள் எழுப்பப்படுமானால், அது அனுமதிக்கப்படுவதில்லை.

மற்றொன்று, பாய்ன்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பப்படுகிற பிரச்னையாக எல்லாமே கூட, சட்ட விதிகளில் ஏற்படுகிற குறை எழுவதாக அமைவதில்லை. நடைமுறையிலே வருகிற படுகிறது. பாட்டு பாய்ன்ட் ஆப் ஆர்டராக எழுப்பப் அப்படி எழுப்பப்பட்டதற்குப் பின்னால் பார்த்தால், அளவுக்கு எழுப்பியதே ஒரு பாய்ன்ட் ஆப் ஆர்டர் ஆகக்கூடிய ஏனென்றால் சபாநாயகருக்கு அது பாய்ன்ட் ஆப் ஆர்டர்தான். அல்லது பிரச்னை எழுப்பியதில் ஏற்பட்ட முறையின் காரணமாக, சபாநாயகருக்கு அது பாய்ன்ட் ஆப் யின்மை காரணமாக, உறுப்பினருக்கு அது பாய்ன்ட் ஆப் ஆர்டர் ஆர்டர். ஆனால், சில பிரச்னைகளை எப்படியோ ஒரு முறை இந்த அல்ல. ஆனால் விட வேண்டும், அல்லது இந்த அவை அவையில் நினைவூட்டி கொண்டு வரவேண்டும் என்று யினுடைய கவனத்திற்குக் சொற்றொடர்தான் இதுவரையில் தெரிவிக்கிற பொழுது, அந்தச் கிடைத்திருக்கிறது. ஆகவே, அவையின் பயன்படுத்துவதற்கே மொத்தமான நலனுக்கு அவசியமாக உரிமை, நம்முடைய அதிலே தலைவர்கள், உறுப்பினர்கள் இருக்கிற காரணத்தாலே, செய்யக் கூடாது. ஆனால் ஏதோ என்று கூட அதிகம் பாகுபாடு வேண்டுமானால், தலைவர்களே இன்பர்மேஷன் கேட்கிறபொழுது பாய்ன்ட் ஆப் ஆர்டர் என்ற கேட்க வேண்டுமென்றாலும், எதையாவது அவை பெயரால் நாட்டிலே உள்ள நிலைமைகளில் இருக்குமானால், கவனத்துக்குக் கொண்டுவரவேண்டிய நிலைமை தாங்கள் அனுமதித்து, அப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்று வாய்ப்பு உடையது அது இந்த நேரத்தில் பதில் அளிப்பதற்கு அப்படித் தெரிவித்து அல்ல என்றால், அந்த நிலையில் தாங்கள் விடக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொல் கிறேன். என்னுடைய முன் அனுமதி பெற்று, சொல்லலாம். இங்கே எழுப்புவதற்கு முன்னாலே, என்ன பேசப் போகிறார்கள் என்று எனக்குத் தெரிவித்தால், என்ன பேசப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியும். பாய்ன்ட் ஆப் ஆர்டர் அலவ் பண்ணி விட்டு பிறகு அதை எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டாம் என்றுதான் இந்த ப்ரொசீஜரை பாலோ செய்யலாம் என்று நான் சொன்னேன் இன்று ஒரு நாள் அனுமதிக்கிறேன். திரு. வேங்கடரமணன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: * *

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் பாய்ண்ட் ஆப் ஆர்டரா? All the points of order are expunged.

### 3. அறிவிப்புகள்

### (அ). அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.
கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவுகள், சட்ட
மன்ற மேலவையில் ஆய்வு செய்யப்பெற்று, பரிந்துரை ஏது
மின்றி, திருப்பி அனுப்பப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத்
தலைவரிடமிருந்து செய்திகள் வரப்பெற்றுள்ளன:

1. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/86).

2. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/86).

### 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மதுரை மாவட்டம், தேவதானப்பட்டியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. சுப்பராயன்,
பொ. உத்திராபதி, கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன்,
எஸ். இராசாராமன், ஜே. முகமது கனி, அ. ரகுமான்கான்,
என்.எஸ்.வி. சித்தன், சு. பாலன், பொன் முத்துராமலிங்கம்,
மு. இராமநாதன், ப.பொன்னுரங்கம் மற்றும் அ. செல்வராசன்
ஆகியோர் ''மதுரை மாவட்டம் தேனிக்கு அருகிலுள்ள
தேவதானப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி பிளஸ் 2 மாணவன்
வேல்முருகன் காவல்துறையால் தாக்குண்டு மரணமடைந்தது'
குறித்தும், போலீஸ் துப்பாக்கி சூட்டில் நசீர் என்பவர் இறந்த
தால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க
பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்''
என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள்
கொடுத்துள்ளனர். இதேபொருள் குறித்து மாண்புமிகு
உறுப்பினர்கள் திருவாளர்கள் ஜே.ஹேமச்சந்திரன்,கோ.வீரய்யன்
மற்றும் வி.பி. சிந்தன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானமும்
கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்
களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் காவல் துறையினரால் நடத்தப்படுகிற பல்வேறு சம்பவங்களின் தொடர்ச்சியாகத்தான் கடந்த 26-3-86 ஆம் தேதி அன்று மதுரை தேனிக்கு அருகிலுள்ள தேவதானப்பட்டியில் காவல் நிலையத்திலேயே ஒரு மாணவன்



கடுமையாகத் தாக்கப்பட்டு, அந்த தாக்குதலின் காரணமாக
வீடு சென்ற நிலையில் மரணம் அடைந்திருக்கிற சம்பவத்தைக்
குறித்து பேரவையினுடைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு
மென்றும், ஏன் ஒத்திவைக்க வேண்டுமென்பதற்கான சில
விஷயங்களை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து அடுத்துத் தொடர்ந்து 4,5 முறை காவல்துறையினரின்
சட்ட விரோதமான நடைமுறைகளைத் தொடர்ந்து கொண்
டிருப்பது வேதனைக்குரியதாகும். சட்டத்தின் நெறிமுறை
களைக் காப்பாற்ற வேண்டியவர்கள், மக்களைப் பாதுகாக்க
வேண்டியவர்கள் மக்களுக்கு எதிரான நடைமுறையில் சட்ட
விரோதமாக இயங்கிக் கொண்டு இருப்பது என்பது அசாதாரண
மான நிகழ்ச்சியாகவும், மிகக் கடுமையான நிகழ்ச்சியாகவும்
கருதவேண்டுமென்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்,
குறிப்பாக கடந்த 26ஆம் தேதி அன்று நக்கு நடைபெற்றது—
டிராக்டரில் சென்று கொண்டிருந்த 9 மாணவர்கள்,
தங்களுடைய பள்ளியிலே இருந்து பெஞ்சுகளையும், மேஜை
களையும் தூக்கிக்கொண்டு கெங்குவார்பட்டிக்கு செல்வதற்காக
டிராக்டரில் சென்று கொண்டிருந்தார்கள். அந்த டிராக்டரில்
எந்தவிதமான கல்லோ, வேறு ஆயுதங்களோ அல்லது அதற்கான
காரணமும் இல்லை. இந்த நிலையில் ஒரு பஸ் கல்லால் அடிக்கப்
பட்டது என்ற காரணத்தைக் காட்டி அதற்காக வழியிலே
வந்த 9மாணவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று
ஒரே அறையிலே அடைத்து வைத்து மிகக்கடுமையான முறையிலே
போலீசார் தங்களுடைய பூட்ஸ் காலால் வேல் முருகனின்
அடி வயிற்றிலே ஓங்கி உதைத்து அவற்றால் ஏற்பட்ட இரத்தக்
கசிவினால் கடுமையான அளவுக்கு பாதிக்கப்பட்ட நிலையில்
அந்த மாணவன் வீட்டுக்குச் சென்று இறந்து இருக்கிறான்.
இந்த சம்பவத்தை கேள்வியுற்றபோது உண்மையிலேயே அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற
கட்சி என்பதாலேயே இதற்கு நியாயம் கற்பிக்காது என்ற
நம்பிக்கையிலேயே குறிப்பாக வேண்டிக் கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன்; ஏனென்றால் இப்படி ஒரு சம்பவம் நடந்ததற்கு
பின்னர் இந்த சம்பவத்தினுடைய விளைவுகளைப்பற்றி அரசு
அவை முன்னவர் இறுதியாக பதில் அளிப்பதற்கு முன்னர்
இதற்குறிய பதில் எப்படி தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை
நாம் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். யார் குற்றம்
புரிந்தவர்களோ, யார் வேல்முருகன் என்ற மாணவனின் மரணத்
திற்குக் காரணமானவர்களோ அவர்களால் எழுதித் தரப்பட்ட
அறிக்கையை இந்த அவையிலே இறுதியாக வைக்கப்படுவது
உண்மையிலேயே நியாயம் பெறுவதற்குரிய மார்க்கமாக
இருக்காது என்பதை குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
அதுமட்டுமல்ல காவல் நிலையத்தில் இப்படி மாணவன்
போலீசாரால் தாக்குண்ட நிலையிலே வீட்டிலே இறந்துவிட்டான்
என்பதால் ஆத்திரப்பட்ட மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு
சென்று காவல் நிலையத்திலே நீதிகேட்க முற்பட்டபோது காவல்
துறை எப்படி நடந்திருக்கிறது? காவல்துறை துப்பாக்கி எடுத்து
கையாளுவதற்கு முன்னர் கடைபிடிக்க வேண்டிய சட்ட நெறி

முறைகளை இஞ்சிற்றும் கடைபிடிக்கவில்லை. இறந்த நாசரின் காலிலே குண்டு பாயவில்லை. அவனுடைய நெஞ்சிலே குண்டு பாய்ந்திருக்கிறது. குண்டு பாய்ந்திருப்பது நெஞ்சிலே என்று சொன்னால் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்னர் இயல்பாக சட்டவழிமுறைகளின்படி கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகளை கடைபிடிக்கவில்லை என்பது தெளிவு. குற்றவாளி அந்தக் காவல் நிலையத்தைச் சார்ந்த சப்-இன்ஸ்பெக்டரும் அங்கே இருந்து காவல்துறை அதிகாரிகளும், போலீஸ்காரர்களும்தான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல் அங்கே இருந்த ஆயிரக்கணக்கான மக்களை சுட்டு விரட்டி அடித்ததற்குப் பின்னரும் பல இடங்களில் அந்த அப்பாவி மக்களைத் தாக்கி துன்புறுத்தியிருக்கிறார்கள். தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைக்கும் சட்ட விரோதம் நிறைந்த இந்த தைரியம் காவல் துறைக்கு தொடர்ந்து வந்து இருப்பதற்குக் காரணம் ஆளுகிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தச் சம்பவத்தை அவர்கள் ஆட்சியிலே இருப்பவர்கள் என்பதற்காக அவற்றை தங்கள் அதிகார திரைகளால் மறைத்துப் பாதுகாப்பு கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையிலேதான் இந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே ஆளுகிற கட்சியை, குறிப்பாக மாநில அரசாங்கத்தை கேட்டுக்கொள்வது, தயவு செய்து சட்டத்தைக் காக்க வேண்டியவர்கள், மக்களைப் பாதுகாக்க வேண்டியவர்கள், சட்ட விரோதமான நடைமுறைகளை தங்கள் இயல்பாக கொண்டிருப்பதை இனிமேலும் அனுமதிக்காதீர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இத்தகைய போலீஸ் அதிகாரிகள் காக்கிச் சட்டை அணிந்து கொள்வதாலேயே அவர்கள் போலீஸ் அதிகாரிகள் என்பதாலேயே மக்களின் உயிரை பறிக்கிற உரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறதா? காவல் துறைக்கு அந்த உரிமையை வழங்கியது யார்? காவல்துறை சட்டத்திற்கு அப்பாற்பட்டதா என்பதைப் பற்றி (மணியடிக்கப் பெற்றது).

(முற்பகல் 10.30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; சுருக்கமாக, ஏன் ஒத்தி வைக்கவேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் சொல்லுங்கள். ஒத்திவைக்கப்பட்டால் என்ன என்ன பேசுவீர்களோ அதைப்போல் பேச வேண்டாம்.

திரு. கு. சுப்பராயன்: துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களா என்பதைப் பற்றி விவாதிக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக காவல் துறையின் நடவடிக்கைகளைப் பற்றி விவாதிக்க வேண்டியிருக்கிறது. இப்போது அங்கே இறுதியாக என்ன சொல்லப்படுகிறது,



என்று, ஆர்.டி.ஓ. விசாரணை எதற்கு ஆர்.டி.ஓ. விசாரணை வேண்டும். ஜூடிஷியல் ஜூடிஷியல் என்குயரி நீதி விசாரணை வேண்டும். ஜூடிஷியல் என்குயரி மட்டும் அல்ல இப்படி தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கிற இந்த அதிகாரிகளை உடனடியாக டிஸ்மிஸ் செய்ய வேண்டும் மக்களின் உயிரோடு விளையாட இந்த மாநிலத்தில் உள்ள போலீஸ் அதிகாரிகள் நினைப்பதைத் தடுக்கிற வகையில் ஒரு நடைமுறையை உருவாக்குவது பற்றி இந்த பேரவை ஆழமாக விவாதிக்கவேண்டியிருப்பதால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும். இறுதியாக இறந்த மாணவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக நஷ்ட ஈடு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் 31 ஆம் தேதி தமிழகம் முழுவதும் துவங்கி இருக்கின்ற எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவதற்காக கெங்குவார்ப்பட்டி உயர்நிலைப் பள்ளிக்கு அந்த தளவாடங்களை ஏற்றிச் சென்ற 9 மாணவர்கள் 10-வது படிக்கக்கூடிய மாணவர்கள். வேறு எதுவும் கெட்ட நோக்கத்தோடு அல்லது உள்நோக்கத்தோடு காரியங்கள் ஆற்றக்கூடியவர்கள் அல்ல. அப்படி 10-வது படிக்கும் 9 மாணவர்கள். டிராக்டரில் இந்த தளவாட சாமன்களை ஏற்றிச் சென்ற நேரத்தில் வர்கள் ஏதோ விளையாட்டுத் தனமாக காரியங்கள் செய்தார்களா? செய்யவில்லையா என்பது தெரியாத சூழ்நிலையில் வழியில் வந்த பஸ்ஸின் மீது தூசியை வாரி இரைத்தார்கள் என்று சொல்லி அவர்களை தேவதானப்பட்டி காவல்நிலையத்தில் ஒப்படைத்து அந்த 9 மாணவர்களை ங்கே வைத்து தாக்கி அதிலே குறிப்பாக வேல்முருகன் என்ற அந்த 10-வது படிக்கும் மாணவனை கடுமையாக டிவயிற்றில் மிதித்தன் காரணமாக ரத்த கசிவு ஏற்பட்டு அவன் மாண்டு விட்டான் என்ற செய்தி கேட்டு வீடு திரும்பியவுடன் அந்த வேல்முருகன் பிணத்தை தூக்கிக் அந்தப் பகுதி மக்கள் காவல்நிலையத்திற்குச் சென்று கொண்டு தேவதானப்பட்டி இருப்பவர்கள் ஆரம்பத் இருக்கிறார்கள். காவல் நிலையத்தி அல்லது ஊழியர்களை திலேயே அந்த பஸ்ஸின் டிரைவர் ஏற்படுத்தி இருக்கலாம். கலந்து பேசி ஒரு சமாதானத்தை படிக்கும் சாதாரண ந்த அதற்குப் பதிலாக 10-வது எந்த உள்நோக்கமும் இல்லாத அந்த மாணவனை விவரம் தெரியாத கொன்றதோடு மட்டும் மாணவனை அடித்து ஒரு மாணவனை மக்கள்மீது ஜன்னலை அல்ல நியாயம் கோரி வந்த அந்த துப்பாக்கியால் சுட்டு நாசீர் மட்டும் திறந்து உள்ளே இருந்து இப்படி 26-3-86 பிணமாக்கியிருக்கிறார்கள். என்ற மாணவனை அடித்து கொன்று இருக்கிறார்கள். அன்று ஒரு மாணவனை சுட்டுக்கொன்று 2 படுகொலையை பிறகு ஒரு இளைஞனை காவல் துறை தேவதானப்பட்டி காவல்நிலையத்தில் உள்ள அந்த அதிகாரிகள் செய்து இருக்கிறார்கள். இது தொடர்கதையாக தமிழகத்தில் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. எனவே

இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து இப்போது அந்த காவல்துறை அதிகாரிகள் அனுப்பி வைத்து இருக்கக்கூடிய அந்த அறிக்கையை படித்து இந்த கதை முடிந்துவிட்டது என்று சொல்லி அதை அரசு முடிக்காமல் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேலை நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை எடுப்பதோடு ஒரு நீதி விசாரணை நடத்தப்படவேண்டும். ஏன் நீதி விசாரணை நடத்தப்படவேண்டும், ஏன் அதிகாரிகள் நீக்கப்படவேண்டும். என்ற காரணங்களை விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு.என்.எஸ்.வி.சித்தன்: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, கழிந்த மாதம் 26 ஆம் தேதி அன்று மதுரை மாவட்டம் தேவதானப்பட்டியில் நாம் நினைத்துப் பார்க்க முடியாத, எண்ணிப் பார்க்க முடியாத நடக்கக் கூடாத ஒரு கொடுமை நடைபெற்று இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல் ஒரு டிராக்டரில் ஏறி வந்த மாணவர்கள் எதிரில் வந்த பஸ் மீது கல்லெறிந்து கலவரம் செய்தார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை சுமத்தி விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு இருக்கிறார்கள். சட்டத்தினையும், ஒழுங்கினையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு காவல் துறையினருக்கு இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களை விசாரித்து, அவர்கள் மீது வழக்கு பதிவு செய்வது என்பதுதான் முறையாக இருக்குமே தவிர, அவர்களை குற்றம் செய்தவர்களைப் போல், குற்றவாளிகளுக்கு தண்டனை அளிப்பது போல் தண்டனை அளிக்கின்ற உரிமையை காவல் துறையினர் எடுத்துக்கொள்வது என்பது எந்த வகையில் நியாயமாக இருக்குமென்று நான் கேட்கிறேன்.

அங்கே மாணவர்கள் ஒரு பஸ் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். ஒன்று வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம். அதற்காக அந்த பிஞ்சு உள்ளங்கள் மீது, வளர வேண்டியவர்கள் மீது, இப்படிப்பட்ட கொடுமையான தாக்குதலை காவல் துறையினர் செய்திருக்கிறார்கள். அவர்கள் என்ன கள்ளநோட்டு அச்சடித்தார்களா? கொள்ளை அடித்தார்களா? கள்ளச் சாராயம் காய்ச்சினார்களா? அந்த மாணவர்களை கொடுமையாக தாக்கியிருக்கிறார்களே! அப்படி அவர்களை தாக்கியது எனக்கு வேதனையாக இருக்கிறது. மாணவர்கள் திரும்ப வீட்டிற்கு அனுப்பப்பட்ட நேரத்திலே, ஒரு மாணவன் இறந்திருக்கிறான். ஆகவே காவல்துறையினர் தாக்கியதனால் அந்த மாணவன் இறந்திருக்கிறான் என்று மக்கள் எண்ணிய காரணத்தினால், சற்றேறக்குறைய 2,000-க்கும் மேற்பட்ட மக்கள் காவல் நிலையத்திற்குச் சென்று காவல் நிலையத்தின் முன்னால் அந்த சடலத்தை ஊர்வலமாக எடுத்துக்கொண்டுவந்து, கோஷமிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த அளவிற்கு மக்களின் நெஞ்சக்குமறல் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.



கடந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது, மாணவர்கள் இறந்தார்கள் என்று நான் சொன்ன நேரத்தில், மாணவர் என்ற சொல்லை இங்கே சபை நடவடிக்கை குறிப்பில் இருக்கக் கூடாது என்று நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் அதிலே குறுக்கிட்டு, மாணவர்கள் மீது எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்பதில் இந்த அரசு விழிப்புடன் இருக்கிறது என்று சொன்னார். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அதற்கு ஒரு முடிவு கட்டவேண்டும். பல்வேறு நிலையங்களிலே காவல்துறையினரால் நடத்தப்படுகின்ற கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாகவேண்டும். உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, மாண்புமிகு நாவலர் அவர்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்வார்கள். பெரிய அதிகாரிகள் இங்கே போலீஸ் துறை செய்வது சரி என்று சொன்னதாக பத்திரிகையில் வந்ததாக என்னிடம் சொன்னார்கள். விசாரணைக்கு உத்தர விடப்பட்டிருக்கிறது. விசாரணைப் போக்கை மாற்றுகின்ற அளவிற்கு பெரிய அதிகாரிகள் காவல்துறை செய்தது சரி என்று சொல்வது முறைகேடானது, அது கண்டிக்கப்படவேண்டும். இனிமேல் நடைபெறக் கூடாது. மாண்புமிகு முன்னவர் அவர்கள் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்வார்கள், ஆனால் நீதி விசாரணை வேண்டும். எதிர்காலத்தில் இப்படி கொடுமைகள் நடைபெறாமல் இருப்பதற்கு 'ஜூடிசியல் என்கொயரி', நீதி விசாரணை வைத்தால் தான் பல உண்மைகள் வெளிப்படும். அதன்மூலம் எதிர்காலத்தில் இந்த மாதிரி சம்பவங்கள் நடைபெறுவது தடுக்கப்படலாம். ஆகவே நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு காவல் துறையினருக்கு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மாணவர்களுடைய, பொது மக்களுடைய உயிரோடு விளையாடுவது சரியல்ல. அதற்குக் காவல்துறை துணை போகாது நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைப்பற்றி தீவிரமாக விவாதிப்பதற்கும், இறந்தவர்களின் குடும்பத்திற்கு நஷ்டஈடு தாராளமாக வழங்குவதற்கும், இந்த மாணவன் இறப்பதற்குக் காரணமாக இருந்த அந்த அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்வதற்கும், நீதி விசாரணை நடைபெறுவதற்கும், துணையாக இருக்கவேண்டும். அதைப்பற்றி விரிவாகப் பேசுவதற்கு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

*திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபையினுடைய ஏனைய நடவடிக்கைகளை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு, தேவதானப் பட்டியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்தும். காவல் நிலையத்தில் இருந்த வேல்முருகன், காவல்துறையினரால் தாக்கப்பட்டு இறந்தது குறித்தும், விவாதம் செய்யப்பட வேண்டுமென்ற அடிப்படையில் சில விவரங்களை நான் இந்த மன்றத்தில் கொண்டுவர விரும்புகிறேன்.

26—3—1986 அன்று தேவதானப்பட்டியில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் 8 பேர் வாசு நாயர் என்பவருடைய டிராக்டரை ஜி. கல்லுப்பட்டிக்கு, தேர்வுக்காக பெஞ்ச், நாற்காலி களை எடுத்து வருவதற்குச் சென்ற நேரத்தில், எதிர்ப்புறமாக வந்த சமாதானப்பிரபு என்ற பஸ் தாக்கப்பட்டது. இந்த பஸ்ஸை டிராக்டரிலுள்ள மாணவர்கள் தான் தாக்கியிருக்கலாம் என்று ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில், பஸ் டிரைவர், கண்டக்டர் பிரயாணிகள் உட்பட அனைவரும் பஸ்ஸை திருப்பி ஜி. கல்லுப் பட்டிக்கு எடுத்துச்சென்று, டிராக்டரை மடக்கி, அவர்களை யெல்லாம் இழுத்து வந்து காவல் நிலையத்தில் ஒப்படைத்திருக் கிறார்கள். காவல் நிலையத்தில் தாக்கப்பட்ட வேல்முருகன் என்ற மாணவன் அதிலே குறிப்பாக சந்தேகப்படப்பட்டான் என்ற காரணத்திற்காக, கொடுமையாக காவலர்களால் தாக்கப்பட்டு, பூட்சுகாலால் அடிவயிற்றில் எத்தப்பட்டதன் காரணத்தால், பின்னர் அவன் வீட்டிற்கு அனுப்பப்பட்ட இரண்டு மணியளவில் இல்லத்திற்குச் சென்று தண்ணீர் கொண்டு வா என்று அம்மாவை கேட்க, தண்ணீர் கொண்டு வந்த நேரத்திற்குள் படுத்த நிலை யிலேயேஅவன் இறந்துப்படுகிறான்.

(முற்பகல் 10.40)

அது முதல் சம்பவம். இரண்டாவது சம்பவம் வேல்முருகன் காவலர்களுடைய தாக்குதலால் இறந்திருக்கிறான் என்ற ஐயப்பாடு ஏற்பட்டதன் காரணமாக அனைத்துக் கட்சியினரும் பொது மக்களும் ஒன்றாகச் சேர்ந்து இறந்த வேல் முருகனின் சடலத்தை எடுத்துச் சென்று காவல் நிலையத்திற்கு முன்னாலே நியாயம் வழங்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தச் சந்தர்ப்பத்திலே அங்கே இருக்கிற காவலர்கள் ஆயுதக் கிடங்கிலே இருக்கிற துப்பாக்கியை எடுத்து நாசர் என்ற வேல்முருகனின் நண்பனைச் சுட்டு இருக்கிறார்கள். அதையொட்டிக் காவல் நிலையத்தினைச் சுற்றி கலவரச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மோட்டார் சைக்கிள் தாக்கப்பட்டிருக்கிறது. காவல் நிலையம் தாக்கப்பட்டிருக்கிறது. அதுதான் அங்கே நடந்த நிலைமை. தேவதானப்பட்டியிலே 26-3-1986 அன்று சந்தை நாள். ஆனால் இதிலே கவனிக்கப்பட வேண்டிய விவரங்கள் என்னவென்றால் காவலர்களால் அடித்துக் கொல்லப்பட்ட வேல்முருகனோடு சென்ற 7 மாணவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ற விவரம் இதுவரையிலும் தெரியவில்லை. இறந்த மாணவனுடைய இல்லத்திற்குச் சென்ற நேரத்திலே அந்தப் பிள்ளையை இழந்த அந்தத் தாயார் பாக்கியத்தம்மாள் சொல்லி அழுத நிலையை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது கடமையாகும். உடைந்த கண்ணாடியை வேண்டுமானால் திரும்ப வாங்கிவிடலாம், ஆனால் உலகைவிட்டுப் பிரிந்துவிட்ட என் மகனை எப்படிப் பெற முடியும் என்று அழுதார்கள்.



வேல்முருகன் காவல் நிலையத்திலே கடுமையாகத் தாக்கப் பட்டு இறந்திருக்கிறான். எனவே ஒழுங்காக நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணத்தினால் பொதுமக்கள் பிரதிநிதி களும், பொதுமக்களும் ஒன்றாகச் சேர்ந்து அந்த இடத்திலே கலவரச் சூழ்நிலை உருவாவதற்குக் காவல் துறையே காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த நிலைமைகளையெல்லாம் கண்டறிவதற்காக சென்னை யிலிருந்து சென்ற பெரிய காவல்துறை அதிகாரி ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார். அந்த அறிக்கை என்ன சொல்கிறது. துப்பாக்கிச் சூட்டினால் இறந்த நாசர் காவலரை அரிவாளால் தாக்க முற்பட்டிருக்கிறார், அப்போது தான் அந்த துப்பாக்கிச் சூடு நடைபெற்றது என்று சொன்னார். ஆனால் உள்ளபடியே என்ன நடந்தது. ஆயுதக் கிடங்கிலே இருந்த துப்பாக்கி எடுத்து ஜன்னல் வழியாக சுட்டிருக்கிறார்கள். எனவே துப்பாக்கிச் சூட்டிலே இறந்த நாசர் அரிவாளால் காவலரைத்தாக்க முற்பட்டார் என்று கூறுவதையும் அங்கே இருக்கிற சூழ்நிலை யையும் நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களானால் அங்கே சென்ற காவல் துறை அதிகாரி முதல் கட்டத்திலேயே திசை திருப்பு வதற்கான முறையிலே அறிக்கை காடுத்திருக்கிறார் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து அந்த பேரூராட்சி முழுவதும் உள்ள பொதுமக்கள் காலிசெய்துவிட்டு காடுகளுக்கும் பல்வேறு இடங்களுக்கும் ஓடு கிறார்கள். அந்த அளவுக்கு காவல் துறையினரின் கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. அதோடு ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று சொல்வதைப் போல் அங்கே உள்ள அரிசனக் குடியிருப்புகளுக்குக் காவலர்கள் சென்று மாறி மாறி அவர்களை அடித்து வேலைக்குச் சென்றவர்களையெல்லாம் காவல் நிலையத்திற்கு அழைத்துக் கொண்டுவந்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். காவல் நிலையத்திலே யார் இறந்தாலும் கூட தூக்குப் போட்டு இறந்துவிட்டார் என்று சொல்வார்கள். வீட்டிலே அடுப்பு வெடித்து மருமகள் இறந்துவிட்டால்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒத்திவைக்க வேண்டிய காரணங்களைப்பற்றிச் சொல்லுங்கள். ஒத்திவைக்கப் படுகிற பட்சத்தில் பேசுவதைப் போன்று பேசக்கூடாது.

திரு. பொன் முத்துராமலிங்கம்: துணைத் தலைவர் அவர் கள், எனவே காவல் நிலையத்திலே தூக்குப்போட்டுக்கொண்டு இறந்தார் என்றாலும் ஸ்டவ் வெடித்து மருமகள் இறந்தாள் என்றும் சொல்வதும் கவனிக்கப்படவேண்டிய விவரங்கள் ஆகும். அதோடு அன்றைக்கு சந்தை நாள். வெளியூர்களிலிருந்து மக்கள் பல பேர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக காவல்துறையினர் அவர்கள் எல்லாம் தேவதானப்பட்டியைச் சார்ந்தவர்கள் என்று நடவடிக்கை மேற்கொள்வது என்பது தேவையற்றது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லி

காவல் நிலையத்திலே இறந்துவிட்ட வேல்முருகனுக்கும் துப்பாக்கிச்சூட்டிலே இறந்துவிட்ட நாசருக்கும் இந்த அரசாங்கம் நட்ட ஈடு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு இதைப்பற்றி மேலும் பல்வேறு விவரங்கள் தெரிந்து கொள் வதற்காக நீதிவிசாரணை வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு பல்வேறு விவரங்களை விவாதிப்பதற்காக இந்தச் சபையில் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்றும் கேட்டு அமர் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் மதுரை மாவட்டம் பெரிய குளத்தின் பக்கத்திலே உள்ள தேவதானப் பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியையொட்டி இங்கே கருத்துக் களை வெளியிட்டிருக்கிறார்கள். தேவதானப்பட்டியிலே நடை பெற்ற நிகழ்ச்சிகளுக்குக் காரணம் எதுவாக இருந்தாலும் அது வருந்தத் தக்க நிகழ்ச்சிதான் என்பதை நாம் அனைவரும் அறி வோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், தவறாகக் கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலே தங்கள் வாதங் களைப் பலவகையிலேயும் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இருக்கின்ற நிலைமைகளையெல்லாம் நாம் நன்றாக உணர வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 965 காவல் நிலையங்கள் இருக்கின்றன. அன்றாடம் காவல்துறையினர் இப்படிப்பட்ட, இம்மாதிரி பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற கருத்துப்பட பேசினார்கள். அங்கொன்றும் இங்கொன்று மாக, எதிர்பாராத, நாம் விரும்பத் தகாத, வேண்டத் தகாத நிகழ்ச்சிகள் நடக்கின்றபொழுது, இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுவதைக் காண்கிறோம். உள்ளபடியே சிலபல காவல் நிலையங்களில் தவறுகள் ஏற்படுகின்ற காலத்தில் விசாரித்து, பல காவல் துறை அதிகாரிகள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள், அதற்குப் பிறகு விசாரணை நடந்து முடிந்த பிறகு, தீர்ப்பின் அடிப்படையிலே வேலையை விட்டே நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் நன்றாக அறிவோம். அது பற்றிய புள்ளிவிவரங்கள் வேண்டுமென்றாலும்கூட காவல் துறை மானியக் கோரிக்கை வருகின்றபொழுது விரிவாகக்கூடச் சொல்லலாம். ஆனால் என்னென்ன நடவடிக்கைகளை நாம் ஆங்காங்கு எடுக்க வேண்டுமோ அவற்றை அவ்வப்பொழுது எடுத்து வருகிறோம். நாடு முழுவதும் அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சி என்றோ அல்லது மக்களைக் கொடுமைப்படுத்துவது அல்லது அவதிக்கு உள்ளாக்குவது அல்லது அல்லலுக்கு உட் படுத்துவதுதான் காவல் துறையின் நோக்கம் என்று ஒட்டு மொத்தமாக சொல்வது நமக்கும் நல்லதல்ல, நாட்டுக்கும் நல்லது அல்ல. ஆனால், தேவதானப்பட்டியில் நடந்த அத்தகைய நிகழ்ச்சிகளை நாம் ஓரளவிற்குக் கூர்ந்து கவனிக்க வேண்டும்,





26-3-1986 அன்று சுமார் பகல் 11-45 மணிக்கு பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி கிராமத்தில் ''பிரின்ஸ் ஆப் பீஸ்'' என்ற ஒரு தனியார் பேருந்து ஓட்டுநர் அவரின் பேருந்தில் தேவதானப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் எட்டு மாணவர்களுடன் தேவதானப் பட்டி காவல் நிலையத்திற்கு வந்து புகார் செய்தார். அப்புகாரில் ஓட்டுநரும், மற்றும் பயணிகளும் பேருந்தில் பழனியிலிருந்து பெரியகுளம் திரும்பும் வழியில், செங்குளத்துப்பட்டிக்கும், கொடைக்கானல் மலைப் பகுதிக்கும் நடுவில் ஓரிடத்தில் மேற்கண்ட மாணவர்கள் எதிர்த் திசையில் ஒரு 'டிராக்டரில்' வந்தார்கள் என்றும், அப்பொழுது அந்தப் பேருந்து டிராக்டரை முந்திச் செல்ல முற்பட்டபோது, அம்மாணவர்கள் கல்லெறிந்து கண்ணாடிகளை உடைத்து சேதப்படுத்தினார்கள் என்றும் குற்றம் சாட்டியிருந்தார். அப் புகார் மனுவின் மீது தேவதானப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) குற்ற எண். 89/86-1-ல் இ.பி. கோ. 336 மற்றும் 427 பிரிவின் படி வழக்கொன்று பதிவு செய்து விசாரணை செய்து கொண்டிருந்தபோது அம்மாணவர்கள் பயிலும் தேவதானப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளயின் உதவி தலைமை ஆசிரியரும் மற்றும் சில ஆசிரியர்களும் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தவர்களுடன் சமாதான மாகப் போய்விடுவதாக உறுதி கூறினார்கள். அதன் பேரில் சம்பந்தப்பட்ட எட்டு மாணவர்களையும் சுமார் பகல் 12 மணி யளவில் காவல் நிலையத்திலிருந்து உதவி ஆய்வாளர் அனுப்பி விட்டார்.

பின்னர், 26-3-1986 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு சுமார் ஆயிரம் நபர்களுடன் தேவதானப்பட்டியைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவர் இராசப்பன் என்பவரின் மகனான பதினாறு வயது வேல்முருகனின் உயிரற்ற உடலை, காவல் நிலையத்திற்கு எடுத்து வந்து வராந்தாவில் வைத்தார்கள். இறந்துபோன வேல்முருகன் காவல் நிலைய குற்ற எண். 89/86 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட மாணவரில் ஒருவர். இந்தக் கூட்டம் காவல் நிலையத்தின் மீது கல்லெறிந்தும், நிலைய ஆவணங்களுக்கு தீயிட்டும் அங்கு வைக்கப்பட்டிருந்தமோட்டார் சைக்கிள்களுக்கு சேதம் விளைவித்தும், தொலை பேசி கம்பி களை துண்டித்தும், காவல் குடியிருப்பில் உள்ள கூரைக்கும், கிராம சாவடிகளுக்கும் தீ வைத்து வன்முறையில் ஈடுபட்டனர். தலைமைக் காவலர் வன்முறைக் கும்பலைக் கலைக்க கூட்டத் தினரை எச்சரித்து இருமுறை ரவை குண்டுகளால் வானை நோக்கிச் சுட்டார்கள். பின்னர் நிலைமை திருந்தாமல் போகவே தன் தற்காப்பிற்காக தலைமைக் காவலர் .410 பால் அம்யூனிஷன் (.410 Ball Ammunition) என்று கூறப்படுகிற துப்பாக்கியால் சுட்ட தில் தேவதானப்பட்டியைச் சேர்ந்த நாசர் (வயது 30) என்பவர் குண்டடிப்பட்டார். இவர் தேவதானப்பட்டியில் தேனீர்கடையில்

பணியாற்றிவரும் நண்பர். குண்டடிப்பட்டதும் ஸ்தலத்திலேயே மரணமுற்றார். வேறு இடங்களிலிருந்து காவல்துறையினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து பதட்டமான சூழ் நிலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். வட்ட ஆட்சியரும் ஸ்தலத்திலேயே இருந்தார்.

த்கவல் கிடைத்தவுடன், மாவட்ட ஆட்சித் தலைவர், வரு வாய்த் துறை அலுவலர், மதுரை சரகக் காவல்துறை துணைத் தலைவர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து, மேற்படி இடத்தைப் பார்வையிட்டனர்.

மரணமடைந்த வேல்முருகனின் சகோதரர் திரு. சத்தியசீலன் என்பவரிடமிருந்து பெறப்பட்ட புகார் மீது குற்ற எண். 90/86-ல் வழக்கொன்று காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.

தேவதானப்பட்டி உதவி ஆய்வாளரின் புகாரின் மீது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகவும் மற்ற காரணங் களுக்காகவும் இ.பி.கோ. பிரிவுகள் 147, 148, 336, 337, 436 427, 332 மற்றும் 307-ன்படி காவல் நிலைய குற்ற எண். 91/ 86-ல் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டது.

(முற்பகல் 10.50)

வேல்முருகனும் ஆசிரியர்களுடன் காவல் நிலையத்திலிருந்து மற்ற மாணவர்களோடு பள்ளிக்குச் சென்றுள்ளான். மற்ற மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களிடம் வேல்முருகன்தான் பேருந்தில் கண்ணாடி உடைந்ததற்குப் பொறுப்பு என்று கூறி யுள்ளனர் என்று தெரிகிறது. எனவே, அதற்கு ஈடாக ரூ.1,000/- கொடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர் என்றும் கூறப் படுகிறது. அதற்குப் பிறகு வேல்முருகன் தனது இல்லத் திற்குச் சென்றுள்ளான். அவன் தனது உடலில் எந்தவிதக் காயமும் இருந்ததாக யாரிடமும் சொல்லவில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் ஒன்றை நாம் நன்றாகக் கவனிக்கவேண்டும். பேருந்து ஓட்டுநரும் மற்றைய, பேருந்துகளிலே இருந்தவர்களும் 8 மாணவர்களை வைத்துக் கொண்டு, விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். காவல் நிலையத்திலே விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விசாரணை நடத்திக் கொண் டிருக்கும்போதுதான் பள்ளியினுடைய துணைத் தலைமை ஆசிரி யரும் மற்றைய ஆசிரியர்களும் சென்று இந்தப் பிரச்னையை நாங்களே, அவர்களோடு உடன்பாடுக்கு வந்து சுமுகமாக தீர்த்துக்கொள்கிறோம் என்ற அளவு வருகின்றபொழுது 12 மணி அளவிலே, 8 மாணவர்களும் விடுவிக்கப்படுகிறார்கள், மற்றவர்களும் விடுவிக்கப்படுகிறார்கள். வழக்கு மட்டும், பதிவு செய்யப்பட்ட நிலையில். ஆகவே, வேல்முருகன் மட்டும் தனி யாகக் காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டார் என்றோ அல்லது காவலரால் கொடுமைப்படுத்தப்பட்டார் என்றோ, கூறுகின்ற





அத்தகைய சூழ்நிலைகள் ஏற்படவில்லை. ஆகவே, பத்திரிகை களில் வந்த செய்திகளை எல்லாம் பார்ப்போமானால், ஏறத் தாழ நான் சொன்ன அந்தச் செய்திகள்தான் வந்தன. எந்த ஒரு பத்திரிகையிலும் தனியாக, காவல் நிலையத்திலிருக்கிற லாக் அப்பில் அடைக்கப்பட்டான் என்றோ, தனியாக வைத்து, கொடுமைப்படுத்தப்பட்டு விசாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றோ இல்லை. மாணவர்கள் காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பேருந்து ஓட்டுநரும் நடத்துநரும் மற்றவர்களும் புகார் கொடுத்துக் கொண்டிருக் கிறார்கள் என்று கேள்விப்பட்ட உடனே, துணைத் தலைமை ஆசிரியரும் மற்ற ஆசிரியர்களும் வந்து, சமாதானம் சொல்லி, 8 மாணவர்களைச் சேர்த்து அழைத்துக் கொண்டிருக்கும்போது, ஒருவரை மட்டும் தனியாகத் தாக்கவேண்டிய அவசியம் ஏற் பட்டிருக்காது, கூறப்பட்டிருக்கிற இத்தகைய தன்மையின் அடிப்படையில்.

அதற்குப் பிறகு, அவர்கள் வீட்டிற்குப் போய், இறந்து, 3 மணி அளவில் உயிரற்ற பிணத்தைக் கொண்டு வந்து, வராந் தாவில் வைத்து, பல ஆயிரக்கணக்கான பேர்கள் கூட வந்ததன் காரணமாக, அங்கு பல சேதங்களும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆவணக் களரி, ரெக்கார்ட் ரூம், முழுவதும் எரிந்து சாம்பலாகி இருக்கிறது. அங்கேயிருக்கிற மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற காவல் துறை அதிகாரிகளும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு 2 ரவுண்ட் சுட்டதற்குப் பிறகுதான் முடிந்தது. சுடப்பட்டு இறந்தவர் கூட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளருடைய அண்ணன் மகன்தான். ஆகவே, இதிலே, கட்சி வேறுபாடு கிடையாது. எந்தக் கட்சி, என்ன என்று கூட நான் சொல்லவரவில்லை. எதற்காக நான் சொல் கிறேன் என்றால், போஸ்ட்மார்ட்டத்திற்கு இரண்டு பிணங்களும் துப்பாக்கிச்சூட்டில் இறந்து பட்டவருடைய சடலமும் துப்பாக்கிச் சூட்டில் இறந்துபட்டதாகச் சொல்லப்படுகிற மாணவருடைய சடலமும் அனுப்பி வைக்கப்பட்டன. அதற்குப் பிறகு, துப்பாக்கிச் சூட்டைப்பற்றி விசாரணை செய்வதற்காக, டி ஆர். ஓ. மட்டத்திலே விசாரணை செய்து, அறிக்கை அனுப்பி வைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாணவர் இறந் ததைப்பற்றி தனியாக விசாரிப்பதற்காக, ஆர்.டி.ஓ. விசாரணை என்று வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, துப்பாக்கிச் சூட்டுக்கு ஒரு விசாரணையும் மாணவர் தனியாக இறந்ததைப் பற்றி விசாரிப்பதற்கு ஆர்.டி.ஓ. விசாரணையும் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அந்த அதிகாரிகள் விசாரித்துக் கொண்டிருக் கிறார்கள். போஸ்ட் மார்ட்டத்தினுடைய அறிக்கை என்று வருகின்ற தன்மைகளில் பார்க்கின்றபொழுது, உடலிலே, மாண்புமிகு உறுப்பினர் பலரும் எடுத்துச் சொன்னதைப் போன்ற காயங்கள், மற்றவைகள் இருப்பதாக அதில் வரவில்லை.

போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டர் எம். இராஜேந்திரன், டியூட்டர் இன் ஃபோரன்சிக் மெடிசின், இராஜாஜி ஹாஸ்பிட்டலில் டாக்டராக இருக்கிறார். அவரேதான் போஸ்ட் மார்ட்டம் செய்திருக்கிறார். அவரது போஸ்ட் மார்ட்டம் அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதாவது:

"There is a lig ture mark in the upper p rt of the neck, p ssing obliquely downwards, crossir g in front of the neck, in the middle line above the thyroid c rtilege, 6 centimetres below the symphysis menti, and pe ses obliquely upw rds, and backwards and merges near the hecirlire 10 c.m. below the left mustoid....—

opinion reserved, perdnig chemical an lysis cf viscer .

என்று இரசாயனப் பரிசோதனை வந்ததற்குப் பிறகு, தன்னுடைய முழுக் கருத்தையும் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருக்கிற கருத்தின் அடிப்படையில், மேல் பகுதி கழுத்தைச் சுற்றி, சுருக்கிக் கொண்ட அடையாளம் இருக்கிறது, முன் பக்கம் கழுத்துப் பகுதி கீழ் நோக்கி மார்க் செல்கிறது, தைராய்ட் தசைக்கு மேலாக இணைகிறது என்ற அளவிலே தான் போஸ்ட் மார்ட்டம் அறிக்கையினுடைய தன்மைகள் இருக்கின்றன.

ஆக, விசாரணை அடிப்படையில் முழு விவரங்கள் வரக்கூடும். அதன்பிறகு விசாரணை அறிக்கையின் அடிப்படையில், அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும். இறந்துபட்டவர்களுடைய குடும்பங்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். விசாரணை அறிக்கை வந்தபிறகு, மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றவர்களும் எந்த அளவுக்கு பரிந்துரை செய்கிறார்களோ அதற்கு ஏற்ப உதவி அளிக்கும் பிரச்சனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

பகுரன் மகன் வீரன் உட்பட 40 பேர் கைதுசெய்யப்பட்டிருக் கிறார்கள். வேல்முருகனின் உயிரற்ற உடலை காவல் நிலையத் திற்கு எடுத்துச் சென்ற இராஜேந்திரன் என்பவரை காவல் துறை யினர் தேடிவருகிறார்கள். அவர் தலைமறைவாகிவிட்டார்; இன்னும் தலைமறைவாகத்தான் இருக்கிறார். விசாரணை முடிந்த பிறகு உண்மையான நிலைமை தெரியும். அதன்பிறகு முறைப்படி இந்த கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். யாரை யும், எந்த ஒரு காவல்துறை அதிகாரியையும் அல்லது மற்றவர்களை யும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு இல்லை. நியாயத்தின் அடிப்படையில் எடுக்க வேண்டிய நடவடிக்கை களை இந்த அரசு எடுக்கும்; செய்ய வேண்டிய பணிகளைச் செய்யும் என்பதை எடுத்துச் சொல்லி, விசாரணை நடை பெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் இதற்குமேல் இதிலே சொல்லவேண்டிய கருத்துக்கள் இல்லை, பேசுகின்ற நிலைமை இல்லை என்பதால் இதுகுறித்து மேலும் விவாதிப்பதற்காக இந்த அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**திரு. அ. ரகுமான்கான்:** சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதைக் கேட்டுவிட்டு, உங்களுடைய தீர்ப்பைச் சொல்லுங்கள். தீர்ப்புக்குள்ளே நான் போகவில்லை. துணைத் தலைவரவர்களே, அரசாங்கத்தின் சார்பாக ஐ.ஜி. அவர்கள் இது சம்பந்தமாக கொடுத்திருக்கிற அதிகாரப் பூர்வமான அறிக்கை அகில இந்திய அண்ணா தி.மு.க. பத்திரிக்கையில் வெளிவந்திருக் கிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்வதற்கும் அந்தப் பத்திரிகைச் செய்திக்கும் வேறுபாடு கூட அல்ல; முரண் பாடு இருக்கிறது. இது மிக முக்கியமான பிரச்சனை, சட்டச் சிக்கல் இருக்கிறது. ஐ.ஜி. அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கை யில் வேல்முருகன் என்ற மாணவன் போலீசாரால் தாக்கப் பட்டு........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது பற்றி நீங்கள் மீண்டும் இங்கே எழுப்ப முடியாது. வேண்டுமானால் தனியாக எழுதிக் கொடுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, நான் இங்கே சொன்னதைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். அரசின் சார்பாகத் தெரிவிக்கப்படுகின்ற செய்தி இதுதான். செய்தித்தாளிலே வந்ததெல்லாம் சரியாக இருக்கலாம், தவறாக இருக்கலாம், கூட்டியிருக்கலாம், குறைத் திருக்கலாம். ஆகவே நான் இங்கே தெரிவித்ததுதான் சரியான விவரம் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறு கிறது.

## 5. கவன ஈர்ப்பு.

### மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறத்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் கு. சுப்பராயன், கு. ரமணி, வி.பி. சிந்தன், கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன், டி. ஆர். வேங்கடரமணன், இரா. தாமரைக்கனி; ஆ. நடராசன், மா. சின்னராசு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதனைக் கொண்டு வருவார்.

திரு. கு. ஜப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''மூடிக்கிடக்கிற ஆலைகளைத் திறந்து சுமார் 8,000 தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கக்கோரி தொழிலா ளர்கள், அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்களுடன் கோவை யிலிருந்து சென்னைக்கு பாதயாத்திரையா.க வந்துகொண் டிருப்பது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோவை மாவட்டத்தில் ஆறு பஞ்சாலைகளும், ஒரு பஞ்சாலை இயந்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும், சேலம் மாவட் டத்தில் ஒரு பஞ்சாலையும் தற்பொழுது மூடப்பட்டுள்ளன. அவைகளின் விவரங்கள் கீழ்வருமாறு:

| | ஆலையின் பெயர். | பணி நிறுத்தப்பட்ட நாள். | பாதிக்கப்பட்ட தொழிலாளர் களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிடெட், கோவை | 3-9–1984 | 400 |
| 2 | ஜனார்த்தனா மில்ஸ், கோவை | 7-8–1983 | 659 |
| 3 | வசந்தா மில்ஸ், கோவை | 13–11–1984 | 1,351 |
| 4 | மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்டிரீஸ் லிமிடெட், மேட்டூர் அணை, சேலம். | 16-7-1985 | 2,500 |
| 5 | ஸ்ரீஹரி மில்ஸ், கோவை | 8-4–1984 | 657 |
| 6 | ஸ்ரீ பத்மா மில்ஸ், காளப்பட்டி, கோவை. | 25–2–1981 | 150 |
| 7 | தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர். | 8–6–1981 | 250 |
| 8 | பவானி மில்ஸ், கோவை | 2–10-1985 | 486 |

மூடப்பட்டுள்ள ஏழு பஞ்சாலைகள், ஒரு பஞ்சாலை இயந் திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவற்றின் viability பற்றி ஆராய்ந்து பரிந்துரைகள் செய்யும் பொருட்டு அரசு ஆணை எண் 90, தொழிலாளர் துறை, நாள் 10-1-1986-ல் அரசு நிதித்துறை செயலாளர், தொழிலாளர் துறை செயலாளர்,



கதர் மற்றும் கைத்தறித்துறை செயலாளர், தொழில் துறை செயலாளர் ஆகியோர் அடங்கிய ஒரு உயர் மட்டக் குழு ஏற் படுத்தப்பட்டது. அக் குழு தனது ஆய்வுப் பணியை மேற்கொண் டுள்ளது. அவைகளின் தற்போதைய நிலை கீழ் வருமாறு:

(1) இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிடெட், கோவை:

இந்த நிறுவனம் 3-9-1984 முதல் இயங்காமல் இருந்து வரு கிறது. இதில் 400 தொழிலாளர்கள் உள்ளனர். மின்சாரக் கட்டணம், விற்பனை வரி ஆகியவை செலுத்த சலுகைகள் வழங்குமாறு நிர்வாகம் கேட்டு உள்ளது. இந்த சலுகைகளையும் மற்றும் இந்த ஆலையை அரசு உத்தரவாதத்துடன் liquidator சார்பில் அரசு nominee எடுத்து நடத்த வேண்டும் என்ற liquidator கோரிக்கைகளையும் உயர்மட்டக் குழு 2–4–1986 அன்று ஒரு இறுதியான முடிவு எடுக்க இருக்கிறது. அரசு ஆணை எண் 565, நாள் 12-3-1986 மூலம் தலா ரூ. 200 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஆலை திறக்கப்பட்டவுடன் இப்பணத்தை நிர்வாகம் திருப்பி செலுத்த அதனிடமிருந்து உறுதிமொழி பெற்று பணத்தை பட்டுவாடா செய்ய கோவை இணை ஆணையரின் நடவடிக்கையிலுள்ளது.

(2) ஜனார்த்தனா மில்ஸ், கோவை:

7-8-1983 முதல் இயங்காமல் இருந்து வருகிறது. இதில் 659 தொழிலாளர்கள் உள்ளனர். இந்நிறுவனத்தை ஆய்வு நடத்திய இணை இயக்குநர் (கைத்தறி மற்றும் நெசவு) அவர்களின் தலைமையில் அமைந்த துணைக்குழு இந்நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய சலுகைகள் மற்றும் வசதிகள் பற்றி ஒரு அறிக்கை கொடுத்துள்ளது. இவ்வறிக்கையின் மீது சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையரால் (நிர்வாகம்) நிலுவையிலுள்ள பேச்சு வார்த்தைகளின் தொடர்பாக 29–3–1986, 30–3–1986 ஆகிய தேதிகளில் நிர்வாகத்திடமும், சங்கங்களிடமும் பேச்சுவார்த்தை கள் மேற்கொண்டார். மில்லை மீண்டும் திறந்து நடத்துவதற் கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இவ்வறிக்கையின் சாராம்சங்கள் பற்றி. தொழிலாளர் களுக்கும், நிர்வாகத்திற்கும் தெரிவிக்கப்பட்டன.

அறிக்கையின் சாராம்சங்களில் சில:

தொழிலாளர்களிடமிருந்து எதிர்ப்பார்ப்பது:

சம்பள ஒத்துழைப்பு, சிக்கன சீரமைப்பு, ஒப்பந்தப்படி வேலைப்பளு கொடுத்தல் ஆகியவைகளுக்கு ஒத்துழைப்பு.

நிர்வாகத்திடமிருந்து எதிர்பார்ப்பது:

அரசு நாமினியரிடம் நிர்வாகத்தையும் ஒப்படைத்தல்.

அரசு செய்ய வேண்டியது:

(1) இந்த ஆலையை நிவாரண நிறுவனமாக அறிவித்தல்;

(2) மின்சார வெட்டிலிருந்து விதி விலக்கு அளித்தல்;

நிதிநிறுவனங்களிடமிருந்து எதிர்பார்ப்பது:

(1) பட்டுவாடா செய்த தேதியிலிருந்து கடன்களுக்கு 7½ சத வீதம் ஆக குறைத்தல்;

(2) ஆலை மூடப்பட்ட தேதி வரை கடன்களின் மீது வட்டித் தொகையை மேலும் கடன் தொகையாக நீட்டித்தல்; அபராத வட்டியை தள்ளுபடி செய்தல்.

சங்கங்கள் இந்த மில்லை அரசு உத்தரவாதத்துடன் அரசு நாமினி மூலமாக நடத்தும் பட்சத்தில் தாங்கள் சம்பள ஒத்தி வைப்பு சிக்கன சீர் அமைப்பு முறைகள் ஆகியவைகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்க தயாராக இருப்பதாக கூறினார்கள்.

தற்போது கைத்தறி இயக்குநர் அறிக்கையின் அடிப்படையில் நிதி நிறுவனங்களையும், மில் நிர்வாகத்தையும் அழைத்து உயர் மட்டக்குழு 2-4-1986 அன்று ஒரு இறுதியான முடிவை எடுக்க இருக்கிறது. 1984-ம் ஆண்டில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 200 வீதம் ஒவ்வொரு தொழிலாளிக்கும் பட்டுவாடா செய்யப்பட்டது.

(3) வசந்தா மில்ஸ்,

13-11-1984 முதல் இயங்காமல் உள்ளது, 1,351 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவ்வாலை பிரச்சினை குறித்து இந்த மில்லின் viability-ஐ ஆராய்வதற்காக உயர் மட்டக் குழு ஆலோசனையின்பேரில் ஒரு துணைக் குழு நியமிக்கப்பட்டது. அந்த குழு, இந்த ஆலையை non-viable என முடிவு செய்துள்ளது.

துணைக் குழுவின் அறிக்கையின் மீது 2-4-1986 அன்று ஒரு இறுதியான முடிவு எடுக்க உள்ளது.

அரசு ஆணை எண் 564, நாள் 12-3-1986 மூலம் தொழிலாளிக்கு தலா ரூ. 200 வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. ஆலை திறக்கப்பட்டவுடன், இப்பணத்தை நிர்வாகம் திருப்பி செலுத்த அதனிடமிருந்து ஒரு உறுதிமொழி பெற்று பணத்தை தொழிலாளர் களுக்கு பட்டுவாடா செய்ய கோவை இணை ஆணையரின் நடவடிக்கையிலுள்ளது.



(4) மேட்டூர் பியர்ட் ஸெல்:

16-7-1985 முதல் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது. 2,500 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த நிர்வாகத்தை ஒரு புதிய நிர்வாகம் அரசு உத்தரவாதம் இன்றி ஏற்க முன்வந்துள்ளது. இந்நிறுவனம் தங்களுடைய வங்கி பிரதிநிதிகளுடன் 4-4-1986 அன்று தொழிலாளர் நல ஆணையர் மற்றும் செயலாளர் அவர்களை சந்திக்கவுள்ளது. பேச்சுவார்த்தைகள் தொழிலாளர் ஆணையரால் 5-4-1986 அன்று தொடரப்படுகிறது. முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்குதல் குறித்து, அரசின் பரிசீலனையில் உள்ளது.

(5) ஹரி மில்ஸ், கோவை:

இந்த நிறுவனம் 8-4-1984 முதல் இயங்காமல் உள்ளது. இதில் 657 தொழிலாளர்கள் பணிபுரிந்தனர். இது நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டுள்ளது.

கனரா வங்கி இந்நிறுவனத்திற்கு மொத்தம் 78.13 லட்சம் கடன் வசதி தர முன்வந்துள்ளது. இதைத் தவிர சங்கலி மற்றும் வைசியா வங்கிக் கடன் வழங்க முன்வந்துள்ளது. ஆக வங்கிகள் மூலம் ரூ. 101.13 லட்சம் கடன் வசதி பெற வாய்ப்பு உள்ளது. இந்தத் தொகை இந்நிறுவனத்தை மீண்டும் திறந்து இலாபகரமாக நடத்தப் போதுமானதாகும்.

மேலே குறிப்பிட்ட கடன் வசதிகள் வங்கி மூலம் பெறத் தேவையான சட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மற்றும் இந்த ஆலை விரைவில் திறப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்நிறுவனத்தை 1-4-1986 முதல் மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு நிவாரண நிறுவனமாக அறிவிக்க வேண்டிய செயற் குறிப்பு ஒன்று பரிசீலனையில் உள்ளது.

ஸ்ரீஹரி மில்ஸ் ஆலையைப் பொறுத்தவரை நிர்வாகத்துடனும் தொழிற்சங்கத்துடனும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 21-3-1986 அன்று பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டார். பின்னர் 24-3-1986, 29-3-1986 மற்றும் 30-3-1986 அன்று சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

பேச்சுவார்த்தைகளின்போது, நிர்வாகத்தின் தரப்பில் திரு. வெங்கடேஸ்வரன், நிர்வாக இயக்குநர் ஆகியோர் ஆஜராகி இருந்தனர். சங்கங்களின் சார்பில், திருவாளர்கள் ஏ. சுப்ரமணியம் (எச்.எம்.எஸ்.), டி. சண்முகம் (டி.என்.டி.யு.சி.), ஆர். செங்காளியப்பன் (டி.என்.டி.யு.சி.), ஆர். பழனிச்சாமி (ஏ.டி.பி.) மற்றும் எஸ். துரைசாமி (எல்.எ.எப்.) ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

நிர்வாகத்தின் தரப்பில் குறிப்பிடும்போது, தற்போதைய நிர்வாகம் மாறுதல் செய்யப்பட்டு, புதிய நிர்வாகிகளான திரு. வெங்கடேஸலு மற்றும் திரு. கே. சுந்தரம் ஆகியவர்களின் பொறுப்பில் வரும் பட்சத்தில், நிதி நிறுவனங்கள் கடன் வசதி கொடுக்க முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மில்லை திறந்து நடத்த கீழ்க்கண்ட நிபந்தனைகள் கூறப்பட்டன:

1. தொழிலாளர்கள் தாங்கள் வாங்கும் மாதச் சம்பளத்தில் 15 அல்லது 20 சதவிகிதம் 2 வருடங்களுக்கு ஒத்திவைக்க தயாராக இருக்க வேண்டும்.

2. மில்லின் பொருளாதார நிலையினை உத்தேசித்து, 7 நாட்களிலும் 3 ஷிப்ட்டுகளிலும் மில் ஓட்டப்பட்டு, நிரந்தர தொழிலாளர்கள் 500 பேர்களுக்கும் முழு வேலை வாய்ப்பு அளிப்பது, தற்காலிக பதிலி போன்ற 120 தொழிலாளர்களுக்கு பஞ்சாலைத் தொழிலில் வழக்கப்படி வேலைக்கு உத்திரவாதம் அளிக்க இயலாது.

3. 'சித்ரா' வேலை முறைகள்படி நடந்துக்கொள்வது பற்றி, மில் ஆரம்பிக்கப்பட்டு அதன் இருதரப்பினரும் பேசி முடித்துக்கொள்ளலாம். சம்பள ஒத்திவைப்புப்பற்றி விவாதிக்கும் போது, புதிய நிர்வாகம் சம்பளம் ஒத்திவைப்பு இல்லாமல் மில்லை மீண்டும் இயக்குவது சாத்தியப்படாது என்று வலியுறுத்திக் கூறப்பட்டது.

இணை ஆணையர் புதிய நிர்வாகத்திற்கு சம்பள ஒத்திவைப்பு கோரிக்கை வலியுறுத்த வேண்டாம் எனவும் ஆனால், அதற்குப் பதிலாக மாநில அடிப்படையில் சமீபத்தில் வழங்கப்பட்ட ஊதிய உயர்வு வழங்குவதை தள்ளிப்போடவும், 'சித்ரா' வேலைப்பளு பிரகாரம் கொடுக்கவும், சங்கங்களுக்கு ஆலோசனை வழங்குவதாக கூறப்பட்டது. அதற்கு புதிய நிர்வாகத்தின் பிரதிநிதி திரு. வெங்கடேஸலுவும் இன்றைய பஞ்சாலை வாணிப நெருக்கடி நிலையில் தொழிலாளர்கள் சம்பள ஒத்திவைப்புக்கு திட்டமாக ஒத்துக் கொள்ளாமல் தாங்கள் மில்லை ஏற்று நடத்த முன்வர இயலாது என தீர்க்கமாக கூறினார். சங்கங்களுக்கு, புதிய நிர்வாகத்தின் முன் கூறியவைகளை கருத்தில் கொண்டு புதியக் கண்ணோட்டத்துடன், இந்த சம்பள ஒத்திவைப்புக் கோரிக்கையை பரிவுடன் தொழில் அமைதியைக்காக்க பரிசீலிக்கும் படியாக ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கு சங்கங்கள் புதிய நிர்வாகத்தின் திறமை, நாணயம் ஆகியவைகளில் தங்களுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. ஆனால் தனியார் துறையில் உள்ள ஒரு ஆலைக்கு இந்த முறை ஏற்றுக்கொள்ளப் பட்டால் இதுவே ஒரு கோட்பாடாக தனியார் ஆலை முதலாளிகள் கடைப்பிடிக்க முயற்சிப்பார்கள். இந்த நிலையில் கோவை மாவட்டத்தில் சிவானந்தா ஆலை, எஸ்.ஆர்.பி. ஆலை, ராதா கிருஷ்ணன் ஆலை போன்ற தனியார் ஆலைகள் இந்த முறையை கடைப்பிடித்துவிடுவார்கள் என ஒரு ஐயப்பாடு உள்ளது எனக்





கூறப்பட்டது. மேலும் இந்த மில்லின் கடந்த கால நடவடிக்கைகளை பரிசீலிக்கும்போது நிர்வாகம் பலமுறை நிவாரண நிறுவனம் என்ற அறிவிப்பை அரசினரிடமிருந்து பெற்றும் நலிவுற்ற நிலையில் இருந்து விடுபடவில்லை. இந்த பிரத்தியட்சமான நிலையில் இந்த ஆலையை அரசின் உத்திரவாதத்துடன் அரசு நாமினி மூலமாக நடத்துவது சாலச் சிறந்ததாகும். அவ்வாறு அரசு நடவடிக்கை எடுக்க முன்வரும் நிலையில் தொழிலாளர்கள் சம்பள ஒத்திவைப்பு சிக்கன சீரமைப்பு போன்ற திட்டங்களால் அரசுக்கு தாங்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளன. இப்பிரச்சினைக் குறித்து உயர் மட்டக்குழு 2–4–1986 அன்று ஒரு இறுதியான முடிவு எடுக்க இருக்கிறது.

1985-ம் ஆண்டில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ. 200 வழங்கப்பட்டது.

(6) பத்மா மிதஸ், காளப்பட்டி, கோவை:

பத்மா மில்லில் 150 பேர்கள் வேலை செய்தனர். மிகக் குறைந்த கதிர்கள் உள்ளபடியால், லாபகரமாக நடத்த இயலாது என்ற காரணத்தால் இந்த ஆலையை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. 1984 ஆம் ஆண்டில் முதல் அமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ. 200 வீதம் வழங்கப்பட்டது.

(7) தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர்:

திருப்பூர் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்லில் 250 பேர்கள் பணி புரிந்தனர். மிகக் குறைந்த கதிர்கள் உள்ளபடியால், லாபகரமாக நடத்த இயலாது என்ற காரணத்தால் இந்த ஆலையை திறப் பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. 1984-ம் ஆண்டில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ. 200 வீதம் வழங்கப்பட்டது.

(8) பவானி மில்ஸ்:

இந்த ஆலை 2–10–1985-ல் 'லாக் அவுட்' செய்யப்பட்டது. இதில் 486 தொழிலாளர்கள் உள்ளனர். இந்த ஆலை நலிவுற்ற ஆலை இல்லை என்பதனை இந்த ஆலை நிர்வாகம் தெரிவித்

துள்ளது. தொழிற்தகராறு காரணமாகத்தான் இந்த நிறுவனம் கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கோவை தொழிலாளர் இணை ஆணையர் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகிறார்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் தேவையான விவரங்கள் மட்டும் இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். 31—3—1986 அன்று மாலை 3.30 மணி முதல் கோவை, பெரியார், சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள ஏறத்தாழ ஒன்றேகால் இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளை தேசியமயமாக்க வேண்டுமென்று கோரி கால வரையற்ற போராட்டம் ஒன்றைத் தொடங்கியிருக்கிறார்கள். பாதயாத்திரை வந்தவர்களும் அந்தப் பஞ்சாலைகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துதான் வந்தார்கள். ஆனால் அரசின் சார்பிலே அமைச்சரால் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் தொழிலாளர்களின் முக்கியமான கோரிக்கைகளுக்கு, பிரச்சனைகளுக்கு பதில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் மாண்புமிகு அமைச்சரிடமிருந்து ஒரு விவரத்தை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்களுக்கு நிவாரண தொகை கூட கொடுத்திருப்பதாக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது போதுமானது அல்ல. 200 ரூபாய் நிவாரணம் என்பது இன்றைய சூழ்நிலையில் ஏற்றதாக இல்லை. 1,500 ரூபாய் நியாயப்படி வழங்கப்பட வேண்டும். ஆனால்........

(முற்பகல் 11.00.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியினை சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது அவ்வாறு வழங்கப்படவில்லை என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர் காலத்திலாவது நிவாரணத் தொகையினை அதிகப்படுத்திக் கொடுக்க முன்வருவார்களா? மேலும் முக்கியமாக, அந்தப் பஞ்சாலைகளைத் தேச உடைமையாக்குவதற்குரிய வகையில் ஒரு குறுகிய காலவரம்போடு கூடிய உறுதிமொழியை இந்தப் பேரவையில் அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை, இதனை ஆழமாகப் பரிசீலனை செய்யவேண்டி இருக்கிறது. உடனடியாக இருக்கின்ற பிரச்சினை இந்த 5 ஆலைகளையும் எப்படி திறப்பது என்பதுதான். அதற்கான உரிய நடவடிக்கை பற்றிய விவரங்களை அறிக்கையில் நான் அளித்து இருக்கிறேன்.

*திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிய விவரங்கள் எதுவும் புதிதாக இல்லை. ஏற்கெனவே பலமுறை அமைச்சர் அவர்களால் இந்த சட்டமன்றத்திற்குக் கொடுக்கப்பட்ட தகவல்தான். தொழிலாளிகளுடைய ஜீவாதாரமான கோரிக்கை வேலை என்பதாகும். அந்த வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் செய்யக்கூடிய எந்த ஆலோசனையும் இந்த அறிக்கையில் இல்லை. நேற்றிலிருந்து அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சேலம், பெரியார், கோவை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உள்ள பஞ்சாலைகளில் உள்ள அனைத்து தொழில் சங்கங்களும் ஒன்றிணைந்து ஒரு வேலை நிறுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இவ்வளவு முக்கியமான பிரச்சினையிலே நாங்கள் 200 ரூபாய் வழங்கினோம் என்று அந்தத் தொழிலாளர்களுக்குப் பிச்சைக் காசு கொடுக்கிற மாதிரி கொடுத்து அந்தத் தொழிலாளர்களையும், தொழிற்சங்க இயக்கத்தையும் அவமானப்படுத்தும் கொள்கையை இந்த அரசு கைவிடுமா? பகிரங்கமாக இந்தத் தொழிற்சாலைகளை அரசு ஏற்று நடத்துவதற்கும், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் ஒரு உத்தரவாதத்தை இந்த மன்றத்திலே அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிவாரணத்தொகை அளித்தது பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கடுமையான உணர்வை நான் ஆட்சேபிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் போன்ற தொழில்சங்கத் தலைவர்கள் கேட்டுக்கொண்டதற்குப் பிறகுதான் இந்த நிவாரண நடவடிக்கை எடுக்கப்பட்டது. வேண்டுமானால் அதிக அளவு கொடுங்கள் என்று கேட்பதிலே பொருள் இருக்கலாம். அதற்கு மாறாக கசப்பான உணர்வை வெளியிடுவது அவ்வளவு உகந்தது அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து நான் ஒரு தகவலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஆலைகளைத் தேசிய உடைமையாக்கவேண்டும் என்பதுதான் அவர்களுடைய கட்சியினுடைய கொள்கையா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சாலைகளை நாட்டுடைமையாக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கட்சியினுடைய கொள்கை. ஆனால் கொள்கைப் பிரச்சினை குறித்து இப்போது விவாதிக்க வில்லை என்று அமைச்சர் அவர்களே சொன்னதற்குப் பிறகு அந்தக் கேள்வியை என்னிடம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. இன்று நாங்கள் கேட்பது எல்லாம் அந்த 8 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளிகளுக்கு, அதாவது ஐந்தாண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா? குறிப்புகள் உண்டா? அதற்கான காலவரம்பை அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா? அந்த உத்தரவாதத்தைக் கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கிற இரண்டு இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பல வகைகளில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று இந்த அரசு பல நடவடிக்கைகளைக் கடந்த ஓராண்டு காலத்தில் எடுத்து இருக்கிறது. குறிப்பாக 5 ஆண்டுகளுக்குப் பிறகும் தீருமோ, தீராதோ அல்லது பம்பாய் போல் இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் என்று வேலை நிறுத்தம் இருக்குமோ அந்த ஊதியப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அவ்வளவு நாட்கள் ஆகிவிடுமோ என்று பலரும் ஐயப்பட்டுக்கொண்டிருந்த அந்தத் தருணத்தில் இன்றையதினம் 8 மாத காலத்திற்குள்ளாக ட்ரிபுனல் போட்டு 66 ரூபாய் பெற்றுக்கொண்டிருந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள் இன்றைக்கு 126 ரூபாய் பெறுகிற அளவுக்கு, அதாவது அந்த அளவுக்கு அவர்கள் ஊதிய உயர்வு பெறுவதில் உறுதுணையாக இந்த அரசு இருந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

அதுமட்டுமல்ல. அவர்கள் சென்ற ஆண்டு ஜூன் மாதம் அந்த ஊதிய உயர்வுக்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அப்படி ஈடுபட்டபோது அரசு 10-ரி-ஐ இன்வோக் செய்து அன்றையதினம் ட்ரிபுனலுக்கு ரெஃபர் செய்தது. அவ்வாறு செய்ததற்குப் பிறகு தனி நீதிபதி நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். குறிப்பிட்டு 6 மாத காலத்திற்குள் தீர்க்க வேண்டுமென்று சொன்னார்கள்.



இன்றைய தினம் 8 மாதங்களுக்குள்ளாக அந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டு, இன்னும் சொல்லப்போனால் டிரிப்பியூனல் சைடைக் கேட்காமலேயே சம்பந்தப்பட்ட மேனேஜ்மெண்ட்டும், டிரேட் யூனியனும் சேர்ந்தே ஒரு முகமாக 126 ருபாயை ஏற்றுக் கொண்டு, அதிலே சுமுகமான முடிவு வருகிற அளவுக்கு ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்கிய நிலை ஊதியப் பிரச்னையைப் பொறுத்தவரையில் இருக்கிறது.

அதைப்போலவே போனஸ் பிரச்னையில் சட்ட பூர்வமாக அளிக்கப்பட வேண்டியதற்கு அதிகமாகவே சென்ற முறை அரசு அளித்து, அதனால் இன்றைக்கு பஞ்சாலை தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு நல்ல பெயரை அரசு பெற்றிருக்கிறது. அதே வகையிலே தான் இன்றைக்கு 4 பஞ்சாலைகள், ஒரு எஞ்ஜீனியரிங் ஆலை மூடப்பட்டிருக்கின்றன. எப்படி ஜோதி ஆலை திறக்கப்பட்டு-குறிப்பாக அது இயங்குவதிலே அரசு பெருமை அடைகிறது-உள்ளதோ அது போல அவர்களுக்கு தேவைப்படும் நிதி உதவி காரண்டி கொடுத்து, அதேநேரத்திலே நிர்வாகத்திற்கு பார்ட்டிசிபேஷனை கொடுத்து தொழிலாளர்களுடைய வொர்க்லோடு, வொர்க் நார்ம்ஸ் போன்றவைகளை பேசி தீர்த்து, இவைகளையெல்லாம் சுமுகமாக தீர்க்க, எப்படி ஜோதி ஆலை முதலிலே இருந்ததோ அப்படியே இந்த 4 ஆலைகளும் இருக்கிற காரணத்தால், அந்த ஜோதி மில் ஃபார்முலா என்ற அந்த வகையிலேயே எடுத்துச் செய்து அந்த தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்.

அது மட்டும் அல்ல. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல ஜாயின்ட் ஆக்ஷன் கவுன்சில் என்று குஜராத் முறையிலே ஏன் அதைத் தீர்க்கக்கூடாது என்று சொன்னார்கள். இந்த அரசு அதைப் பரிசீலித்தது. குஜராத் முறை என்பது it is a tall t lk அது நடைமுறைக்கு சாத்தியமானது அல்ல. இன்னும் நான் தெளிவாக விவரமாக சொல்ல வேண்டுமென்றால், அண்மையிலே நடைபெற்ற ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டு என்கிற ஸ்டாப் கூட்டத்திலே அனைத்து தொழிற்சங்கத் தலைவர்கள் வந்திருந்த கூட்டத்தில் கூட நான் சொன்னேன். குஜராத் முறை தமிழகத்திற்கு பொருத்தமானது அல்ல. குஜராத்திலே இருக்கிற பிரச்னை வேறு; தமிழ்நாட்டிலே இருக்கிற பிரச்னை வேறு. குஜராத்திலே 50 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். தமிழ்நாட்டிலே 8 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அங்கே 26 ஆலைகள் இருக்கின்றன. இங்கே 4 ஆலைகள் தாம் இருக்கின்றன. அது மட்டும் அல்ல, மத்திய சர்க்கார் ஏதோ உதவிகளைக் கொடுத்ததாகக் கூடச் சொன்னார்கள். உதவியாக கொடுக்கவில்லை, கடனைக் கொடுத்தார்கள். குஜராத் மாநிலத்தினுடைய பணத்தில் அவர்கள் 65 கோடி ரூபாயை ஒதுக்கியதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் குஜராத்திலே தேசியமயமாக்கப் பட்டிருக்கிறது. ஆனால் ஒரு ஆலை கூட ஓடவில்லை. நாங்கள் அங்கே 2 அதிகாரிகளை அனுப்பி வைத்து அந்த அறிக்கை விவரங்களை தயாரித்து வைத்திருக்கிறோம்.

ஆகவே அந்த முறைகள் எல்லாம் தமிழகத்திற்கு உகந்த
முறை அல்ல. தமிழகத்திற்கு உரிய முறை, ஏற்கெனவே நடை
முறைப்படுத்தப்பட்டு வெற்றி பெற்றிருக்கிற ஜோதி மில்
ஃபார்முலா நம்கையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்
செங்காளியப்பன் அவர்களுக்கு தெரியும். மாண்புமிகு சிந்தன்
அவர்களுக்கும் தெரியும். அந்த வகையில் நிதி நெருக்கடி, மிஸ்
மேனேஜ்மெண்ட், வேறு வித வசதிகள், சேல்ஸ் டாக்ஸ் மற்றும்
பவர் போன்றவற்றில் எக்ஸ்ஸெம்ப்ஷன் போன்ற அந்த வசதி
களை எல்லாம் கொடுத்து,அங்கே நம்முடைய தொழிலாளர்களுக்கு
பணிபுரிய வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று ஒரு நல்ல
எண்ணத்தைக் கொண்டிருக்கிறதே தவிர, உடனடியாக தேசிய
மாக்குவதும் அதன் மூலமாக மேலும் பிரச்னைகளை கடுமையாக்
கவும் இந்த அரசு விரும்பவில்லை என்பதை தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, இங்கே அளிக்கப்பட்டுள்ள இந்த விவர
அறிக்கை வேதனை கொடுக்கின்ற அறிக்கையாக இருக்கிறது.
ஏன் என்று சொன்னால், 8 ஆலைகள், 6 மாதத்திலிருந்து 5
ஆண்டுகள் வரை மூடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
குறிப்பாக பத்மா மில்ஸ் மற்றும் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் ஆகிய
இரண்டு ஆலைகளுமே திறக்கப்படுவதற்கான சாத்தியமே
இல்லை என்ற தகவல் தான் தரப்பட்டிருக்கிறது. நான்
மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக கேட்டுக்
கொள்வதெல்லாம்—நேற்றைய பட்ஜெட் உரையிலே மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள் குஜராத்தை உதாரணம் காண்பித்து
அதுபோன்று இங்கே கொண்டு வரப் போகிறோம் என்று
சொல்லியிருக்கிறார்கள். குஜராத் மாநிலத்திலே ஆலைகளை
தேசியமயமாக்க மாநில அரசே நடவடிக்கை எடுத்திருக்கிறது.
ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்
(மணியடிக்கப் பெற்றது). குஜராத்திலே இருக்கிற பிரச்னை
வேறு, தமிழகத்திலே இருக்கிற பிரச்சினை வேறு என்று
சொல்லுகிறார்கள்: குஜராத்திலும் தொழிலாளர்கள் பட்டினி
கிடக்கிறார்கள், தமிழகத்திலும் தொழிலாளர்கள் பட்டினி
கிடக்கிறார்கள். ஆகவே பிரச்னை ஒன்றுதான். ஆகவே
அமைச்சர் அவர்கள் அந்த 8 ஆலைகளையும் ஒட்டு மொத்தமாக,
பொது மக்களுடைய நலனைக் கருதி, மாண்புமிகு அமைச்சர்
அவர்களே சொன்னார்கள், 8 ஆயிரம் தொழிலாளர்கள் அதிலே
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று, ஆகவே இந்த 8 ஆலை
களையும் ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைத்து, மீண்டும் அந்த
பஞ்சாலைகளை துவக்குவதற்கு தமிழக அரசு முன் வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர்
அவர்களே, ஏற்கனவே நான் இதற்கு விளக்கம் அளித்திருக்
கிறேன்.



திரு. ஆ. நடராசன் : துணைத் தலைவர் அவர்களே, எட்டு
ஆலைகளின் பிரச்னைகள் குறித்து மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். இராமகிருஷ்ணா
இண்டஸ்ட்ரீஸ் பொறுத்தவரையில் கடந்த ஒன்றரை ஆண்டுக்
காலமாக மூடப்பட்டு அங்கேயிருக்கிற தொழிலாளர்கள் மிகுந்த
துன்பத்தில் இருக்கிறார்கள். அந்த நிர்வாகத்தில் ஏற்பட்ட
பிரச்னை காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.
அதனை உடனடியாகத் தீர்க்கவும், மற்ற ஆலைகளை அரசாங்கம்
எடுத்துக்கொள்ளவும் அரசாங்கம் முன்வர வேண்டும். இராம
கிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் தொழிலாளர்கள் பொறுத்தவரையில்
200 ரூபாய் கொடுக்கவிருப்பதை உடனடியாக அதனைத் தர
அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா? அடுத்து பவானி மில்
பிரச்னை பற்றி இணை ஆணையர் பேச்சுவார்த்தை நடத்திக்
கொண்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்னையை
பொறுத்த வரையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த தொழிற்
சங்கத்தில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக அந்த ஆலையை
2-10-1985-ல் மூடிவிட்டு நிர்வாகம் அங்கே ஓர்க் லோடை
அதாவது வேலை பளுவைக் கூட்டுவதற்கு சதித்திட்டத்தைப்
போட்டு, அங்கேயிருக்கிற தொழிலாளர்களை பட்டினி போட்டு
எப்படியாவது தொழிலாளர்களைப் பணியவைக்கலாம் என்று
இருப்பதை அரசாங்கம் அறியுமா? எனவே இப்படிப்பட்ட
நிலையை மாற்ற அரசாங்கம் அந்த மில்லை எடுக்க முன்வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் கூறி
யதைப் போன்று அந்த ஆலை மூடப்படவில்லை. அங்கே
தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஒரு தாவா
இருக்கிறது. துரிதமாக அந்தத் தாவாவைப் போக்கி அந்த
ஆலையை மீண்டும் ஓட்டுவதற்கு எல்லா முயற்சிகளையும் அரசு
எடுக்கும். அதைப்போல இராமகிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ்
பொறுத்த வரையில் நான் விளக்கமாக சொல்லியிருக்கிறேன்.
தற்போது அபிஷியல் லிக்குவிடேட்டார் நிர்வாகத்தில் இருந்து
கொண்டிருக்கிறது. அவர்கள் சில தேவைகளை கேட்டிருக்
கிறார்கள். அதற்குச் சாதகமாக பதிலை சில நாட்களிலே
கொடுத்து அந்த ஆலை திறக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : துணைத் தலைவர் அவர்களே, இராம
கிருஷ்ணா இண்டஸ்ட்ரீஸ் தவிர மற்ற ஏழு நூற்பாலைகளும்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதிலில் கூறியிருப்
பதைப் போல அரசாங்கத்தினுடைய எந்தப் பொறுப்பிற்கும்
உட்படாமல் நிர்வாகத்தினுடைய பல கோளாறுகள் காரணமாக
மூடப்பட்டிருந்தாலும், அரசாங்கம் தொழிலாளர்களுடைய நலன்
கருதி இந்த ஓராண்டிலே எடுத்திருக்கிற பல்வேறு முயற்சிகளை
நான் பாராட்டுகிறேன். உயர்மட்டக்குழு அமைத்து மூன்று ஆலை
களைப் பொறுத்த வரையில் நாளை இரண்டாம் தேதி தொழிற்
சங்கத் தலைவர்களை வைத்து அதற்கு இறுதியான தீர்வை

ஏற்படுத்துவதற்காக முன்வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும், இடைக்கால நிவாரணத்தை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் அந்தத் தொழிலாளர்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பத்மா மில்ஸ், தமிழ் நாடு ஸ்பின்னிங் மில்ஸ் இரண்டு சிறு யூனிட்டுகள் 'நான்-வயபிள்' என்று துணைக்குழு தந்திருக்கிற அறிக்கையை மற்ற மில்களை சேர்த்து நடத்துவதன் மூலமாக வயபிளாக்க முடியுமென்ற வகையில் அவைகளையும் சேர்த்து ஏற்கனவே பல இலாபகரமான நூற்பாலைகளை நடத்திக்கொண்டிருக்கிற தேசிய பஞ்சாலை நிறுவனம், ஒரு காலக்கெடுவிற்குப் பின்னாலே நிர்வாகம் எடுத்துநடத்த முன்வரவில்லை என்றால் எடுத்து நடத்த வேண்டுமென்று அரசாங்கம் மத்திய அரசினை வலி யுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன். மத்திய அரசைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் 'Rather to take these sick industr es, we must allow them to d'e by natural courses.' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கொள்கையை மாற்றி பல இலாபகரமான நூற்பாலைகளை கோவையிலும்' பாண்டிச்சேரியிலும் நடத்துகிற என்.டி.சி. நிறுவனம் கோவையில் நிர்வாகத்தால், தமிழக அரசினுடைய முயற்சியாலும் திறக்க முடியாத நிலையில் அந்த மில்களை, நூற்பாலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி, அந்தத் தொழிலாளர் களின் நலன் கருதி அவைகளை we will not allow them to d e' என்ற வகையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கொள்கை மாற்றத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்தவரையில் இந்த நலிந்த ஆலைகளை மீண்டும் புதுப்பித்து அங்கேயிருக்கிற தொழிலாளர் களுக்கு வேலை அளிப்பதில் எல்லா உதவிகளையும் செய்து வருகிறது. குறிப்பாக குஜராத்திற்கு உதவி இருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரிக்கு உதவி இருக்கிறார்கள். குறிப்பாக ஆங்கிலோ ப்ரென்ச் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் மூன்று நான்கு ஆண்டுகளாக ஓடாமல் இருந்து, அண்மையில் மத்திய அரசி னுடைய கடனுதவியோடு தொடங்கப்பட்டது. அதிலேயுள்ள சிக்கலி லிருந்து தமிழகம் ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக் கொண்டிருக் கிறது. நிதி ஆதாரத்தின், நிதி உதவியால் மட்டும் நலிந்த ஆலை களை மீண்டும் புதுப்பிக்க முடியாத ஒரு அனுபவம் ஏற்பட்டு இருக் கிறது. இன்றைக்கு பாண்டிச்சேரியில் ஒரு ஆலையைத் திறந்த 10 நாட்களிலே அந்தத் தொழிலாளர்கள் மீண்டும் வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள். காரணம் அங்கேயிருக்கிற ஓர்க் லோட். ஓர்க் நார்ம்ஸ், வேலைப் பளுவை பற்றிப் பேசாமல் அந்த நிர்வாகமும், அரசும் முடிவு எடுத்த காரணத்தாலே, இன்றைக்கு அங்கே இருக்கிற தொழிலாளர்



களும். தொழிற்சங்கத்தலைவர்களும், அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று சொல்லி, இந்த வேலை பளுவை சீரமைக்க வேண்டும், சரியாக நிர்ணயிக்கவும், தகுந்தவர்களை வைத்து, அதை உறுதி செய்யவேண்டும் என்று சொல்கின்ற அந்த பிரச்சனை இன்றையதினம் எழுந்திருக்கிறது.

அதைப்போலவே தமிழ்நாட்டிலே கூட 4, 5 ஆலைகள் பல மாத காலமாக ஆலைகள் மூடப்பட்டு இருந்தாலும், தொழி லாளர்கள் மத்தியிலே இப்படிப்பட்ட பிரச்சனை இருப்பதால், திறந்தால் எங்களுக்கு என்ன வேலைப்பளு, எங்களுக்கு எப்படி வேலை அம்சம் இருக்கும் என்பதை தெளிவுபடுத்திவிட்டுத்தான் திறக்கவேண்டும் என்று ஒரு நியாயமான உணர்வை அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இந்த அம்சங்களையும் இன்றைக்கு அரசு மனதிலே வைத்துதான் அந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக 6 மாதத்திற்கு முன்னாலே மேட்டூர் அணையில் 3 ஆயிரம் பேர்கள் இருக்கிற அந்த ஆலை மூடப்பட்டது. 6 மாத காலமாக அந்த நிர்வாகத்தோடு பேசிப் பார்த்தோம். 15 நாட்களுக்கு முன்பு, கோவையிலே யிருந்து ஒரு தனி ஆன்டர்பிரனர் வந்து, அதை எடுத்துக் கொள்கிறேன் என்று இன்றைக்கு முன்வந்திருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு நம்முடைய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் செங்காளியப்பன் போன்றவர்களோடு கலந்து பேசி இருக்கிறேன். வருகின்ற 4-ஆம் தேதி நம்முடைய தொழிற்சங்கத் தலைவர்கள், அதேநேரத்திலே அதற்காக பணம் கொடுக்கிறார்களே, பைனான்சியல் இன்ஸ்டிடியுசன் மற்றும் அந்த புதிய நிர்வாகிகள், ஆகிய 3 பேர்களை வைத்து, நீங்கள் ஒரு முடிவுக்கு வாருங்கள், அதற்குப் பிறகு என்ன காரியத்தை அரசு செய்யவேண்டுமோ அதைச் செய்யும் என்று சொல்லி இருக்கிறது. காரணம் தொழிற்சங்கங்களும். தொழிலாளர் களையும் இந்தப் பிரச்சனையில் ஈடுபடுத்தினால்தான், அது நிற்காமல் வேறு எந்தத் தொல்லையும் இல்லாமல் நடக்கும், அதேசமயத்தில் ஓர்க் லோடைப் பற்றியும், ஓர்க் நார்ம்ஸ் பற்றியும் பேசித் தீர்த்தபிறகுதான், நிதி பற்றியும், மற்ற பிரச்சனைகளைப் பற்றியும் பேசவேண்டும் என்ற அந்த அணுகு முறையோடு இன்றைக்கு ஒவ்வொரு கட்டத்திலேயும், ஒவ் வொரு ஆலையைப் பொறுத்த வரையிலும், அங்கே இருக்கிற தொழிற்சங்கங்களோடு, அவர்களுடைய அனுமதியோடு, ஒத் துழைப்போடு இன்றைக்கு நாம் முடிவுகளை எடுத்து வருகிறோம். எனவே ஒரு ஆலையைத் திறந்தபிறகு, இன்றைக்கு பாண்டிச் சேரியில் திறந்த பிறகு மூடுகின்ற அந்த கசப்பான அனுபவத்தை நாம் பெறாமல், ஒருமுறை திறந்தால், மீண்டும் தொய்வு இல்லாமல் ஆலைகள் இயங்குகிற வகையில், தொழிலாளர் சகோதரர்களுடைய ஒத்துழைப்போடு விரைவில் அது தொடங் கப்படும் என்பதை மட்டும் நான் இந்தச் சபைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1½ வருட காலமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இவ்வளவு வலியுறுத்தியதற்குப் பிறகும், தொழிற்சாலையைத் திறந்து, தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஒரு உத்தரவாதம் கொடுக்காத காரணத்தால், எங்களுடைய கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கண்டனத்தைத் தெரிவிக்கிற வகையில், வெளி நடப்பு செய்கிறோம்.

[கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்ஸ்) உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.]

திரு பொ. உத்திராபதி: துணைத் தலைவர் அவர்களே, 8 லட்சம் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லாததும், மூடிய பஞ்சாலைகளை அரசாங்கம் தேசியமயமாக்காதது பற்றியும், அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் திருப்திகரமாக இல்லாத காரணத்தாலேயும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தன்னுடைய அதிருப்தியைத் தெரிவிக்கிற வகையில் வெளிநடப்பு செய்கிறது.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. க. அன்பழகன்; துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சனை நேற்றையதினம் நடந்த விவாதத்திலே எழுப்பப்பட்டு, மிக நிறைவான பதில் அளிக்கப்படும் என்ற கருத்து நேற்றையதினம் தெரிவிக்கப்பட்டது. மாறாக தொழிலாளர்கள் சமுதாயம் வேதனைப்படுகிற அளவில், இருக்கின்ற நிலைமையை விரைவில் முடிப்பதற்கான ஒரு உறுதி இல்லாத காரணத்தால், அந்த விரைவை வலியுறுத்துவதற்கு அடையாளமாக திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்பு செய்கிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய நடவடிக்கையானது நீண்ட நெடுங்காலமாக முடிக்கப்படாமல் பேச்சு வார்த்தை மூலமாக பேசிப் பேசி நீண்டகாலமாக அது அப்படியே இருக்கிறது. அதன் காரணமாக பாத யாத்திரை வந்தவர்களும், நானும், சட்டமன்ற உறுப்பினர் ரமணி அவர்களும் கைது செய்யப்பட்டோம். அதற்குப் பிறகு, நல்லதொரு முடிவு ஏற்படும் என்று நேற்றையதினம் அமைச்சர் அவர்கள் அவையில் கூறினார்கள். ஆனால் நல்ல முடிவினை ஏற்படுத்தாததோடு அது எப்போது ஏற்படும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக ஒரு தேதியை அவர்கள் குறிப்பிடவில்லை. ஆகையினாலே, இந்தச் சபையிலேயிருந்து, ஜனதா கட்சி சார்பில் நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(ஜனதா கட்சி உறுபபினர் வெளிநடப்பு செய்தார்)



(முற்பகல் 11-20)

### 3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) உறுப்பினர்கள் திரு. ஆர். செங்காளியப்பன், திரு. கு. ரமணி ஆகியோர் விடுதலை செய்யப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு சென்னை மாநகர காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

"I have the honour to inform you that Thiru R. Sengaliappan, M.L.A., who was arrested in X Station Crime No. 318/86 under Section 41 of the M.C.P. Act., was released at 17 hours to-day, that is on 31-3-1986"

"I have the honour to inform you that Thiru K. Ramani, M.L.A., who was arrested in X Station Crime No. 318/86 under Section 41 of the M.C.P. Act., was released at 17 hours to-day, that is on 31-3-1986'.

### 6. அரசினர் சட்ட முன்வடிவு.

### கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலரின் நியமனம்) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசினர் சட்ட முன் வடிவை ஆய்வு செய்தல். 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் தனி....

திரு ப. பொன்னுரங்கம்: பாயிண்ட் ஆப் ஆர்டர், As per rule 135 of the Assembly Rules, when a motion has been agreed to by the Assembly that the Bill by taken into consideration, any member may propose an amensment of such bill. Under Rule 136 (1] Notice of a proposed amendment shall be sent to the Secretary at least three clear days before the sitting of the Assembly at which the Bill is to be considered. That is rule.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்பு செய்கின்றது. ஆனால் பொன்னுரங்கம் அவர்கள் இங்கே இருக்கிறார்களே, அவர்களுக்கு மாறுபட்ட கருத்து ஏதாவது இருக்கிறதா?

திரு ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, For taking up the Bill, there should be three clear days for moving an amendment. நேற்றைய தினம் அறிமுகப்படுத்தப்பட்ட அந்தக் கூட்டுறவுச் சட்டமானது இன்றையதினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது, நான்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் எழுதிக் கொடுக்க வேண்டியதை நேற்றே கொடுத்து இருக்கலாமே? இங்கு பேச டைம் இல்லை.

திரு ப. பொன்னுரங்கம்; துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த பில் வருவது சட்டமன்ற விதிகளுக்கு முரணானது, மீறி இந்த பில் எடுத்துக் கொள்ளப்படுமானால் லிஸ்ட் ஆப் புரோகிராம், டெய்லி லிஸ்ட் போடும் பொறுப்பு அவை முன்னவர் உடையது. அவை முன்னவர் மீநுதேவையற்ற உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவருகிற நிர்ப்பந்தத்திற்கு ஆளாவோம் ஆகையினால் இந்த பில்லை இந்த தேதியில் எடுத்துக் கொள்ளாமல் ஒரு மூன்று நாள் அவகாசம்தந்து பிறிதொரு தேதியில் எடுத்துக்கொள்வதுதான் சரி. முறைவிதிக்கு முரணாக இந்தபில் வருகிறது. 3 clear days for moving an amendment' should be there. ஆக நான் எதிர்ப்பது இந்தபில்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த் விதியை ஓத்துக் கொள்கிறேன்.

Please go through Rule 188 of the Assembly Rules. The Speaker may, in his discoeation, d'spense with the provision of this Chapter regarding notice periods of notice...... என்று பேரவைத் தலைவருக்கு நோட்டீஸ் பீரியடை வெய்வ் (waive) செய்ய அதிகாரம் உள்ளது, (குறுக்கீடு). நேற்றே அமைச்சர் அவர்கள் பில்லைஇன்ட்ரடியுஸ் பண்ணிவிட்டார்கள். (குறுக்கீடு), நேற்றே நீங்கள்விரும்பி இருந்தால் திருத்தம் கொடுத்திருக்கலாம்.

திரு ப. பொன்னுரங்கம்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am having an amendment. There should be three clear days. I am also a Member. As per rule, I have prepared an amendment and it must be circulated to Membe.s of the House. அந்தக் காரியங்களை எல்லாம் செய்யாதபடி, விதி சொல்வதை எல்லாம் செய்யாதபடி, விதிக்கு முரணான ஒரு சட்டத்தை அவசரஅவசரமாக நிறைவேற்ற என்ன காரணம். இதுவே வழக்கமாக இருக்கிறது இதே மாதிரிதான் Madras race club take over சட்டம்கொண்டு வந்தபோது கூட தெரிவித்தார்கள். ஆனால் இதே வழக்கமாக இருக்கிறது. எப்பொழுதும் இதே போல விதிக்கு முரணாகவே, அவசர அவசரமாக சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவது என்றால், பேரவை விதி எதற்கு, விதிகளை எல்லாம் தூக்கி போட்டுவிடலாமே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; விதிக்கு முரணாக எதுவும் நடைபெறவில்லை. விதி 188-ன் படி நோட்டீஸ் பீரியடை டிஸ்பென்ஸ் பண்ண ஸ்பீக்கருக்கு அதிகாரம் உண்டு. அதன்படி நோட்டீஸ் பீரியடை டிஸ்பென்ஸ் செய்து, இச்சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள நான் அனுமதி அளித்துள்ளேன்.



THIRU A RAHMANKHAN: What is the necessity?

டாக்டர் ஜே. சௌரிராஜன்; ஆனரபிள் டெப்டி ஸ்பீக்கர் சார், இந்த பில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நாளைக்குள்ளாகவே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் அது சரியல்ல என்பதற்கு பேரவை விதியைச் சுட்டிக்காட்டியதற்குப் பிறகு அந்த விதியை தாங்களும் ஏற்றுக்கொண்டு, அதேநேரத்தில், '188-ல் எனக்கு அதிகாரம் இருக்கிறது, நான் அதை டிஸ்பென்ஸ் செய்கிறேன்' என்று சொல்கிறீர்கள்.

The Hon-Speaker has got the right, before the Hon. Member has pointed out the irregularity the Hon-Speaker ought to have announced like this to the Hourse:—"In exercise of the powers conferded under Rule 188, I am dispensing with the time prescribed for giving notice". (கூச்சல் குழப்பம்)

திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்குத் திருத்தம்கொடுக்க குறைந்த பட்சம் 3 நாட்கள் முன்னறிவிப்பு வேண்டும் என்று விதி சொல்கிறது. ஆனால் பேரவைத் தலைவர் அவர்கள் விரும்பினால், விதியைத் தளர்த்தி உடனே எடுத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். எங்களுடைய கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொல்லியதுபோல் முன்னாலேயே அப்படி விதியைத் தாங்கள் தளர்த்தியிருப்பது குறித்துச் சொல்லியிருக்க வேண்டும். சொல்லவில்லை.

மேலும் 9 ஆம் தேதி வரை அவகாசம் இருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவை 3 நாள் கழித்து எடுத்துக்கொள்வதில் ஒன்றும் குடி மூழ்கிப் போய்விடப்போவது இல்லை. ஆகவே 3 நாள் கழித்து எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக படித்துத் திருத்தங்கள் கொண்டு வருவதற்கு சரியாக இருக்கும். நீங்கள் மரபுகளை, விதிகளை கடைப்பிடிக்க வேண்டும். எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். ஆகவே, 3 நாள் கழித்து எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேறிய பின் மேல் சபைக்கு இது செல்ல வேண்டும். மேல் சபை நாளைக்கும் நாளை மறுநாளுக்கும் மட்டும் தான் கூட இருக்கிறது. அதோடு ஸ்பெசல் ஆபீஸர்களின் பதவிக் காலம் ஏப்ரல் 9 ஆம் தேதியோடு முடிகிறது. அதனால் இதன் அவசர அவசிய தன்மையைக் கருதி உடனடியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. (குறுக்கீடு)

திரு அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது பேரவை விதிப்படி 3 நாள் நோட்டீஸ் கிளியராக இருந்தால் தான் நாங்கள் பேசுவதற்கு சரியாக இருக்கும். அவசர அவசரமாக எடுக்கவேண்டிய அவசியம் என்ன? ஏப்ரல் 9 ஆம் தேதி வரை டைம் இருக்கிறது. மேல் சபையும் இன்னும் இரண்டு நாட்களுக்கு நடக்க இருக்கிறது. ஆக நாளைக்கு எடுத்துக்கொண்டால் நாங்கள் பேசுகிறோம். இல்லை என்றால் ஓடுகிற குதிரை ஓடட்டும். யாரும் இந்த விவாதத்திலே கலந்து கொள்ள மாட்டோம். (கூச்சல்—குழப்பம்)

திரு உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட சம்பந்தமான விவாதத்திலேயே இவ்வளவு நேரம் வீணாகிவிட்டது. அந்தப் பிரச்சினைக்கு உள்ளே நான் போக விரும்பவில்லை. இப்போது நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய விதி 188ல் கூட The Speaker may, in his discre-tion, dispense with the Chapter regarding notice. என்று தான் சொல்லப்பட்டு இருக்கிறது. உங்களுக்கு டிஸ்கிரிஷன் பவர் இருப்பதை நாங்கள் தடுக்கவில்லை. உங்களுக்கு உரிமை இருக்கிறது. அதை இவ்வளவு அவசர அவசரமாக ஏன் கொண்டு வருகிறீர்கள் என்று தான் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கிறார்கள். 9 ஆம் தேதிக்கு இன்றிலிருந்து இன்னும் 8 நாட்கள் இருக்கின்றன. (கூச்சல்—குழப்பம்) மேல் சபைக் கூட்டமும் இன்னும் இரண்டு மூன்று நாட்கள் நடைபெறும். ஆகவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளுக்கு தாங்கள் கொஞ்சம் மரியாதை கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் 9 ஆம் தேதியோடு முடிவடைகிறது. ஏப்ரல் 3 ஆம் தேதி மேலவைக் கூட்டம் முடிகிறது. ஏப்ரல் 9 ஆம் தேதிக்கு முன் திரும்ப கூட வாய்ப்பு இல்லை. அதனால்தான் நாங்கள் இதனை இங்கு நிறைவேற்றி மேலவைக்கும் அனுப்பி வைக்க அவசரப்படுகிறோம். வேறு ஒன்றுமில்லை. உங்களுக்குத் தெரியாத இரகசியம் எதுவும் கிடையாது. (குறுக்கீடுகள்)

திரு. என். எஸ். வி. சித்தன்; மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் வருகிற 3 ஆம் தேதி மேல்சபைக் கூட்டம் முடிவடைகிறது. ஆகவே இந்தச் சட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படியானால், ஏன் இதை முன்னால் கொண்டு வந்திருக்கக்கூடாது? என்ன தடை இருந்தது? இவ்வாறு அவசரமாக கொண்டு வரப்படுவதால், எங்களுடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எனவே நாளை எடுத்துக் கொள்ளலாம் அல்லது நாளை மாலையிலே கூட எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: இந்தச் சட்டமுன்வடிவை நாளை எடுத்துக் கொண்டாலும் காலம் போதாது என்று சொல்லலாம்; பெரும்பாலோர் சட்டம் படித்தவர்கள் தான். இந்தச் சட்டமுன்வடிவும் எல்லோருக்கும் தெரிந்த சப்ஜெக்ட்தான். ஆகவே இந்தச் சட்டமுன்வடிவினை நான் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முன்மொழிய அனுமதிக்க வேண்டும். தயவுசெய்து உறுப்பினர்கள் இதனை இன்றைக்கு நிறைவேற்றிட ஒத்துழைக்க வேண்டும். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு உண்மையை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவசரமாக எடுத்துக் கொள்வதற்குக் காரணம், தனி அதிகாரிகள் பதவிக்காலம் ஏப்ரல் 9 ஆம் தேதியோடு முடிகிறது; மேலவைக் கூட்டமோ ஏப்ரல் 3 ஆம் தேதியோடு முடிவடைகிறது. எனவே தான் பேரவை விதி 188—ன் கீழ் பேரவைத் தலைவர் நோட்டீஸ் பீரியடை டிஸ்பென்ஸ் செய்துள்ளார். அவர்கள் அந்தச் சட்ட முன்வடிவை முன்மொழியலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள்....(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். பேரவை விதி 188 இன் கீழ் I have already weived it.

திரு. அ. ரகுமான்கான்: இதிலே பிரஸ்டீஜ் பார்க்க வேண்டாம். நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பிரஸ்டீஜ் என்ன இருக்கிறது? We are all for the people.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் நிறைவேற்றப் பெற வேண்டுமென்று அரசு விரும்புகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரைப் பொறுத்து அல்ல; சில நாட்களுக்கு முன்னாலேயே இதை அறிமுகப்படுத்தி எடுத்து நிறைவேற்றுவதற்கான நிலைமைகளை, துறையினர் செய்து இருக்க வேண்டும். நேற்று வந்ததன் காரணமாக இன்றைக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. சட்டப்படி எடுத்துக் கொள்வதும் தவறல்ல, இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவகாசம் வேண்டுமென்றும் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்றும் திரும்பத் திரும்பச் சொல்வதன் காரணமாக இதை நாளை எடுத்துக் கொள்ளலாம். மேலவையினரைக் கேட்டுக்கொண்டு, 4 ஆம் தேதி வரை மேலவையினை நீட்டித்து, 4 ஆம் தேதி அங்கே எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: With the permission of the House this Bill will be taken up tomorrow.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: திருத்தம் கொடுக்கிற வாய்ப்பு பற்றி பேசவில்லை, திருத்தம் கொடுக்கலாமா......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தங்கள் கொடுக்கலாம்.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(இ). 1986–87–ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளை மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1986–87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

In pursuance of Article 203, Clause 3 of the Constitution of India, I, Sundar Lal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demand for grants for the year 1986-87.

7. வரவு-செலவுத் திட்டம் 1986–87 வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 20—வேளாண்மை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,15,56,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்துவதன் அவசியம்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,15,56,79,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"



திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,15,56,79,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் காட்டுத் தோட்டத்தில் அமைக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்ட வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்படாமலிருப்பதால் அப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,15,56,79,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டான் தொகுதியிலுள்ள பொன்னாறு வாய்க்காலின் பாசனத் தன்மையை மேம்படுத்துதல் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,15,56,79,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,27,13,94,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகருக்கு இரண்டாம் குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றத் தொடர்ந்து தாமதப்படுவதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,27,13,94,000—இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 67, 68, 69 ஆகிய வட்டங்களிலும் குடிசை மாற்று வாரியக் கட்டடங்களிலும் வசிப்பவர்களுக்கு போதிய குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 49— குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,27,13,94,000—இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் வட்டம், சோழவித்தியாபுரம், பெரிய தும்பூர், தலையாமலை ஆகிய கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படாததால் ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,27,13,94,000—இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

(முற்பகல் 11-40)

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் சத்தி வட்டத்தில் உள்ள சிக்கரசம்பாளையத்தில் கூடுதலாக குழாய்கள் அமைத்து மக்களது குடிநீர் பற்றாக்குறையைத் தீர்ப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,27,13,94,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்தமூலதனச் செலவு

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,28,12,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,28,12,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு உற்பத்தியைக் கருத்தில் கொண்டு தென்காசி வட்டம், கடையநல்லூர் பகுதியில் ஒரு கரும்பு ஆலை அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,28,12,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கக்கூடிய டிராக்டர்கள், பூச்சி மருந்து அடிப்பான் போன்ற கருவிகள் எல்லாம் பழுதுபட்டு பயன்படாமல் கிடப்பதால், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்கள் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,28,12,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புகள்*ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நான் ஆற்றிய உரையாகக் கருதி அவைக்குறிப்பெல்லாம் ஏற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஐந்திலிருந்து ஏழு நிமிடங்களுக்குள்ளாக, சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*204, 260-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

திரு. டி. என். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைத் துறையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று அறைகூவி சொல்கிறோம். ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'' என வள்ளுவப் பெருந்தகை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே அறுதியிட்டு உரைத்தார். அவரின் வழி நடப்பதாகக் கூறும் இந்த அரசு விவசாயிகளைப் பற்றியும், ஏன் வேளாண்மைத் துறையைப் பற்றியுமே கண்டு கொள்வதே இல்லை. அவை முன்னவர், மாண்புமிகு நிதி அமைச்சர் இவ்வரசின் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையினை இவ்வவைக்கு அளிக்கும்போதுகூட அந்தப் பொய்யாமொழிப் புலவனின் புகழ் உரைகளையே கோடிட்டுக் காட்டி இருக்கின்றார். ஆனால் வள்ளுவர் புகழுக்கு இலக்கான அந்த உழவுத் தொழில், விவசாய வர்க்கம், இன்றைக்குச் சீரழிந்து. சிறப்பிழந்து கிடப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விவசாயிகளை இந்த அரசு மூன்று வகைகளாகப் பிரித்து அவர்களுக்குள் பிரிவினை உருவாக்கும் எண்ணத்தோடு பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள், சாதாரண விவசாயிகள் எனப் பெயரிட்டுள்ளது. அரசின் கணக்குப்படி பார்த்தால்கூட இம்மாநிலத்தில் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை தவிர மற்ற மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் அனைவரையுமே சாதாரண விவசாயிகள் என்றே அழைக்கலாம். ஆகவே அவர்களுக்கு அனைத்துச் சலுகைகளையும் வழங்கலாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போதைய விவசாயக்குடும்பங்கள் அனைத்தும் பசியும், பட்டினியுமாக, வறுமையும், வேதனையுமாக, விம்மலும், ஏக்கமுமாக, தவித்து, புழுக்களாக நெளிந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் நினைக்கக்கூடும். விவசாயிகள் வெண்மையாக சட்டை அணிவதால், சில குடும்பக் காரியங்களைச் சீராகச் செய்வதால், இவர்கள் செல்வச்செழிப்பில் மிதக்கிறார்கள் என்று. ஆனால் அது உண்மை அல்ல. அவர்களுடைய குடும்ப பழக்க வழக்கங்களிலிருந்து பிறழ முடியாமல், வறுமைக்கிடையிலும் வாழ்வு என்று காட்டுகிறார்கள்.

குறிப்பாக, அன்மைக்காலமாக, பொருளாதார ரீதியாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விளைபொருள் உற்பத்தியின் செலவு அதிகரிப்பு, மின்சாரம் சீராக, முழுமையாக வினியோகிக்காமை, மோட்டார் பம்ப் செட், மின்சார சாதனங்களின் விலை உயர்வு, உரம், பூச்சி மருந்துகளின் உயர்வான விலை, விவசாயத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு, புயல், காற்று, மழை மற்றும் இயற்கையின் கொடுமை என்று இப்படிப் பல்வேறு தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும் இடையிலேயும் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இத்தனையையும் கடந்து வந்த பின்பு அவர்கள் விளைவிக்கும் விளைபொருளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை.



நாட்டின் மற்ற அனைத்துப் பொருட்களும் விற்கும்போது விற்பவர் சொல்லும் விலையைக் கொடுத்தே வாங்குபவர்கள் பெறுகிறார்கள். ஆனால் விவசாயி விளைவிக்கும் விளைபொருளுக்கு மட்டும் விவசாயி விலை நிர்ணயம் செய்ய முடியாது. வாங்குபவர்கள்தான் விலையை நிர்ணயிக்கிறார்கள். ஏன் இந்த அவல நிலை? இதை மாற்ற வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், இந்த நிலைக்கு ஒரு முடிவு கட்டவேண்டுமென்றால், அரசு கிராமந்தோறும் விளைபொருள் வழங்கும் சந்தைகளை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தினை விரிவுபடுத்த வேண்டும். பல மாவட்டங்களில் இன்னும் இந்தத் திட்டம் செயல்வடிவம் கூடப் பெறவில்லை. தொடக்க நிலையிலும் இல்லை. விவசாயிகளுக்கு அவரவர்கள் நிலைக்கேற்ப உரம், பூச்சி மருந்து, விதை, மின்சாரம் இலவசமாகத் தர வேண்டும்.

தற்போது, எப்போதாவது ஒரு முறை விதைகளை 2 கிலோ, 5 கிலோ என்றும் எண்ணெய் வித்துக்கள் 10 கிலோ, 20 கிலோ என்றும், பூச்சி மருந்துகளை 100 மில்லி, 50 மில்லி என்றும் மானியமாகவும் சலுகை விலையில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், அங்கே வழங்கப்படுகிற பூச்சி மருந்துகள் எல்லாம் பாரபட்சமாக, வேண்டியவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு, பெரும்பான்மை இனத்தவர்களாகிய விவசாயிகளுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்பதை இங்கே நான் குற்றச் சாட்டாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி வழங்கப்படுகின்ற இந்தப் பூச்சி மருந்துகள் முறையாக விவசாயிகளுக்குச் சென்று அடைகின்றதா என்று பார்த்தால் அதுகூட இல்லை. இது பெரும்பாலும் கடைகளில் விற்கப்படுகின்ற நிலையில்தான் உள்ளது.

உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்று சொல்வது வழக்கம். பல சூழ்நிலைகளில் பூச்சி, இயற்கையின் கொடுமைகளால் 1 ஏக்கர் நிலத்தில் 1 மூட்டை நெல்கூட அறுவடை செய்ய முடியாமல் போய்விடுவதை நம் எண்ணிப் பார்க்க வேண்டும். பல நேரங்களில் செய்த முதலீடு முழுமையாகவும், பாதியாகவும் பாழாகிப் போவதை நாம் பார்க்க முடிகிறது.

விவசாயிகளுக்கு அவர்கள் செய்யும் தொழிலின் சிறப்பைக் கருதி வள்ளுவனின் வார்த்தைகளை எண்ணிப் பார்த்து, ஆண்டொன்றுக்கு, ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் ரூ. 3,000 மானியமாகத் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள்தான் மனித சமுதாயத் திற்கு, நாட்டிற்கு உணவளிக்கிறார்கள் என்பதை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

அரசு ஏற்கெனவே செய்துள்ள கூலி நிர்ணயம் பல மாவட்டங்களில் அமுல்படுத்தப்படவில்லை. மாவட்டத்திற்கு மாவட்டம் விவசாய சாகுபடிகள், பயிர் வகைகள் மாறு பட்டுள்ளன. அந்த மாவட்டத்தில் பயிர் வேலைகளுக்கேற்ப நேரம், கடினம் இவற்றைக் கணக்கில் அடக்கி, கூலி நிர்ணயம் செய்து அவசர நிலை காலத்தில் நாட்டில் செய்ததைப் போல, கிராமங்களில் கண்டிப்பாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட. ஆட்சித் தலைவர்கள், வட்டாட்சித் தலைவர்கள் மூலம் நோட்டீஸ்கள் விநியோகம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு விவசாயத் தொழிலாளிக்கும் வேலை இல்லாத நாட்களில் நாளொன்றுக்கு நபருக்கு ஒரு ரூபாய் இனாமாகத் தரப்படும் என்பது ஆளுங்கட்சியின் தேர்தல் வாக்குறுதி. அது ஏன் அமுல்படுத்தப்படவில்லையென்று கேட்கிறேன். இதைக் கண்டிப்பாக, உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புடவை, வேட்டி வழங்கும் இட்டத்தை வரவேற்கிறேன். அவசர நிலை காலத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஏழைகளுக்கு வீடு தவறாமல் கொடுக்கப் பட்டது. இனி 6 மாதத்திற்கு ஒரு முறை கண்டிப்பாக, தவறாமல் தாராளமாக புடவை, வேட்டியினை வீடுதோறும் கொடுக்கும் இட்டத்தை அரசாங்கம் அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அவர்கள் வீடுகள் ஒளி இன்றி கிடக்கின்றன. அவசர நிலை காலத் ல் தொடங்கப்பட்ட வீட்டுக்கு ஒரு மின்சார விளக்குத் இட்டத்தை இந்த அரசு தொடர்ந்து நடத்துகிறது. ஆனால் வேகம் போதாது. ஒரு குறிப்பிட்ட கால நிர்ணயம் வைத்து மாநிலம் முழுதும் இருக்கும் விவசாயிகளின் குடிசை வீடுகளில் கண்டிப்பாக இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும் என அரசு அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன்.



விவசாயிகள் ஒட்டு மொத்தமாகக் கூக்குரலிட்டு, தங்களுடைய கோரிக்கைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற எண்ணத்திலே போர்க்கொடி உயர்த்திய போது, விவசாயத் தொழிலாளிகளின் இன்னல்களை நாங்கள் களையத் தயாராக இருக்கின்றோம். அவர்களுடைய பிரச்சனையிலே அரசு கண்ணும் கருத்துமாக அக்கறை கொண்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லி ஒரு உயர் மட்டக் குழுவைத் தோழர் முனு ஆதி தலைமையிலே அமைத்தீர்கள். அது என்ன ஆயிற்று? அதன் தலைவர் கொடி கட்டிப் பவனி வருவதைத்தான் நாம் பார்க்கிறோம்.

விவசாயக் குடி, குடி கெட்டு, தரம் தாழ்ந்து சென்று கொண்டிருக்கிறார்களே, அந்தப் பரிந்துரைகள் என்ன ஆயிற்று? அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு விட்டதா? அல்லது பரிசீலனையில் உள்ளதா? இல்லையா? கிடப்பில் போட்டு விட்டீர்களா என நான் அறிய விரும்புகிறேன்.

நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தலில் ஒட்டுமொத்தமாக விவசாயிகளும், சில விவசாயத் தொழிலாளர்களும் நமது கூட்டணிக்கு வாக்களிக்கவில்லையென்பதை நாம் பார்த்தோம். ஏன் இந்த நிலை? இந்த நிலையைக் களைய விவசாயிகள் நிரந்தரமாக இந்த அரசை ஆதரிக்கின்ற வகையில் அரசு செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் போராட்டங்கள் நியாயமோ, இல்லையோ, அவர்கள் கோரிக்கைகள் நியாயமானவை, தீர்க்கப்பட வேண்டியவை என்பதை அரசு உணர மறுக்கிறது என நான் குற்றம் சாட்டுகிறேன்.

கூட்டுறவுத் துறை, மின்சார வாரியம், நிலவள வங்கி, இவை விவசாயிகளை நாளுக்கு நாள் அழித்துக் கொண்டு இருக் கின்றன. இந்தத் துறைகள் அவர்கள் மீது போட்டிருக்கும் வட்டி அபராத வட்டி, கூட்டு வட்டி, காலதாமத வட்டி என்று பல கணக்குகளையும் போட்டு வசூலில் கெடுபிடி செய்து, ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வீட்டை விட்டே அவர்கள் ஓடிப்போகும் நிலையையும், விவசாயத் தொழிலை அறவே விட்டு விட்டு குடும்பத்தோடு பஞ்சப்பராரிகளாய் அலைந்து கொண் டிருப்பதை வேளாண்மைத் துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-50)

சுமார் 10 ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சனை தீர்க்கப் படாமல் உள்ளது. பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம் என்று நான் குறுக்கே நிற்பவனல்ல. திருப்பிச் செலுத்த வேண்டியது அவசியம். ஆனால் அரசு முதலிலே வசூல் செய்வதில் மெத்தனமாக இருந்ததால் விவசாயிகள் அவர்களுடைய இன்னல்கள், துன்பங்கள், கடன் தொல்லைகள் காரணமாக

இதிலே நிதானமாக இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை மிக மோசமாக இருக்கிறது. கூட்டுறவுச் சங்கத்தில் 2,000 ரூபாய் கடன் பெற்றிருந்தால் இப்போது அது 10,000 ரூபாயாக உயர்ந்திருக்கிறது, ஆகவே, 10,000 ரூபாய் கட்ட வேண்டும். அசல் 2,000 ரூபாய், வட்டி 8,000 ரூபாய் என்ற அளவுக்கு வந்திருக்கிறது.

அதைப் போன்று மின்சார கட்டணம் நிலுவை 1980 ஆம் ஆண்டு 2,000 ரூபாயாக இருந்தால் தற்போது 8,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை கட்ட வேண்டியிருக்கிறது. இதைப்போன்றுதான் மற்ற துறைகளிலும் இருக்கிறது. இந்தப் பிரச்சனையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அவர்களுக்கே உள்ள இரக்க குணத்தால் மற்ற துறை அமைச்சர்களோடு பேசி, இந்த வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும். இதனால் அரசுக்கு 100 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் தாங்கிக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்களுடைய நியாயங்களில், அவர்களின் தொழிலில் உள்ள நஷ்டங்களைக் கருதி, அவர்களின் துன்பங்களை, தொல்லைகளை, வேதனைகளை, விம்மல்களைக் கருதி, தொழிலின் சிறப்பைக் கருதி, நாட்டின் முதுகெலும்பு என நினைத்து முழு வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்து ஆண்டுகள் ஆகியிருந்தாலும் பரவாயில்லை, அசலை மட்டும் ஓராண்டுக்குள் மூன்று தவணைகளாகக் கட்டி முடித்து விடுங்கள் என்று அரசு இப்போது அறிவித்தால்கூட விவசாயிகள் கட்டத் தயாராக இருக்கிறார்கள். இதற்கு நானே முழு பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன். அப்படியே கட்டவில்லை என்றால் நீங்கள் இராஜிநாமா செய்யத் தயாரா என்று கேட்டால் அதற்கும் நான் தயார் என்று சொல்கிறேன். இதை ஒரு சமுதாயக் கடமையாகச் செய்யுங்கள். ஒரு பின் தங்கிய தொழிலுக்குச் செய்யும் உதவியாக நினைத்துக்கொள்ளுங்கள். ஊருக்கு உணவளிக்கும் உத்தம உழவர்களுக்குச் செய்யும் நன்றிக் கடனாக இதை அறிவியுங்கள்.

அரசு ஊழியர்களுக்கு, ஆலைத் தொழிலாளர்களுக்கு, சின்னஞ்சிறு ஊழியர்களுக்கு எத்தனையோ சலுகைகளை அளிக்கிறோம்; விதிமுறைகளைத் தளர்த்துகிறோம்; நேசக்கரம் நீட்டுகிறோம்; சட்டப் பாதுகாப்பு அளிக்கிறோம். விவசாயிகளுக்கு அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று நீங்கள் புள்ளிவிவரம் தரக்கூடும். நீங்கள் ஆயிரம் சலுகைகளை பட்டியல் போட்டு காட்ட முடியும். ஆனால் இந்த வட்டியை மட்டும் தள்ளுபடி செய்யாமல் நீங்கள் விவசாயிகளின் ஆதரவைப் பெறுவது கடினம். அவர்கள் நமக்கு நிரந்தர எதிரிகள் அல்ல. அவர்களும் கடந்த காலங்களில் நம்மை ஆதரித்தவர்கள்தான். அவர்கள் இந்த மனிதச் சமுதாயத்திற்கு மிகப்பெரிய உதவியை பணியை செய்துகொண்டிருக்கிறார்கள், நாட்டைக் காக்கு



பணியில் இராணுவம் ஈடுபடுவதைப்போல சமுதாயத்தின் உயிர்களை காக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளின் குழந்தைகளின படிப்புக்கு சிறப்புச் சலுகைகள் அளிக்க வேண்டும். 60 வயதுக்கு மேற்பட்டால் அவர்களுக்கு ஓய்வு ஊதியம் தரவேண்டும்.

விவசாயக் குடும்பங்களை அரசு தத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றை எல்லாம் மனதிலே வைத்து அரசாங்கம் திட்டமிட வேண்டும். தற்போதைய நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கியிருக்கிற நிதி போதாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளுக்காக காங்கிரஸ் பேரியக்கம் என்றென்றும் வாதாடும், போராடும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக செஞ்சித் தொகுதியும், செஞ்சித் தாலுகாவும் சிறுசிறு மலைக் குன்றுகள் உள்ளனவாகவும், காய்ந்த வறண்ட நிலங்களாகவும் இருப்பதால் அப்பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் தண்ணீர் அதிகம் தேவைப்படாத பயிர்களான மணிலா, கேழ்வரகு, சோளம், கம்பு, திணை, எள் மற்றும் பயிர் வகைகளை சாகுபடி செய்கிறார்கள். பழைய நடை முறையினையே இன்றளவும் கையாண்டு வருகிறார்கள். புதிய விஞ்ஞான முறை சாகுபடி முறைகள் அங்கே பின்பற்றப்பட வேண்டும். அவர்களுடைய மகசூல் பெருகிட அரசு ''இன்டகிரேட்டட் டிரை லேன்ட் ஃபார்மிங்'' ஒன்றை செஞ்சி பகுதியில் அமைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீப காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் நிலங்கள் தாறுமாறாக மணல் மேடுகளாய் காட்சியளித்துக்கொண்டு இருக்கின்ற காரணத்தால் அந்த நிலங்களை சீர்படுத்த, வெள்ள நிவாரண நிதியிலிருந்தோ அல்லது ஆர்.எல்.இ.ஜி.பி. மூலமாகவோ அரசு 20 இலட்சம் ரூபாயை செப்பனிடும் பணிக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் என்.ஓ.டி.பி. மூலமாக மாநில அரசுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி பெருகிட வேண்டும் என்ற எண்ணத்திலே அக்கறை காட்டி வருகின்றது.

மாநில அரசும் டைரக்டர் ஆஃப் ஆயில் சீட்ஸ் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி விநியோகம் செய்து, எண்ணெய் வித்து உற்பத்தியிலே அக்கறை காட்டி வருகின்றது. ஆனால் இது முறையாகச் செயல்படுகிறதா என்று பார்த்தால் இதிலே ஐயம் ஏற்படுகிறது. இந்த நிதி ஒதுக்கீடு மாவட்ட ஆட்சித்தலைவருக்குக்கூட அறிவிக்கப்படாமல் இத்திட்டம் இயங்கி வருவது எவ்வகையில் நியாயமாக இருக்கும் என நான் கேட்க

விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தெரியாமல் நிதி ஒதுக்கீடு செய்து, செலவிட்டு வருகின்றார்கள். இந்தக் குளறுபாடு மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இருபது அம்சத் திட்டத்திலே கூட இதற்கு அதிக அளவு முக்கியத்துவம் தரப்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். எண்ணெய் வித்துக்களுக்கு விலை நிர்ணயம் செய்வதில் பல முறைகேடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றை ஒரு முகப்படுத்தி, தமிழக அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, மணிலா அதிக அளவில் கொள்முதல் செய்யப்படுகின்ற செஞ்சிப் பகுதியில் 'டான்கோஃப்' மூலமாக ஒரு ஆயில் மில் நிறுவி கொள்முதல் செய்யப்படுகின்ற எண்ணெய் வித்துக்களை ஆலையில் இட்டு எண்ணெயாக்கி பதப்படுத்தும் ஒரு தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி நகரத்தைப் பொறுத்தவரையில் குடிநீர்ப்பிரச்சினை என்பது கடந்த 15 ஆண்டுக்காலமாக இருந்துவருகிற பிரச்சினையாகும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும் பின்னாலும் அரசு அக்கறை காட்டாமல் மெத்தனமாக இருந்து வருவது குறித்து அந்த மக்கள் நன்றாக அறிவார்கள். திரு. உகம்சந்த் அவர்கள் குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு திருக்கோயிலூர் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அனந்தபுரத்திற்கும், செஞ்சி தொகுதியிலுள்ள செஞ்சிநகரத்திற்கும், மற்றும் திண்டிவனத்திற்கும் தண்ணீர் வழங்குகின்ற வகையில் திட்டமிட்டிருப்பதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்களும் கூட இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். பல வருடங்களாகத் தீர்க்கப் பட முடியாத பிரச்சினையை இந்தத் திட்டத்தின் மூலமாகச் செயல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு நிதி சற்று அதிகமாகச் செலவிட்டாலும் கூட இந்தத் திட்டத்தின் மூலம் மக்கள் கண்டிப்பாகப் பயன் அடைவார்கள்; தமக்கும் மனநிறைவு ஏற்படும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. ஆகவே இந்த நிதியாண்டிலே இதற்காக நிதி ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டமானது விரைவிலே நடந்து முடிவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு மாற்றுக் கொண்டுவந்திருக்கிற வேளாண்மைத்துறை அமைச்சர் கோரிக்கையின் மீதும், குடிநீர் வழங்கும் மானியக் கோரிக்கை மீதும், அவற்றை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.



இங்கே எனக்கு முன்னதாக உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவரும் இன்று ஒரு குறளை நினைவூட்டினார்கள். இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு முன் வள்ளுவர் சொல்லிய அந்தக் குறளை இப்போது ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அதாவது இப்போது வேளாண் குடிமக்கள் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கிறபோது அந்த வள்ளுவர் இப்போது இருந்திருப்பாரேயானால் அந்தக் குறளிலே கூட மாற்றம் கண்டு இருப்பாரோ என்று எண்ணவேண்டிய நிலைமை இருக்கிறது. அதாவது ''தொழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் உழுதுண்டு பின்செல்பவர்'' என்று சொல்கிற அளவுக்கு இன்றைக்கு நாட்டிலே இருக்கிற ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த நிலைமைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். இப்படி வள்ளுவரே அந்தக் குறளை மாற்றி விடுவாரோ என்று எண்ணுகின்ற அளவுக்கு அந்த வேளாண்குடி மக்கள் பல்வேறு பகுதிகளிலே இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இருந்தாலும் வேளாண்மைத் துறையினைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிற பல்வேறு கோரிக்கைகளையும், பல்வேறு திட்டங்களையும் பார்க்கிற நேரத்தில் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திற்கு பல்வேறு நிலைகளில் உதவி செய்திருக்கிற இந்தத் துறையையும் குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாயை வாரி வழங்கி இருக்கிறார்கள். ஊக்க போனஸ் என்ற வகையில் அவ்வாறு வழங்கியிருப்பதை எண்ணிப்பார்க்கிற நேரத்தில், நெல் விவசாயம் செய்கிறவர்களை எந்த அளவுக்கு ஊக்கப்படுத்துகிற வகையில் இந்த அரசு நடந்துகொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் என்னுடைய தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற ஒரு குறைபாட்டைப் பார்க்கிறபோது ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் தஞ்சை மாவட்டத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமையும் என்கிற மகிழ்ச்சியான அறிவிப்பை இந்த மன்றத்தில் அறிவித்தபின், அந்தச் செய்தியை ஆவலோடு கேட்டபின் இந்த ஆண்டின் இந்த நிதிநிலை மானியத்தில் அது வரும் என்று நான் எதிர்பார்த்தேன். தேடித்தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை என்றாலும், மறுமுறையும் முயற்சி எடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேளாண்குடிமக்கள் பெருகி இருக்கின்ற தஞ்சை மாவட்டத்தில் எப்படியும் அந்த விவசாயக் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு விரைவிலே ஆவன செய்யவேண்டுமென்று நான் வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

பயிர்பாதுகாப்பு போன்ற பல்வேறு நிலைமைகளில் விவசாயிகளுக்கு உதவி செய்கிற இந்த அரசு, அந்த உதவி செய்கின்ற அந்தத் தொகையினைப் பொறுத்தவரையில் உரிய இலக்கினை எட்டமுடியாத அளவுக்கு அதாவது 1985—86 ஆம் ஆண்டில் 56.87 இலட்சம் ஹெக்டேர்களில் அந்தச் சலுகைகளை விவசாயிகள் பெறுவதற்கு மாறாக 42.92 இலட்சம் ஹெக்டேரில் மட்டுமே அந்தச் சலுகைகளின் பயனை விவசாயிகள் பெற்று இருக்கிறார்கள் என்று எண்ணுகிறபோது உள்ளபடியே நாம் எட்ட வேண்டிய அளவுக்கு அந்தப் பூச்சி மருந்து போன்றவற்றை அளிக்கின்ற திட்டங்கள் நிறைவேறவில்லை. அது நிறைவேறாதது மட்டுமல்லாமல் சில நேரங்களில் அதிலே ஏற்படுகிற குறைபாடுகளையும் அமைச்சரவர்கள் கண்டறியவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12-00)

அதுபோல் நெல்லுக்கு வருகின்ற நோயைத் தடுப்பதற்கு எடுக்கப்படுகிற நடவடிக்கைகளில் ஏறத்தாழ 32,000 ஏக்கருக்கு அது தடுக்கப்பட வேண்டும்; பூச்சிமருந்து போன்றவற்றை அளித்து பல்வேறு நிலைகளில் அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்கிற நிலைமையில் 18,700 ஏக்கரிலேமட்டும் அது நடைபெற்று இருக்கிறது. ஆனால் பூச்சிகள் பரவலாக ஆண்டுதோறும் வளர்ந்து இன்றைக்கு விவசாயிகளுக்கு பல்வேறு தொல்லைகளைத் தந்துகொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் 10 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்ததைவிட, இந்த விவசாயத் துறையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டவரையில் இன்றைக்குப் படிப்படியாக, கரும்பாக இருந்தாலும் நெல்லாக இருந்தாலும் இன்னபிற பயிர்களாக இருந்தாலும் உற்பத்தியிலே நல்ல உயர்வான இடத்திற்கு வந்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். 1960—61-ல் அன்றைக்கு உற்பத்தியினுடைய அளவு ஏறக்குறைய ஒரு ஹெக்டேருக்கு 2,250 கிலோ என்று சொன்னால் இன்றைக்கு ஏறக்குறைய 5 ஆயிரம் கிலோ ஒரு ஹெக்டேருக்கு என்ற அளவுக்கு அதிலே நாம் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறோம். அதேபோல தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 5 ஆயிரம் குழாய்க் கிணறுகளையும், 3 ஆயிரம் வடிமுனைக் குழாய்க்கிணறுகளையும், ஆழ்துளைக் கிணறுகள் என்ற வகையில் 2,500-ஐயும் அங்கே உருவாக்க வேண்டும் என்று திட்டமிட்டு அதிலே 5 ஆயிரத்திற்கு 3,722 குழாய்க் கிணறுகளையும், 3 ஆயிரம் வடிமுனைக் குழாய்க்கிணறுகளுக்கு மாறாக 2,621 வடிமுனைக் குழாய்களை மட்டுமே நிறைவேற்றி இருப்பதாக இந்தக் குறிப்பிலே காண்கிறோம். நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் இன்னும் இப்படிப்பட்ட காரியங்கள் அதிகமாக நடைபெற வேண்டும் என்று எதிர்பார்க்கிற நேரத்தில், போடப்படுகின்ற திட்டங்களை முழுவதும் நிறைவு செய்யாமல் அதைத் திரும்பப் பெறவேண்டிய நிலையில்,





அதற்கென்று ஒதுக்கப்படுகின்ற பணம், திருப்பிச் செலுத்துகின்ற நிலையில், பல இடங்களிலும் காரியங்கள் நடைபெறுவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து உன்னிப்பாக கவனித்து, அந்தத்திட்டங்களை முழுமையாக நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக காவிரி பாசன பகுதியில், தஞ்சை மாவட்டத்து விவசாய மக்களுக்கு பொருந்தக்கூடிய ஒரு திட்டத்தினை 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒரு குளம் ஒன்று 20 ஆயிரம் ரூபாய் என்ற திட்ட மதிப்பீட்டில் 100 குளங்களை உருவாக்கி குறுவை சாகுபடி நேரத்திலும் மழை நேரங்களிலும் அந்த விவசாயிகளுக்கு பயன் அளிக்கின்ற வகையில் நல்ல முறையில் தயாரித்து அதனை எடுத்துச் செய்வதற்குரிய வழிமுறைகளோடு அந்த திட்டத்தை தந்திருப்பது தஞ்சை மாவட்டத்து மக்களுக்கு மதிப்பு அளிக்கக்கூடிய ஒன்றாகும்.

இப்படிப்பட்ட காரியங்களை எண்ணிப் பார்க்கிறபோது, இந்த விவசாயத் துறையில் நல்ல பல திட்டங்கள் இருக்கின்றன என்றாலும், அந்த திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையில், அந்த திட்டங்கள் மக்களுக்கு உபயோகப்படுகின்ற வகையில் அது சென்றடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் ஆகும்.

1973—74இல் கரும்பினுடைய விலை 80, 90 என்று இருந்தது இன்றைக்கு ஏறத்தாழ 220 ரூ. என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றாலும், உற்சாகத்தோடு விவசாயிகள் உணவு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றாலும் அந்த விவசாயிகள் விளைவிக்கின்ற உணவுப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்படாத சூழ்நிலையில், விவசாயிகள் கடைசியில் தங்கள் கையிலே கணக்கு பார்க்கிற நேரத்தில் உரிய விலை கிடைக்காமல் கவலைப்பட வேண்டிய நிலை இருக்கிறது. விரைவாக அவர்களுக்கு இன்றைக்கு பல ஊக்கம் அளித்தாலும் கூட, வடக்கே இருக்கின்றவர்கள் எந்த அளவுக்கு கோதுமையை உற்பத்தி செய்கிறார்கள்; அந்த கோதுமை உற்பத்தி செலவு அதிகம் இல்லாத நிலையில், அந்த கோதுமைக்கு தரப்படுகின்ற அந்த தொகை கூட, மத்தியிலே இருக்கிற அரசுக்கு பலமுறை சுட்டிக்காட்டியும், கோதுமையை விட நெல்லுக்கு அதிக செலவு ஆகிறது, அதற்கு அதிகமாக விலையை போட்டுத் தரவேண்டும் என்று பலமுறை கேட்டும் கூட ஏதோ கொஞ்சம் தொகையை அவர்கள் பிச்சை போடுவது போல ஒரு குவிண்டாலுக்கு 5 ரூ. என்ற அளவில் கொடுத்துக் கொண்டு வருகிறார்களே தவிர, கோதுமைக்கு ஏற்றுகிற அளவுக்கு நெல்லுக்கு ஏற்றவில்லை என்பதைக் குறித்து விவசாய பெருங்குடி மக்கள் வருத்தப் படுகிறார்கள் என்பதைத்தான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு மட்டும் அல்ல. இந்த அரசு விவசாயிகளுக்கு, கடந்த 5, 6 ஆண்டுகளாகவே, அவர்கள் உபயோகிக்கின்ற உரம், பூச்சி மருந்துபோன்றவைகளின் விலைகளை ஒரேசீராகவைத்திருப்பதன் மூலமாக ஓரளவுக்கு விவசாயிகள் மகிழ்ச்சிஅடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதார வளத்தை பெருக்குகின்ற அளவுக்கு அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள். வளர்ந்திருக்கிறார்கள். ஆனால் எனக்கு முன்னாலே பேசியவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, விவசாயிகள் எந்த அளவுக்கு வளர்ந்திருந் தாலும், அவர்கள் வாங்கியிருக்கிற கடனைக் கூட திருப்பிச் செலுத்தும் அளவுக்கு அவர்களுடைய நிலைமை இல்லை—பெரும் பாலோருக்கு.

இதனை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு பல்வேறு நிலைகளிலே இருப்பவர்களுக்கெல்லாம் பல்வேறு உதவிகளை அளித்துக் கொண்டிருக்கிற இந்த அரசு, ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் போன்ற பலருக்கும் பல்வேறு சலுகைகளை மகிழ்ச்சியோடு அளித்துக் கொண்டிருக்கிற இந்த அரசு, இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக உழைத்துக் கொண்டிருக்கிற, நாட்டினுடைய உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு, இந்த மாநிலத்தை தன்னிறைவு மாநிலமாக ஆக்கத் தக்க அளவுக்கு உழைக்கின்ற விவசாய பெருங்குடி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற சில இடர்பாடுகளை களைய, அவர்கள் கொண்டிருக்கிற கடனிலேயிருந்து நிவாரணம் அளித்து—இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கோடிட்டுக் காட்டியதைப் போல—அதிலே 12 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை என்று போட்டிருக்கிறார்கள். அந்தப் பற்றாக்குறையை மேற்கொண்டும் 50 கோடி அல்லது 100 கோடி உயர்த்தும் அளவுக்கு கொண்டு வந்தாலும் கூட, அதை விவசாயிகளுக்காக ஒதுக்கியிருப்பார்களானால் அதற்கு தமிழகத்தில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் எந்த அளவிற்கு தங்களுக்கு இருக்கிற தொல்லைகளிலிருந்து விடுபடு வதற்கு வசதியாக இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அதேநேரத்தில் இன்றைக்கு குடிதண்ணீர் போன்ற பிரச்னைகளில் பல்வேறு பணிகளைச் செய்திருக் கிறோம். கிராமப்புறங்களில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கொண்ட திட்டங்கள் மூலமாக, கிராமப் புறங்களை நகர்ப்புறங்களைப் போல உருவாக்கவேண்டுமென்ற நல்ல உள்ளத்தோடு அமைத்திருக்கும் திட்டங்கள் வாயிலாக கிராமப்புறங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தந்து கொண்டிருக்கிறோம். அப்படி செய்கிற நேரத்தில் இந்த அரசினுடைய நல்ல திட்டங்கள் மக்களுக்கு சென்றடைவதில் சில இடங்களில் சிறிது காலதாமதம் ஆகலாம். குடிதண்ணீருக்காக குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக குழாய்களைப் போடுகிறோம். அதிலே ஏற்படுகிற செலவு அடிப்படையில் பார்க்கிறபோது 300 அடிகளுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக பைப் போட வேண்டுமென்றால் ஏறத்தாழ



19,500 ரூபாய் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார்கள். அதேபோல அக்ரிகல்சுரல் என்ஜினியரிங் கார்ப்பரேஷன் மூலமாக அந்தப் பணியைச் செய்வதற்கு அவர்கள் 9,900 ரூபாய் மட்டுமே கேட்கிறார்கள். இந்த இரண்டிற்கும் இடையே நிரம்ப வேறுபாடு இருக்கிறது. இந்த வேறுபாடுகளைப் போக்கவேண்டும். தனியார் ட்ரில் வைத்திருப்பவர்களிடம் தனியாக டெண்டர் மூலமாக கேட்டு அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டால் பணிகளின் எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்க முடியும்.

குறிப்பாக பைப்புகளைப் போடுகிற இடங்களில் 6 இன்ச் பைப்புகளை இறக்கி குடிதண்ணீருக்கு வகை செய்கிறார்கள். இதனை இரண்டு பகுதியாக 4 இஞ்ச் பைப்புகளை இறக்கி அதன் மூலமாக குடிதண்ணீர் கொடுப்பதற்கு நாம் திட்டம் தீட்டினால் ஏறத்தாழ 25சதவீதத்திலிருந்து 30சதவீதம் வரையில் அதிகமாக தண்ணீர் கொடுக்கமுடியும். அப்படிப்பட்ட நிலையை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரிநதி நீர்ப் பிரச்னையைப்பொறுத்தவரையில் பல்வேறு நேரங்களில் நாம் பல்வேறு நடவடிக்கைகளை கர்நாடக அரசோடும் இந்திய பிரதமர் அவர்களோடும் தொடர்பு கொண்டு இந்த ஆண்டு திருச்சி, தஞ்சை மாவட்ட மக்கள் பயனடைய செய்திருக்கிறோம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், துறை அதிகாரிகளும் சென்று திருச்சி, தஞ்சை பகுதிகளை காப்பாற்றித் தந்திருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன். ஆனால் இந்த ஆண்டு காப்பாற்றி இருக்கிறார்கள் என்றாலும் வருகிற ஆண்டுகளில் நிலைமை எப்படியிருக்கும் என்று தஞ்சை, திருச்சி பகுதிகளில் இருக்கிற மக்கள் அச்சத்துடன் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு வழிவகை காண வேண்டும். பல்வேறு கட்சிகளில் இருக்கிற நாம் காவிரி நதிநீர்ப் பிரச்னையில் நமக்குள்ளே யாருடைய காலத்தில் திட்டம் தீட்டப் பட்டது? யாருடைய காலத்தில் சுப்ரீம் கோர்ட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது? இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதையெல்லாம் விட்டுவிட்டு, ஒருமித்த கருத்தோடு, இந்த மாநிலத்தின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு காவிரி நதிநீர் வர வேண்டுமென்ற நிலையில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

''பட்ட காலில் படும் கெட்ட குடியே கெடும்'' என்று சொல்வதைப் போல தஞ்சை மாவட்டத்தில் வறட்சி வந்தாலும், அதைத் தொடர்ந்து இரண்டு மூன்று மாதங்களில் வெள்ளப் பெருக்கு வந்துவிடும். இரண்டிற்கும் இந்த அரசு நிறைய உதவி களைச் செய்வதும் ஆண்டுதோறும் வழக்கமாக இருக்கிற ஒன்றாகும். அதற்கு நிரந்தரமான வழிவகைகளைக் கண்டு தஞ்சை மாவட்ட நிலைமைகளை போக்குவதற்கு நடவடிக்கை

எடுக்க வேண்டும். நேற்றையதினம் கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் இது சம்பந்தமாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறோம். வெள்ளத் தடுப்பிற்காகவும், வறட்சிகளைத் தாங்குகிற அளவிற்கும் பெரிய திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதையும் மனதிலே கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நல்ல திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் (12-10)

அதைவிட மிக முக்கியமான ஒன்று விவசாயிகளுக்கு மின் இணைப்பு தருகின்ற பிரச்சனை இன்றைக்கு எழுந்திருக்கிறது. விவசாயிகள் கிணறுகளை வெட்டிவிட்டு. அல்லது ஆழ் குழாய் களை அமைத்துவிட்டு, 5 வருடம் 4 வருடம் என்று மின் இணைப்பு கிடைக்காத நிலையில் இருந்து கொண்டு இருக் கிறார்கள். வறட்சி ஏற்படுகிறபோது, தோண்டியிருக்கிற கிணறு களிலே இருந்து தண்ணீரை இறைத்து விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறபோது மின்இணைப்பு வேண்டும் என்று அவர்கள் அதிகாரிகளைக் கேட்கிறபோது அந்த அதிகாரிகள் நீங்கள் அந்த இடத்திலே மோட்டார் செட்டுகளை கட்டியிருக் கிறீர்களா, மோட்டாரை வாங்கி வைத்து இருநகிறீர்களா ? என்ற கேள்வியைக் கேட்கிறார்கள். பிறகு மின்சாரம் கிடைக் கின்ற வாய்ப்பு இருக்கிறது என்ற மகிழ்ச்சியோடு அவர்கள் செட்டைக் கட்டி மோட்டாரையும் வாங்கி வைத்து விட்ட பின்னாலே அந்த அலுவலகத்திற்கு சென்று சென்னால், நீங்கள் இந்த ஆண்டு மின்இணைப்பு பெறுவது கஷ்டம், உங்களுக்கு முன்னாலே மின்சாரஇணைப்பு கேட்டாவர்களே நிறைய பேர்கள் இருக்கிறார்கள். எனவே உங்களுக்க 3 ஆண்டுக் காலத்திற்கு ஆகும் என்று சொல்கிறார்கள். எனவே இப்படிப் பட்ட நிலைமைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். ஏற்கனவே வாங்கிய கடனுக்கு வட்டிக்கு மேலே வட்டியாக அந்த விவசாயி கட்ட முடியாத நிலமையில், இந்த மோட்டாரை வாங்குவதற்கு கடனை வாங்கி, பம்பு செட்டைக் கட்டுவதற்கு கடனை வாங்கி, ஆழ் குழாய்க் கிணற்றுக்கு கடனை வாங்கி, வட்டி ஒரு பக்கம் ஏறுகிற நிலமையில், அவைகள் எல்லாம் விவசாயிகளுக்கு உபயோகமற்ற நிலமையில் இப்பதை உணர்ந்து, அந்த நிலமையைப் போக்கதக்க அளவிற்கு நாம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் தான் விவசாயிகளுக்கும் நமக்கும் இடையிலே இருக்கிற அந்த உறவு வலுப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



10 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே இருந்ததைவிட இந்தத் துறையின் மூலமாக பல்வேறு வகையில் விவசாயிகளுக்குப் பயன் கிடைத்திருக்கிறது. புயல் காலங்களில், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு மண் மேடிட்டு இருந்தாலும், பயிர்கள் பூச்சிகளால் தாக்கப்பட்டு இருந்தாலும், அவர்களுக்கு உதவி செய்வதோடு, 50 விழுக்காடு மானிய விலையில் விதைகள், உரங்கள் போன்ற வற்றை அளிக்கக்கூடிய வகையில் பல்வேறு சலுகைகளை இன்றைக்கு விவசாயிகளுக்கு நாம் செய்து கொண்டு இருக்கி றோம். இப்படிப்பட்ட சலுகைகளை அடுக்கடுக்காக செய்தாலும் அந்தக் கடன்களிலேயிருந்து அவர்கள் மீளுவது என்பது முடியாத ஒன்றாகத்தான் இருக்கிறது. அதனாலே எல்லோரும் சொல்வதைப்போல, அவர்களுக்குஏதாவது ஒரு மாற்றுமுறையை நீண்டநெடும் காலமாக, எப்போது இந்தக்கடன் தள்ளுபடி யாகும், தள்ளுபடியாகும் என்ற உணர்விலே இருக்கிற அவர் களுக்கு, இந்தக் கடன் தள்ளுபடி ஆகாது என்கிற ஒரு நிலையை யாவது அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, சின்னஞ் சிறிய கடன் களைத் தள்ளி, பெரிய விவசாயிகள் வாங்கியிருக்கிற தொகை யிலே மூன்று மடங்குக்கு அதிகமாக உயர்ந்திருக்கிற வட்டியைத் தள்ளி, அந்த விவசாயிகளுடைய குறையைப் போக்கினால்தான் இன்றைக்கு நாட்டிலே உற்பத்தியை இன்னும் நல்லமுறையிலே அவர்கள் உருவாக்குவதற்கு நாம் வழிவகை செய்ததாக இருக்கும். அப்படிப்பட்ட காரியத்திற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக தஞ்சை மாவட்டத்திற்கு தர இருக்கிற அந்த விவசாயக் கல்லூரியை இந்த ஆண்டே துவங்குவதற்கு திட்டம் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கையில், டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். விவசாயத் துறைக்கு 99 கோடி ரூபாய் தான் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டு இருக்கிறது. கடந்த ஆண்டு [illegible] கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. பணவீக்கம் மிகுந்திருக்கிற நிலையில் இந்த ஒதுக்கீடு அதிகமான ஒரு ஒதுக்கீடு அல்ல என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பட்ஜெட்டியிலே இது 3 சதவீதம் அளவிற்குத்தான் ஒதுக்கப் பட்டு இருக்கிறது. தமிழ்நாட்டிலே 70 சதவீத மக்கள் விவசாயத்தை நம்பி, விவசாயப் பணியிலே ஈடுபட்டு வருகிற ஒரு நிலைமையில், இந்த ஒதுக்கீடு குறைந்தபட்சம் 10 சதவீத யாக மாற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் நீர்ப்பாசனம் இல்லாமல் விவசாயம் செய்ய முடியாது. மழை இல்லாமல் நீர்ப்பாசன திட்டத்தை உருவாக்க முடியாது. விமானம் மூலமாக செயற்கை மழை மூலமாக தண்ணீரைக் கொண்டு வர முடியும் என்று கருதினாலும் நீர்ப்பாசனத் திட்டங்களைச் சிறப்பான முறையில் நிறைவேற்றினால் தான் அந்த நீரைத்தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும். அரசு அப்படிப்பட்ட நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறதா என்பதை முதலில் பார்க்கவேண்டும். வேறு துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் அந்தப் பணியிலே இருந்து வருகிறார்கள். வேளாண்மைத்துறைஅமைச்சர் அவர்கள், விவசாயத்தைப் பெருக்க வேண்டும் என்று சொன்னால் பாசனத்துறையையும் அவர் வைத்திருக்க வேண்டும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் மிகவும் சுறுசுறுப்பானவர், வேகமானவர், எங்களுடைய கலைஞரைத் தாக்குவதிலே இன்னும் அதிகமான சுறுசுறுப்பு உள்ளவர். அவரே இந்தத் துறையைச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, சுறுசுறுப்பான தலைவரை சுறுசுறுப்பானவர்கள்தான் தாக்க முடியும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஆ. நடராசன : துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் காலையிலே கூட வெளியே போகக்கூடிய 10 அமைச்சர்களிலே இவரும் இருப்பாரா என்று கூட நான் யோசித்த போது நிச்சயமாக....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியத்திலே பேசுங்கள். அமைச்சரை நீக்குவது, அமைச்சரை போடுவது, இதெல்லாம் முதலமைச்சரின் அதிகாரத்திற்கு உட்பட்டது. நீங்கள் அதைப்பற்றியெல்லாம் பேசாதீர்கள். மானியத்தைப் பற்றிப் பேசுங்கள் சார். தேவையில்லாததையெல்லாம் பேசாதீர்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினத்திலிருந்து சூசகமாக, கொஞ்சம் நளினமாக இந்தக் கருத்துக்கள பேசப்படுகின்றன. எந்த முடிவு எடுத்தாலும் அது கட்சியின் சார்பாக எடுக்கப்பட கூடிய முடிவு. அதிலே உங்களுக்கு எந்த அரசியல் ஆதாயமும் இருக்காது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : துணைத் தலைவர் அவர்களே ஆனால் நான் எதிர்பார்ப்பது நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரே தொடர்ந்து இருக்க வேண்டும் என்கிற ஆசையில் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம்——



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், நீங்கள் டிமாண்டிலே பேசுங்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, இப்படி பேசுவதாலே ஆபத்து வந்து விடக்கூடாது.

திரு. ஆ. நடராசன் ; துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக ஆபத்து ஏற்படாது நீங்கள் தொடர்ந்து எங்களைக் கடுமையாக தாக்கிக் கொண்டு இருக்கிற காரணத்தால் உங்களுக்கு ஆசனம் உறுதியாக இருக்கும் என்று நம்புகிறேன். கடந்த ஆண்டு ஆடிட்டர் ஜெனரலுடைய....

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசி வைத்திருப்பது போன்ற ஒரு தவறான கருத்து வந்துவிடக் கூடாது.

திரு. ஆ. நடராசன் ; துணைத் தலைவர் அவர்களே ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையில் 1983–ல் பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை செலவு செய்யாத நிலைமை இருந்து வருகிற நிலைமையை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பெரியாறு திட்டத்திற்கு ஒதுக்கிய தொகை 1 கோடியே 84 இலட்சம். அதில் 81 சதம் சரண்டர் ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். குடநாடு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு 13 லட்சத்து 5 ஆயிரம் அதிலே சரண்டர் செய்யப்பட்ட தொகை 94 சதமாகும் என்பது உள்ளபடியே வேதனைக்குரிய செய்தியாகும். வைகையை நவீனமாக்கும் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 74 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் அதிலே சரண்டர் செய்யப்பட்டது 98 சதமாகும். பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு 4 கோடியே 69 இலட்சம் ஆனால் 94 சதம் சரண்டர் ஆக்கப்பட்டிருக்கிறது. வரதா நதி சோத்துப்பாறை திட்டத்திற்கு 30 இலட்சத்து 16 ஆயிரம ஒதுக்கப்பட்டு 75 சதம் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. பனை மடை திட்டத்திற்கு 33 இலட்சத்து 46 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலே 76 சதவீதம் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் எப்படி பாசன வசதி கிடைக்க முடியும். உள்ளபடியே இந்த அரசாங்கம் வேளாண்மைத் துறையின் மூலம் பாசனத்திட்டங்களை விரிவு படுத்துவதற்கு நல்ல நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம் கள்ளிக்குளம் மற்றும் ஓமநல்லூர் ஆகிய இடங்களில் விதைப்பண்ணை அமைக்க 34 இலட்சத்து 84 ஆயிரம் ஒதுக்கி பிறகு நில ஆர்ஜிதம் செய்யாத காரணத்தினால் அந்தப்பணி நிறைவேறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எண்ணெய் வித்து கூடங்கள் 20 இடங்களிலே கட்டுவதற்கு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதற்கு அரசு அனுமதி கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் மொத்த

தொகையும் சரண்டர் ஆக்கப்பட்டிருக்கிறது. வறட்சி, வெள்ளம் இவைகளால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் உதவுங்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு 122 கோடிக்கு இழப்பு என்கிறார். வரிகளை தள்ளுபடி செய்யுங்கள் என்று சொன்னால், அதைச் செய்யவேண்டியது வருவாய்த்துறை அமைச்சர் என்கிற நிலைமை இருந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் நெல் ஏகபோக கொள்முதல் என்கிற பெயரால் தஞ்சை மாவட்ட விவசாயிகள் நெல்லை தனியாரிடம் தம் விருப்பப்படி விற்கமுடியாமல் அரசிடம் விற்கிறார்கள், ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 35 கூடுதலாக விலை கொடுக்கப்படுகிறது. அந்த 35 ரூபாய்க்கு உரம் மட்டும்தான் கொடுக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 2 டன் உற்பத்தி என்று அரசு கூறுகிறது. குவிண்டாலுக்கு 35 ரூபாய் வீதம் 20 குவிண்டாலுக்கு 700 ரூபாய்க்கு உரம் கொடுக்கிறார்கள். அதிகம் ஒரு ஏக்கருக்கு 305 லிருந்து 400 ரூபாய் வரையில்தான் அந்த உரம் தேவையாக இருக்கும். மீதி 300 ரூபாய்க்கு இருக்கின்ற உரத்தைப் பயப்படுத்தாத, அதுவும் குறிப்பிட்ட காலத்திலே கொடுக்கான் காரணத்தால் விவசாயிகள் தங்களுடைய விவசாயத்தைச் சிறதபாக செய்யமுடியாத நிலை இருக்கிறது. காலத்தோடு பலன் கிடைப்பதற்கு காரியங்களை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.20)

இன்னொரு பிரச்சினை, குடிநீரைப் பொறுத்தவரையில், அல்லது விவசாயிகளுக்கு நீர் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் மழை வேண்டும். மழை பொழிவதற்கு இன்றையதினம் வாய்ப்பு இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. பல காடுகள் காணாமல் போய் விட்டன. அந்தக் காடுகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். இப்போது ஒரு கோடி நாற்றுகளை நாங்கள் நடுகிறோம் என்று அறிவித்து இருக்கிறார்கள். ஒரு கோடி நாற்றை இந்த ஆண்டு நட்டால் அது அடுத்த ஆண்டு காணாமல் போய்விடுகிற நிலைமையை நாம் பார்க்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூட ஒரு நேரத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். போன ஆண்டு எங்கே நாம் கன்றுகளை வைத்தோமோ அதே இடத்தில் தான் இந்த ஆண்டும் கன்றுகளை நடக்கூடிய சூழ்நிலை இருக்கிறதே தவிர புதிதாக எந்த மரமும் வளர்ந்ததாகத் தெரியவில்லை. 100 ஆண்டுகள் 50 ஆண்டுகளாக வளர்ந்த மரங்கள் எல்லாம் மோசடியாக இன்றையதினம் வெட்டப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. தயவுசெய்து நான் சுட்டிக்காட்ட விரும்புவது இவைகளை எல்லாம் இனிமேல் வெட்டாமல் இருப்பதற்கு அதை தடுப்பதற்கு நீங்கள் தேவையான நடவடிக்கையை அருள்கூர்ந்து எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) நான் பேச ஆரம்பித்து 8 நிமிடங்கள் தான் ஆகிறது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடங்கள் தான். 15 உறுப்பினர்கள் பேச வேண்டும். ஆகவே 2 நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள். இருக்கிற நேரத்தைத்தான் பகிர்ந்து கொடுக்க முடியும்.

திரு. ஆ. நடராசன் : பிரதான எதிர்க்கட்சி நாங்கள் தான். ஆகவே எங்களுக்குப் பேச அனுமதியளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பிரதான எதிர்க்கட்சி நீங்கள் அல்ல. தவறான தகவலைக் கொடுக்கவேண்டாம்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் விவசாய உயர்மட்டக் குழுவைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பரிந்துரைகளின் படி மின்சாரக் கட்டண பாக்கிக்கு வட்டி வசூல் செய்யக்கூடாது என்ற தீர்மானம் செய்யப்பட்டும் வட்டியை இன்றையதினம் வசூல் செய்கின்ற நிலைமை இருக்கிறது. அதை உடனடியாக கவனித்து விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு வருடத்தில் ஒரு மணி நேரம் கூட ஓடாத மோட்டார்களுக்கு எல்லாம் ஒரு குதிரை ஓட்டத்திற்கு 75 ரூபாய் என்று கணக்கு எடுத்து வசூல் செய்கிற நிலைமையை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆழ்குழாய் கிணறு போட இயந்திரக் கருவியை அரசு வாடகைக்கு விடுகிறது. அது விவசாயப் பொறியியல்துறைகட்டுப்பாட்டில் இருக்கிறது. இதற்கு முன்பு, ஒரு நாள் வாடகை 25 ரூபாயாக இருந்தது. இப்போது அது 250 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதை மாற்ற வேண்டும், அந்த ரேட்டை குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றக்கூடிய பண்ணைத் தொழிலாளர்கள் 10 ஆண்டுகளாக பணிபுரிந்தும் அந்தத் தொழிலாளர்கள் இன்னும் நிரந்தரம் ஆக்கப்படவில்லை. அவர்கள் நிரந்தரம் ஆக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு வாரத்திற்கு 5 நாள் பணி கொடுக்கவேண்டும். 2 நாள் விடுப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசு 480 நாட்கள் வேலை செய்கிற தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில் தமிழக அரசின் சார்பில் இருக்கக்கூடிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் கிணறுகளை வெட்டுவதற்கு அரசு கடன் கொடுப்பது இல்லை. ஆனால் விவசாயிகளுடைய கிணறுகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கு, களத்தில் வீடுகளைக் கட்டுவதற்கு, பூமியை மட்டப்படுத்துவதற்கு, தொட்டி கட்டுவதற்கு கடன் தருகிறார்கள். கிணற்றில் தண்ணீர் இல்லாதபோது அங்கே இந்த காரியங்கள் எல்லாம் எப்படி நடைபெறும். அதற்கு எல்லாம் கடன் கொடுப்பது பயன்படுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சியால் தொழிலாளர்கள் வேலை இழந்து உள்ள நிலையில் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கிடைப்பதற்கு வறட்சி நிவாரணப் பணிகளின் மூலம் எங்கள் தொகுதியில் பல்வேறு பகுதிகள் வறட்சிப் பகுதியாக இருப்பதால் அவைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஜப்தி போன்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரூர் தொகுதியில் குறிச்சி பேரூராட்சிப் பகுதியில் சிறுவாணி திட்டத்தில் ஈச்சநாரிப் பகுதி, அம்மன்புதூர், அண்ணாபுரம், அண்ணா நகர், ஆத்துப்பாலம், கலைஞர் நகர் ஆகிய பகுதிகள் விடுப்பட்டு போயிருக்கின்றன. இவைகள் முக்கியமான பகுதியாகவும், ஏழைகள் ஏராளமாக வாழக்கூடிய பகுதியாகவும் இருப்பதால் இந்தப் பகுதிகளுக்கு சிறுவாணிக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குனியமுத்தூர் பேரூராட்சியில், அண்ணா நகர், ஞானபுரம், குனியமுத்தூர் 9, 10 வார்டுப் பகுதிகள் சிறுவாணித் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. அந்தப் பகுதிகள் எல்லாம் சேர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மதுக்கரை நகரியக்குழு பகுதி சிறுவாணித் திட்டத்தில் சேர்க்கப்படாததால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு, குடிநீருக்காக அல்லல்படுகின்ற நிலையிருக்கிறது. வால்பாறை நகரியக்குழுவில் இருந்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ரூ. 3 இலட்சத்தை கடனாக வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன் தொகையில் சிறுவாணித் திட்டத்தில் மதுக்கரை நகரியக்குழு பகுதியையும் சேர்த்து, உடனடியாக குடிநீர் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவாணித் திட்டத்தின் மூலம் குடிநீர் பல பகுதிகளுக்கு இன்னும் தரப்படவில்லை. குறிச்சி ஹவுசிங் யூனிட்டில் ஃபேஸ் 1, 2 பகுதிகளில் ரூ. 23லட்சம் குடிநீர் குழாய் இணைப்புக்கு வசூல் செய்யப்படுகிறதே தவிர, அந்தப் பகுதியில் குடிநீர் தரப்படவில்லை. முறையாக வழங்க வேண்டுகிறேன். பூசாரிப் பாளையத்தில் குடிநீர்க் குழாய்கள் அமைத்தும், கடந்த ஆறு



மாத காலமாக அங்கே நீர் விடப்படவில்லை. நான்கு மாதங்களுக்கு முன்னால், 61 போர்களை போட அனுமதித்தும், இதுவரை அரசாங்கம் அதற்கான நிதியை ஒதுக்கவில்லை. குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டால், ஸ்பெஷல் செல் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். கடந்த கலெக்டர் மாநாட்டில்கூட ஸ்பெஷல் செல் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, அக்டோபர் மாதத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இதுவரையில், அதைப் பற்றி தெரிவிக்கப்படாத காரணத்தால், அங்கே பல பகுதிகளில் வேலைகள் ஸ்தம்பித்து இருக்கின்றன. அவைகளை உடனடியாக வினியோகிக்க தகுந்த வகையில், நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழாய்க் கிணறுகள் அமைப்பதில் கிராமங்களை விட்டு 1, 1½ கிலோ மீட்டர் தூரத்தில் போடுகிறார்கள். அவைகள் பழுதடைந்துவிட்டால் உடனடியாக சீர் செய்யப்படுவதில்லை. எனவே, அதை உடனடியாக சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுக்கரை ஒன்றியத்திலுள்ள செட்டிபாளையம், ஒத்தக்கால் மண்டபம், திருமலையம்பாளையம், எட்டிமடை, வெள்ளலூர் போன்ற நகரப் பஞ்சாயத்துக்களில் குடிநீர் பஞ்சம் ஏராளமாக இருக்கிறது. தக்க நடவடிக்கைகளை எடுத்து, உடனடியாக குழாய்க் கிணறுகளைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னை மரங்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசாங்கம், தென்னை மேம்பாட்டிற்கான திட்டத்திற்காக ஒரு வாரியம் அமைத்திருக்கிறது. அதுபோல் கேரள அரசாங்கம் ஒரு வாரியம் அமைத்திருக்கிறது. அதேபோன்று, தமிழகத்திலும் தென்னை மேம்பாட்டிற்காக ஒரு வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றபோது செங்குட்டுப் பாளையத்தில், 72 மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. அதன் பேரில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குழாய்க் கிணறுக் கழகம் 1982-ல் ஆரம்பிக்கப்பட்டு, 41.51 இலட்சம் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அதுபோலவே தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் செலுத்திய மூலதனம் ரூ. 25 இலட்சம். அதில் இறுதியில் ரூ. 65 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளையெல்லாம் களைய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்காக நல்ல காரியங்களைச் செய்கின்ற வகையிலே பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

128-47--13

*திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக இன்றையதினம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மக்கள் தொகையில் நான்கில் மூன்று பங்கு பேருக்கு வாழ்வு அளிக்கின்ற திட்டமாக வேளாண்மைத் துறை இருக்கிறது என்று இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதேபோல் தமிழகத்தினுடைய மொத்த எண்ணிக்கையில் 56 விழுக்காடுகள், இன்றைய தினம் வேளாண்மையில் ஈடுபட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். மாநிலத்தின் மொத்த வருவாயில் 37 விழுக்காடுகளை ஈட்டித் தருகின்ற துறை வேளாண்மைத் துறை என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வேளாண்மைத் துறைக்கு இன்னும் அரசாங்கத்தில் நிறைய சலுகைகள் செய்யப்பட்டிருப்பதைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் பல சலுகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்ற அத்தனை பேர்களில் நான்கில் மூன்று பங்கு பேர் விவசாயக் குடும்பத்திலிருந்து வந்தவர்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அந்த அடிப்படையில் இன்றைய தினம் குறிப்பாக கோவை மாவட்டமும் பெரியார் மாவட்டமும் இரண்டு மாவட்டங்களும் வேளாண்மைத் துறையினை நம்பி இருக்கக்கூடிய மாவட்டங்கள் ஆக இருப்பதன் காரணமாக பவானிசாகரிலே தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருப்பதால் கோவை மாவட்டம் காய்ந்து வறண்டு போய் விவசாயம் செய்யமுடியாமல் விவசாயிகள் அதைவிட்டுவிட்டு வேறு தொழில்களுக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப்போன்றே தஞ்சாவூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டாலும்—மாண்புமிகு கொறடா திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல—காவிரி வறண்டு இருக்கிறது, தஞ்சாவூர் மாவட்டத்திலே விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளையெல்லாம் போக்க வேண்டுமானால் மேற்கு நோக்கி கேரளாவிலே பாய்கின்ற அந்த ஆறுகளையெல்லாம் கிழக்கே திருப்பி விட்டு பாண்டியாறு புன்னம்புழா போன்ற திட்டங்களைப் போட்டு அவைகளை நிறைவேற்ற வேண்டும். காவிரி வறண்டு விட்டது என்றால் கர்நாடக அரசை நாம் கையேந்துகிற நிலைமை மாறுகிற முறையிலே அந்தத் திட்டங்களை எத்தனை கோடி ரூபாய் செலவானாலும் உடனடியாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சி





உறுப்பினர் திரு. இளங்கோவன் இளமையோடு இருக்கிற சத்தியமங்கலம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினராக இருக்கிற அவர் மத்திய அரசை இதில் வலியுறுத்துவதில் தலைமை தாங்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் கொடுத்துவருகிறது நம்முடைய புரட்சித் தலைவர் அரசு. ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து விவசாயம் செய்ய விரும்புகிறார்கள் விவசாயிகள். அந்தக் கிணறுகள் வெட்டுவதற்கு அதிகமாகச் செலவாகிற நிலைமை இருக்கிறது. ஒன்றிரண்டு நாட்களிலே ஆழ்குழாய் கிணறுகளை அமைத்துவிட்டு மின் இணைப்பு வேண்டுமென்று அவர்கள் கேட்கிறபோது சீனியாரிட்டி அடிப்படையிலே கொடுக்கிறார்கள், அவர்களுக்கு சீனியாரிட்டி முறையில் கொடுக்கும் முறை தவிர்க்கப்படவேண்டும். ஆழ் குழாய் கிணறுகள் தோண்ட வேண்டுமென்றால் 100 அடி 200 அடி தோண்டவேண்டியிருக்கிறது. ஆயில் எஞ்சின் வைத்தோ மற்றவைகள் மூலமாகவோ தண்ணீர் எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்கள் மின் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கலந்துபேசி ஆழ்குழாய் கிணறுகளுக்கு சீனியாரிட்டி அடிப்படையில் இல்லாமல் கிணறு அமைத்த 2, 3 மாதங்களுக்கு உள்ளாக மின் இணைப்புக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கரும்புக்கு விலை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பெருமையோடு நாங்கள் பாராட்டுகிறோம். இருந்தாலும் விவசாயிகளுக்கு அந்த விலை கட்டுபடியாகவில்லை. இன்னும் அதிகமாக கரும்புக்கு விலையைக் கூட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர்ப் பிரச்சினை என்பது தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை. 127 கோடி ரூபாய்க்கு மேலாக தருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப் பஞ்சாயத்துக்களுக்கென்று குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அந்தத் திட்டங்களுக்காக அனைத்து உதவிகளும் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. ஆனால் டவுன் பஞ்சாயத்துக்களில் நாம் திட்டங்கள் போடுகிறபோது இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கட்ட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. பல நூற்றுக்கணக்கான டவுன் பஞ்சாயத்துக்களிலே சம்பளத்திற்கே போதுமான நிதியில்லாத காரணத்தினால் இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் எப்படிக்

கட்டமுடியும் என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். 10 லட்சம் 15 லட்சம் என்று கடன் கொடுக்கிறபோது இந்த இன்வெஸ்டி கேஷன் சார்ஜஸ்களுக்காகவும் கடன் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அரியம் பாளையம் நம்பியூர் போன்ற பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1982 ஆம் ஆண்டு இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கட்டியும்கூட இன்னும் திட்டம் வரவில்லை. ஏன் ஆரம்பிக்கப்படவில்லை என்று அந்த சூப்பிரண்டெண்டெண்டிங் எஞ்சினியரைக் கேட்டால் எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். அந்தத் திட்டங்கள் நிறைவேறவேண்டுமென்றால் தனியாக சப் டிவிஷன் அமைக்கப் படவேண்டும் என்று சொல்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத் தலைவரிடம் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது பெரியார் மாவட்டத் திலே உடனடியாக சப்டிவிஷனை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே பவானிசாகரில் தண்ணீர் இல்லை. தொட்டம்பாளையம் போன்ற 30-க்கும் மேற்பட்ட கிராமங்களிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் வருவதற்கு ஆய்வு செய்திருக்கிறார்கள். அதற்கு உத்திரவு பிறப்பிக்கப்பட் டிருப்பதாக அறிகிறோம். அதற்காக ஒன்றே முக்கால் கோடி ரூபாய் தரப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டம்பற்றி இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட வேண்டுமென்றால் உடனடியாக சப் டிவிஷனை அமைத்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் முப்பது கிராமங்களையும் சர்வே செய்ய வேண்டுமென்றால் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, அரசாங்கத்தால் போடப்படும் திட்டங்களையும், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் போடப்படும் திட்டங் களையும் உடனடியாக நிறைவேற்றுவதற்காக சப்–டிவிஷனை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இ.இ.சி. என்ற ஐரோப்பிய பொருளாதாரத் திட்டத்தின் மூலம் குடிநீர் நிலையங்கள் ஆழ்குழாய் கிணறுகள் போன்றவை அமைக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நம்பியூர் யூனியனில் உள்ள எலத்தூர் கிராமம், ஊர்க்குருவிபாளையம், கடமசெட்டிப்பாளையம், செங்காளி பாளையம், கோரமடைபுதூர், சாணார் புதூர் போன்ற கிராமங்களுக்கு பவானி ஆற்றிலிருந்து கொடிவேரி ஸ்கீம் என்ற திட்டத்தின்கீழ் தண்ணீர் கொண்டு வருவதற்கான சர்வேயைச் செய்து இருக்கிறார்கள். இப்பொழுது எலத்தூர், தெற்கு பகுதி என்ற இடங்களில் உள்ள தண்ணீர் சுவையே இன்றி இருக்கிறது. இந்தக் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகத் தண்ணீர் கொண்டு வருவதற்காக முதலில் ஆய்வு செய்தார்கள். நானும்கூட அப்படித் தண்ணீர் தரப்படும் என்ற உத்தரவாதத்தை மக்களிடத்திலே சொல்லிவிட்டேன். ஆனால் இப்பொழுது இ.இ.சி.யில் சேர்ப்பதற்கான திட்டத் திற்குச் செலவு அதிகமாகும் என்று கோவையில் உள்ள சீப்



என்ஜினியர் தெரிவிக்கிறார்கள். நான் சட்டமன்றத் தேர்தலின் பொழுது மக்களிடத்திலே இந்தச் செய்தியைப் பரப்பி விட்ட காரணத்தினால், அது என்னுடைய சொந்த ஊராகவும் இருப்ப தால் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டததைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே கொடிவேரி பஞ்சாயத்து, உடையாக்கவுண்டன் பாளையம் பஞ்சாயத்து, காசிபாளையம் டவுன் பஞ்சாயத்து ஆகிய மூன்று பஞ்சாயத்துக் களுக்கும் சேர்த்து ஒரு ஸ்கீம் போட்டு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எலத்தூர் கிராமத்தையும் இ.இ.சி.யில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்பியூர் டவுன் பஞ்சாயத்தில் பிலியம்பாளையம் என்ற இடத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் வெட்டப்பட்ட கிணறு இருக்கிறது. அதில் நிறையத் தண்ணீர் இருக்கிறது. இப்பொழுது உள்ள நிலையில் நம்பியூருக்கு மட்டும் குடிநீர் சப்ளை செய்யக் கூடிய நிலைமைகூட சரியாக இல்லை. கிடாரை பிலியம் பாளையம், வெள்ளாளபாளையம் ஆகிய இடங்களைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டு அது குடிநீர் வடிகால் வாரியத் திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. எனவே, கிராமப் பஞ்சாயத்துக் களுக்கு என்ன சலுகைகளைச் செய்திருக்கிறோமோ அதைப் போல நிதி ஆதாரம் இல்லாத டவுன் பஞ்சாயத்துக்களுக்கும் உதவி செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

1976–77 ஆம் ஆண்டில் வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில், கிராமந்தோறும் குடிநீர் பற்றி சர்வே செய்தார்கள். 1,2,3,4,5,6 என்று ஆறு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டில் இருந்த நிலை என்ன? 1986 ஆம் ஆண்டில் இருக்கின்ற நிலைமை என்ன? இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பலதரப்பட்ட கிராமங்களில் ஆழ்குழாய்க் கிணறு களில்கூட தண்ணீர் இல்லை. எனவே, உடனடியாக இந்த முறையைப் பரிசீலனை செய்து இந்த டைப்களை மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களை ரீகிளாசிபிகேஷன் செய்து அவை டைப் 3–ல் சேர்க்கப்பட்டு இருக்கிறது. உடனடியாக அந்த ஊர்களுக்கு குழாய் களை நிறுவ வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊத்துக்குளி குடிநீர்த் திட்டம் என்ற ஒரு திட்டத்தை கொடிவேரி பவானி ஆற்றிலிருந்து எடுத்துச் செல்வது பற்றி அறிவித்தார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்னுசாமி அவர்கள்கூட அந்தத் திட்டத்தைப் பற்றி வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அப்படி எடுத்துச் சொல்லப் படுகின்ற நேரத்தில், நம்பியூர் வழியாக அந்தத் தண்ணீரை எடுத்துச் செல்ல வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள் கிறேன். காரணம் என்னவென்றால், தண்ணீர் இல்லாமல் [illegible] படுகின்ற நம்பியூரிலே உள்ள பல கிராமங்களை அதில் சேர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

[திரு. வே. கு. சின்னசாமி]



அடுத்து, விவசாயப் பல்கலைக் கழகத்தைப்பற்றி ஒரு
கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாய ஆராய்ச்சித்
துறையில் பல பதவிகள் இன்றைக்கு நிரப்பப்படாமல் இருக்
கின்றன. டெல்லியிலுள்ள ஐ.சி.ஏ.ஆர். என்ற நிறுவனத்தின்
மூலம் நிதி ஆதாரம் கிடைக்கிறது. அந்தப் பதவிகள்
நிரப்பப்படாத காரணத்தினால் ஆராய்ச்சிப் பணிகள் பாதிக்கப்
படுகின்றன, பொதுமக்களுக்கும் பாதகம் ஏற்படுகிறது.
ஐ.சி.ஏ.ஆர். தருகின்ற நிதி உதவிகளை வைத்து ஆராய்ச்சித்
துறையிலே காலியாக இருக்கின்ற அந்தப் பதவிகளை நிரப்ப
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பல்கலைக் கழகத்தில் வேலை பார்க்கின்ற
எம்.எஸ்.சி. (அக்ரி) படித்த அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படு
கின்ற அடிப்படைச் சம்பளமே 700 ரூபாய்தான். ஆனால்
கல்வித் துறையிலே மற்றப் பல்கலைக் கழகங்களை எடுத்துக்
கொண்டால் அங்கே இன்னும் அதிகமாகச்சம்பளம் தருகிறார்கள்.
எனவே, இவர்கள் அதுபற்றி ஒரு கோரிக்கையைக்கூட வைத்
திருக்கிறார்கள். போராட்டம்கூட நடத்த இருப்பதாகச் சொல்
கிறார்கள். ஆகவே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த
விவசாயப் பல்கலைக் கழகத்திலே பணியாற்றுகின்ற அந்த
அதிகாரிகளுக்கு, மற்றப் பல்கலைக் கழகங்களில் பணியாற்று
கின்ற அதிகாரிகளுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கின்றோமோ
அதையே கொடுக்க நாம் முன்வர வேண்டும். அப்படிச் செய்
தால் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அது
அடிப்படையாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். இங்கே இவர்களுக்குச் சம்பளம் குறைவாக இருப்ப
தால், விவசாயப் பணிகளை இவர்கள் புரிவதில்லை, பேங்குகள்
போன்ற மற்ற இடங்களுக்குச் சென்று விடுகிறார்கள். இதனால்
ஆராய்ச்சி பாதிக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு முயற்சியை
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. நடராஜன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்
கள். விவசாயத் துறை மானியத்திலே பேசுகின்றபோது, விவசாயத்
துறை அமைச்சரைப் பற்றி ஒன்று சொன்னார்கள். நான்
பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன் ......(மணியடிக்கப்
பெற்றது).



(பிற்பகல் 12-40)

திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியம், குடிநீர் வழங்கும் மானியம் ஆகியவற்றின் மீது காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்துச் சில கருத்துக்களை எடுத்துச்சொல்ல விழைகிறேன். இன்றைய தினம் வேளாண் உற்பத்தியையும், மொத்த தானிய உற்பத்தித் திறனையும் உயர்த்தவும், தமிழக விவசாயிகளின் நல்வாழ்வுக்காகவும், அரசு பல்வேறு திட்டங்களைப் போட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். வார இதழ்களிலே வரும் ராசி பலனைப் படிப்பது போன்ற உணர்வு தான் இந்த வேளாண்மைத் துறை குறிப்பைப் படிக்கும்போது ஏற்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டில், வேளாண்மை உற்பத்தி, குறிப்பாக உணவு தானிய உற்பத்தி, மன நிறைவு அளிப்பதாக இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். விவசாய உற்பத்தியைப் பெருக்க போட்ட திட்டங்கள் நல்ல பயன் அளிக்கவில்லை, அவை வெற்றி பெறவில்லை என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொன்னாலும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு எடுத்துள்ள பல்வேறு முயற்சிகளை நான் வரவேற்கிறேன்.

1986-87-ல் அரிசி 60 இலட்சம் மெட்ரிக் டன்கள், சிறு தானியங்கள் 24 இலட்சம் மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்ய திட்டம் போடப்பட்டுள்ளதைப் பாராட்டுகின்றேன். ஆனால், பருவமழை பாதிப்பாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அப்படிப் பட்ட திட்டங்கள் வெற்றி பெறக்கூடிய அளவிலே, அரசு திட்டங்களை விழிப்புடன் செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

1986-87-ஆம் ஆண்டில், காவிரிப் பாசனப் பகுதியில் ரூ. 20 இலட்சம் செலவில் 100 கதிர் அடிக்கும் களங்களைக் கட்ட இருப்பது, நீலகிரி மாவட்டத்தில் 400 எக்டேர் பரப்பில் பழச் செடிகள் நடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பெரியார், வைகை மற்றும் கீழ் பவானி பாசனப் பகுதிகளில் நல்ல மகசூல், தேவையான இடுபொருள், தொழில் நுட்ப ஆலோசனைகள் ஆகியவற்றை வழங்கி, 1,000 எக்டேர் பரப்பில் விதைப் பெருக்கம் செய்யும் புதிய திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

1985-86-ல் நெல் 63 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், உற்பத்தி அளவோ, 55½ இலட்சம் டன்கள்தான். வறட்சி அதிகமாக பாதித்துவிட்டதன்

காரணமாக, நெல் சாகுபடியில்லை, இழப்பு ஏற்படுகிறது என்று கொள்கைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இயற்கையின் சோதனைகள் என்பது தமிழகத்திற்குப் புதிதான ஒன்று அல்ல. இது வருஷாவருஷம் வாடிக்கையாக வரக்கூடிய ஒன்றுதான். ஆகவே, இயற்கையைத் துணைக்கு அழைக்காமல், பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டாலும், திட்டமிட்டபடி உற்பத்தியைக் கொண்டு வருவது தான் வேளாண்மைத் துறையின் திறமைக்கு எடுத்துக் காட்டாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசு செலவு செய்யக் கூடிய அளவுக்கு உற்பத்திப் பெருக்கம் இல்லையென்பதுதான் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. 1966-67-ல் அரிசி 38 இலட்சம் டன்கள், சிறு தானியங்கள் 16 இலட்சம் டன்கள், ஆக மொத்தம் தானிய உற்பத்தி 54 இலட்சம் டன்கள். அதற்காக ரூ. 10.65 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. 1976-77-ல் அரிசி 53 இலட்சம் டன்களும் சிறு தானியங்கள் 18 இலட்சம் டன்களும் ஆக மொத்தம் 71 இலட்சம் டன்கள். ஆனால், செலவழிக்கப்பட்டதோ ரூ. 34 கோடிதான். ஆனால், 1985-86-ல் அரிசி 54.44 இலட்சம் டன்களும் சிறு தானியங்கள் 20 இலட்சம் டன்களும் ஆக மொத்தம் 74.44 இலட்சம் டன்கள் உற்பத்தி. ஆனால் செலவானதோ ரூ. 82.48 கோடி என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஒதுக்கீடு செய்கின்ற அளவுக்கு உற்பத்தி உள்ளதா என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். திட்டங்களுக்குச் செலவிடக் கூடிய தொகை, முறையாக, செலவிடப்படுகிறதா என்பதை அரசு கண்காணிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு விவசாயத் துறையில் நல்ல பல திட்டங்களைப் போட்டாலும் நிர்வாகத்தின் அடிமட்டத்தில் சரியான செயல்பாடு இல்லை; அடிமட்டத்தில் அதிகமான குறைபாடு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, சில குறைபாடுகளை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்ற பூச்சிமருந்துகள் இடுபொருட்கள் இருக்கின்றன. பூச்சிமருந்துகள் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை. நிலக் கடலைப் பயிரை பூச்சிகள் தாக்கக் கூடிய காலத்தில் பூச்சிமருந்துகள் சப்ளை செய்யப்படவில்லை; விளைச்சல் எடுக்கக்கூடிய காலத்தில் கொடுத்தார்கள்.

அதைப் போன்று 1985-86 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட வேண்டிய தூள் மருந்து, திரவ மருந்துகள் உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை. ஆண்டு முடியும் தருவாயில், மார்ச் மாதத்தில் அவசரம் அவசரமாகக் கொடுத்து, கடந்த பத்து தினங்களுக்கு முன்பாகத்தான் வேளாண்மைக் கிடங்குகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள்; விவசாயிகளுக்கு இன்னும் தாமதமாகத் தான் கிடைக்கும். இந்தக் குறைபாடு இல்லாமல் உரிய காலத்தில் பூச்சி மருந்துகளைக் கொடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மத்திய அரசு உதவியுடன் செயல்பட்டுவரும் தீவிர எண்ணெய் வித்துகள் திட்டத்தின்கீழ் சில தவறுகள், சில முறைகேடுகள் நடைபெறுகின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனோ, மானியமோ கிடைப்பதில்லை. இடைத்தரகர்கள்தான் அரசாங்க அதிகாரிகளின் உதவியோடு மானியத் தொகையைப் பங்குபோட்டு கொள்கிறார்கள். உதாரணமாக எடுத்துக்கொண்டால், சான்றிதழ் பெற்ற விதைகள் தயாரிக்கும் விவசாயிகளுக்கு அதற்கான மானியம் கிடைப்பதில்லை. விவசாயிகள் என்ற பெயரால் பினாமியாக தனிப்பட்ட வியாபாரிகள் செயல்படுகிறார்கள். அப்படிப்பட்ட தனிப்பட்ட வியாபாரிகளிடம் கொள்முதல் செய்து விட்டு, மானியத் தொகையை அந்த வியாபாரிகளும் அடிமட்டத்தில் இருக்கிற அரசு அதிகாரிகளும் எடுத்துக்கொள்கிறார்கள். வேர்க் கடலை விதையினை பயிர் செய்கின்ற உண்மையான விவசாயிகளுக்கு மானியத் தொகைப் போய்ச் சேருவதில்லை. கீழ் மட்டத்தில் இப்படி நடைபெறும் தவறுகளைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தோட்டக்கலைத் துறைக்கும் கிராமப்புற விவசாயிகளுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. பழப் பயிர் நடவுப் பொருட்கள் சாதாரண கிராமப்புற விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை.

அதைப் போன்று வேளாண்மைக்கு அத்தியாவசியமானது மின்சாரம். மின்சாரத்தை வழங்குவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. பல ஆண்டு காலமாக விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்காமல், விண்ணப்பம் செய்த விவசாயிகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும், விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று பயிறு வகையில் ஒன்பது இலட்சம் டன் தேவை இருந்தாலும் மூன்று இலட்சம் டன்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே, பயிறு உற்பத்தியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பு அணைகள் அமைக்கப்பட்டதாக கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. கிராம மக்களுக்கு வேலை கொடுத்ததை வரவேற்கிறேன். ஆனால் மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் இதற்கு இவ்வளவு நிதி உதவி பெற்றோம் என்ற விவரம் கூறப்படவில்லை என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரும்புப் பண்ணைக் கழகம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்பதை இது காட்டுகிறது. 1983-84 ஆம் ஆண்டில் காம்ப்ட்ரோலர் அன்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆப்

இந்தியா அவர்களின் ஆடிட் ரிப்போர்ட் பக்கம் 16-ல் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் 30–6–1983 வரையிலுள்ள கணக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுவிட்டு முக்கியமான குறைபாடுகளையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனுடைய பங்கு மூலதனம் 27.5 இலட்சம் ரூபாய். ஆனால் 'அக்கியூமுலேட்டட் லாஸ்' 68.93 இலட்சம் ரூபாய். இந்த அளவுக்கு நஷ்டம் இருப்பதால் அரசாங்கம் இதிலே காலம் தாழ்த்தாமல் உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து, நிர்வாகத்தை செம்மைப்படுத்தி, சீர்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பான பெரிய அணைத் திட்டங்கள் எதுவும் போடப்படவில்லை என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சியில் பெரிய, பெரிய அணைக்கட்டுத் திட்டங்களைப் போட்டு, கால்வாய்ப் பாசனம் மூலம் மொத்த நீர்ப்பாசன நிலத்தில் 25 சதவீதம் நிலங்களுக்கு பாசனவசதி செய்து கொடுத்தது பெருமைக்குரிய ஒன்றாகும். அப்படிப்பட்ட பெரிய திட்டங்களைப் போடாவிட்டாலும் சிறிய சிறிய பாசனத் திட்டங்களையாவது அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய காட்டாறுகள், சிறு ஓடைகள் போன்றவற்றில் அமைத்து, பாசன வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப உணவு உற்பத்தி இல்லாதது வருந்தத்தக்கது. தேவையான அளவுக்குமேல் உற்பத்தியைப் பெருக்குவதுதான் வேளாண்மைத் துறைக்கு சாதனையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழவர் பெருமக்களுக்கு வங்கிக் கடன் சலுகைகள் அளிக்கப்படுவதோடு பல்வேறு சேமநலத் திட்டங்களையும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

ஓமலூர் தொகுதியைப் பொறுத்தவரையில் காடையாம்பட்டி ஒன்றியத்தில் சரபங்கா ஆற்றில் ஒரு அணைகட்டி, விவசாயிகளுக்கு பாசன வசதி செய்து தரவேண்டும். அதைப்போன்று தொப்பையாறு அணைக்கட்டிலிருந்து அரசு கால்வாய் வெட்டி, காடையாம்பட்டிப் பகுதி விவசாயிகளுக்கு பாசன வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–50)

உலக வங்கி உதவியுடன் சேலம் மற்றும் 11 நகரங்களுக்குக் காவிரி நீரை மேட்டூரிலே இருந்து கொண்டு செல்லும் திட்டத்தை நிறைவேற்றி அரசு ஓமலூர் போன்ற நகரங்களுக்கு விரைவாகக் குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பல்வேறு கிராமங்கள் குடிநீர்ப் பிரச்சினையால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே அந்தக் கிராமங்களுக்குத் தொப்பையாற்றிலே இருந்து குடிநீரைக் கொண்டு செல்லும் திட்டத்தை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஓமலூர், காடையாம்பட்டி, கருப்பூர் ஆகிய பேரூராட்சிகளில் ஆழ்துளைக் குழாய் கிணறுகளை அமைக்க அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய விதிகளைத் தளர்த்தி பேரூராட்சியில் வாழக்கூடிய மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பருவமழை பொய்த்து கோடை காலம் நெருங்கிக் கொண்டிருக்கிற நிலைமை இருப்பதன் காரணத்தால் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் குறைந்தது 50 ஆழ்துளைக் குழாய் கிணறுகளை வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு குடிநீர் வழங்கு துறை குறிப்பாக குடிநீர் வடிகால் வாரியம் கிராமப்புற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. குடிநீர் வழங்கு துறை மிகச் சிறப்பான முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதில் மாறுபட்ட கருத்து கிடையாது. 1986-87 ஆம் ஆண்டில் கிராமப்புற குடிநீர்த் திட்டங்களுக்காகத் தமிழக அரசு ரூபாய் 45 கோடி ஒதுக்கியுள்ளதை நான் வரவேற்கிறேன். மத்திய அரசு 15.44 கோடி ரூபாய் மானியமாகத்தர ஒப்புக் கொண்டதற்கும் நான் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். பல குடியிருப்புகளுக்கு நிரந்தரப் பயன் கிடைக்க கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் வெளிநாட்டு உதவியுடன் 1986-87-லே மேலும் 15 புதிய திட்டங்களையும் பழுதடைந்துள்ள இரும்பாலான குடிநீர்த் தொட்டிகளை மாற்றி சிமெண்ட் கான்க்ரீட் தொட்டிகளாகக் கட்ட ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதையும் 1986-87 ஆம் ஆண்டிலே கைப்பம்புகளையும், விசைப் பம்புகளையும் பராமரிப்பதற்கு ரூபாய் 75 இலட்சம் ஒதுக்கீடு செய்திருப்பதையும் இப்படிப்பட்ட பல்வேறு அம்சங்களையும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அதேநேரத்தில் 1986-87ஆம் ஆண்டு திட்டத்தில் 3500 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம் போடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான நிதி மிகக் குறைவு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு ஒதுக்கியுள்ள தொகை 45.44 கோடி ரூபாய்தான். 1985-86-ல் 2000 குடியிருப்புகளுக்கு ரூபாய் 42 கோடி செலவு என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் ஒரு குடியிருப்புக்கு 2.2 இலட்சம் என்று கணக்கிட்டால் கூட 1986-87-ல் 3500 குடியிருப்புகளுக்குச் செலவிட வேண்டிய தொகை 73.5 கோடி ரூபாய் ஆகும். அந்த அளவுக்கு ஒதுக்கப் பட்டிருக்கவேண்டும். ஆனால் ரூபாய் 45 கோடிதான் ஒதுக்கப் பட்டுள்ளது. அதிலும் 5 கோடி கான்க்ரீட் சிமெண்ட் தொட்டி கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே சரியான திட்ட மதிப்பீடோ, போதிய நிதி ஒதுக்கீடோ இல்லாதது வருத்தத்திற் குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிற குடி நீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில் விரைவுத் திட்டமாக இருந்தாலும் சரி அல்லது அடிப்படைத் தேவை திட்டமாக இருந்தாலும் சரி அதாவது மினிமம் நீட்ஸ் ப்ரோகிராமாக இருந்தாலும் சரி பட்ஜெட் ஸ்கீம்-படிச் செய்யவேண்டும். மத்திய அரசு மானியம் கொடுக்கக்கூடிய 20 அம்சத் திட்டத்தில் உள்ள வற்றைத்தான் முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும். அடிப்படைத் தேவைத் திட்டத்தைப் பிறகு எடுத்துக்கொள்ளலாம். ஆனால் எம். என். பி. திட்டங்கள் அப்படியே கிடப்பில் போடப்பட்டு ஸ்பில் ஓவர் ஆக விடப்பட்டிருக்கின்றன. பின்னர் அந்தத் தொகை சரண்டர் செய்யப்பட்டுள்ளது என்பதை நான் தெரி வித்துக்கொள்கிறேன். திட்டம்போடுவது பெரிதல்ல; நிதி ஒதுக் கீடு செய்வது பெரிதல்ல. அந்தத் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்படுவதுதான் குடிநீர் வழங்கு துறையினுடைய சாதனையாக இருக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்தது 5 பவர் பம்ப்களை பட்ஜெட் ஸ்கீம்படி செய்ய வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1985-86-ல் ஓமலூர் தொகுதியில் பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பவர் பம்ப் ஸ்கீம்ஸ், ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டப் பணிகள் துவக்கப்படாமலே வைக்கப்பட்டு அந்தத் தொகை முழுவதும் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். திட்டங்களை நிறை வேற்றுவதற்கு போதிய ஆழ்துளைக் கருவிகள் இல்லை; நிலத்தடி நீர் ஆய்வாளர்கள் இல்லை என்றெல்லாம் அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய குடிநீர் வழங்கு துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தத் திட்டங்களைத் தாமதப்படுத்துவதற்குரிய காரணங் களாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஒரு சப் டிவிஷனுக்கு ஒரு ஜே.ஏ. நியமிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும். பராமரிப் பினைப் பொறுத்தவரையில் எந்த ஒரு இறைப்பானும் 7 நாட்களுக்கு மேல் ரிப்பேராக இருக்கக்கூடாது என்று அரசு தெரிவித்தாலும் நடைமுறையில் அவ்வாறு இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் விசை இறைப்பான் பழுதடைந்தால் 7 நாட்கள் அல்ல; 7 மாதங்கள் ஆனாலும் பழுதுபார்க்கப்படுவதில்லை. அதிலே நிர்வாகச்





சிக்கல்கள் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் நிர்வாக அனுமதி பெறுவது, அதற்குப் பிறகு ரிப்பேருக்காக எடுத்துக்கொள்வது என்ற நிலைமைகளில் 6 மாத காலம் ஆகி விடுகிறது. அதேபோல சப்மெர்ஜிபிள் மோட்டாரைப் பழுது பார்க்க போதிய மெக்கானிக் மாவட்ட அளவிலே இல்லை என்ற காரணத்தாலே; பவர் பம்ப்என்ஜினீயரிங் செக்ஷன் ஒன்று அரசு அமைக்க முன் வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல ரீ-கிளாசிபிகேஷன் புரோபோசலில் குடிநீர் வடிகால் வாரியம் மிகவும் கடுமையாக உள்ளது. வகை 6லிருந்து 3க்கு வகை மாற்றம் செய்வதில் இன்னும் விரைவாக அந்த வாரியம் இருக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால் குடிநீர் வடிகால் வாரியத் தலைவருக்கு எந்தவித அதிகாரமும் இருக்கிறதா என்பதே கூட எனக்குத் தெரிவில்லை. இந்தவகை மாற்றம் குறித்து நான் பலமுறை அவர்களைப் பார்த்தேன். அவரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் தெரிவித்தும் கூட, அந்தக்குறைபாடுகள் அப்படியே இருக்கின்றன. ஆகவே அதிக அதிகாரங்களைக் குடிநீர் வடிகால் வாரியத்தலைவருக்கு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக கிருஷ்ணா நதி நீர் திட்டத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள். இந்த திட்டம் உண்மையிலேயே பாராட்டக் கூடிய திட்டமாகும். வரவேற்கக்கூடிய தமிழ்நாட்டின் எல்லைக்குள் அமைக்கப்பட உள்ள 25.275 கிலோ மீட்டர் நீளம் உள்ள கால் வாயில் 24 கிலோ மீட்டருக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தக் கால்வாய் அமைக்கும் பணிக்காக ரூ 5 கோடி செலவிடப் பட்டு உள்ளது, வரவேற்கக் கூடியது. 24 கிலோ மீட்டருக்கு கால்வாய் அமைக்கும் பணியில் மத்திய அரசு எந்த விதமான இடையூறும் செய்ததாக மாநில அரசு குறிப்பிடவில்லை. மாறாக கால்வாய் அமைக்கும் பணி சுமூக மாக நடைபெற்று வருகிறது என்று நிதிநிலை அறிக்கை பக்கம் 44 இல் தெரிவிக்கப் பட்டுள்ளது... * * ..

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : * *
திரு. அ. ரகுமான்கான் : * *

(பிற்பகல் 1-00)

திரு. கே. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே 1985–86ஆம் ஆண்டில் அடிப்படைத் தேவைகள் திட்டத்திற்கு 24 கோடி ரூபாய் மத்திய அரசு அனுமதித்துள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 275 கோடி குடிதண்ணீர்த்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு மானியம் 100 கோடி ரூபாய்க்கு தமிழக அரசு எதிர்பார்க்கிறது. இந்தக் குடிநீர்த் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து மத்திய அரசு நிச்சயமாக நிதியுதவி அளிக்குமென்று....(குறுக்கீடு)

**திரு. துரை கோவிந்தராசன்:** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேசன். இந்தச் சபையிலே நான் முன்னாலேகூட சொல்லியிருக்கிறேன் சபையில் அவரவர்களுக்கு என்று ஒதுக்குகிற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் மானியத்திலே பேசுகிறபோது, இடையிலே குறுக்கிட்டுப் பேசுவதினால், பேசுகின்ற உறுப்பினர்களுடைய நேரத்தை எடுத்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், சபையினுடைய நேரத்தையும் அவர்கள் வீணாக எடுத்துக்கொள்கிறார்கள். தினந்தோறும் இப்படிப்பட்ட நிலைமைகள் எற்பட்டு, அப்படிப்பட்ட உறுப்பினர்களுக்கே முழு நேரம் போய், இந்தச்சபையினுடைய நேரமும் வீணாக்கப்படுகிறது. எனவே துணைத் தலைவர் அவர்கள், இனிமேலாவது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும், அவரவர்களுக்கு என்று ஒதுக்கப்படுகிற நேரத்தை முறையாக அவர்களுக்குத் தந்து, பேச அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை அமுல்படுத்த வேண்டும் என்றால், எல்லாக் கட்சித் தலைவர்களுடைய ஒத்துழைப்பும் வேண்டும். ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கிவிட்ட பிறகு, இன்னும் கொஞ்சம் கொடுங்கள் என்று கேட்பதைக் தவிர்த்தால், இப்படிப்பட்ட பிரச்சனைகள் எழாது என்று கருதுகிறேன். (குறுக்கீடு). இப்படி குறுக்கிட்டுப் பேசுவதால் நேரம் அதிகமாக ஆகிறது.

we are becoming unpopular.

**திரு. கே. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும், காங்கிரஸ் கட்சியும் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, பல்வேறு இடர்பாடுகள், இன்னல்களுக்கு இடையிலே, வேளாண்மைத்துறையும், குடிநீர்த் துறையும் பாராட்டக்கூடிய அளவிற்கு செயபடுகிறது என்பதைத் சொல்லி, சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நீக்கி, நிர்வாகத்தை சீரமைத்துவிட்டால் சாதனைகள் தானாக தேடி வரும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன், வணக்கம்.

***திரு. இரா. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னு

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது:



டைய சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். வேளாண்மைத் துறையானது எந்த அளவிற்கு அரசுக்கு ஒரு முக்கியமான துறையாக இருக்கிறது என்பதை ''வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயரும்'' என்ற பழமொழிக்கு இணங்க இந்த வேளாண்மைத் துறையானது எந்த அளவிற்கு இந்த அரசுக்கு முக்கியமானது என்பதை உணர்ந்து, புரட்சித் தலைவர் அவர்கள், இந்த வேளாண்மைத்துறையைப் பல பிரிவுகளாகப் பிரித்து, அதன் மூலமாக விவசாயத்தை மேற்கொண்டு இருக்கிற பெருங்குடி மக்களுக்கு, உதவிகள் எல்லாம் நேரடியாகப் போய் சேருகின்ற வகையில், அவர்கள் பொறுப்பேற்றதில் இருந்து இதுநாள் வரையிலும் சிறப்பாகப் பணியாற்றியதன் காரணமாக, தமிழ்நாட்டில், உணவுப் பஞ்சம் இல்லாத நிலைமை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அந்த வகையில் விவசாயத்தை மேற்கொண்டு இருக்கிறவர்களுக்குச் செய்கிற உதவிகள் எல்லாம் நேராகப் போய்ச் சேருகிற அளவிற்கு, புரட்சித்தலைவர் அவர்கள் இன்றைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விவசாயத்தை மேற்கொண்டு இருக்கிறவர்கள் முக்கியமாக தமிழ்நாட்டிலே இருக்கிற மக்களின் மொத்த எண்ணிக்கையில் 56 சதவீத வேலைவாய்ப்பை பெறுகிறார்கள் என்றும்.... *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கிருஷ்ணா நதி நீர் சம்பந்தமாக பேசியதும், பார்லிமெண்டில் பேசியதுபற்றிப் பேசியதும் அவைக்குறிப்பில் இருக்கவேண்டாம் என்று உத்தரவிடுகிறேன் (குறுக்கீடு) பார்லிமெண்ட் ஸ்பீச்சை நீங்கள் கோட் பண்ணிப் பேசினீர்கள் என்றால், புரசீடிங்கைக் கொடுக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** துணைத் தலைவர் அவர்களே, அரிசி ஒதுக்கீடு சம்பந்தமாக நீங்கள் ஒரு மனுவைச் சொன்னீர்கள், பார்லிமெண்டிலே பேசிய பேச்சைச் சொன்னீர்கள். அந்த மனுவைப் பற்றிப் நீங்கள் சபாநாயகர் இடத்திலே காட்டி, அனுமதி பெற்று, நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் தண்டபாணி அவர்கள் என்ன பேசினார்கள் பார்லிமெண்டிலே என்பதையும் இங்கே நீங்கள் பேசியிருந்தால், உங்கள் மீது உரிமைப் பிரச்சனை கொண்டு வருவதற்குக்கூட இடம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த புரசீடிங்ஸ் அப்படியே இருக்கிறது. நீங்கள் தாராளமாகக் கொண்டு வரலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) தலைவர் அவர்களே, நான் அன்றைக்கு சபைக்குறிப்பிலே இருக்கிற வகையில் பேசியிருக் கிறவை எல்லாம் முழுமையாக அந்தலோக் சபாவினுடைய புரஸீடிங்ஸ்களை முன்னதாக பேரவைத் அவர்களிடம் காண்பித்துவிட்டு அனுமதி பெற்றுத்தான் பேசினேன். நான் ஒரு சில பகுதிகளைத்தான் படித்திருக்கிறேன். இன்னும் ரகுமான்கான் அவர்கள் பின்னாலே இருக்கும் பகுதிகளைப் படித்தால் இன்னும் பிரச்சினை கூடுதலாக இருக்கும்.

(பிற்பகல் 1.10)

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவலைக்கூடச் சொல்லி இருக்கிறார். எங்களுடைய எம்.பி. தண்டபாணி அவர்கள் அரிசி ஒதுக்கீடு கேட்டு மனுவே கொடுக்க வில்லை என்று. இவர்கள் மனு கொடுத்த மறு நாளே அவரும் மனு கொடுத்திருக்கிறார். தவறான தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் தலைவர் அவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக எம். பி.க்களும், மற்ற கட்சி எம்.பி.க்களும் போட்ட மனுவில் கையெழுத்துப்போட மறுத்திருக்கிறார்கள் என்று சொல்லி என்னுடைய குற்றச்சாட்டை அருமை நண்பர் ரகுமான்கான் ஒத்துக்கொண்டும் இருக்கிறார், நாங்கள் தனியாக கொடுத்தோம் என்று. அந்த மனுவில் கையெழுத்துப் போடவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சனை வேறு திசையைநோக்கி போவதற்காக நான் வருத்தப்படுகிறேன். அவர்கள் கொடுத்த மனுவிலே நாங்கள் கையெழுத்து போடவில்லை என்பதை ஒத்துக்கொண் டோம். அரிசி ஒதுக்கீடு வேண்டுமென்று நாங்களே பிரதமரிடம் மனு கொடுத்திருக்கிறோம். அதை இல்லாதது போல பேசினார்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு திசைக்கு நண்பர் ரகுமான்கான் அவர்கள் தான் இழுத்துக் கொண்டு செல்கிறார்கள். தண்ட பாணி அவர்கள் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சினை, அது பற்றி சம்பந்தப்பட்ட குறிப்புகளை நான் சபாநாயகர் அவர் களிடத்திலே காட்டினேன் என்பதைத்தான் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே வேறு ஒரு கருத்தினை நீங்கள் எடுத்துச் சொல்கிறீர்கள். ஆகவே பிரச்சனையை இதோடு விட்டுவிட்டு கொஞ்சம் வேளாண்மைத் துறைக்கு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் சொல்கிறேன் அதை என்னிடம் காட்டினார். உறுப்பினர்கள் யாராவது இங்கு சொல்லும்போது ஏதாவது ஒரு கருத்து சொல்கின்றார்கள்



என்றாலுமே, சில பேர் காட்டாமலேயே கூட பேசியிருக் கிறார்கள், அதன் பிறகு காட்டியிருக்கிறார்கள். ஒரு பெருந் தன்மையோடு அவர்கள் சொல்கிறார்கள். உண்மையைத்தான் சொல்கிறார்கள் என்று நான் எடுத்துக் கொள்வேன்.

*திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தினுடைய பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மைத்துறை மிக உயர்ந்த பங்கை ஆற்றுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. மாநிலத்தினுடைய மொத்த வருமானத்தில் ஏறக்குறைய 37 விழுக்காடுகளை ஈட்டித் தரு கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழகத் தினுடைய முதல்வர் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதிலேயிருந்து உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத் தோடு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு குறித்த காலத்தில் தரமான உயர் விளைச்சலைக்காண திட்டமிடப்பட்டு பொறுக்கு விதைகளை உரிய காலத்தில் கொடுப்பதிலே எப்போதும் விழிப்பாக இருந்திருக்கிறது என்பதையும், இடுபொருள்கள் காலத்தில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறதென்பதையும் பயிரிடுகிற நேரத்தில் பயிர் களுக்கு ஏற்படுகிற நோய்களைப் போக்குவதற்காக மருந்துகளை விநியோகம் செய்வதிலும் குறித்த காலத்தில் கொடுத்து உதவி இருக்கிறது என்பதையும் விவசாயிகளுக்கு பேருதவியாக இடுபொருள்களைப் போட, உரத்தைப் போடுவதற்கு மண் பரிசோதனை செய்து என்னென்ன உரங்களைப் போட வேண்டுமென்று அறிவுறுத்துவதற்காக பயிற்சி வழி தொடர்பு திட்டத்தின் மூலமாக ஆங்காங்கே வகுப்புகளை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எடுத்து சொல்லி, அதன் பேரில் அவர்கள் நல்ல முறையிலே பயிரிடுவதற்கு இந்தத் தமிழக அரசு பெரிதும் உதவி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே விவசாயிகளுக்கு இந்தியாவினுடைய தட்பவெப்ப நிலை மாறு பட்ட நிலையில் இருந்தாலும் எப்போது மழை பெய்கிறது. எப்போது வறட்சி ஏற்படுகிறது என்று தெரியாத நிலையில் விவசாயிகள் எப்போது என்னென்ன பயிரை, இடுவது என்று தெரியாத காலங்களில், அல்லல் படுகின்ற நேரத்தில் புரட்சித் தலைவர் கிராமப் பகுதியிலே இருக்கிற ஏரிகளையும், கண்மாய் களையும், குளங்களையும், அந்தக் குறித்த காலத்தில் வறண்டு இருக்கிற நேரத்தில் ஆழப்படுத்தியும் கரைகளை பலப்படுத்தி யும், கண்மாய்களை சுத்தம் செய்தும் கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். அந்த வகையிலே திருத்தணி தொகுதியிலே எங்களுக் கெல்லாம் அதிகப்படியான ஏரிகள் இல்லாத காரணத்தினால் தண்ணீர் கொண்டு வந்து பாய்ச்சுகிற வாய்ப்பு இல்லாத காரணத்தினால், கிணறுகளை வெட்டி மின்சார மோட்டார் களை அதிலே பொருத்தி பயிரிடுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருக்கிற காரணத்தால் புரட்சித் தலைவர் அவர்கள்

விவசாயத்தை மேற்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு மிகப் பெரிய ஒரு நன்மையைச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் ஒரு குதிரை மின் ஓட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 75 ரூபாய் கட்டுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிற காரணத்தினால் விவசாயிகளுக்கு இவ்வளவு சலுகையும் கொடுத்ததற்கு பின்னாலே அவர்கள் சலிப்படைந்திருக்கிற நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு உத்தரவை அளித்ததற்குப் பின்னாலே அவர்கள் பயிரிடுவதற்கு உண்டான உத்வேகத்தை மீண்டும் பெற்று இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையில் எங்கள் பகுதியில் மக்களுக்குப் பெரிதும் பயன்படுகிற வகையில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திருத்தணித் தொகுதி திருவள்ளூர் தாலுக்காவில் ஏறத்தாழ 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் தரிசாக இருக்கின்றன. மழை பெய்தால்தான் அதில் பயிர் செய்ய முடியும். மற்ற காலங்களில் பயிர் செய்ய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அங்கே மழை பெய்தால் அந்தத் தண்ணீர் பூண்டி ஏரிக்குச் சென்று பூண்டி ஏரி நிரம்பிய பிறகு அதை அங்கே இருக்கிற மற்றொரு ஏரிக்கு திருப்பி விடுவதற்கான வாய்ப்பைப் பெற்று இருக்கிறது. அந்தத் தண்ணீரால் இரண்டு ஏரிகளும் நிரம்பி பின்னால் அது செம்பரம்பாக்கம் ஏரிக்கு வந்து அது நிரம்பி அதற்கு பின்னால் நேராக அது கடலில் வந்து கலக்கிறது. அப்படி வீணாகக்கடலில் கலக்கிற அந்தநீரைத் தேக்க அங்கே கேசவரம் என்ற இடத்தில் சிறிய அணையைக் கட்டுவதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்னால் நீர்ப்பாசனத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய திரு. ராஜா முகமது அவர்கள் அந்த அணையைக் கட்ட வேண்டும் என்றும் அதனால் 10 ஆயிரம் ஏக்கர் 3 போக விளைச்சல் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்றும் எண்ணி ஒரு மாதம் ஆய்வு செய்து அந்த ஆய்வின் பலனாக அதன் முடிவு எந்த நிலையில் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியாத காரணத்தால் இப்போது அந்த கேசவரம் அணையைக் கட்டுவதற்கு 2 குன்றுகள் அங்கே இருக்கிற காரணத்தால் தண்ணீரை தேக்க வாய்ப்பு இருப்பதால் அதை இந்த அரசு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி அது முறையாக செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அந்த அணையைக் கட்டித் தருவதற்கு வாய்ப்பைத் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, எல்லோரும் உற்பத்திச் செய்கிற பொருட்களுக்கு அடக்க விலை வைத்து, தனக்கு வேண்டிய லாபத்தை அதன் மீது வைத்து, விற்கிற பாக்கியம் இருப்பதால் அவர்கள் அதிக லாபத்தை ஈட்டிக் கொள்கிறார்கள். ஆனால் விவசாயத் துறையில் உற்பத்திச் செய்கிற தானியமாக இருந்தாலும் நெல்லாக இருந்தாலும் அவர்கள் உற்பத்தி செய்து



விட்டு அதற்கு உரிய விலையைச் சொல்லுவதற்கு 'வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நெல் உற்பத்திக்கு அதிகமான அடக்க விலை ஆகிக்கொண்டு இருக்கிறது. ஆகவே மத்திய அரசு எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதற்கு இணங்க கோதுமைக்கு விலையை அவ்வப்போது ஏற்றுகிறார்கள். ஆனால் அதற்கு உற்பத்தி விலை அடக்க விலை குறைவாக இருக்கிறது. ஆகவே நெல்லை உற்பத்தி செய்வதற்கு அதிகச் செலவு ஆவதால் அதற்கு ஒரு குவிண்டாலுக்கு 200 ரூபாய்க்குக் குறையாமல் இந்த அரசு தர வேண்டும். அப்படி விலையை நிர்ணயிப்பார்களானால் விவசாயிகள் இந்த அரசுக்கு என்றும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள். இந்த நாட்டு மக்களுக்கு உணவு உற்பத்தியை செய்து தரக்கூடிய நிலையில் இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருட்களை எல்லாம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலமாக வைத்து நியாய விலை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழகம் முழுவதும் 269 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் கட்டி அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கிற பொருட்களை அதில் வைத்து நியாய விலை கிடைக்கிற வகையில் இடைத் தரகர்கள் இல்லாமல் அவற்றைப் பயன்படுத்துகிற நோக்கோடு அவற்றைக் கட்டித் தந்து இருக்கிறார்கள்.

திருத்தணித் தொகுதியில் உள்ள என்னுடைய ஊரான பேரம்பாக்கம் என்ற கிராமத்தில் 2 ஆண்டு காலத்திற்கு முன்னால் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் என்று ஒன்றை ஒரு சிறிய அறையில் துவக்கினார்கள். அதனால் இது நாள் வரையில் எந்தவிதமான பலனும் இல்லை. ஆனால் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்து அதற்கு வேண்டிய இடத்திற்கு அந்த ஊராட்சி மன்றத்திற்கு ஒப்புதல் அளித்தும் இதுநாள் வரையில் 2 ஆண்டுகள் ஆகியும் அங்கே கட்டப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவாக அந்த பேரம்பாக்கம் கிராமத்தில் அந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தை கட்டுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தட்ப வெப்ப நிலை மாறுபட்டு இருக்கிற காரணத்தால் அப்போது இருந்த நீர்ப்பாசன முறைகள் மாறி மாறி இப்போது வேறு விதமாக சூழ்நிலை உருவாகியிருக்கிறது. மின்சார மோட்டார் மூலமாக இறைத்து விவசாயம் செய்கிற நிலங்களுக்கு அந்த நீர்ப்பாசன முறை மாறி அமைந்து இருக்கிற சூழ்நிலையில் அவைகளுக்கு உண்டான நில வரியை குறைத்து விதிக்க வேண்டும். நாம் சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆகியும்

அந்த வரி விகிதங்கள் அப்படியே இருக்கின்றன. அதை மாற்றி அந்த அந்த பாசனத்திற்கு ஒத்த முறையில் வரி விதிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அது மட்டும் அல்ல, தமிழகத்தில் உள்ள கிராமப் பகுதிகள் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னால்தான் பாதுகாக்சப்பட்ட குழாய் தண்ணீரை வழங்குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்து இருக்கிறார்கள். அதற்கு முன்னாலே கிராமப் பகுதிகளில் இருப்பவர்கள் எல்லாம் குளம் என்ற பெயராலே குட்டைகளிலே இருக்கின்ற தண்ணீரை அருந்தி வந்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னர் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் ஏறக்குறைய 60 விழுக்காடுகளுக்கு மேற்பட்ட கிராமங் களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை இந்த நேரத்தில் பாராட்டினாலும், ஒதுக்கப்பட்ட பணம் சிறிது வீணாகி, விரயமாக்கப் படுகிறது என்பதை நினைவு கூர்ந்து, வரும் ஆண்டிலாவது இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாமல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று அமைச்சரவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பல கிராமங்களில் போர் போட்டு, 2, 3 ஆண்டு களாகியும் தண்ணீர் இருக்கிறதென்று போர் போட்டு பணத்தைப் பெற்றுக் கொண்டதற்குப் பின்னர், இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு அதைப் பார்த்து, குழாய் போட வேண்டு மென்று சொல்லி, குழாய்களை போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்தில், சில குழாய்களில் கற்களைப் போட்டு நிரப்பி விட்டதன் காரணத்தால், மறுபடியும் புதியதாக போர் போட வேண்டுமென்பதற்காக, ரூ. 15,000, ரூ. 20,000 வரை செலவு செய்து, என்னுடைய தொகுதியில் 15,20 போர்கள் போடப்பட்டிருக்கின்றன. அப்படி இரண்டாவது முறையாக போடப்பட்டு 6 மாத காலமாகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டு, ஒரு ஆண்டு கழித்து குழாய்களைப் போடுகிறார் கள். அதற்குப் பிறகு ஒரு ஆண்டு கழித்து போய் பார்த்து, அதற்குப் பிறகு ஆறு மாதம் கழித்து இணைப்பு கொடுத்து தண்ணீர் விடப்படுமேயானால், இந்தக் குழாய்கள் வெகு சீக்கிரமாக, 2, 3 மாதங்களுக்குள்ளே பழுதடையும் நிலைமையை அடைந்து விடுகின்றன. போர் போட்டு முடித்துக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினால், அவசர அவசரமாக, முழுமை யாக முடிக்காமல், அரைகுறையாக நிறைவேற்றி ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்து விடுகிற நிலை இருக்கின்ற காரணத்தால், ஏற்றுக் கொண்ட ஊராட்சி ஒன்றியத்தில் குழாய்கள் பழுதடைந்து விட்டால் சீர் செய்கின்ற வகையில் பொருளாதார நிலை இல்லாத நிலைமைகள் இருக்கின்ற நேரத்திலே, நாம் குடி தண்ணீர் வழங்க வேண்டிய 20 விழுக்காடு





கிராமங்களுக்கு இன்னும் வழங்க முடியாத நிலையிருக்கிறது. இதற்கென்று ஒதுக்கீடு செய்து செலவு செய்ததற்குப் பின்னர், இந்த ஒதுக்கீடு எந்த நிலையில் இருக்கிறதென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் என்னுடைய தொகுதியான திருத்தணியில், திருவாலங்காடு ஒன்றியத்தில் நான்கு கிராமங்கள், அத்திப்பட்டு, இராசப்பாளையம், காத்து கொண்டபுரம், கூர்முதலாபுரம் ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்தி, அதை நடைமுறைப்படுத் தினால், ஏறக்குறைய ஒரு மாதகாலத்திற்குக்கூட ஒழுங்காக நான்கு கிராமங்களுக்கும் தண்ணீர் போக முடியாது. அதற்குக் காரணம், அந்தக் குழாய்களின் இடையே ஆங்காங்கே வெடிப்புகள் ஏற்பட்டு, முறையாக அந்த நான்கு கிராமங்களுக்கும் தண்ணீர் போக முடியவில்லை. அந்த ஊராட்சி ஒன்றியத்திலே ஒப்படைத்து விட்டு, இது நாள் வரையிலும் நான்கு ஆண்டுகள் ஆகியும், அந்த நான்கு கிராமங்களுக்கும் முறையாக குடிநீர் கிடைக்கவில்லை. ஆகவே கூட்டுக் குடிநீர்த் திட்டம் எந்த அளவிற்கு வெற்றி வாய்ப்பை பெற முடியும் என்று என்னால் சொல்ல முடியவில்லை. இரண்டு, இரண்டு கிராமங்களாகப் பிரித்து, மின்சார மோட்டார்கள் வைத்து, தனியாக இந்த நான்கு கிராமங்களுக்கும், குடிநீர் கொடுக்கின்ற வாய்ப்பை உருவாக்கித்கு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமில்லாமல், கைப்பம்புகளை நாம் அவசியம் போட வேண்டும். வறட்சி வரும்போது தான் நாம் கைப்பம்புகளைப் போட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 70, 72 கைப்பம்புகளைப் போடும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த உத்தரவிட்டு 4, 5 தினங்களுக்குள் மழை பெய்ததன் காரணமாக அதை நிறுத்தி விட்டார்கள். விவசாயிகளுக்கு மின்சார மோட்டார் மூலமாக பாதுகாக்கப்பட்ட தண்ணீரை கொடுப்பதாக இருந்தாலும், மின் இணைப்பு இல்லாத நேரத்தில், கிடைக்காத நேரத்தில்; இரண்டு கைப்பம்புகளைப் போடுகின்ற வாய்ப்பை அவசியம் உருவாக்கித் தர வேண்டும். அப்படிக் கொடுத்தால், மின் இணைப்பு தடைப் படுகிற நேரத்திலே, அந்தப் பகுதியிலே வைத்திருக்கின்ற கைப் பம்புகள் மூலமாக தண்ணீரை எடுத்துக் கொள்ள வாய்ப்பாக அமையும். கைப்பம்புகளும், மின்சார மோட்டார்களும் பழு தடைந்த 12 நாட்களுக்குள் அதைப் பழுது பார்த்து, சீர் செய்து தருவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு தாலுக்காவிற்கு 2 அல்லது 4, 6 ஒன்றியங்களுக்கு ஒருவர் என்று பழுது பார்ப்பவர்களை நியமனம் செய்கிறார்கள். ஆனால் அந்த பழுது பார்ப்பவரிடத்திலே இந்த மின்சார மோட்டார் பழுதடைந்திருக்கிறது என்று அங்கே சென்றால், அவர் ஒப்பந்தக்காரரிடம் போகிறார். வேறு ஒரு ஒப்பந்த காரரிடம் கொண்டு போய் கொடுத்து சரி செய்வதற்குள் ஒரு மாதம் ஆகிறது. ஆகவே கைப்பம்புகளை சரி செய்ய ஒருவரை யமனம் செய்து வைத்திருக்கிறோம். நிச்சயமாக நாம் 2

3 பேர்களை நியமனம் செய்யவேண்டும். மின் மோட்டார் பழுது பார்ப்பதற்காக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மின்பொறியாளர் ஒருவரை அவசியம் ஏற்படுத்த வேண்டும்.

அது மட்டுமல்ல, குடிநீர் வழங்குவதைப் பொறுத்தவரையில் 1, 2, 3 என்று 6 வரை பிரிவுகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கொப்ப பணிகளை மேற்கொண்டு வருகிறோம். 6 பிரிவுகளை கணக்கு எடுத்தவர்கள் வீட்டிலேயிருந்துகொண்டு எடுத்தார்களோ என்னவோ தெரியவில்லை. நாங்கள் போகிற போது ஊரிலே கிணறு இல்லை என்றாலும், கிணறு இருந்தாலும் உவர் நீராக இருந்தாலும், தண்ணீர் இருக்கிற கிராமங்கள் பட்டியலில் சேர்த்து பதிவு செய்திருக்கிறார்கள். அந்த கிளாசிபி கேஷனை மாற்றி அமைக்கவேண்டுமென்றால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எழுதிக் கொடுத்து, அது முறையாகப் போவதற்கு 1 மாதம் ஆகிறது. இப்படியே ஒவ்வொன்றாக மாற்றிக் கொண்டே இருப்பதால் ஒதுக்கப்பட்ட பணம் பணிகளுக்குச் செலவழிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, ஒதுக்கப்பட்ட பணம் முறையாகப்போய்ச் சேராது. ஆகவே முடியாது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். இப்போது மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்து இருக்கிற காரணத்தினால் அந்தப் பிரதிநிதிகளைக் கொண்டு, கிராம சேவக்குகளைக் கொண்டு, எந்த எந்த கிராமங்களிலே தண்ணீர் இல்லையோ அந்த கிராமங்களையெல்லாம் கணக்கெடுத்து தண்ணீர் இல்லாத கிராமங்களின் பட்டியலை முடிவாகத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே இந்த அரசு நல்ல முறையிலே அவர்கள் வாங்குகிற டிராக்டர்களுக்கு குறைந்த வட்டியிலே பணம் கொடுப்பதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. மானியமாகக் கொடுப்பதற்கான நிலையைக்கூட உருவாக்கவேண்டும்.

உதிரிப் பாகங்களைக் கொடுப்பதற்காக அக்ரோ சர்வீஸ் என்று வைத்திருந்தோம். இப்போது அவை பணியாற்றாமல் செயல் இழந்த நிலையில் இருப்பதை மாற்றி மீண்டும் அவை களுக்குப் புத்துயிர் ஊட்டி அவைகள் விவசாயிகளுக்குப் பயன் படுமாறு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிறு விவசாயிகளுக்கு— அவர்கள் ஏர் உழவேண்டும் என்று சொன்னால்— டிராக்டர்களை நாள் வாடகைக்குக் கொண்டுபோய் உழக்கூடிய வாய்ப்பு இருந்தது. இன்றைக்கு டிராக்டர்கள் எல்லாம் ஏலம் போடப்படுகிற சூழ்நிலை இருக் கிறது. அந்த டிராக்டர்களையெல்லாம் நல்லமுறையிலே செப்பனிட்டு அவர்களுக்கு உதவுகிற முறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





சிறு விவசாயிகளுக்கும், குறு விவசாயிகளுக்கும், கொடுக்கிற சலுகைகளைப்போன்று அனைத்து விவசாயிகளுக்கும் கொடுக்க வேண்டும். ஒரே சீராக எல்லோருக்கும் மானியங்களைக் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். பெரிய விவசாயியாக இருந்தாலும், அவர் உற்பத்தி செய்கிற நெல்லை தன் வீட்டுக்கு எடுத்துப் போவதில்லை, இந்த நாட்டு மக்களுக்குப் பயன் உள்ள வகையில் அரசுக்கு விற்கிற நிலையிலே தான் இருக்கிறார். ஆகவே மானியத் தொகையிலே கொடுக்கிற உரமாக இருந்தாலும்சரி, பூச்சி மருந்தாக இருந்தாலும்சரி 25 சதவீதம் மானியத் தொகை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பூச்சி மருந்துக்கு 50 சதவீதம், உரத்திற்கு 25 சதவீதம் அவசியம் மானியமாகக் கொடுத்து சோர்வடைந் திருக்கிற அந்த விவசாயிகள் சற்று விழிப்பாகப் பணிகளை மேற்கொள்வதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறத்திலே சென்று ஒரு விவசாயியைப் பார்த்து நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டால், விவசாயம் செய்கிறேன் என்று சொல்வதற்கு வெட்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. விவசாய நிலங்கள் அதிகமாக இருந்த நிலைமை மாறி இப்போது கணக்கு எடுப்போமானால் அவை சிறிது சிறிதாக வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன் படுத்துகிற நிலைமையில் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. விவசாயத்திலே நட்டம் வருகிறது. அதனால் அவர்கள் விவசாயத்தை விட்டு வேறு தொழில்களுக்குச் செல்கிறார்கள். அந்த வகையிலே அவர்கள் பயிரிடுவதற்கு முன்னாலேயிருந்து அதிகமான கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். நாற்று நட்டு 3 ஆம் நாளிலிருந்து நாற்றுக்களை குழந்தையைப் பார்ப்பது போல் அவர்கள் பார்க்கவேண்டியிருக்கிறது. எங்கள் பகுதியிலே ஐ. ஆர். 50 போட்டாலும் கையை வைக்க முடியாத அளவுக்கு புகையான் வந்து அடித்து, மாட்டை விட்டாலும் மேயாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட கஷ்டமான சூழ் நிலையை விவசாயிகள் அனுபவிக்கிறார்கள். ஆகவே, மற்ற தொழில்களை நடத்துகின்றவர்களுக்கு அறிவிக்கின்ற நல்ல தன்மைகளை, மானியமாகக் கொடுப்பவைகளைப் போல விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கொடுத்து இந்த அரசு அவர்களுடைய அன்பையும், ஆதரவையும் தேடிக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

(பிற்பகல் 1-30)

இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்த அவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

வரவு—செலவுத் திட்டம் 1986-87—வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

கோரிக்கை எண் 20—வேளாண்மை
கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல்
கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு
} தொடர்ச்சி

திரு. ஆர். கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை, குடிநீர் வழங்கல் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்திருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னைப் பேசுமாறு அழைத்தமைக்கு முதலில் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால் அன்னிய நாடுகளான பர்மா, ரங்கூன் போன்ற இடங்களிலிருந்து அரிசி நொய் வாங்கித்தான் வெள்ளைக்காரர்கள் நமக்கு அளித்து வந்தார்கள். ஆனால் நம் நாடு சுதந்திரம் பெற்ற பிறகு நாம் இன்றைக்கு தன்னிறைவு அடைந்திருக்கிறோம் என்று சொன்னால், உண்மையிலேயே தன்னிறைவு அடைந்திருக்கிறோம் என்று சொன்னால் அதற்கு மறைந்த பாரதப் பிரதமர் நேருஜி அவர்களும் பெரும் தலைவர் காமராஜ் அவர்களைப் போன்றவர்களும் இந்திய நாட்டிலே, தமிழகத்திலே பல அணைக்கட்டுகளைக் கட்டி, பல நீர்த்தேக்கங்களைக் கட்டி, இன்றைக்கு விவசாயத் துறையில், உணவு உற்பத்தியில் நாம் இந்தியாவிலே தன்னிறைவு பெற்று அன்னிய நாடுகளுக்கு அனுப்பக்கூடிய அளவிற்குக் கூட நாம் தன்னிறைவு அடைந்திருக்கிறோம் என்று சொன்னால் அதற்கு பெரும் தலைவர் காமராஜ், நேருஜி போன்றவர்கள் அமைத்த அஸ்திவாரம்தான் காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று தமிழகத்தில் வேளாண்மைத் துறைக்கு செய்திருக்கிற நிதி ஒதுக்கீட்டினைப் பார்க்கிறபோது—இன்றைக்கு நாம் சத்துணவுத் திட்டத்திற்காக ஐந்து இலட்சம் பிள்ளைகளுக்கு 160 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 56% மக்கள் தமிழகத்திலே விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் விவசாயத்திற்காக இன்று நாம் ஒதுக்கீடு

செய்திருக்கக்கூடிய தொகையைப் பார்க்கும்போது அது மிகமிகக் குறைவாக இருக்கிறது. இந்த 115 கோடி ரூபாயை வைத்துக் கொண்டு இன்றைக்கு நாம் விவசாயிகளுக்கு பெருவாரியான நன்மைகளைச் செய்துவிட முடியாது என்பது என் கருத்து. மோர்தானா அணைக்கட்டுத் திட்டம் பற்றி மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் காலத்தில் சர்வே செய்யப்பட்டு, அத்திட்டம் மற்றும் பல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படாமல் கைவிடப் பட்டு இன்றுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அந்த மோர்தானா அணைக்கட்டுத் திட்டத்தை நிறைவேற்றினால் கிட்டத்தட்ட நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பிருக்கும். அடிநீர் ஊற்று இருக்கும், கிணறுகளில் தண்ணீர் கிடைக்கும், ஆற்றில் எப்போதும் தண்ணீர் ஓடிக்கொண்டே இருக்கும். அதேபோல் அந்தப் பகுதியில் சேம்பள்ளி என்ற நீர்தேக்கத்தைக் கட்டினால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு அது பெரும் துணையாக இருக்கும். அதேபோன்று காளாமேட்டூர் நீர்த்தேக்கத்தைக் கட்டினால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு அது பெரிதும் உதவியாக இருக்கும்.

அதுமட்டுமல்ல. என் தொகுதியில் பாக்கம் ஏரி என்ற ஏரி இருக்கிறது. அந்த ஏரியை இப்போது நிலமாக ஆக்கி விட்டார்கள். மிகப் பெரிய ஏரி அது. கிட்டத்தட்ட இருபது ஏமல் விஸ்தீர்ணத்திற்கு தண்ணீர் வரும் ஏரி அது. அந்த ஏரியை வீட்டு மனை நிலங்களாக ஆக்கிவிட்டார்கள். அதேபோன்று தான் அமலாங்குப்பம் ஏரியையும் செய்திருக்கிறார்கள். பல்வேறு ஏரிகளில் தூர் எடுக்கவில்லை. பல கால்வாய்களில் தூர் எடுக்க வில்லை. இதை நான் சுட்டிக்காட்டக் காரணம், தமிழகத்தில் உள்ள மக்கள் தொகையில் 56% விவசாயப் பெருங்குடி மக்களாக இருக்கிறார்கள். அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் நாம் விவசாயத் துறைக்காக ஒதுக்கியிருக்கும் தொகை மிக மிகக் குறைவாகும் என்பதை மெத்தப்பணிவோடு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயத் துறைக்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்று சொன்னால் இன்னும் சில கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கி விவசாயம் மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்பெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களில் விவசாயக் கருவி களை வைத்து விவசாயிகளின் நன்மைக்காக அவர்களுக்கு புல் டோஸர்கள், ட்ராக்டர்கள், சமனப்படுத்தும் புல்டோசர்கள் ஆகியவற்றைக் கொடுத்து வந்தார்கள். என்ன காரணமோ தெரியவில்லை, இப்போது அந்த அக்ரோ சர்வீஸ் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. அது மறைந்துவிட்டது.

டிராக்டரின் உடைந்த பகுதிகள் எங்கோ ஒரு மூலையில் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்கள் டிராக்டர்களை சிறு விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுத்து வந்தார்கள். அது அவர்களுக்கு பலனளிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால், இன்றைக்கு அந்த டிராக்டர்கள் எல்லாம் எங்கு செல்லுகின்றனவென்று தெரியவில்லை.

அடுத்து, விதைகளைக் கொடுக்கிறார்கள். சிறு விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகளை, அதுவும் குறிப்பாக ஆதிதிராவிட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு குறைந்த விலையில் சப்சிடியுடன் அரசாங்கம் கொடுக்கிறது. அதற்காக பல லட்சக்கணக்கான ரூபாய் ஏழை எளிய மக்களுக்கு கொடுக்க ஒதுக்கப்படுகிறது. ஆனால். அவர்களுக்கு முறையாகக் கொடுக்கப்படுவதில்லை. என்ன நடக்கிறது என்றால், பேரம்தான் நடக்கிறது. அங்குள்ளவர்கள் யார் மீதோ பில் போட்டு, உரிய விவசாயிகளுக்குக் கொடுப்பதில்லை. எந்த விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் எண்ணுகிறார்களோ, மாண்புமிகு அமைச்சரவர்கள் எண்ணுகிறார்களோ அவர்களுக்குச் சென்று சேருவதில்லை. அதற்கு மாறாக, யார் பேரிலோ பில் போட்டு, அவற்றை அங்கிருக்கின்ற கிராமசேவக்கின் சர்டிபிகேட்டை வாங்கி அங்குள்ளவர்கள் வாங்கிச் சென்றுவிடுவதினால், சேர வேண்டியவர்களுக்குச் சேருவதில்லை என்ற நிலையைக் கண்டு வருத்தப்படுகிறேன்.

விவசாயிகளுக்கு குறிப்பிட்ட நேரத்தில் விதைகளைக் கொடுப்பதில்லை. விதைகளை ஆடியிலே கொடுப்பதற்கு மாறாக ஆவணியிலே கொடுக்கிறார்கள். அது மட்டுமல்ல. கொடுக்கக் கூடிய விதைகளை நேரம் காலத்தோடு குறிப்பிட்ட காலத்திலே அவர்களுக்குக் கொடுப்பதில்லை. குறிப்பாக, ஐ.ஆர்.56 என்னும் நெல் எங்கள் பகுதியிலே வெய்யிற் காலத்தில் வரக்கூடியது. அது பனிக் காலத்திலே வராது, ஆனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதையெல்லாம் பற்றி விவசாயிகளுக்கு முறையாகச் சொல்வதில்லை. அப்படிச் சொல்லாத காரணத்தினால் எங்கள் பகுதியிலே இந்த நெல் பயிர் புஞ்சை நிலத்திலே விளைந்த பயிர் போல் காட்சியளிக்கிறது. இன்றைக்கு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் அப்படி இருக்கிறது. நானே 5 ஏக்கர் நிலத்தில் இந்தப் பயிரைப் பயிரிட்டு, 10,000 ரூபாய் கடனாளியாக ஆனேன். இந்த நிலையை மாற்ற வேண்டும்.

அது மட்டுமல்ல, கடலைக்காய் விதைகளை சிறு விவசாயிகளுக்கு மானிய விலையிலே கொடுக்கின்ற நேரத்தில், அப்படி கொடுக்கப்படுகின்ற விதைகள் அந்த விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. அதை குறைந்த விலையில் கொடுப்பதால், யார் பேரிலோ பில் போட்டு, உரியவர்களுக்குப் போய்ச் சேராமல் யாருக்கோ போய்ச் சேருக்கின்ற நிலை இருக்கிறது. இது மிகவும் வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. அதேபோன்று, தரமான நெல் விதை கொடுக்கப்பட்டதை அரிசி ஆக்கி சம்பந்தப்பட்ட



வர்கள் சாப்பிட்டு இருக்கிறார்கள். நல்ல அரிசி கிடைக்க வேண்டுமென்று எண்ணினாலும், அந்த நெல்லோடு மண்ணைக் கலந்து விற்கிறார்கள். இப்படிப்பட்ட தரம்கெட்ட செயல்களை எல்லாம் செய்யக்கூடாது என்று நான் இந்த நேரத்திலே மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, விவசாயிகளுக்கு இன்றைக்குப் பல இடங்களிலே பழங்குடி மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு, அரிசன மக்களுக்கு தரிசு நிலங்கள் பட்டா போட்டுக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. எங்கள் பகுதியிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே இதுகுறித்து பலமுறை சொல்லி விட்டேன். தாசில்தார் அவர்களிடத்திலும் சொல்லிவிட்டேன். ஆனாலும், இதுவரை ஒரு ஏக்கர், அரை ஏக்கர் நிலம்கூட பட்டா போட்டு கொடுக்கப்பட்டதாக வரலாறு இல்லை. ஆனால், ஏழைகளுக்கு நிலம் பட்டா போட்டு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அரிசன மக்களுக்கு நிலம் பட்டா போட்டு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் எங்கள் பகுதியிலே இன்றைக்கு அவ்வாறு பட்டா போட்டு கொடுத்ததாகச் சொல்லமுடியாது. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றியமைக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. கால்வாய்கள் எல்லாம் தூர் எடுக்காத காரணத்தால், வருகின்ற தண்ணீர் சமுத்திரத்தில் போய்ச் சேருகின்றது. ஏரிகளுக்குச் செல்ல முடிவதில்லை; குளங்களுக்குச் செல்ல முடிவதில்லை; மற்றுமுள்ள நீர்த் தேக்கங்களுக்குச் செல்ல முடிவதில்லை. இத்தகைய சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. இதை உடனடியாக மாற்றியமைக்க வேண்டுமென்று, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்கு வெளி நாடுகளிலே இருந்து சர்க்கரை இறக்குமதி செய்கிறோம். நம் நாட்டிலே ஒரு காலத்திலே பிளேடு, ஊசி போன்றவைகளை வெளிநாடுகளிலே இருந்து இறக்குமதி செய்கின்ற நிலைமை இருந்தது. அதுபோய், நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையையில் உயர்ந்திருக்கிறோம். எல்லா வகைகளிலும் உயர்ந்திருக்கிறோம். ஆனால், இன்றைக்கு மத்திய அரசு மற்ற நாடுகளிலிருந்து சர்க்கரை, பாமாலின் எண்ணெய் ஆகியவற்றை இறக்குமதி செய்கிறது. கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுத்தால் அவர்கள் உற்பத்தியிலே கவனம் செலுத்தி அக்கறையோடு அதிகமாக உற்பத்தியைப் பெருக்குவார்கள். ஆனால், நாம் ரூ.10 ஏற்றுகிறோம் என்று சொன்னாலும்கூட, அதைக் கொடுக்க முடியாத நிலையிலே நாம் இருக்கிறோம். விவசாயிகளுக்கு ஆறு மாதங்களுக்குப் பிறகுகூட கொடுக்க வேண்டிய பில்லைக் கொடுக்க முடியாத நிலைமையிருக்கிறது. இந்த நிலைமையை எல்லாம் மாற்றவேண்டும்.

அது மட்டுமல்ல இன்றைக்கு சர்க்கரை ஆலைகளில், அங்கே தலைமைப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோ அல்லது அரசாங்கத்தால் அப்பாயின்ட் செய்யப்பட்ட பிரதிநிதிகளோ இல்லாத காரணத்தினால், அங்குள்ளவர்கள் சர்வாதிகாரப் போக்கிலே கரும்பை வெட்டி, 3, 4 நாட்கள் ஆன பிறகு மில்லுக்குச் செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. அந்த விவசாயி 10 டன்னை வெட்டிப் போட்டால், அது 7 டன்னாகக் காய்ந்து விடுகிறது. அந்த நிலைக்குப் பிறகு அந்த விவசாயிக்கு எப்படி ஊக்கம் வரும் என்பதை நீங்கள் சற்று எண்ணிப் பாருங்கள்.

(மாலை 4-10).

அது மட்டுமல்ல, கரும்பு விதை கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு நல்ல தரமான விதைகளைக் கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு முளை வராத விதைகளைக் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையெல்லாம் மாறவேண்டும்.

எங்களுடைய ஆம்பூர் சர்க்கரை ஆலையிலே, சர்க்கரைப் பாலை ஆற்றிலே விட்டுவிட்டார்கள். அங்கு, ஏழை விவசாயிகளுக்கு போனஸ் கொடுத்ததாகச் சரித்திரமே கிடையாது. எங்களுக்கெல்லாம் 10 பைசா போனஸ் கொடுத்தது கிடையாது. ஆனால் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்து, அதிகாரிகள் செயலின் காரணமாக, ஏதோ காரணத்திற்காக, சர்க்கரைப் பாலை ஆற்றிலே விட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அக்கிரமங்கள் மாற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த விவசாயிகளுக்கெல்லாம் நாம் நன்மை செய்வதாக, இன்றைக்கு நம்பிக்கொண்டிருக்கிறோம். ஆனால் என்ன நடக்கிறது? விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கடன்களைத் தள்ளுபடி செய்வதாக யாரோ பேசிவிட்டு, சிறு விவசாயி அந்தப் பணத்தைத் தள்ளிவிடுகிறார்கள் என்று நம்பி அவன் கட்டாமல் இருந்துவிட்டான். ஆனால் என்ன நிலைமை ஆகிவிட்டது. அவன் வீட்டிலிருந்த தட்டுமுட்டுச் சாமான்கள் அனைத்தும் ஜப்தி செய்யப்படுகிறது. நான், அவனுக்குக் கொடுத்த கடனைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்கவில்லை. சிறு விவசாயிக்கு, அவனுடைய கடன் வட்டியைத் தள்ளுபடி செய்யுங்கள்; பெரு விவசாயியிடம் எல்லாம் சேர்த்து வாங்குங்கள். அப்படியில்லாமல், எல்லோருக்கும் ஒன்றாகச் செய்யக்கூடாது. தற்போது அதிகாரிகள் சர்வ திகாரத் தன்மையோடு வீட்டுக்குள்ளே புகுந்து எதை வேண்டுமானாலும் எடுத்து வருகிறார்கள். இந்த நிலை மாற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து மின்சாரம். இன்றைக்கு நாட்டிலே என்ன நிலைமை? பம்ப் செட்டுக்கு மின்சாரம் வாங்க வேண்டுமென்றால் 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் அப்ளிகேஷன் போட்டு காத்திருக்க வேண்டும். 6 ஆண்டுகளுக்குப் பிறகு கேட்டாலும் கிடைக்குமா என்று தெரியாத நிலை. அவன் எங்கேயாவது கடன் வாங்கி, மின்சாரம் வரும் என்று எதிர்பார்க்கும்போது, மேலும் 2 ஆண்டுகள் காத்து கிடக்க வேண்டியிருக்கிறது. இதனால் சிறிய விவசாயிக்குக் கஷ்டம் ஏற்படுகிறது.

தமிழகத்திலே, தஞ்சை மாவட்டத்தைவிட தலைநிமிர்ந்து நிற்கக்கூடியது வட ஆற்காடு மாவட்டம். ரத்தத்தைச் சிந்தி விவசாயம் செய்யக்கூடிய மாவட்டம் அது. கிட்டத்தட்ட 300 அடி ஆழத்திலே இரண்டு மோட்டார்களை வைத்து, தண்ணீர் இறைத்து, பயிர் செய்யக்கூடிய மாவட்டம் அது. தஞ்சை மாவட்டத்தைவிட சிறந்த அளவிலே வட ஆற்காடு மாவட்டத்திலே விவசாயிகள் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கிடைக்கக்கூடிய பலன் என்ன? அங்கே பம்ப் செட்டுகளுக்கு கனெக்ஷன் இல்லை, கேட்டால் அப்படித்தான் கிடைக்கும், போய்யா என்று பதில் சொல்கிறார்கள். தாக்குறைவான வார்த்தைகளால் மரியாதை இல்லை. ஆகவே, அவர்களுக்கு முதலில் மரியாதைக் சற்றுத்தர வேண்டும். மரியாதையைச் சொல்லித் தரவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, கரன்ட் பில் கட்டாதது, விவசாயிகளுடைய குற்றமா? நீங்கள் மீட்டர் கணக்கு எடுக்காமல் 3 ஆண்டுக்கொரு முறை எடுத்தால்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதத்தில் இருப்பது வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை. இதில் மின்சாரத் துறை சம்பந்தமாகப் பேசினால், பதில் சொல்ல அமைச்சர் இல்லை. ஆகவே, அவையின்முன் உள்ள விவசாயத் துறை பற்றிப் பேசுங்கள்.

திரு. ஆர். கோவிந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளாக, கணக்கெடுத்து, பில்லைப் போட்டு, வசூல் செய்யாமல், தவறு செய்துவிட்டு, இப்பொழுது அந்த அப்பாவி விவசாயிகள் ஒரே நேரத்தில் மின் கட்டணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் அவர்கள் மின் கட்டணம் கட்ட வேண்டாமென்று சொல்லவில்லை. கட்டு என்றுதான் சொல்கிறோம். நான் சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் எனக்கு ஏர் பிடிக்கத் தெரியும்; விவசாய வேலைகள் அத்துப்படியாகத் தெரியும். அத்துறையில் உள்ள கஷ்டங்கள் எனக்குத் தெரியும். மற்ற எல்லாத் துறைகளிலும் ஸ்டிரைக் என்று சொன்னால், ஒரு நாளிலே அல்லது ஒரு மாதத்திலே அல்லது சற்று தள்ளி முடிவு செய்துவிடுகிறார்கள். ஆனால், விவசாயத் துறையில் பெருவாரியானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி யாரும் சிந்திப்பது கிடை யாது. அவர்கள் வாங்கிய கடனைக் கட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை

கட்டுவதற்கு தவணை கொடுங்கள். 10 தவணை, 5 தவணை என்று கொடுத்து, கட்டுவதற்கு உத்தரவு போடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு சிறு விவசாயிகள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் பட்டுச்சேலைக் கட்டியதை யாராவது பார்த்திருக்கிறீர்களா? கூடாத் துணியை ஒழுங்காக கட்டிக் கொள்வதற்கே முடியாமல் இருக்கிறார்கள், வசதி இல்லை. கஷ்டப்பட்டு கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை கூட ஒழுங்காகச் சாப்பிட முடியவில்லை. காலையிலே கஞ்சிதான் குடிக்கிறார்கள்; மத்தியானம் கூழ் கஞ்சிதான். இரவு ஒருவேளை தான் சாப்பாடு. இது ரொம்ப பேர்களுக்குத் தெரியாது. இந்த நாட்டிலே எவ்வளவு பேர்கள் இப்படி இருக்கிறார்கள்? 56 சத விதம் மக்கள் இந்த நிலையிலேதான் இருக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை; மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய புள்ளிவிவரம் சொல்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். பல ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களை பெட்டியிலே வைத்திருக்கலாம்; மதிப்பு வாய்ந்த நகைகளை வைத்திருக்கலாம், டயமன்ட் வைத்திருக்கலாம். ஆனால் அவற்றை எல்லாம் சமைத்து சாப்பிட முடியாது; அரிசியைத்தான் சமைத்து சாப்பிட முடியும் என்று சொன்னார்கள். டயமண்டை, பணத்தை சமைத்து சாப்பிட முடியாது. அரிசியைத்தான் சமைத்து சாப்பிடமுடியும் என்று சொன்னால் அதனுடைய பொருள் என்ன? விவசாயம் தான் முக்கியம், விவசாய விளைபொருள்தான் முக்கியம் என்பது தான்.

இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் பாரதப் பிரதமர் மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்கள் விவசாயிகளை இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று 1986–87 ஆம் ஆண்டு பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாய்கள் இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கிறார்கள். அவர்கள் நலனைக் காக்க வேண்டும். அவர்கள் உற்பத்தியைப் பெருக்க ஆர்வம் பெற வேண்டும். இவ்வளவு முக்கியமான இடத்திலிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் அன்றிலிருந்து இன்றுவரையில் வறுமையிலேயே வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிறந்த நாளிலிருந்தே ஒதுக்கப்பட்ட சமுதாயமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். கல், மண் தோன்றிய காலத் திலிருந்தே இந்த நிலையில்தான் இருக்கிறார்கள். கடவுள் அவர்களை இப்படித்தான் படைத்தானா? அவர்கள் நிலைமை எந்த அரசாங்கம் வந்தாலும் இப்படித்தான் இருக்கிறது. எம்.ஜி.ஆர். அரசாங்கம் அவர்களுக்கு, வறுமையில் இருக்கிற வர்களுக்கு துணி கொடுக்கிறது, வேறு சில உதவிகளைச் செய் கிறது. இருந்தாலும் அவர்கள் சமுதாயத்தில் முன்னேற்றமடைய வேண்டுமென்ற உணர்வு இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. வேளாண்மைத்துறை அவர்கள் பிரச்சனையிலே அக்கறை செலுத்தி, விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சனை களுக்குத் தீர்வு காணவேண்டும். (மணியடிக்கப்பெற்றது).



அடுத்து, என்னுடைய தொகுதி பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் மிகவும் ஆழத்தில் இருக்கிறது. கோவை மாவட்டத்தைப்போல ஆழத்தில் தண்ணீர் இருக்கிறது. இது ஒரு பக்கம், இன்னொரு பக்கத்தில் வந்தவாசி போன்ற இடங்களில் வெள்ளத்தால் அரிப்பு ஏற்பட்டு, எல்லாம் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. ஆகவே, எல்லாப் பகுதிகளிலும் தண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, அதைப் போக்க போர் போடுகிறார்கள். போர் போட ஒப்பந்தம் போடுகிறார்கள். அவர்கள் வந்து ஒரு இடத்திலே போர் போடுகிறார்கள். அந்த இடம் பாறையாக இருக்கிறது. 25,000 ரூபாய் போச்சு. அடுத்து, இன்னொரு இடத்தில் போடுகிறார்கள். அங்கே தண்ணீர் இல்லாமல் போய் விடுகிறது. அதிலே 25,000 ரூபாய் பாழாகிறது. இப்படியே பணத்தைப் பாழாக்காமல் எங்கே போர் போட்டால் தண்ணீர் கிடைக்கும் என்று பார்த்து, அங்கே போட்டால் இந்த விரையத்தைத் தடுக்கலாம் அல்லவா! ஒரு சொட்டு தண்ணீர் வராத இடம், அல்லது பாறையான இடம், இப்படிப் பட்ட இடங்களிலே போர் போடுவதைத் தவிர்க்க வேண்டும்.

என்னுடைய குடியாத்தம் தொகுதியிலே 44 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒன்றில்கூட தண்ணீர் கிடையாது; வறட்சி. நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், இந்திய நாட்டின் பிரதமர் மாண்புமிகு இராஜீவ் காந்தி அவர்களும் இந்த நாட்டு மக்களுக்கு சாப்பாடும் நல்ல குடிநீரும் அவசியம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் கொடுக்க முடிகிறதா? இல்லையே. இதைப் பார்க்கும் போது வேதனையாக இருக்கிறது. மேற்கு வங்கத்தைப்போன்ற நிலைமை இன்றைக்கு தமிழ்நாட்டிலும் வந்து கொண்டிருக் கிறது. நான் மேற்குவங்கத்துக்கு போகும்போது பார்த்திருக் கிறேன். அங்கே ஒரு சிறிய குட்டை இருக்கும். அதிலே ஒரு பக்கம் மாடு குளிக்கும்; ஒரு பக்கம் மனிதன் குளிப்பான், ஒரு பக்கம் குடிப்பான். அப்படிப்பட்ட நிலைமை தமிழ்நாடு முழுவதும் வந்துவிடும் போலிருக்கிறது. இந்த நிலைமையைப் போக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்; எல்லாக் கிராமங்களுக்கும் நல்ல குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சிப் பகுதிகளில் நிலைமை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. எங்கள் நகரசபையில் தண்ணீர் இருந்தும் மக்களுக்குக் கொடுக்க முடியவில்லை. காரணம், தண்ணீர் இருக்கிறது; கரண்டு இல்லை. ஆகவே, ஒவ்வொரு நகரசபைக்கும் ஒரு ஜெனரேட்டர் வழங்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். கோவிந்தசாமி] [1986 ஏப்ரல் 1

பஞ்சாயத்து யூனியன்களில் ஆழ்குழாய்கள் போடுகிறார்கள். போடுவதோடு சரி, அதைத் திரும்பப் பார்ப்பதே கிடையாது. ரிப்பேர் ஆனால் பழுது பார்க்க ஒரே ஒரு ஆள்தான் இருப்பார். ரிப்பேர் ஆகிவிட்டது என்று சொன்னால், அந்த இடத்திற்கு அவர் போய்ச் சேர மூன்று நாளாகும். இப்படியே போனால் யூனியன் முழுவதும் ஒரு ஆள் போய் பழுது பார்க்க ஒரு மாதத்திற்கு மேலாகும். ஆகவே, பராமரிப்பதற்கு, பழுது பார்ப்பதற்கு தகுந்த ஆள்களை நியமிக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற ஆழ்குழாய் கிணறுகளுக்கு ஏற்ப, அந்த விகிதாச்சாரப்படி ஆள்களைப் போட உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4–20.)

பேரூராட்சிகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் தண்ணீர் கொடுப்பதைப் பொறுத்தவரையில் பணம் கட்டினால்தான் கொடுக்கப்படும் என்று சொல்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால் தற்போது நகராட்சியினைச் சுற்றி இருக்கின்ற வீடுகளைப் பொறுத்தவரையில் எல்லாம் தண்ணீர் கொடுப்பதற்கு உரிய வகையில் ஏற்பாடு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் திரு.ப.உ.ச. அவர்களேகூடச் சொன்னார்கள். எனவே, அதுபோல் இந்த பேரூராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையிலும்கூட பணம் கட்டவில்லை என்று சொன்னாலும்கூட அரசாங்கம் தயவு கூர்ந்து அவற்றையும் எடுத்துக் கொண்டு தண்ணீர் சப்ளை செய்ய வேண்டும் என்று மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் இங்கே அவைமுன் வைக்கப்பட்டிருக்கக்கூடிய வேளாண்மைத் துறை, குடிநீர் வழங்குதுறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நான் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் சில கருத்துக்களை முன் வைக்க விழைகிறேன்.

குறிப்பாக நம்முடைய வேளாண்மைத் துறையால் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய கொள்கை விளக்கக் குறிப்பில் ஏராளமான விவரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறோம் என்றெல்லாம்கூட அதிலே அவர்கள் விளக்கி இருக்கிறார்கள். அத்தனையையும் சேர்த்துப் பார்த்தாலும் விவசாயத்திற்குரிய முக்கியமான தேவை என்பது தண்ணீர்தான். அடிப்படையான மூலப்பொருளாகத் தண்ணீர்தான் தேவைப்படுகிறது. எனவே, எல்லாம் இருந்து, தண்ணீர் இல்லை என்றால் விவசாயம் செய்வது சாத்தியமற்றதாக ஆகிவிடும் என்பது நம்முடைய வேளாண்மைத் துறை முழுவதற்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியும். ஆனால் இப்போது அந்த அடிப்படைப் பொருளான தண்ணீர் கிடைப்பதைப்



1986 ஏப்ரல் 1] [திரு. கோ. வீரய்யன்]

பொறுத்தவரையில் விவசாயத்திற்கு ஒரு மிகப் பெரிய பிரச்சினை தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது. சுமார் 25 முதல் 30 இலட்சம் ஏக்கர் வரையில் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட பாசன வசதியைப் பெற்று பல்லாண்டுக் காலமாக விவசாயம் நடை பெற்று வந்த காவிரிப் பாசனப் பகுதியில் கடந்த 12 ஆண்டு காலத்திற்கும் மேலாக ஒரு நிச்சயமற்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஒரு காலத்தில் பொன் விளையும் நாடு என்று போற்றப் பட்ட அந்தப் பகுதி இப்போது பாலைவன நாடாக மாறிக் கொண்டிருக்கிற காட்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். இந்த ஆண்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் தண்ணீர் இன்றி தரிசாகக் கிடக்கின்ற காட்சியைக் காண்கின்ற நிலைமை இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திலே அதிகமான அளவுக்கு மழை பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற சூழ்நிலை இருந்தாலும்கூட உரிய காலத்தில் தண்ணீர் கிடைக்காததால் அங்கே விவசாயம் செய்ய முடியாமல் தரிசாகப் போட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அரசுக்குச் சொந்தமான கரும்புப் பண்ணைக் கழகத்தில் 4,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களைக் கொண்ட அந்தப் பண்ணையில்கூட பெரும் பகுதியில் தண்ணீர் வராததால் தரிசாகப் போட்டிருக்கிறார்கள் என்பதை நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள்.

இந்த அறிக்கையில்கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதல் பக்கத்தில் மூன்றாவது பாராவில் இந்த ஆண்டு தண்ணீர் காலத்தில் வராததால் குறுவை சாகுபடியில் 32 சதவீதம் உற்பத்தி இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இப்படி ஒரு போகத்தில் 32 சதவீதம் இழப்பு என்று சொன்னால் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டிருக்கிறது, ஏனென்றால் அந்த விவசாயத்திற்குத் தேவையான மூலப்பொருள் கிடைக்காத காரணத்தால். தமிழகத்திலே இன்னொரு பக்கத்திலே ஒட்டுமொத்தமாக, பொதுவாக முழுவதுமாகச் சேர்த்துச் சொல்கின்ற இடத்திலே முயற்சிக்கிறோம் உற்பத்தி இலக்கை எட்டுவதற்கு நாங்கள் நாம் என்று கூறிக்கொண்டாலும்கூட, அதாவது பொதுவாக தனிப் உற்பத்தி இலக்கை எட்டுவதற்கு முயற்சித்தாலும்கூட தண்ணீர் பட்ட விவசாயிகள் மூலப்பொருளாக இருக்கக்கூடிய பாதிக்கப் கிடைக்காததால் பாதிக்கப்படுகிறார்கள். அவ்வாறு பாதுகாக்க கின்ற அவர்களை அந்த பாதிப்புகளிலிருந்து பொருத்த முடியாத சூழ்நிலையில் அந்தக் குடும்பங்கள் வாழ்க்கையே துன்பத்திற்கு ஆளாகி இன்றைக்கு அவர்களுடைய இந்த விவசாயத்தை கேள்விக்குறியாக மாறிக்கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 12 நம்பி இருக்கக்கூடிய தஞ்சை மாவட்டத்தில் இலட்சம் தொழிலாளர்கள் இந்தத் தொழிலைத்தான் நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்களாக இருக்கிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் வேலை இழப்பு ஏற்படுகிற காரணத்தால் அந்தக் குடும்பம் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாகக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு அடிப்படையான, தமிழகத்தை பெரும் அளவுக்கு பாதித்துக் கொண்டிருக்கக்கூடிய தமிழகத்தின் உணவு உற்பத்தியை தாங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்னையிலே காவிரி தண்ணீர் பிரச்னையிலே—தீர்ப்பதற்கு முடியாமல் பேச்சு வார்த்தையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. கடைசியிலே இந்த ஆண்டு நாம் மின்சாரத்தைக் கொடுத்து தண்ணீர் வாங்கக்கூடிய அளவுக்கு ஒரு பண்டமாற்று என்ற அளவுக்கே பெற்றிருக்கிறோம் என்பதை பார்க்க முடிகிறது. எனவே காவிரி தண்ணீர் பிரச்னையை தீர்த்து, நமக்கு உரிய பங்கு எவ்வளவு கிடைக் கிறது. அதுபோக மீதியை நாம் எப்படி சமாளிப்பது என்பதை தீர்மானிப்பதற்கு ஒரு துரிதமான முயற்சியை அரசு எடுப்பதற்குப் பதிலாக, பேச்சு வார்த்தை நடத்துகிறோம். இருதரப்புபேச்சு வார்த்தைகளுக்கு முயற்சிக்கிறோம் என்றெல்லாம் தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னை இரண்டு மாநிலங்கள் பொறுத்ததாக இருந்தாலும்—கர்நாடகம் தமிழகம் ஆகிய இரண்டு மாநிலங்கள் மட்டும் பொறுத்ததாக !ருந் தாலும்—பேச்சுவார்த்தை என்று வருகிறபோது 4 மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால் கர்நாடகம், தமிழகம் ஆகியவற்றோடு கேரளம் பாண்டிச்சேரியும் சேர்ந்து, 4 மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்னையாக ஆகிவிடுகிறது. ஆகவே அதை மேலும் மேலும் நீடித்துக் கொண்டே போகாமல் எவ்வளவு சீக்கிரமாக தீர்க்கப்படுகிறதோ அந்த அளவுக்கு ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த இழப்பும், அதனால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய விவசாய குடும்பங்களும் காப்பாற்றப்படுவார்கள். ஆகவே அரசு அதற்கு துரிதமான முயற்சிகளை எடுக்க வேண்டும். அப்படி எடுக்காமல் காலம் கடத்திக் கொண்டே வருவது சரியாகாது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன். இப்படி தொடர்ந்து இந்த நிலைமையே ஏற்படுமானால்—இந்த ஆண்டு ஏதோ சமாளித்து விட்டோம்—வருகிற ஆண்டுக்கு இலக்கை நிர்ணயித்து தீர்மானித்து இருக் கிறோம். ஆனால் விவசாயத்திற்குத் தேவையான மூலப் பொருள் தண்ணீர் கிடைக்காத காரணத்தால்-உணவுப் பொருள் முன்னேற்றத்தில் நாம் எந்த அளவுக்கு வெற்றி பெறுவோம் என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இந்த நிலைமை இப்படியே நீடிக்குமேயானால் விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் தன்னுடைய கையிலுள்ள மூலப்பொரு ளையும் இழந்து உற்பத்தியையும் இழந்து கடன் பட்டு அந்தக் கடனிலிருந்து விடுபட முடியாதவர்களாக ஒரு நிர்ப்பந்த நிலையிலே அவர்களைக் கொண்டு போய் தள்ளி விடுவீர்கள். அப்படித் தள்ளி விடாதீர்கள் என்றுதான் கூற விரும்பு கிறேன்.



அதேபோலத்தான் அடுத்தபடியாக வரக்கூடிய மூலப்பொருள் உற்பத்திக்கான விதை. அந்த விதைகளைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடும்போது இந்த அரசு 45 விதைப் பண்ணைகளை வைத்து நடத்தி விதைகளை உருவாக்கச் செய்து, அதை விவசாயிகளுக்கு வழங்குகிறது என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது. அத்தோடு இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், வணிக ரீதியாக அந்த விதைப் பண்ணைகள் நடத்தப்படுகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அடிப்படை தேவையான விதையை உருவாக்கக்கூடிய அந்த விதைப் பண்ணையை வியாபார ரீதியில் லாப நட்டக் கணக்குப் பார்த்து, நட்டம் ஏற்படுமானால் அதை முழுவதும் ஈடு செய்ய விவசாயிகளிடத்திலேயிருந்து பெறக்கூடிய முயற்சியிலே ஈடுபடுவது என்பது சரியல்ல. வேளாண்மைக்கு வசதி செய்து கொடுக்கின்ற வகையில், விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய வகையில், அந்த விதைப் பண்ணைகள் உருவாக்கக்கூடிய விதைகளை விவசாயிகளுக்கு வியாபார ரீதியில் கொடுக்காமல், அவர்களுக்கு உதவி செய்யக் கூடிய முறையிலே வினியோகிக்க வேண்டும்.

(மாலை 4-30)

அதோடு மட்டும் அல்லாமல் பல தனிப்பட்ட விவசாயி களிடமிருந்தும் விதைகளைப் பெற்று அவைகளை வினியோகிப் பதற்கான முயற்சிகளை அரசு செய்து வருகிறது. அப்படி விதைகளைப் பெற்று விவசாயிகளுக்கு விலையைக் கொடுப்பதில் பல பிரச்னைகள் எற்படுகின்றன. குறிப்பாக குடவாசல் பட்டணத்தில் 1985 ஆம் ஆண்டு துவக்கத்தில் சித்தாரி என்ற கிராமத்தில் முத்தையன் என்ற விவசாயிடம் 8 டன் விதையை எடை போட்டு எடுத்துச் சென்றார்கள். ஒரு பகுதியைக்கூட தொகை கட்டிவிட்டிருக்கிறார்கள். ஆனால் டிசம்பரில் 1985 ஆம் ஆண்டு கடைசியில் அவருக்கு ஒரு கடிதம் வருகிறது. அதிலே அந்த விதை சரியாக இல்லை, உற்பத்தித் திறன் இல்லை எனவே பணத்தைத் திரும்பக் கட்டிவிட்டு, 8 டன் விதையையும் திருப்பி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி அந்தக் கடிதத்திலே தகவல் அளிக்கப்படுகிறது. 12 ஆயிரம் ரூபாய் அவர் பணமும் கட்டிவிட்டார்,மீதியையும் கட்டிவிட்டு வெளியிலே அதை எடுத்து செல்லும்போது எப்படி விற்பார்? அந்த 8 டன் நெல்லை அரசு இருப்பில் வைக்க அனுமதித்ததற்குப்பதிலாக அந்த நேரத்திலேயே அவர் விற்றிருந்தால் அரசு நிர்ணயித்த விலையோடு அரசு மானியமும் அவருக்கு சேர்ந்து கிடைத்திருக்கும். இந்த ஓராண்டிற்குள்ளே ஏறத்தாழ 18 ஆயிரம், 20 ஆயிரம் அளவிற்கு மூலதனம் முடக்கப்பட்டு அந்த விவசாயிகள் பாதிக்கப் பட்டு, பணத்தைத் திருப்பி கட்டமுடியாமல் மிகப்பெரிய அளவிற்கு அவதிக்கு ஆளாகி, ஏதோ ஒரு வியாபாரியை பிடித்து போய் நீங்கள் பணத்தை கொடுத்து போட்ட நெல்லை எடுத்துக்

கொண்டு எனக்கு பாக்கிப் பணத்தைக் கொடுங்கள் என்று கூறவேண்டிய அளவிற்கு நிலைமை ஏற்பட்டது. விவசாயிகளிடம் அந்த நிர்வாகம் இப்படி நடந்து கொள்ளுமானால் அந்த விவசாயிகள் எப்படி விதையைக் கொடுக்க முன்வருவார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இப்படி அரசு நிர்மாணித்த் விலையை விட ஒரு கிலோவிற்கு 75 காசு அதிகபடியாக கொடுக்கிறார்கள். அதை களத்து மேட்டிலேயே 75 காசுக்கு பதிலாக 50 காசு கொடுத்தாலும் அன்றோடு அவர் கணக்கு தீர்ந்தது. அதை நெல்லாக விற்று விவசாயத் துறை ஈடு கட்டிக் கொள்கிற முறையிலே முயற்சிக்க வேண்டும். 75 காசு கொடுக்கிறோமென்று சொல்லி ஓராண்டிற்குப் பிறகு திருப்பி எடுத்துக் கொள்ளுங்கள் என்று விவசாயிகளைத் தொந்தரவுக்கு ஆளாக்குவது சரியல்ல. நீங்கள் அந்த விலையை இன்னும் குறைவாக கொடுத்தாலும் அன்றோடு விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பிரச்னை முடிந்தது. அந்த நிலை ஏற்படுமானால் அடுத்தடுத்து விதை உற்பத்தி செய்து கொடுப்பதற்கு அந்த விவசாயிகள் முன்னுக்கு வருவார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல 35 ரூபாய் விவசாயிகளுக்கு மானியம் கொடுக்கப்படுகிறது. அது விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய முறையிலே வழங்கப்படுகிறது. அதற்கு பல கோடி ரூபாய்களை மாநில அரசு கொடுத்திருக்கிறது என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நான் குற்றம் சுமத்துவதற் காகச் சொல்லவில்லை. என்னைப் பொறுத்தவரையில் விவசாயி களுக்கு உதவி செய்யக்கூடிய நோக்கத்தோடு இந்த 35 ரூபாய் மானியம் கொடுக்கிறோம் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அப்படி விவசாயிகளுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் அந்த மானியம் வழங்கப்படுமானால் தமிழகம் முழுவதும் இருக்கிற விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கு அரசு கொள்முதல் செய்துகொண்டு இந்த 35 ரூபாய் மானியம் என்பதை வழங்கியிருக்க முடியும். அப்படி வழங்கியிருக்க வேண்டும். ஆனால் நாட்டிலே வறட்சி இருக்கிறது, வெள்ளம் வருகிறது, அரசுக்கு உணவுப் பொருள் தேவைப்படு கிறது. அதற்காக காவேரி டெல்டா பகுதி முழுவதையும் அரசு ஏகபோக கொள்முதலாக எடுத்துக் கொண்டு இருக்கிறது. அன்னிய மாநிலங்களுக்குச் சென்று, அடுத்த மாநிலங்களுக்குச் சென்று நாம் நம்முடைய தேவைக்கு அரசு வாங்குமானால் இதைவிட செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். ஒருகாலத்தில் இந்த மாநில அரசுக்கு அந்தச் செலவு ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் அப்படி ஏற்படும். அப்படி ஏற்படாமல் தடுப்பதற்கு இந்தக் காவிரி. . . .

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, 35 ரூபாய் கொடுப்பதை அரசு கொள்முதல் செய் வதற்காக கொடுக்கிறது. அதை ஏதோ அரசு சுயநலத்திற்காக. அரசிற்கு உணவுப்பொருள் தேவைப்படுகிறது. அதற்காக



கொடுக்கிறது என்று சொல்கிறார்கள். அரசு உணவுப்பொருள் என்பதை எதற்கு பயன்படுத்துகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

திரு. கோ. வீரய்யன்: துணைத் தலைவர் அவர்களே, அரசு கொள்முதல் செய்து அரசே எடுத்துக்கொள்கிறது என்று சொல்லவில்லை. தமிழகத்தில் இருக்கிற மக்களுக்கு கொடுப்பதற்கு தான் கொள்முதல் செய்கிறது என்பதைத் தெரிந்தே தான் சொல்கிறேன். விவசாயிகளுக்கு உதவி செய்கிற முறையிலே தமிழகம் முழுவதும் இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லை ஏகபோகமாக அரசே கொள்முதல் செய்துகொண்டு அனைத்து விவசாயிகளுக்கும் இந்த 35 ரூபாய் மானியம் கொடுத்து உதவி செய்யவேண்டுமென்பதே என்னுடைய வேண்டுகோளாகும். அதைப்போல காவிரி பாசன விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதற்கு இந்த மானியம் கொடுப்பது 31-3-86 வரையில் தான் என்று அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு அவர்கள் தமிழகத்தில் வறட்சியால், வெள்ளத்தால், புயலால் மக்கள் வறுமையால் பாதிக்கப்படுகிற நேரத்தில் காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் தான் உதவுகிறார்கள் என்ற அடிப்படையில், இலாப நோக்கத்தோடு இல்லாமல் தியாகம் செய்கிறார்கள் என்ற அடிப்படையில் தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதரிக் கிறார்களா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கோ. வீரய்யன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றை குறிப்பிட்டுள்ளார்கள். காவிரி பாசன விவசாயிகள் தியாகம் செய்ய வேண்டுமென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை அரசு ஏற்று அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். காவிரி பாசன விவசாயிகள், குறிப்பாக தஞ்சை மாவட்ட விவசாயிகள் என்றைக்கும் அந்தத் தியாகத்தைச் செய்ய தயாராக இருப்பவர்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்போல இந்த 35 ரூபாய் என்பது 31-3-86 வரையில் தான் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. அதுமேலும் தொடர்கிறதா என்று அறிய விரும்புகிறேன். மேலும் தொடர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இந்த வடபாதிமங்கலத்தில் உள்ள கரும்புப் பண்ணைக் கழகத்தைப் பற்றி இந்த அறிக்கையிலே கொடுக்கப் பட்டு இருக்கிறது. இதன் மீது அரசு ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்று நம்முடைய அவையிலே வைக்கப்பட்ட பொது நிறுவனங்கள் குழுவின் 12—வது அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 15—4—83 ஆம் தேதி அன்று சட்ட பேரவையில் வைக்கப்பட்ட தன்னுடைய 30-வது அறிக்கையில்,

இந்தக் கழகத்தின் வருங்காலம் குறித்து முடிவு எடுப்பதில் மேற்கொண்டு காலதாமதம் ஏற்பட்டால் அதன் விளைவாக இந்தக் கழகத்திற்கு மேலும் இழப்பு ஏற்படும் ஆதலால், இந்த விஷயம் குறித்து விரைவாக அரசு முடிவு எடுக்கவேண்டும் என்று குழு ஏற்கனவே பரிந்துரை செய்துள்ளது. மேற்சொன்ன பரிந்துரை அளிக்கப்பட்டு, 2 ஆண்டுக்காலத்திற்கு மேலாக ஆகியும் இதுகுறித்து இன்னும் முடிவு எடுக்கப்படாமல் இருப்பது குறித்து குழு கவலை அளிக்கிறது, எனவே இந்தக் கழகத்தை விரைவில் மூடவேண்டும் என்று பரிந்துரை செய்கிறது. அந்தப் பரிந்துரை இந்த அவைக்கு முன்னாலே வைக்கப்பட்டும் கூட, நான்காயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்கள், ஏறக்குறைய 1 கோடி ரூபாய் அளவிற்கு நெருக்கி, இன்றைக்கு நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் இந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்தை தொடர்ந்து வைத்துக்கொண்டு இருப்பது என்பது மேலும் அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சியாக இருக்கிறது. எனவே இதைக் கலைத்து அந்தப் பகுதியில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டும். அந்தப் பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர்களை நில சீர்திருத்த சட்டத்திலேயிருந்து ஏமாற்றுவதற்காக, வஞ்சிப்பதற்காக, மோசடி செய்வதற்காக உண்டாக்கப்பட்டதுதான் தனியார் தரப்பிலே ஆரம்பிக்கப்பட்ட இந்த கரும்பு பண்ணைக் கழகம். அதற்குப் பிறகு இது அரசு கரும்புப் பண்ணைக் கழகமாக மாற்றப்பட்டது. இப்போதாவது அரசு இதைக் கலைத்து விட்டு, அந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த நிலத்தை வழங்குவதற்கு முன்னுக்கு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தஞ்சையில் காட்டுத் தோட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். இந்த ஆண்டு அதைப்பற்றி அறிக்கையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனவே வரும் ஆண்டிலாவது இந்தக் காட்டுத் தோட்டத்திலே அந்த வேளாண்மைக் கல்லூரியை துவக்கித் தருவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த விவசாயிகளுடைய விளை பொருட்களினுடைய விலையைப் பொறுத்தவரையிலும், மிகப் பெரிய அளவிற்கு அவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. உரிய விலை கிடைப்பதற்கு வழியில்லை. நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. கரும்புக்கு விலை கிடைக்கவில்லை, பருத்திக்கு விலை கிடைக்கவில்லை என்று சொன்னாலும், நீலகிரி மாவட்டத்திற்குச் சென்றால், அங்கே ஒரு கிலோ பச்சைத் தேயிலை 1 ரூபாய் 60 காசுக்கு சாதாரண விவசாயிகள் விற்றுக்கொண்டு இருக்கிறார்கள் ஆனால் அந்தத் தேயிலை இங்கே வெளியே 1 கிலோ, பதப்படுத்தப்பட்ட தேயிலை 30 ரூபாயிலிருந்து 3





ரூபாய் வரையிலும் வாங்குகிறோம். ஆனால் அங்கேயிருக்கக் கூடிய விவசாயிகள் 1 கிலோ பச்சைத் தேயிலைக்கு 1.60 காசு தான் கிடைக்கின்றது. இப்படி சாதாரண ஏழை எளிய விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்காத நிலைமை எல்லாப் பொருட்களிலும் இருக்கிறது. அதைப் பெருக்கம் செய்வதற்கான ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்துவதற்கும், விவசாய விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் தனி அதிகாரிகளுடைய பொறுப்பிலே இருப்பதை மாற்றி துரிதமாக அவைகளுக்கு தேர்தல் நடத்துவதற்கும், உற்பத்திச் செலவை ஈடுகட்டக்கூடிய அளவிற்கு விலை கிடைப்பதற்கும் உத்தரவாதம் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த 3 ஆண்டுக்காலத்துக்குள், 21 சதவீதம் உற்பத்திச் செலவு கூடியிருக்கிறது. 1983-க்குப் பிறகு, 1986-க்குள், விவசாய உற்பத்திச் செலவு நெல்லுக்கு 21 சதவீதம் கூடியிருக்கிறது. ஆனால் அரசு உயர்த்திக் கொடுத்து இருப்பது, இந்த 3 ஆண்டுக்காலத்திலே 13 சதவீதம் தான். எனவே இந்த உற்பத்திச் செலவிலே கூட அந்த விவசாயிகளுக்கு 8 சதவீதம் இழப்பு ஏற்படுகிறது. எப்படி அவர்கள் வாழமுடியும்? எப்படி அவர்கள் கடன்களிலேயிருந்து மீள முடியும் என்பதை அரசு யோசித்து அவர்களுக்கு உற்பத்திச் செலவு கட்டுப்படியாகக்கூடிய அளவிற்கு, அந்த விலையை தீர்மானித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக இந்த அக்ரோ சென்டரிலே இருக்கக்கூடிய கருவிகள் முழுவதும் பழுதுபட்டுக் கிடக்கின்றன. அவைகளைச் சீர்படுத்தி விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய முறையில், உதவி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 100 கதிர் அடிக்கும் களங்கள் 20 லட்சம் செலவில் தஞ்சை மாவட்டத்திலே கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் 1,200 ரெவின்யூ கிராமங்களைக் கொண்ட அந்த மாவட்டத்தில் 100 கிராமங்களில் மட்டும் இந்த களங்களைக் கட்டினால், அங்கே உள்ள விவசாயிகளுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். எனவே மழைக் காலங்களில் விவசாயிகள் தங்களுடைய விளை பொருட்களுக்கு எந்தவிதமான சேதாரமும் இல்லாமல் அந்த மகசூலை எடுப்பதற்கு உதவியாக, அந்த சிறு விவசாயிகளுக்கு தார்பாய்களை மானியமாகக் கொடுத்து உதவிசெய்தால் அந்த விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். ஒரு கிராமத்திற்கு ஒரு களம் கட்டுவதைவிட, 1,200 ரெவின்யூ கிராமங்களில் உள்ள விவசாயிகள் இதனால் பயன் பெறாமல் இருப்பதைவிட ஒவ்வொரு விவசாயிக்குப் ஒரு தார் பாயைக்கொடுத்தால், மிகுந்த சேதாரம் இல்லாமல் எடுப்பதற்கு அவர்களுக்கு உதவியாக, இருக்கும். அதை அரசு பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கோ. வீரய்யன்] [1986 ஏப்ரல்

அதோடு மட்டுமல்லாமல், இந்த வறட்சியாலும், வெள்ளத் தாலும் பல்வேறு நோய்களினாலும் விவசாயம் அடிக்கடி பாதிக் கப்படுகிறது. எனவே நிரந்தரமாக அவர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு உதவி செய்வதற்கு பொது நிதி ஒன்றை, விவசாயத் துறையிலே அரசு ஏற்படுத்து வதற்கு முயற்சிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4.40)

கடைசியாக இந்த குடி தண்ணீர் வாரியத்தின் குடிநீர் வழங்கு துறையிலே குறிப்பாக நாகை தொகுதியைப் பொறுத்தவரையில் பல்வேறு கிராமங்களில். அக்கரைப்பேட்டை, இதுபோன்ற ஈச்சாங்குப்பம் அதாவது சோழவித்தியாபுரம், பெரியசங்கூர் போன்ற கிராமங்களிலே குளத்துத் தண்ணீரையும் ஆற்றுத் தண்ணீரையும்தான் அவர்கள் குடித்து வாழவேண்டியதிருக்கிறது. இந்தக் கோடையிலே குளங்களும், கால்வாய்களும் காய்ந்து தண்ணீர் இல்லாத நேரத்தில் அந்த மக்கள் அவதிபடவேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே அந்தக் கிராமங்களுக்கு பாதுகாக்கப் பட்ட தண்ணீர் வழங்குவதோடு இந்தக் குடிதண்ணீர் வழங்கப்பட இருக்கக்கூடிய இடங்களிலே வேலைகளை கவனிக்க வேண்டு மென்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

குழாய்கள் பதிக்கும்போது, இரும்பு குழாய்களுக்கு பதிலாக பாரின் குழாய்கள் இப்போது பதிக்கப்படுகிறது. அப்படிப் பதிக்கப்படுகிறபோது 3 அடிக்குகீழே அந்தக் குழாய்கள் பதிக்கப்பட்டால்தான் அது பாதுகாப்பாக இருக்கமுடியும். ஏன் என்று சொன்னால் 3 அடிக்குமேலே இருந்துவிட்டால் எலிகள் வளை தோண்டுவது 3 அடி; எலிகளால் வளை தோண்டமுடியும். அப்படி வளை தோண்டும்போது இந்த பைப்களை அவைகள் கடித்துவிடுவதன் காரணமாக ஆங்காங்கே தண்ணீர் பூராவும் வெளியிலே போய் மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்காத அவஸ்தையும் சங்கடமும் ஏற்படுகிறது. எனவே காண்ட்ராக்டர் களை போடும்போது அல்லது அந்த துறையே நேரடியாகப் போடும்போதுகூட ஒரு அடி ஒன்றரை அடி ஆழத்திலேயே அவர்கள் இந்த பைப்பை போட்டுவிடுகிறார்கள். அப்போது எலிகள் வளைதோண்டும்போது அந்தப் பைப்புகளிலே துளை போட்டு விடுகின்றன. அதனால் குடிதண்ணீர் வழங்கப்பட்ட இடங்களில்கூட பாதிப்பு ஏற்படுகிறது. போட்டால் 3 அடிக்கு கீழே போடவேண்டும் அல்லது இரும்பு குழாய்களை போட வேண்டும். அப்போதுதான் அது பாதிக்காத நிலையில் இருக்கும் என்பதை கவனத்தில் கொண்டு, அந்தத் துறை இதனைக் கவனிப்பதோடு, கிராமத்திலே இருக்கிற மக்களுக்கு குடிதண்ணீர் கிடைப்பதற்கான ஒரு உத்தரவை துரிதமாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்; வணக்கம்.



[1986 ஏப்ரல் 1

*திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கை விவாதம் முடிந்து முதன் முதலிலே மானிய கோரிக்கையாக இங்கே வைக்கப்பட்டி ருக்கின்ற வேளாண் துறை மானிய கோரிக்கையை குடிநீர் வடிகால் வாரியத்தின் வகையிலே வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துக் கூறலாம் என்று நினைக்கிறேன். காலையிலே இந்த விவாதத்திலே பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த நாட்டிலே தெளிவான கருத்தைச் சொல்லி நம்மையெல்லாம் விழிப்படைய வைத்த வள்ளுவ பெருந்தகையார் சொன்ன கருத்தையெல்லாம் சொல்லி அவர்கள் விவசாயத்திலே இதை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அதைத் தொடர்ந்து ஆளும்கட்சி உறுப்பினராகவும், அரசு கொறடாவாகவும் இருக்கின்ற மாண்புமிகு நமது கொறடா அவர்கள் வள்ளுவ பெருந்தகையார் அவர்கள் சொன்ன கருத்தைச் சொல்லி அவர் இப்பாரேயானால் வேதனையடைந்திருப்பார் என்ற கருத்தையும் இங்கே சொல்லி அவருக்கே உரிய பாணியில் பல கருத்துக்களை இங்கே சொன்னார்கள். நான் இந்த நேரத்திலே எனக்கு தெரிந்த கருத்தைச் சொல்ல விழைவது எல்லாம் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்று போன தலை முறையிலே தோன்றி மறைந்த பாரதியார் அவர்கள் ரொம்ப பக்குவமாகவே கருத்தை இங்கே சொல்லிவிட்டு சென்றிருக் கிறார்கள். அதற்குப் பின்னாலே மிகப் புரட்சிகரமான கருத்தை பாரதியினுடைய வழித்தோன்றலாக தமிழ் மண்ணிலே தோன்றி இங்கே நமக்கு கருத்து சொல்லிவிட்டு சென்ற புரட்சி கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் சொன்னார்; 'உழவன் சேற்றிலே கைவைக்கவில்லை என்றால் நாம் சோற்றிலே கைவைக்க முடியாது' என்ற கருத்தை......

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர் களே, பாரதிதாசனுடைய வாக்கியங்களைச் சொல்லவில்லை. அவர் அந்தக் கருத்தைச் சொல்லி இருக்கிறார்.

திரு அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதிதாசன் சொன்னதாகச் சொன்ன அந்தக் கருத்து முத்துராமலிங்க தேவர் சொன்னது. எல்லோ ருக்கும் பயன்படுத்துவதற்காக, பாரதிதாசன் சொல்லவில்லை.

திரு. எம். அண்ணாதாசன்: நான் கருத்தைத் தான் சொன் னேன். விவசாயிகளைப் பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அதிகமான அக்கறையோடு ஒரு மித்த கருத்தை இங்கே வைத்தார்கள். அதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை ஆனால் இங்கே தரப்பட்டு இருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பில் உழவர்களால் இந்தத்

[திரு. எம். அண்ணாதாசன்] [1986 ஏப்ரல் 1

தமிழ்நாட்டுக்கு வருவாய் இவ்வளவு ஈட்டப்பட்டு இருக்கிறது
என்ற கணக்கை தந்து இருக்கிறார்கள். உழவர் பெருமக்கள்
இத்தனை சதவிதம் இங்கே பணியாற்றுகிறார்கள் என்ற
கணக்கை கொடுத்து இருக்கிறார்கள். நான் இதை சொல்கிற
நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களை பணிவோடு கேட்டுக்
கொள்ள விழைகிறேன் உழைக்கின்ற வர்க்கம் 57 சதவீதம்
அதாவது விவசாயத் துறையில் இருந்து கொண்டு இருக்கிறார்கள்
என்று அதிகார பூர்வமாக இங்கே கணக்கு இருக்கிறது. இது
போக மீதி உள்ள 43 சதவீதத்தில் தான் இந்த தமிழ்நாட்டில்
மற்ற துறையில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் இருக்
கிறார்கள் என்பது இதில் இருந்து தெளிவாக நமக்கு தெரி
கிறது. நான் தெரிவித்துக்கொள்ளவும், கேட்டுக்கொள்ளவும்
ஆசைப்படுகிறேன். இந்த உழைக்கும் வர்க்கத்தின் மேல்
இவ்வளவு அக்கறை காட்டக்கூடிய நாம் அத்தனை பேரும்
இந்த அரசு கொண்டு வருகிற திட்டங்களை ஆதரிக்கிறோமோ
இல்லையோ அது வேறு ஒரு பக்கம் இருந்தாலும் விவசாயிகள்
மேல் அக்கறை படக்கூடிய நாம் விவசாயிகள் உழைத்துத் தரு
கின்றதில் ஒரு பகுதியை அவர்களுககு கொடுக்க முடியாத
அளவுக்கு இருக்கிறோம். அதற்கு குறைவான விழுக்காட்டில்
பணியாற்றக்கூடிய ஏனைய தொழிலாளர்கள் மற்றவர்களுக்கு
ஆண்டுக்கு ஆண்டு எங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டும் என்று
கோரிக்கை வைத்து அது கொஞ்சம் மறுக்கப்படுமானால்
அதற்கு மிகுந்த போராட்டத்தையும், அந்தப் போராட்டத்தை
பற்றி நியாயப்படி பேசுவதற்கு அரசு முன் வருகின்ற நேரத்தில்
அதற்கு ஒரு பெரிய ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் கொண்டு
வருகிற நிலையை இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்
கள் உருவாக்குகிறார்களே அதை தயவுசெய்து கொஞ்சம் இந்த
நேரத்தில் இந்த உழைக்கும் பெருமக்களுடைய இந்த கொள்கை
விளக்கக் குறிப்பில் பேசுகிற நேரத்தில் எண்ணிப்பார்க்க
வேண்டும்.

இதைத் தான் தமிழகத்தினுடைய மாண்புமிகு
முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்
புக்கு வந்த உடனே சொன்னார்கள், படுப்பதற்கு பாய்கூட
இல்லாமல் பரிதவித்துக் கொண்டு கிராமப் புறத்தில் வாழ்ந்து
கொண்டு இருக்கிறார்கள். ஆனால் பட்டணத்தில் வாழ்கிற
நம்மைப் போன்றவர்கள் ஒரு மேஜையிலாவது தூங்கிக்கொண்டு
இருக்கிறோம். ஆக நான் உங்களிடத்திலே அன்போடு கேட்டுக்
கொள்கிறேன் அந்த படுப்பதற்குக் கூட பாய் இலலாமல்
இருக்கிற கிராமத்தில் வாழ்கிறவர்களுக்கு ஒரளவுக்கு மேஜையில்
படுத்துத் தூங்க வைப்பதற்கு உண்டான நன்மைகளை செய்
வதற்கு நீங்கள் ஆதரவு தரவேண்டும என்று இந்த கோட்டை
யின் உள் புறத்தில் நடந்த அனைத்து அலுவலர்கள் மத்தியில்
அன்போடு கேட்டார்கள், என்பதை நான் இங்கே ஞாபகப்
படுத்த விரும்புகிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால்,
இந்த அரசு உழைக்கும் வர்க்கத்தின் மேல் மிகுந்த அக்கறை
காட்டியிருக்கிறது என்பதற்காக கடந்த காலத்தில் பல திட்டங்
களை வகுத்து தந்து இருக்கிறது. அவர்களுக்கு நிவாரண
அளித்து இருக்கிறது. வெள்ளம், வறட்சி போன்ற கால கட்ட



1986 ஏப்ரல் 1] [திரு. எம். அண்ணாதாசன்]

களில் இந்த அரசு அவைகளை நன்கு பரிசீலனை செய்து அந்த
அந்த ஆண்டுகளில் அவர்களுக்கு செய்ய வேண்டிய பணிகளை
முறையாக செய்து இருக்கிறது என்பது எல்லாம் இன்றைக்கு இந்த
விவசாய கொள்கைக் குறிப்பில் தெளிவாக தரப்பட்டு இருக்
கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

(மாலை 4-50)

இன்னும் ஒன்று, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில்
ஏழை எளிய நடுத்தர மக்கள் பயன்பெறக்கூடிய ஒரு நல்ல வரிச்
சலுகையை இந்த அரசு அறிவித்து இருக்கிறது. அதிலே
குறிப்பாக விவசாயிகளுக்கு உகந்த மிக முக்கியமான ஒரு வரி
விலக்கை நாட்டு சர்க்கரை உற்பத்தி செய்பவர்களுக்கு அளித்து
இருக்கிறது. அதை வாங்கி வெளியிலே விற்பவர்களுக்கும் அது
உகந்ததாக அங்கே அளிக்கப்படுகின்றது. ஒரு விவசாயி,
கரும்பு உற்பத்தி செய்கின்றவன், அதாவது சர்க்கரை ஆலைகள்
இருக்கின்ற இடமாக இருப்பின் அவன் கரும்பை வெட்டிக்
கொண்டு சென்று, ஆலையிலே சேர்த்து விடுகிறான். அது
சர்க்கரையாக வந்துவிடுகிறது. ஆனால ஆலையில்லாத இடங்
களில் அந்த விவசாயி, அந்தக் கரும்பு உற்பத்தி செய்கின்றவன்
அதை நாட்டுச் சர்க்கரையாக உருவாக்குவதற்கு பல கஷ்டங்
களையெல்லாம் ஏற்றுக் கொள்ளவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.
அங்கே தொழிலாளிக்கு கூலி எந்த அளவிற்கு நிர்ணயிப்பது
என்பதில் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆனால் அதற்கு
விலையேற்றம் இல்லையென்றால், அந்தக் கரும்பை உற்பத்தி
செய்து, நாட்டு சர்க்கரை உற்பத்தி செய்கின்ற விவசாயி
செலவழித்திருக்கிற தொகையில் பாதி வருமா என்றால்
வராத நிலைமைக்கு அவன் கீழே தள்ளப்பட்டு, நசுக்கப்பட்டு
அவதிப்படுகிறான். ஆகவே அரசு நல்ல எண்ணத்தோடு அந்த
நாட்டு சர்க்கரை வெல்லம் மீது இருந்த பல முனை வரியை
நீக்கி, ஒரு முனை வரியாக இங்கே அறிவித்திருப்பதற்காக நான்
நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், 8 சதவீதமாக இருப்பதைக் குறைத்து
அந்த ஒரு முனை வரியை 5 சதவீதமாக குறைத்துக்கொள்ள
வேண்டுமென்று நான் இங்கே வணிக வரித்துறை அமைச்சர்
அவர்கள் இருக்கிற காரணத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.
நிதி அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்வி.
விவசாயிகளிடம் நாம் அதிக அக்கறை காட்டுகிறோம். என்ற
வகையில் அந்தத் திட்டத்தை நீங்கள் அமல்படுத்த வேண்டு
மென்று பணிவோடு கேட்டுக்சொள்கிறேன். அதே நேரத்தில்
வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்லுகின்ற போது அதன் மீது
4 சதவீத வரி விதிக்கப்படுகிறது என்பது என்னுடைய கவனத்
திற்குக் கொண்டுவரப்பட்டது. அந்த நான்கு சதவீத வரியை ரத்து
செய்து. எத்தனையோ சம்பள உயர்வுகளையும் கேட்டதை

யெல்லாம் கொடுக்கின்ற புரட்சித் தலைவர், ஆட்சிலே விவசாயிகளுக்கு இந்தச் சலுகையை நீங்கள் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு கொறடா அவர்கள் குறிப்பிட்டதைப் போல் தஞ்சை மாவட்டத்தில் இன்னின்ன திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். காவிரிப் படுகையைச் சார்ந்த பகுதி என்பதால்சொன்னார்கள். நான் சார்ந்த திருச்சி மாவட்டம் காவிரி படுகையைச் சார்ந்த மாவட்டமாகும், காவிரி பாசனத்திற்கு உட்பட்ட பகுதிக்கு ரூ. 20,000 செலவில் ஒவ்வொரு பகுதியிலும் நெற்கதிர்களை அடிப்பதற்கு களங்கள் அமைத்துத் தரப்படும் என்று சொல்லப்பட்டிருப்பது ஒரு நல்ல திட்டம், ஒரு அருமையான திட்டம் அதற்காக நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் திட்டத்தை திருச்சி மாவட்டத்திலும் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கென நிதியாதாரம் போதாமல் இருக்கிறது என்று ஏற்பட்டால், மாண்புமிகு அமைச்சரவர்கள் நம்முடைய முதல்வர் அவர்களிடத்தில் சொல்லி, இதற்கான நிதியைப் பெற்று, திருச்சி மாவட்டத்திலும் அந்த நெற்கதிரை அடித்து, பக்குவப்படுத்தி' தேக்கி வைப்பதற்கு கள அமைப்புத் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் ஆகியவை காவிரி பாசனங்கள் சேர்கின்ற பகுதியாகும். இந்தப் பகுதிக்கு ஊக்கம் அளிக்கின்ற அளவிலே, பாதுகாக்கப்படுகின்ற வகையிலே, உற்பத்தி ஊக்க போனஸ்-ஆக ரூ. 35 தரப்படுவதை எதிர்க்கட்சியிலிருக்கின்றவர்கள் பாராட்டினார்கள். விவசாயிகளும் பாராட்டியுள்ளார்கள் அதைப் பரவலாக தமிழகம் பூராவிலும் கொண்டு வரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதில் எனக்கும் மிகுந்த ஆசை உண்டு. இந்த உதவித் தொகையை அவர்களுக்கு தமிழக அளவிலே நெற்பயிர்கள் எங்கே சாகுபடி செய்யப்படுகிறதோ, அங்கே எல்லாம் நீங்கள் இதை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பொருளாகத் தருகிறார்கள். பொருளாகத் தருகிற நேரத்தில் காலதாமதம் ஆகிறது, அதை அவர்கள் மறுபடியும் பயன்படுத்துகிற போது, அது தேவையில்லாமல், வீணாகப் போய் விடுகிறது என்பதை இந்த நேரத்திலே விவசாயிகள் கோரிக்கையாக மாண்புமிகு அமைச்சருக்கும், தெரிவித்து அரசுக்கும் நீண்ட காலமாக தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த கோரிக்கையை ஏற்று, அவர்கள் பொருளாகக் கொடுப்பதை ரூ. 35 பணமாக தருவார்களேயானால், அவர்கள் அந்த பாசனங்கள் வந்து விவசாயத்தை துவக்குகின்ற வகையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நான் இந்த நேரத்தில் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றையும் நான்





தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், இங்கே பேச வாய்ப்பு இல்லாத காரணத்தினால், எனது பக்கத்திலே இருக்கின்ற நீலகிரியைச் சார்ந்த உறுப்பினர் உச்சிக் கவுடர் அவர்களும், குன்னூர் உறுப்பினர் ஜெயக்குமார் அவர்களும் ஒரு கோரிக்கையை இங்கே என் மூலமாக அரசிற்கு, உங்கள் மூலமாக தெரிவிக்கும்படி சொல்லியிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் மலை மேம்பாட்டுத் திட்டத்தில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்பட்டு வந்தது. ஆனால் 31—3—86-ல் இருந்து அது எடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அந்த இரண்டு பகுதிகளையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தத் துறைக்கு எழுதியும் மகஜர் கொடுத்தும் இருக்கிறார்கள். ஆனால், அது மீண்டும் செயல்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதுவரை இயங்கிவந்த மண்வளப் பாதுகாப்புப் பணியை மீண்டும் தொடர்ந்து பணி செய்வதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னமும் விவசாயத் துறை வளர்ச்சியடைய வேண்டுமென்று அக்கறை கொண்டிருக்கின்ற அரசு என்பதால், நான் உரிமையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் அதாவது, பல மாவட்டங்களில் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு பகுதியில் கரும்பு அதிகமாக உற்பத்தி ஆகிறது. அந்தப் பகுதி சிவகிரி தாலுக்கா. முன்னால் சங்கரன்கோவிலுடன் இருந்த பகுதி இன்றைக்கு சிவகிரி தாலுக்காவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. 2000 ஏக்கர் அளவிலிருந்து 5,000 ஏக்கர் அளவிற்கு அங்கே கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அங்கே சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு அரசு முன்வந்திருப்பதாக நான் அறிகிறேன். அதுவும் கூட்டுறவுத் துறையில் இல்லாது, தனியார் துறைக்குக் கொடுப்பதாக அதுவும் தென்காசிக்குக் கொடுப்பதாகத் தெரியவருகிறது. அங்கே இதுவரைக்கும் கரும்பு உற்பத்தி செய்யப்படவில்லை. அதிகமாக உற்பத்தி செய்யப்படவில்லை என்பதை திட்டவட்டமாக நான் சொல்கிறேன்; கரும்பு அதிகம் உற்பத்தி ஆகின்ற சிவகிரி தாலுக்காவிற்கு அனுமதி வழங்குவதற்கு தொழிற்துறை அமைச்சருக்கு தாங்கள் தெரிவித்து, அனுமதி வாங்கித் தர வேண்டும் என்று நான் மிக்க பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சனை. குடிநீர்ப் பிரச்னையைப் பொறுத்தவரை தமிழ்நாட்டிலே 1982 ஆம் ஆண்டுக்குப் பின்னால் மிகப் பெரிய ஒரு வறட்சி ஏற்பட்டது. அதற்குப் பின்னால் குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமை அதிகாரிகளை ஆய்வு நடத்தச் சொல்லி அரசு உத்தரவிட்டது. ஆய்வு நடத்தியதில், அவர்கள் தீவிரமாக ஆய்வு நடத்தி அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தது. அந்தப் புள்ளி விவரத்தை இங்கே பார்க்கின்ற போது, அது இந்திய அளவிலே, இந்தியாவிலே இருக்கும் அத்

துணை மாநிலங்களை எடுத்துக் கொண்டாலும், தமிழ் மாநிலம் தான் இந்த செயலைத் திறமையாகச் செய்திருக்கிறது என்று அவர்கள் அங்கே தெளிவுபடச் சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் நல்ல தண்ணீர் இல்லையென்றாலும், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்தாலும், அந்தப் பகுதிக்குக் கொண்டுவந்து சேர்த்து, பாதுகாக்கப்பட்ட குடிநீரை அந்தக் கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு வழங்கி குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்திருக்கிறது. 20,000 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து, இந்த வறட்சிப் பணியில் போர்க்கால நடவடிக்கையில் ஈடுபட்டு அங்குள்ள மக்களை அந்த நேரத்தில் பாதுகாத்தார்கள் என்பது பாராட்டக்கூடிய ஒன்றாகும். ஆனால், ஒரு ஆழ்குழாய் கிணறைப் போட வேண்டுமென்றால், 200 அடிக்குக் கீழே செல்ல வேண்டும். 100 அடி மட்டும் இரும்பு பைப்பை உபயோகப்படுத்துகிறோம். அதற்குக் கீழே இருக்கிற அத்தனை பகுதிகளிலும் மண் பகுதியாகவோ, கல் பகுதியாகவோ இருக்கலாம். ஈழைப் பகுதியாகவும் இருக்கலாம். அந்தப் பகுதி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அப்பால், இடிந்து விழுந்து, அந்த போர்வெல் இயங்காமல் போய்விடுவதுண்டு. அப்படி இருந்தும்கூட இந்த அரசு, இந்தத் துறை அவ்வப்போது அவைகளைச் செப்பனிட்டு, அவர்களால் முடிந்த வரைக்கும் அந்தக் கிராமங்களிலே, இந்த குடிநீர்ப் பிரச்னையை தீர்த்திருக்கிறார்கள். அதற்கு நான் அவர்களைப் பாராட்ட வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னமும் சிற்றூர்களிலே நீர்த்தேக்கத் தொட்டிகள் இல்லாமல் இருக்கின்றன. அப்படி நீர்த்தேக்கத் தொட்டிகள் இல்லாத இடங்களுக்கு, புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கின்ற சீரிய திட்டமான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தை அமுல்படுத்துகின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு, அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் இல்லாத பகுதிகளுக்கு உடனடியாக அவைகளை அமைத்துத் தருவதற்கு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஆலோசனை கூற வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 5-00.)

என்னுடைய திருவரம்பூர் தொகுதியைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி ஒவ்வொரு மாதத்திலும் 200 குடும்பங்கள் குடியேறும் தொகுதி 10 ஆண்டுகளுக்கு முன்னாலே போடப்பட்ட குடிநீர்த் திட்டங்கள், இப்போது மூன்று மடங்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிற கூட்டுக் குடிநீர்த் திட்டத்தால் அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுக்கப்படுகிற குடிநீர் போதாத நிலைமை இருக்கிறது. 6 பேரூராட்சிகளைக் கொண்டது திருவரம்பூர் தொகுதி என்பது தெரியும்



அரியமங்கலம், ஆலத்தூர், திருவரம்பூர், துவாக்குடி, கூத்தைப்பார், கோ அபிஷேகபுரம் ஆகிய பேரூராட்சிகளைக் கொண்டதாக உள்ளது. ஒரு பேரூராட்சிக்கு 15 ஆயிரம் வாக்காளர்கள் என்றால் பாபுலேஷன் கெப்பாசிடி என்ன இருக்கும் என்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள். இதற்கிடையே கிராமப்புறங்கள் வேறு இருக்கின்றன.

குடிநீர்ப் பிரச்சினை மிக முக்கியமானது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக துப்பாக்கித் தொழிற்சாலைக்குச் செல்கிற தண்ணீரை நவல்பட்டு, திருவரம்பூர் பக்கத்திலே இருக்கிற பர்மா காலனி, பூலாங்குடி ஆகிய பகுதிகளுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே ரீஜனல் எஞ்சினியரிங் காலேஜிற்கு நடப்பு ஆண்டிலே குடிநீர்த் திட்டம் மூலமாக குடிநீர் வழங்கப்படும் என்று தெரிவித்து இருக்கிறீர்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அங்கே செல்கிற கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே இடையே உள்ள துவாக்குடி, திருவரம்பூர், கூத்தைப்பார் ஆகிய பேரூராட்சிகளில் உள்ள பகுதிகளுக்கும் குடிநீர் கிடைக்கும்படி திட்டத்தை விரிவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதிகளிலேயும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்துகிற முறையிலே அவைகளையும் திட்டத்திலே சேர்த்துக் கொள்கிற முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பொன்மலை நகராட்சிக்காக 1983 ஆம் ஆண்டிலே உலக வங்கி நிதியோடு அரசு உதவியோடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக குடிநீர்த் திட்டம் அமல் நடத்தப்படுகிறது. இதுவரைக்கும் 56 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்து பைப்கள் எல்லாம் பதிக்கின்ற வேலைகள் முடிந்து கொண்டிருக்கிறது. பொன்மலை நகராட்சி மிகவும் பின்தங்கிய நகராட்சி. பாட்டாளி வர்க்கமும் ஏழை எளிய வர்க்கமும் வாழ்கிற பகுதி. அங்கே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து ஆழ்குழாய் கேணிகள் அமைத்து அதன் மூலமாக தண்ணீர் கொண்டுவரப்படுகிற போது நடந்துவரும் காவிரி குடிநீர் திட்டத்தை சீக்கிரத்திலே விரைவாகச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் அந்த காவிரித் தண்ணீர் தண்ணீர் இல்லாத பகுதிகளையும் திட்டத்துடன் சேர்த்து உடனடியாக குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொன்மலை நகராட்சியிலே தோல் பதனிடும் தொழிற்சாலை, இரயில்வே தொழிற்சாலைகள், சிறு தொழிற் கூடங்கள் இருக்கின்றன, அங்கே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கும் ஏனைய மக்களுக்கும் அத்தனை பேர்களுக்கும் பயன்படுகின்ற முறையிலே அதை முடுக்கிவிட்டு முடித்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது டல திட்டங்களை இந்த அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது என்பதற்கு நான் சொல்லியிருக்கிற சில புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்தும் என்று எதிர்க்கட்சி மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடு) 20 ஆயிரம் ஆழ்குழாய் கேணிகள் இன்று 21 ஆயிரயாகியிருக்கின்றன. ஆகவே இந்த அரசு மக்களுக்கு எந்தத் திட்டங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறதோ, எதை மக்களுக்குச் செய்வோம் என்று சொல்லியிருக்கிறதோ எதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் இந்த அரசும் நிறைவேற்றுவோம் என்று சொல்லியிருக்கிறார்களோ, அந்தத் திட்டங்களை நல்ல நோக்கத்தோடு நிறைவேற்றி வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னமும் இருக்கின்ற குறைகளை நிவர்த்தி செய்ய நடப்பு நிதி ஆண்டிலேயும் திட்டங்கள் இங்கே தரப்பட்டு இருக்கின்றன. அதை நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்திலே சொல்லி இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதும், குடிநீர் வழங்கல் மானியக் கோரிக்கை மீதும் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய மாண்புமிகு துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, தவறாக ஏதாவது சொல்லியிருந்தேனேயானால் அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு தெரிவித்து முடிக்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே' மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையையும், குடிநீர் வடிகால் வாரிய மானியக் கோரிக்கையையும் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நமது அமைச்சரவர்கள், 1986–87 ஆம் ஆண்டுக்கு அரிசி 64.00 இலட்சம் மெ.டன்; சிறு தானியங்கள் 24.00 இலட்சம் மெ.டன்; பயறு வகை 4.00 இலட்சம் மெ.டன்; பருத்தி (பஞ்சு) 5.20 இலட்சம் பொதிகள்! கரும்பு (வெல்லம்) 24.00 இலட்சம் மெ.டன் என்ற அளவுக்கு எதிர்காலத்தில் கொண்டு வரத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். 1985-86 ஆம் ஆண்டில் நெல் (அரிசி) 55.44 இலட்சம் மெ.டன்கள் உற்பத்தி இருக்கும் என்று எதிர்பார்ப்பதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நல்ல நோக்கம் இருக்கிறது. தமிழகத்தில் தமது துறையில் எப்படியும் உற்பத்தியைப் பெருக்கிவிடவேண்டுமென்ற



நல்ல எண்ணம் இருக்கிறது. இருந்தாலும் தமிழகத்தின் இயற்கை நிலையைப் பார்த்தால், 1972 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையில். இந்த 14 ஆண்டுக் காலத்தில் புயல், வெள்ளம், வறட்சி, கடுமையான வெள்ளம், 1983-டிசம்பரில் தமிழ்நாடு காணாத கடும் மழையும், வெள்ளமும், 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 19 நாட்கள் அடைமழை என்று இப்படி 14 ஆண்டுக் காலம் தமிழகத்தினுடைய விவசாய உற்பத்தியை இயற்கை மாறி மாறி பாதித்து வந்திருக்கிறது.

அமைச்சரவர்கள் நேற்றைய தினம் சொல்லும்பொழுது, இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 126 கோடியே 37 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக ஒரு கேள்விக்குப் பதில் அளித்திருக்கிறார்கள். அதைப்போல 1983 ஆம் ஆண்டில் 200 கோடிக்கு மேல் நஷ்டம். இப்படி 14 ஆண்டுகளில் விவசாயத் துறையில் விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்கள் பாதிக்கப்பட்டு, சுமார் ஆயிரம் கோடிக்குமேல் விவசாயிகள் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் பாதிப்புதான் தமிழகத்தினுடைய உணவு உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் 14 ஆண்டுக் காலத்தில் விவசாயிகளுக்கு இந்த அளவிற்குப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு என்ன நன்மை செய்யப்பட்டிருக்கிறது?

வரிசையாகச் சொல்கிறார்கள். 1972 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அன்றைய தினம் ஐந்தாண்டுக் காலத்தில், ஒரு ஆண்டுக் குத்தகை கட்டினால் விவசாயிகளுக்குக் குத்தகை தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். பெரும்பகுதி விவசாயிகளுக்கு நன்மை கிடைத்தது: ஆனால் சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. பிறகு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது. 1977 ஆம் ஆண்டில் புயல். ஐந்து ஏக்கர்களுக்கு உட்பட்டவர்களுக்கு அந்த ஆண்டு வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்தார்கள். குத்தகை விவசாயிகளுக்கு ஐந்தாண்டுக் குத்தகையில் அந்த ஆண்டு முழுவதும் கட்டினால் பாக்கி நான்காண்டுகளுக்குத் தள்ளுபடி செய்தார்கள். இதுதான் 14 ஆண்டுகளில் விவசாயிகளுக்குக் கிடைத்த நன்மை,

இப்படிப் பார்க்கின்றபொழுது விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அந்த நெல்லுக்கு எந்த அளவிற்கு விலை உயர்த்தப்பட்டிருக்கிறது? நெல்லுக்கு விலையை அறிவிக்கின்ற அதிகாரம் கூட ஒரு மாநில அரசுக்கு இல்லை. இந்த அதிகாரத்தை மத்திய அரசு தன்னுடைய கையில் வைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் வட மாநிலங்களில் கோதுமைக்குக் கொடுக்கின்ற விலையில்கூட ஒரு பகுதிகூட இந்த நெல்லுக்கு விலையாகக் கொடுப்பது கிடையாது. இப்படி விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு கட்டுப்படியான விலை கிடையாது.

ஆனால் விவசாயிகள் வாங்குகின்ற பொருட்கள் இருக்கின்றன அல்லவா, கருவிகள் உரம் போன்றவை, அத்தனை கருவிகளும் இன்றைக்கு நான்கு மடங்கு விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆக அந்த அடிப்படையில் விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை இல்லை. இதை அரசு பூரணமாக கவனிக்க வேண்டும்.

(மாலை 5.10)

அதேபோல, தஞ்சை மாவட்டத்தில் இவ்வளவு கொடுமைக்கும் பிறகு இந்த ஆண்டு 4½ இலட்சம் ஏக்கர் குறுவை விவசாயம் செய்யவேண்டும். ஆனால், 2½ இலட்சம் ஏக்கர்தான் குறுவை விவசாயம் நடந்தது. அதுவும் தாளடி 1 இலட்சம் ஏக்கரில் பயிர் நடப்படவில்லை. அதேபோல, சம்பா கதிர் அறுவடைக் காலத்தில் 19 நாள் கடுமையான மழை பெய்து அறுவடையும் பாதிக்கப்பட்டது. இந்த அவல நிலையில் இந்த ஆண்டு அறுவடை நடந்தது. ஆனால்; கிஸ்தி வசூல் செய்யும்போது ஒருகாலத்தில், வெள்ளைக்காரன் கொடி போட்டு, படிப்படியாக, நாட்டைப் பிடித்ததாகப் படித்திருக்கிறோம். இந்த ஆண்டு எங்கே பார்த்தாலும், சிவப்பு, வெள்ளைக் கொடிகள் போடப்பட்டு. விவசாயிகள் அறுவடை செய்ய முடியாமல் தடுக்கப்பட்ட காட்சிகளைப் பார்த்தோம்.

இப்போது 8 பஞ்சாலைகளை அதன் முதலாளிகள் மூடி வைத்து, 8,000 தொழிலாளர்கள், பட்டினியால் 3 வருஷமாகக் கொடுமைப்பட்டு வருகிறார்கள். இன்றைக்கு இருக்கிற சட்டம் அந்த முதலாளிகள் மேல் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆனால், விவசாயிகள் 14 ஆண்டுகள் கஷ்டப்பட்டும், அதற்கு முன்னால், ரூ. 10,000 கடன் பெற்றிருந்தால், ரூ. 15,000 அளவுக்கு வட்டி உயர்ந்திருக்கிறது. ஆகவே, அந்தக் கடனுக்காக, விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலை தஞ்சையிலே மட்டும் இல்லை. பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி மாவட்டத்தில் இப்படிப்பட்ட கெடுபிடி வசூல். கேட்டால், அவர்கள் மேல் வழக்கு; 7 (1) (ஏ) பிரிவின்படி கிரிமினல் வழக்கு போடுகிறார்கள். இப்படி நூற்றுக் கணக்கான வழக்குகள் விவசாயிகள் பேரில் போடப்பட்டு, இன்றைக்கும் இருக்கின்றன. அந்த வழக்குகளைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், நெல் விலையை எடுத்துக் கொண்டால், இந்த ஆண்டு, மைய அரசு, சாதாரண ரகத்திற்கு ரூ. 137-லிருந்து ரூ. 142 ஆக உயர்த்தியிருக்கிறது. ஒரு குவிண்டாலுக்கு ரூ. 5 கிடைக்கிறது. அதேபோல, அடுத்த ரகத்திற்கு ரூ. 141-லிருந்து ரூ. 146; மிகச் சன்ன ரகம் ரூ. 145-லிருந்து ரூ. 150



உரத்திற்காக ரூ. 35 கொடுக்கிறார்கள்; அதை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதை இல்லையென்று சொல்லவில்லை. அந்த ரூ.35-ஐச் சேர்த்தால், ரூ. 177 ஆகிறது. விவசாயிகள் என்ன கேட்கிறார்கள், நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு உற்பத்தி செய்கிறோம். ஒரு குவிண்டாலுக்கு ரூ. 200 கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அதை ஏன் மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடாது? மத்திய சர்க்கார் கொடுக்கத் தயாராயில்லை. ஆனால், உங்களை நான் கேட்பது, மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை என்று நீங்கள் காலம் தாழ்த்தாது செயல்படவேண்டும். உரத்திற்காக ரூ. 35 கொடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அந்தத் தொகை யாருக்குப் போய்ச் சேருகிறது? உண்மையிலே விவசாயிக்குப் போய்ச் சேருகிறதா என்றால் இல்லை. தனியார், ஒரு மூட்டை உரம் ரூ. 105க்குக் கொடுக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கத்திலே கூப்பன் மூலமாக, ரூ. 111, ரூ. 112-க்குக் கொடுக்கப்படுகிறது. ஆக ஒரு மூட்டைக்கு ரூ. 6 என்று சொன்னால், ஒரு விவசாயி இரண்டு மூட்டை வாங்கினால், ரூ. 12/-உரக் கம்பெனிக்குப் போய்ச் சேருகிறதே தவிர, அந்தப் பணம் முழுமையாக விவசாயிக்குக் கிடைக்கவில்லை. ஆனால், இந்த ஆண்டு உரத்திற்கு உயர்த்தியிருக்கிறார்கள். ஒரு மூட்டை ரூ. 10 உயரும். அந்த ரூ. 12–ஐயும், ரூ. 10-ஐயும் சேர்த்தால், ஒரு மூட்டைக்கு ரூ. 22 உரக் கம்பெனிக்குப் போய்ச் சேர்ந்துவிடும். மீதி எவ்வளவு விவசாயிகளுக்கு போய்ச் சேரும்? நான் கேட்பதெல்லாம் விவசாயிகள் உழைத்து, அந்த உழைப்பின் பலன், உரக் கம்பெனிகளுக்குப் போய்ச் சேர வேண்டுமா? அந்தப் பலன் ரூ. 35-ஐச் சேர்த்து, பணமாக, விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் உங்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கரும்பு உற்பத்தி செய்கிறார்கள். இன்றைக்கு மகாராஷ்டிராவில் ரூ. 230 கொடுக்கப்படுகிறது. இங்கே நாம் கொடுப்பதாக அறிவித்திருப்பது ரூ. 195 ஆனால், கூட்டுறவு ஆலை கொடுப்பது ரூ. 175 தனியார் ஆலை கொடுப்பது ரூ. 165/–: இன்றைக்குக் கரும்பு வெட்டிக் கொடுத்தால், அடுத்த ஆண்டு வெட்டுகிற வரையிலும் இந்தக் கரும்பு கொடுத்த விவசாயி பணம் வாங்காது அலைய வேண்டிய அவல நிலையில் கஷ்டப்படுகிறார்கள். மகாராஷ்டிராவில் ரூ. 230 கொடுக்கும் பொது, அதே கரும்புதான் தமிழக விவசாயிகள் போடுகிறார்கள் மகாராஷ்டிராவில் எவ்வளவு செலவு செய்கிறார்களோ, அதே செலவுதான் இங்கேயும் செய்கிறார்கள். ஆகவே நான் கேட்டுக் கோள்வதெல்லாம், குறைந்தபட்சம் ரூ. 230 ஆவது கொடுக்க முன்வர வேண்டும். நான் கேட்பதற்குக் காரணம், ஒரு கிலோ சர்க்கரை விலை 40 காசுகள் உயர்ந்திருக்கிறது.

ஒரு மூட்டை சர்க்கரைக்கு 40 ரூபாய் உயர்த்தியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கொள்கை இது. ஆனால் கரும்பு பயிர் செய்யும் விவசாயிக்கு விலை இல்லை. சர்க்கரை ஆலை முதலாளிகளைப் பாதுகாக்கின்ற திட்டமாக, கொள்கையாக இருக்கிறது. அந்தக் கொள்கையை நீங்களும் பின்பற்றாமல் எப்படி சர்க்கரை ஆலை முதலாளிகளுக்கு உயர்த்திக் கொடுக்கப்படுகிறதோ அப்படியே கருப்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கும் விலையை உயர்த்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும், உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுக்கு இன்றைக்கு 15 இலட்சம் பேல் பருத்திப் பஞ்சு தேவைப்படுகிறது. ஆனால் உற்பத்தியாவது 4.5 இலட்சம் அல்லது 5 இலட்சம் பேல்கள்தான். இதற்கு என்ன காரணம்? தமிழ்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாதா? முடியும். உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு நியாயமான கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. அதனால்தான் உற்பத்தி செய்ய தயக்கம் காட்டுகிறார்கள். 1973 ஆம் ஆண்டிலிருந்து மகாராஷ்டிர மாநில அரசு பஞ்சு முழுவதையும் கொள்முதல் நேரடியாகச் செய்கிறார்கள். முன்னால் 700 ரூபாய்க்கு ஒரு குவின்டால் பஞ்சு விற்றது. இப்போது 350 ரூபாய் அளவுக்குத்தான் விலை போகிறது. இப்படி இருந்தால் எப்படி பருத்தி உற்பத்தியாகும்? எப்படி பஞ்சு கிடைக்கும் பருத்தி விவசாயிகளுக்கு கட்டுப்படியாகின்ற விலை கொடுத்தால் நிறைய உற்பத்தி செய்வார்கள். ஆகவே, விலையை உயர்த்திக்கொடுக்க வேண்டும்; அரசாங்கமே நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டும்.

மிளகாய் வற்றல் ஒரு குவின்டால் 1,500 ரூபாய்க்கு விற்றது இன்றைக்கு 700 ரூபாய்க்குத்தான் விற்கிறது. மிளகாய் உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. ஆனால் அந்த விவசாயிகளிடமிருந்து மிளகாயை வாங்கி, பதம் பண்ணி விற்கக்கூடிய வர்த்தகர்கள் 1,500 ரூபாய்க்கு விற்கிறார்கள். வாங்கி சாப்பிடும் பொது மக்களை பாதிக்கின்றது. இந்த நிலை மாற வேண்டும். உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்குக் சட்டுப்படியாகக்கூடிய விலை, நியாயமான விலை கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு விதை, உரம், பூச்சி மருந்து எல்லாம் கொடுத்தீர்கள் வரவேற்றோம். ஆனால் அவை எல்லாம் யாருக்குப் போய்ச் சேர்ந்தது? அமைச்சருக்கும் அரசுக்கும் நல்லெண்ணம் இருக்கிறது, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் விவசாயிகளுக்கு, உண்மையாகத் தேவைப்படுகிறவர்களுக்கு அவை கிடைக்கவில்லை. இடையிலே இருக்கின்ற இடைத்தரகர்களுக்குத்தான் போய்ச் சேருகின்றன. 2 ஏக்கர், 1, ஏக்கர் 1½ ஏக்க





வைத்திருக்கிற சிறு விவசாயிகளுக்குக் கொடுத்தோம் என்று ஏதோ ஊருக்கு நான்கு பேர்களுக்குக் கொடுத்துவிட்டு பாக்கி எல்லாம் கொல்லைப்புறம் வழியாக விற்கப்பட்டுவிடுகிறது. இது எல்லாம் கிராமப்புறங்களில் நடக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்று இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் சொல்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும், மக்கள் பிரதிநிதிகளும் இப்படிப்பட்ட தவறுகளை தடுத்து நிறுத்த யாரும் குறுக்கே நிற்கமாட்டார்கள். எனவே, அவர்கள் இப்படிப்பட்ட தவறுகளை தடுக்க எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தவறுகளை அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு போய், அவர்கள் ஒருசில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். இங்கே பெரியஅதிகாரிகள் எல்லாம் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் அந்த அந்த மாவட்டத்தில் இருக்கிற அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவர்களுக்கு அறிவுரை வழங்கி, தவறுகளைத் தடுக்க ஒரு வாய்ப்பு ஏற்படும் என்ற நோக்கத்தோடு இந்த மன்றத்திலே தெரிவிக்கிறேன்.

அடுத்து, ஐ. ஆர். 50 ரக நெல் விதை கொடுக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு மழை பெய்து, பயிர்கள் எல்லாம் பூச்சிகளால் தாக்கப்பட்டபோது மருந்து கொடுத்தார்கள். எவ்வளவோ பூச்சி மருந்து. கொடுக்கிறார்கள். பூச்சி மருந்து அடித்தால் பூச்சிகள்தான் கொழுக்கின்றனவே தவிர, நோய் கட்டுப்படவில்லை, நெல்லை பாதுகாக்க முடியவில்லை. ஆகவே வீரியம் உள்ள பூச்சி மருந்துகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் நெல் உலர்த்தும் ஆலைகள் ஆங்காங்கே மலைபோல் காட்சியளிக்கின்றன. ஈரமாக நெல்லை கொண்டு சென்றால் அங்கே உலர்த்தி, அப்படியே விற்றுவிட லாம் என்று அவற்றை எல்லாம் கட்டினார்கள். அதற்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்தார்கள். இப்போது நிலைமை என்னவென்றால் ஊரில் உள்ள கழுதை எல்லாம் அங்கே அடைந்திருக்கின்றன. மக்களுடைய வரிப்பணம்தான் விணானது. விவசாயிகளுக்கு பயன்படவில்லை. ஆகையால் மத்திய சர்க்காரிடமிருந்து அந்த உலர்த்தும் ஆலைகளை தமிழக சர்க்கார் எடுத்து, மழைக் காலத்தில் விவசாயிகள் கொண்டுவருகிற ஈர நெல்லை உலர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-20)

அடுத்து பயிர்பாதுகாப்பு இன்ஷுரன்ஸ் திட்டம் இருக்கிறது. நல்ல திட்டம்தான். ஆனால் சட்டம் எப்படி இருக்கிறது? ஒரு தாலூக்காவில் ஒரு கிராமத்தில் பயிருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் கூட அந்த தாலூக்கா முழுவதற்கும் 12 ஆண்டு காலத்தில் இருந்த நிலைமைகளை பார்த்து, அந்த அடிப்படையிலே எந்த அளவுக்கு விளைவு குறைந்திருக்கிறது என்பதைக் கண்டறிந்து, அந்த அளவுக்குத்தான் பாதுகாப்புத் தொகை கிடைக்கும், இன்ஷுரன்ஸ் மூலம் இலாபம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள்.

அது எப்படி கிடைக்கும்? நான் சொல்வது எல்லாம் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்பதுதான். மத்திய சர்க்காரிடத்திலும் பல தவறான சட்டங்கள் இருக்கின்றன. எனவே நாம் சட்டத்தைத் திருத்தி எந்தப் பகுதியில் எந்த விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்களோ அந்த விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய அளவுக்கு பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த ஆண்டு அதைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் வேதாரணியம் பகுதியிலேயும் இன்னும் பிற பகுதிகளிலேயும் மல்லிகைப்பூ நிறைய உற்பத்தி செய்கிறார்கள், எனவே அங்கே அதிலிருந்து தைலம் உற்பத்தி செய்வதற்குரிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஆலையை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக குடிநீர் சம்பந்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருப்பூர் நகருக்கு இரண்டாம் குடிநீர்த் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தவரையில் ஏன் காலதாமதம் ஆகிறது என்பதையும் எப்போது இந்த திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கைப்பம்பு போன்றவை கெட்டுவிட்டால் 7 நாட்களுக்குள் சீர் செய்யப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். 7 நாட்கள் என்று இல்லாவிட்டாலும் கூட 15 நாட்களுக்குள்ளாகவாவது செய்து கொடுத்தால் போதும். ஆனால் 4 மாதங்கள், 5 மாதங்கள் என்று ஆகிவிடுகிறது. அதுபற்றிய கடிதம் முதலியவை அங்கே இருந்து இங்கே வந்து இப்படி பல வகைகளில் காலதாமதம் ஆகி கடைசியில்



அதைச் சீர் செய்து முடிப்பதற்குள் மூன்று மாதம், நான்கு மாதங்கள் கூட ஆகிவிடுகின்றன. எனவே அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலேயே ரிப்பேர் செய்யக்கூடிய தொழிலாளர்களைப் போடுவதற்குரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி, இடையூர், முத்துப்பேட்டை, வேதாரண்யம், தலைஞாயிறு போன்ற பகுதிகளில் உப்புத் தண்ணீரைத்தான் மக்கள் குடிக்கிறார்கள். அங்கே ஆழ் குழாய் கிணறு போட்டுப் பார்த்தால் கிடைக்கின்ற தண்ணீர் உப்புத் தண்ணீராகத்தான் கிடைக்கிறது. எனவே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக பட்டுக்கோட்டை தாலுக்காவில் ராஜாமடத்தில் இருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து முத்துப்பேட்டை, இடையூர், வேதாரண்யம், தலைஞாயிறு, திருத்துறைப்பூண்டி போன்ற பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்ற வகையில் ஒரு திட்டம் இடப்பட்டிருக்கிறது. இதுபற்றி நான் 6, 7 ஆண்டுக்காலமாகக் கேட்டுக் கொண்டு வருகிறேன். இந்த ஆண்டு கேட்கிறபோது மதுரை குடிநீர் வாரிய அலுவலகத்தில் அந்த எஸ்டிமேட் தேங்கி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனது ஆட்சியில் எல்லா கிராமங்களுக்கும், தெருக்களுக்கும் முழுமையாகத் தண்ணீர் கொடுக்கப்படும், அந்த நிலைமை ஏற்படுவதற்குரிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவேண்டும் என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும். ஒரு காலத்தில் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மழைக் காலங்களில் ஆற்றில் தண்ணீர் எடுக்கிறபோது—அதிலே கள்ளியைப்போட்டு வைத்திருந்தால் அது ஓரளவுக்குச் சுத்தமாக ஆகும், அதன் பின்னர் அதனை வடிகட்டிக் குடிப்பார்கள். இந்த முறையில் சுத்தப்படுத்தித்தான் பயன்படுத்திவந்த நிலைமை இருந்தது. ஆற்றிலே தண்ணீர் இல்லாத காலங்களில் ஊற்று எடுத்து அதிலே இருந்து தண்ணீரை எடுத்துச் சாப்பிட்ட காலமும் இருந்தது. ஆனால் இன்றைக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெரும்பாலான இடங்களில் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் கிடைக்காமல் இருக்கின்ற மற்ற கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகத் தண்ணீர் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்குகிற மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய தொகுதியின் கோரிக்கைகள் சிலவற்றை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பு தந்தமைக்காக எனது இதயம் கனிந்த நன்றியை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் வட்டத்தில் குறிப்பாக ஆண்டிமடம் தொகுதியில் இருக்கக்கூடிய ஆண்டிமடத்தைச் சேர்ந்த பகுதிகளில் முழுக்க, முழுக்க கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. எனவே குடிநீர் எங்களுக்கு கிடைப்பது என்பது பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து கிராமப்புறங்களில் வாழ்கிற ஏழை, எளிய மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தர வேண்டும் என்று அவர்கள் திட்டங்கள் பல தீட்டிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் 1981–82 ஆம் ஆண்டு ஆண்டிமடம் ஒன்றியத்தில் தன்னிறைவுத் திட்டம் கொண்டுவரப் பட்டு அந்தத் திட்டத்தின் மூலமாக அங்கே குடிநீர் வழங்குவதற் குரிய சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் முதற்கட்டமாக தன்னிறைவுத் திட்டத்தில் ஆண்டிமடம் ஒன்றியத்தைச் சேர்ந்த மிகவும் பாதிக்கப் பட்ட நிலைமையில் இருக்கக்கூடிய கிராமங்களில் 7 கிராமங் களுக்குக் குடிநீர் கொடுக்கின்ற வகையில் ஜி. எல். ஆர். திட்டத் தில் சேர்த்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டு டெண்டர் விடப்பட்டு அந்த வேலைகள் செய்யப்பட்டுக்கொண்டிருந்தன. அவ்வாறு 40 ஆயிரம் ரூபாய் எஸ்டிமேட்டிலே அந்த திட்டத்தை தொடங்கி அதில் பாதி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே குடி தண்ணீர் வடிகால் வாரியத்தின் மூலமாக தன்னிறைவு திட்டம் செயல்படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். அவ்வாறு அவர்கள் சொல்லுகிறபோது மிகப் பெரிய கிராமங்களில் இருக்கிற மக்களுக்கு, ஒன்றியத்தின் மூலமாக குறுகிய மதிப்பீட்டில் செய்கிற காரணத்தால், அந்த கிராமங்களுக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்த வேலைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டார்கள். ஆனால் ஒரே நேரத்திலே ஒரே ஒன்றியத்தில் இருக்கிற கிராமங்களுக்கு 2 டிபார்ட்மெண்ட் மூலமாக பணிகளை செயல்படுத்துவது முடியாது என்று சொல்லி, ஆங்காங்கு உள்ள சிறு சிறு கிராமங்களாக இருக்கக்கூடிய பகுதிகளுக்கு, அந்த திட்டங்களை குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மேற்கொண்டார்கள்.

அதன் விளைவாக 40 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட பெரிய கிராமங்களுக்கு, 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் குறுகிய சின்ன டாங்க் கட்டப்பட்டது. ஆனால் 200 பேர்கள், 300 பேர்கள் வசிக்கக்கூடிய கிராமப்பகுதிகளில் மிகப் பெரிய அளவில் ஓவர் ஹெட் டாங்குகள் கட்டப்பட்டன. அதன் விளைவாக அந்தப் பகுதியிலே வாழக் கூடிய மக்கள், சிறிய கிராமங்களுக்கு இப்படிப் பட்ட ஏற்பாட்டை செய்துவிட்டு, பெரிய கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கு குடிதண்ணீர் பிரச்னையை தீர்க்கவில்லையே என்று குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குறை



நீக்கப்பட வேண்டும் என்று சொல்லி, நான் பல்வேறு தரப்புகளிலே இருக்கும் அதிகாரிகளிடத்திலே சொன்னேன். ஆனால் இது வரையில் அந்தப் பிரச்னை தீர்க்கப்படவில்லை. குறிப்பாக சொல்லவேண்டும் என்று சொன்னால், ஆண்டிமடம் ஒன்றியத் தில், ஆண்டிமடம் என்னுடைய தொகுதியின் தலைநகரமாக இருந்தும் கூட இன்றைக்கும் அங்கே குடிதண்ணீர் பிரச்னை மிகப் பெரிய பிரச்னையாகவே இருக்கிறது. அதைப்போலவே பெரிய கிராமங்கள் என்று சொல்லப்படுகிற, அழகாபுரம், மருதூர், குவாகம் ஆகிய கிராமங்களில் குடிநீர் பிரச்னை மிகக் கடுமையாக இருக்கிறது. இன்று வரையில் அந்த குடிதண்ணீர் பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கிற காரணத்தால், இனி வருகிற ஆண்டிலாவது நான் மேற்சொன்ன 4 இடங்களுக்கும் பெரிய அளவில் டாங்க் கட்டி, தண்ணீரை தேக்கி, அங்கே வசிக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்த்துத் தருமாறு இந்த நேரத்திலே மெத்தப் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று செந்துறை ஒன்றியத்தில் மாத்தூர் என்ற கிராமம். எனது தொகுதியைப் பொறுத்தமட்டில் மாத்தூர் கிராமத்திலேதான் ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. அவ்வாறு ரெயில்வே ஸ்டேஷன் இருக்கிற காரணத்தாலே, அந்தப்பகுதி யினைச் சுற்றியிருக்கிற பகுதிகளில் உள்ள மக்கள் நிறைய பேர்கள் வருவதற்கும் போவதற்கும் உரிய வாய்ப்பு இருக்கிறது. அப்படி நெருக்கடி மிகுந்த அந்த இடத்தில் கூட குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இதுவரையில் எந்தவிதமான நட வடிக்கையையும் எடுத்துக் கொள்ளவில்லை. அங்கே ஒரு போர் வெல் போட்டு, ஹேண்ட் பம்ப் ஆவது பொறுத்திக் கொடுத்தால் கூட, அங்கே இருக்கிற மக்களுடைய பிரச்னையை தீர்க்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

இன்றையதினம் அங்கேயிருக்கிறபோது, அங்கே இருக்கிற ரயில்வே ஸ்டேஷனில் உள்ள கைப்பம்பை உபயோகப்படுத்த மக்கள் செல்கிறபோது ரயில்வே அதிகாரிகள் அதனை தடுத்து, அங்கே தண்ணீர் பிடிக்கக்கூடாது என்று சொல்லுகிற சூழ்நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. இதனையும் பல்வேறு தரப்பில் உள்ள அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தப்பிரச்னையையும் தீர்த்துத் தரவேண்டும்என்று ஏற்கெனவே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதேபோல அந்தப் பிரச்னையை இந்த நேரத்திலே தீர்க்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்வதோடு ஆண்டிமடம் தொகுதியில் செந்துறை ஒன்றி யத்தில், கிட்டத்தட்ட 10 ஆயிரம் மக்கள் வசித்துக் கொண் டிருக்கக் கூடிய மிகப் பெரிய ஊராக இருந்துக் கொண்டிருக்கிற அந்தக் கிராமத்தில் மிகச் சிறிய அளவிலே ஒரு டாங்க் கட்டப் பட்டு, அதன் மூலமாக குடி தண்ணீர் வழங்கிக் கொண்டிருக் கிறார்கள். அதன் விளைவாக அங்கே பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு பகுதிக்கு குடிதண்ணீர் தரப்பட்டும், ஒரு பகுதிக்கு குடிதண்ணீர் தரப்படாமலும் இருக்கிற

காரணத்தால், அங்கே மிகப் பெரிய பிரச்சினையே ஏற்படும் போல் இருக்கிறது. எனவே அந்த கிராமத்திலே பெரிய அளவிலே ஒரு டாங்க் கட்டி, அதன் மூலமாக தெருக்களுக்கு பைப் லைன் போட்டு வீடுகளுக்கும் அதிலிருந்து பைப் லைன் போட அந்த மக்கள் தயாராக இருக்கிறார்கள் - அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரவு செலவுத் திட்டத்தில் ஸ்டீல் போட்டு கட்டப்பட்டிருந்த அந்த ஓவர் ஹெட் டாங்குகள் அனைத்தையும் மாற்றி சிமெண்ட் கற்கலவையிலான பெரிய மேல்நிலைத் தொட்டிகளை கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதைக் குறித்து கூறியிருப்பதை எண்ணிப் பார்க்கிறபோது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நாட்டின் குடிநீர் பிரச்னையை தீர்ப்பதில் எந்த அளவுக்கு அக்கறைகொண்டிருக்கிறார்கள்என்பதையும் நாம் அதிகமாக உணர முடிகிறது. என்னுடைய தொகுதியில் செந்துறை ஒன்றியத்தில் பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் ஸ்டீல் டேங்க் போட்டு அவைகளெல்லாம் கீழே விழுகிற நிலையில் இருக்கின்றன. அந்த ஸ்டீல் டேங்குகளை எல்லாம் அகற்றி விட்டு இன்றைக்கு அரசு அறிவித்திருக்கிற திட்டத்தில் புதிய டேங்குகளை கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5.30)

அதைப்போல இங்கே வேளாண்மைத் துறை மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு சமுதாய கிணறு அமைத்து கொடுக்க மொத்தமாக 15 ஏக்கர் நிலம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் ஒரே இடத்தில் 15 ஏக்கர் நிலம் இருப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இந்த நிலை இருப்பதால் நிலத்தினுடைய அளவை குறைத்து, 15 ஏக்கர் என்று இருப்பதை 5 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் என்ற அளவில் செய்து அந்த முறையில் சட்டத்தைத் திருத்தினால் ஏழை எளிய ஆதிதிராவிட மக்கள் சமுதாய கிணறு அமைத்து அதன்மூலம் அவர்கள் பயனடைய வாய்ப்பு இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட திட்டம் செயல்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அவ்வாறு காலதாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறை மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் போன்ற அனைத்தையும் இலவசமாக வழங்க வேண்டுமென்று அரசு கருதி திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அங்கே பணிபுரிகிற ''பீல்ட் ஆபீசர்ஸ்'' என்று சொல்லக்கூடியவர்கள்' அங்கே



இருப்பவர்களை புரோக்கர் என்று கூட சொல்லலாம் அவர்கள் ஒரு சிலரிடம் மட்டும் பணத்தை பெற்றுக் கொண்டு வருடா வருடம் குறிப்பிட்ட அந்த நபர்களுக்கே வெவ்வேறு பெயர்களில் போட்டு அவர்களே எடுத்துக்கொள்கிற நிலை இருக்கிறது. கடலையாக இருந்தாலும், பயறு வகையாக இருந்தாலும், பூச்சி மருந்தாக இருந்தாலும் இப்படி பல்வேறு சலுகைகளை எல்லாம் அந்த இடைத்தரகர்களே பெற்று பயனடைந்து கொண்டிருக்கிறார்கள். அதை நாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் புகார் மூலம் கொடுத்திருந்தாலும் இன்றைக்கும் அதே நிலைமை தான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட பீல்ட் ஆபீசர்ஸ் தொடர்ந்து இதுபோன்ற தவறுகளைச் செய்து கொண்டிருக்கிற காரணத்தால் அவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆண்டிமடம் தொகுதியைப் பொறுத்தவரையில் இருக்கிற அனைத்து கிராமங்களின் குடி தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு உறுதுணையாக என்னுடைய உரை அமையுமென்றே கருதுகிறேன். இந்த வாய்ப்பினை அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு.மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கிற வேளாண்மை, குடி தண்ணீர் வழங்கல், வேளாண்மை மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கையில் நான் கொடுத்திருக்கிற வெட்டு பிரேரணைகளை வலியுறுத்தி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த 10 ஆண்டுக் காலமாக இயற்கை இடர்பாடுகளால், மழை, வெள்ளம், புயல், வறட்சி போன்றவற்றால் ஆண்டுதோறும் விவசாயம் பாதிக்கப்பட்டு, குறிப்பாக தஞ்சை மாவட்டம் சொல்லொணா இன்னலுக்கு ஆட்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் சுமார் 150 கோடி ரூபாய் அளவில் நஷ்டம் அடைந்து அந்த நஷ்டததிற்கு அரசு பல்வேறு வகையிலே விவசாயிகளுக்கு உதவிகளைச் செய்கிறது. ஒரு ஏக்கர் ஒரு விவசாயி சாகுபடி செய்ய சுமார் ரூ. 1500 ஆகிறது. இதற்கு தன்னுடைய சொந்தஉழைப்பாலும், கூட்டுறவுக் கடனாலும் மூலதனத்தைப் போட்டு அந்த விவசாயத்திலிருந்து கிடைக்கக்கூடிய பலனை பார்த்தால், இயற்கை இடர்ப்பாடுகளால் இன்னலுற்று ஒரு மாவிற்கு 100 ரூபாய், 200 ரூபாய் கூட எடுக்க முடியாத நிலைமை கடந்த 10 ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது. நம்முடைய அரசு 1977-ஆம் ஆண்டு குத்தகை சாகுபடியாளர்களுக்கு ஒரு சலுகையை அறிவித்தது.

அதற்குப் பின்னாலே பல ஆண்டுக்காலம் நாம் பாதிக்கப்பட்டும், விவசாயிகளுடைய குத்தகை அளக்க முடியாத நிலையில், அவர்களை வழிநடத்திச் செல்லுகின்ற நிலச்சொந்தக்காரர்களால் பாக்கி கட்டப்பட்டு, பாக்கி அளக்க முடியாத நிலையில், முன்சிப் கோர்ட்டுகளிலே, வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, கோர்ட்டுகளிலே விவசாயிகள் நிற்கின்ற ஒரு நிலை ஏற்பட்டு இருக்கிறது,

இதை மனதிலே கொண்டு, தமிழகஅரசு இந்த விவசாயிகளைக் காக்கின்ற வகையிலே சலுகைகளை ஏதாவது அறிவிக்கும் என்று இந்த நிதி நிலை அறிக்கையிலே நாம் எதிர்பார்த்தோம். ஆனால் கிடைக்கவில்லை. இங்கே மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு கருத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே என்னுடைய தொகுதியாக இருக்கிற திருவிடைமருதூர் தொகுதியிலே இரண்டு மட ஆலயங்களும், பல திருக்கோயில்களும் உள்ளன. அங்கே இருக்கின்ற நிலங்கள் முழுவதும் கோயில் களுக்கும், மடங்களுக்கும் சொந்தமானது. அந்த மடாதிபதிகள் அரசினுடைய 75:25 என்ற குத்தகை சட்டத்தை அரசு அறிவித்தாலும் கூட, இன்னும் பழைய நிர்ணயித்த தொகையிலே குத்தகை பாக்கியை, விவசாயிகள் பெயரால் பாக்கியைக் கட்டிக் கொண்டு, அந்த பாக்கியை வசூல் செய்கின்ற வகையில் தங்களுடைய பணியாளர்களை கழனிகளுக்கும், குளங்களுக்கும் அனுப்பி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெயரால் புதிய குத்தகை சீட்டுகள் எழுதி வாங்கப்படாமலும் பாக்கி கடன் சுமை அந்த ரசீதுகளிலே அதிகமாக காணப்படுகிற காரணத்தால் விவசாயிகளுடைய ஆர்வம் குறைந்து சங்கடப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கூட்டுறவுக் கடனைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த கொறடா அவர் கள், எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர், எங்களுடைய மாவட்டத்தினுடைய நிலையை, ஆளுகின்ற தரப்பிலே இருந் தாலும் கூட எங்களுடைய உணர்வுகளை பிரதிபலிக்கின்ற வகை யில் தெளிவாக எடுத்துக்கூறினார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கூட்டுறவுக் கடனால், சுமார் ஆயிரம் ரூபாய் வாங்கியவர்கள் இன்றைக்கு 3 ஆயிரம் 4 ஆயிரம் என்கிற அளவிலே அந்தக் கடன் தொகை அதிகமாகி, விவசாயிகள் அதை நினைக்கும்போது, அவர்களுடைய மனது புண்பட்டு, எப்படி வாழ்வோம் என்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்குக் கூட கடன் வசூல் செய்வதில், எங்களுடைய பகுதியில் அதிகாரிகளுடைய கெடுபிடி அதிகமாக இருக்கிறது. அதைப்போலவே இந்த ஆண்டும் வெள்ளத்தால் தஞ்சைத் தரணி பாதிக்கப்பட்டது என்பதை பல்வேறு வகையிலே அறிவித்து இருக்கிறோம். நேற்றுகூட வேளாண்மைத்துறை அமைச்சர் தமிழகத்தில் வேளாண்மையிலே 126 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்று அறிவித்து இருக்கிறார்கள். இந்த நிலையில் கிஸ்தி வசூல் கெடுபிடி தஞ்சை மாவட்டததிலே பரவலாக, ஏன் சொல்லப்போனால், எல்லாக் கழனிகளிலும் சிகப்பு கொடி பறக்கின்ற வகையில் இன்று வசூல் கெடுபிடி அதிகமாக இருக்கிறது. என்வே நான் அரசுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாம் இந்த ஆண்டு இயற்கையினுடைய



காரணத்தால், தண்ணீர் கொடுக்க தாமதம் ஆனது. ஏதோ பின்னாலே பெய்த மழையினாலே விவசாயிகள் ஓரிரு கலன் மகசூலைக் கண்டு அறுத்து வருகின்றனர். இந்த நிலையில் தண்ணீர் தீர்வையை அவர்களுக்கு ரத்து செய்து ஒரு உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் அரசியல் காரணங்களினாலும் பல்வேறு கிராமங்களிலே ஒற்றுமைக் குலைவு ஏற்பட்டு, பல ஆண்டுக்காலமாக குடிமராமத்து செய்யப் படாமல் இருக்கின்றது. அதையும் வர இருக்கின்ற காலங்களி லாவது, இப்போது நடைபெற்ற தேர்தல்களின்மூலமாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மூலமாக ஏ.எல்.பி., சி.என்.டி. ஆகிய வாய்க்கால்களை மராமத்து செய்து, அந்தத் தொகையை வசூலிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-40.)

குத்தகை விவசாயிகளைப் பொறுத்தவரையில், மின் இணைப்பு கோருகின்றவர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளிலும்; நிலவள வங்கிகளிலும் குத்தகை விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்படுவது மறுக்கப்படுகிறது. அவர்களுக்கும் கடன் கொடுக்க அரசு அனுமதித்து அதே நேரத்திலே மின் இணைப்பு கொடுப்பதற்கும் அரசு அனுமதிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். பருத்தி விவசாயத்தைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு பருத்தி சாகுபடி செய்த விவசாயிகளில் நான்கில் ஒரு பங்கு விவசாயிகள்கூட இன்று பருத்தி சாகுபடி செய்யவில்லை. காரணம் சென்ற ஆண்டு பருத்தியிலே 350 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்காத காரணத்தால் மனம் தொய்வடைந்து இந்த ஆண்டு பருத்தி சாகுபடியிலே ஆர்வம் காட்டாமல் பல விவசாயிகள் ஆர்வத்தை இழந்து இருக்கிறார்கள். ஆகவே தமிழக அரசு காட்டன் கார்ப்பரேஷன் மூலமாக பருத்திக்கு ஒரு நியாயமான விலையை நிர்ணயம் செய்து அந்த பருத்தி உற்பத்தியாகின்ற நேரத்திலே காட்டன் கார்ப்பரேஷன் அதிகாரிகள் எல்லா மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கும் அதிகமாக சென்று கொள் முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மற்றும் தென் ஆற்காடு, திருச்சி மாவட்டங்களிலே நெல்லுக்கு ஊக்கத்தொகையாக குவிண்டாலுக்கு 35 ரூபாய் வழங்கப்படுவதை பாராட்டுகின்றோம். இருந்தாலும் கூட இப்போது கொள்முதல் செய்யப்படுகின்ற நெல்லுக்கு அளிக்கப் படுகின்ற அந்த 35 ரூபாய் டோக்கன் இன்னும் 3 மாதங்களுக்கு மேல் அவர்கள் உரமாக வாங்கி அதை உபயோகப்படுத்துவதற்கு

வாய்ப்பு இல்லாத காரணத்தினால், அவர்களே கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கி கட்ட முடியாத நிலை இருக்கிறதால் அந்த டிரா கூப்பன்களை கூட்டுறவுச் சங்கங்களின் கடன்களுக்கான வரவு வைத்துக்கொள்வதற்கு அரசு பரிசிலித்து ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்டத்திலே 200 களங்கள் அமைப்பதற்காக நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே அறுவடைக் காலங்களில் சாலைகளிலே போக்குவரத்து ஸ்தம்பிக்கின்ற நிலையிலே அவைகள் களங்களாக செயல்படும் விதத்தை நாம் எல்லோரும் அறிவோம். அதை கருத்திலே கொண்டு அதிகமாக நிதி ஒதுக்கம் செய்து ஒவ்வொரு கிராமத்திலும் பொதுவான இடங்களிலே சிமெண்ட் தளங்கள் வைப்பதற்கு அனுமதிக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, தண்ணீர்த் தட்டுப்பாடுகள் ஆண்டுதோறும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் எல்லா கிராமங்களிலும் சமுதாய குழாய்களை—கம்யூனிட்டி போர் வெல்களை அமைத்து அந்தக் கிராமத்திற்கு பாசன வசதி ஏற்படுத்தி அந்த கம்யூனிட்டி போர் வெல்களை ஊராட்சி ஒன்றியங்களினுடைய பராமரிப்பிலே விட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு முன்னாலே இருக்கின்ற கம்யூனிட்டி போர்வெல் சரியான பராமரிப்பு இல்லாமல் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதையும் சரியான முறையிலே பராமரிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக எங்கள் தொகுதியைப் பொறுத்து, திருப்பணந்தாளிலே ஒரு மார்க்கெட்டிங் கமிட்டி உள்ளது. அது வாடகைக் கட்டிடத்திலே உள்ளது. அதைப்போலவே ஆடுதுறையிலே ஒரு மார்க்கெட்டிங் கமிட்டியினுடைய தனி அலுவலகம் அமைத்து அதற்கும் நிரந்தரமாக ஒரு கட்டிடம் அமைக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பினுடைய விலையை உயர்த்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலதடவை வற்புறுத்தி வருகிறார்கள். அதையும் பரிசிலித்து கரும்பினுடைய விலையை ரூபாய் 250 ஆக உயர்த்தித் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலிலே ஈடுபடுகின்ற ஒரு தொழிலாளி மரணம் அடைந்தால் அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற வகையிலே அவர்கள் எதிர்பாராத காரணத்தினால் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது மரணம் அடைந்தால் அவர்களுக்கு மற்றத் தொழிலாளர்களுக்கு கொடுக்கின்ற மாதிரி ரூபாய் 10,000 உதவித் தொகை அளிக்கவேண்டுமென்றும் 60 வயதுக்கு



மேற்பட்ட விவசாயத் தொழிலாளிகள் அனைவருக்கும் ஓய்வு ஊதியம் அளிக்கவேண்டுமென்கிற உத்தரவினையிட வேண்டுமென்று நான் தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமாக பல தோட்டங்கள் இருக்கின்றன. அவைகள் 10 ஆண்டுகளாகப் பராமரிக்கப் படாமல் இருக்கின்றன. அவைகளைப் பழத்தோட்டங்களாக மாற்றுகின்ற முயற்சியை வேளாண்மைத்துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு, சென்ற ஆண்டு அமைச்சர் உரையிலே திருச்சியிலே இயங்குவதைப்போல, என்கோபெட் நிறுவனம் மூலமாக சிறப்பு அங்காடிகளை அமைத்து ஆங்காங்கே இருக்கின்ற எல்லா வகையான தெளிப்பான்களையும் இலவசமாக பழுதுபார்த்துக் கொடுக்கின்ற ஒரு திட்டத்தை விரைவுபடுத்தப்போகிறோம் என்று சொன்னார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை வேளாண்மைக் கல்லூரியை நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுகளாக தன்னுடைய வேளாண்மைத் துறையினுடைய அறிக்கையிலே ஆரம்பிக்கப்போவதாக குறிப்பிட்டார்கள். அதை இந்த ஆண்டிலாவது ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆடுதுறையில் இயங்குகின்ற பல்கலை கழகத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள தோட்டக்கலை பயிற்சி நிலையத்தையும், வாழை ஆராய்ச்சி நிலையத்தையும் விரிவாக்கம் செய்து பயன் உள்ளதாக ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடுதுறை வேளாண்மை பல்கலைக் கழகத்திற்கு தனிப்பட்ட நிலச் சொந்தக்காரர்களிடம் இருந்து எடுத்துக்கொண்ட நிலங்களுக்கு பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் அதற்குரிய தொகையை கொடுக்கவில்லை. அதை அளிப்பதற்கு உண்டான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க ஒரு ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எல்லா உறுப்பினர்களும் சொல்லியதன் அடிப்படையில் நான் ஒரு சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். கடந்த 10 ஆண்டு காலத்தில் விவசாயிகள் வாங்கிய கடன்களுக்கு உண்டான வட்டியை தள்ளுபடி செய்யவேண்டும். அவர்கள் கட்டவேண்டிய அசலை தவணை முறையில் வசூலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட

ஆண்டுகளில் கிஸ்தியை வஜா செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு மானிய விலையில் உரமும், பூச்சி மருந்தும், தெளிப்பானும், தார் பாயும், விவசாய கருவிகளும் முன்பு வழங்கியதைப் போல மீண்டும் வழங்குவதற்கான ஏற்பாடு களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி யடிக்கப் பெற்றது) தென்னை வளர்ச்சிக்கு மத்திய அரசு கொச்சியில் கயிறு போர்டு ஒன்றை வைத்து இருக்கிறது. அதைப் போல தமிழகத்தில் ஒரு இயக்குநர் அலுவலகத்தை ஏற்படுத்தி, தீவிரமாக தென்னை வளர்ச்சிக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி, இதில் தமிழகம் முதலிடம் வகிக்கிற அளவில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரையில், ஊராட்சி ஒன்றியங்களில், நகராட்சிகளில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றிற்கு நகராட்சியிலும், ஊராட்சி ஒன்றியத்திலும் தனியான பணியாளர்களை நியமித்து அந்த குடிநீர் வடிகால் வாரியத் திட்டங்களை செம்மையாக செயற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குடிநீர் வடிகால் வாரிய குழு உறுப்பினர்களைக் குறைத்து, திறமையாக செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் நன்றி. வணக்கம்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியகோரிக்கை எண்கள் 20, 49 மற்றும் 50 ஆகியவற்றை வரவேற்று என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மாநிலத்தில் முதலமைச்சராக பொறுப்பு ஏற்றதற்கு பின்னால் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த வேளாண்மைத் துறை பொறுப்பையும், குடிநீர் வடிகால் வாரிய பொறுப்பையும் சேர்த்து வைத்து இருப்பதால் இந்த வேளாண்மைத் துறை எவ்வளவு மேலோங்கி வளர்ந்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றையதினம் நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகளை இணைத்து வேளாண்மைத் துறை எப்படி செயல்படுகிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த வேளாண்மைத் துறை மூலமாக விவசாயிகளுக்கு பல்வேறு காரியங்களை இந்த அரசு செய்து வருகிறது என்பதை என்னைப் போன்றவர்கள் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறோம்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் பொறுப்புக்கு வந்த பிறகு இந்த உணவுத் துறையில் நாம் எந்த அளவுக்கு மேலோங்கி வளர்ந்துஇருக்கிறோம் என்பதைப் பார்க்கும் போது, ஒருகாலத்தில் உணவு நிலைமை எந்த அளவுக்கு இருந்தது என்பதை திரும்பிப் பார்த்தால் அரிசியை வாங்குவதற்கு எவ்வளவு க்யூ இருந்தது. இப்போது நிலைமை மாறி உணவில் நாம் தன்னிறைவு அடைந்து இருக்கிறோம் என்பதைப் பார்க்கும்போது வேளாண்மைத் துறையின் மூலம் உணவை உற்பத்திச் செய்கின்ற விவசாயிகள் எவ்வளவு முன்னேற்றத்தை எட்டிப்பிடித்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது என்னைப் போன்றவர்கள் பெருமைப்படாமல் இருக்கமுடியாது. அதை நான் பெருமையாக சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். காரணம் வேளாண்மைத் துறையின் மூலம் உற்பத்தி செய்கிற போது ஆண்களாக இருந்தாலும், குழந்தைகளாக இருந்தாலும் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த சிறு விவசாயிகள் எவ்வளவு அல்லல் படுகிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது இந்த அரசு அவர்களுக்கு பல்வேறு வகையில் சலுகைகளைச் செய்து இன்றைக்கு விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

(மாலை 5-50)

அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் பல்வேறு காரியங்களை இந்த அரசாங்கம் செய்து இருக்கின்றது. இன்னும் சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இருந்தாலும் அந்தக் குறைபாடுகளை நாம் களையவேண்டிய நிலைமையில் இருந்துவருகிறோம். ஆகவே விவசாயிகள் உற்பத்தி செய்வது எந்தப் பொருளாக இருந்தாலும், அரசாங்கம் அதற்குப் போதுமான விலையை அவர்களுக்குக் கொடுக்கிறதா என்று பார்த்தால், போதுமான விலை உற்பத்தி செய்கின்ற அந்த விவசாயிகளுக்கு தரப்படுவதில்லை. ஆகவே, அந்த நிலைமையை நாம் தவிர்த்தாகவேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லாக இருந்தாலும், கரும்பாக இருந்தாலும், அல்லது சிறு தான்யமாக இருந்தாலும், அல்லது பயிர் வகையாக இருந்தாலும், அவர்களுக்கு, உற்பத்திச் செலவை ஈடுசெய்கின்ற வகையில், இந்த அரசாங்கம், மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச்சொல்லி, விவசாயிகளுக்குப் போதுமான விலையை நாம் வாங்கித் தரவேண்டும்.

நான் அமைச்சரவர்களை கேட்டுக்கொள்வது, இந்த விவசாயத் துறையில். விவசாயிகளுக்குப் போதுமான விலையை வாங்கித் தரவேண்டுமென்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதே நேரத்தில் விவசாயிகள் பயன்படுத்துகிற ஊரணியாக

இருந்தாலும், சிறு சிறு குட்டைகளாக இருந்தாலும், குளங்களாக இருந்தாலும், சிறு விவசாயிகள் பயன்பெறுகிற ஒரு பக்குவமான நிலைமை கிராமப் பகுதிகளில் இருந்து வருகிறது. ஊரணிகளை நாம் கடந்த 10 ஆண்டுகளாக 1977-லிருந்து செம்மைப்படுத்தி வருகிறோம். அதன் மூலமாகத்தான் இன்றையதினம் கிராமப் பகுதிகளில் அந்த உணவு நிலைமை மேலும் மேலும் வளர்ந்து, இன்றைக்கு தன்னிறைவு அடையக் கூடிய நிலைமையை நாம் பெற்றிருக்கிறோம். அந்த நிலைமையில் உணவுத் துறையை நாம் செம்மைப்படுத்தியிருக்கிறோம். பெரிய பெரிய ஏரியாக இருந்தாலும், வாய்க்காலாக இருந்தாலும் அவற்றை செம்மைப் படுத்துவதை நாம் ஒரு கண்ணோட்டத்தோடு செயற்பட்டாலும், 50, 100, 200 ஏக்கர்கள் இருக்கக்கூடிய கிராமப் பகுதி ஏரிகளை செம்மைப்படுத்த வேண்டும். ஏரிகளை மட்டும் செம்மைப் படுத்தினால் போதாது. அதனுடைய வாய்க்கால்களை, தண்ணீரை வெளியேற்றும் வகையில், செம்மைப்படுத்தவேண்டும். மழை குறைவாக இருக்கின்ற காரணத்தால், தேங்கி இருக்கின்ற தண்ணீரை வைத்து, பாசனத்தை மேம்படுத்தினால், விவசாயம் மேலும் வளர்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

அந்த வகையில் சிறு ஊரணியாக இருந்தாலும், அந்த வாய்க்கால்களை ஒழுங்குபடுத்தி, விவசாயத்திற்கேற்ற முறையில் பக்குவப்படுத்தி, ஒரு ஒழுங்கான முறையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் பணிவோடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே வர இருக்கின்ற காலங்களில் உணவு உற்பத்தியில் நாம் அதிக கவனம் செலுத்தி உற்பத்தி செய்ய வேண்டும் என்ற குறியீட்டை நிர்ணயித்து இருக்கிறோம். ஆக அந்த நிலைமையை பார்க்கும்போது இந்த அரசாங்கம் விவசாயி களுக்குப் போதுமான விலையை, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருளுக்குக் கொடுக்க வேண்டும், ஏது உரமாக இருந்தாலும், யூரியாவாக இருந்தாலும், உற்பத்தி செய்கின்ற பொருளுக்குத் தகுந்த விலை கொடுக்கப்படவில்லை. ஆகவே நியாயமான விலை கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் மத்திய அரசிடம் சொல்லி, சிபாரிசு செய்து, அந்த நியாயமான விலை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பின் இங்கே தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் 200 களங்கள் சிமெண்டால் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு நெல் அடிப்பதற்கான களங்கள் கட்டுவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்ட விவசாயிகள் பயன்பெறுகிற வகையில் அந்த சிமெண்ட் கான்கிரீட் கொண்ட களத்தைப் போட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளை செய்திருந்தாலும், இன்றையதினம வேளாண்மைத் துறையில் எண்ணெய் உற்பத்தி யாக இருந்தாலும் அல்லது விதைகள் வழங்குவதாக இருந்தாலும், அந்த சலுகை அடிமட்டத்தில் இருக்கின்ற சிறு விவசாயிகளுக்குப் போய்ச் சேர்வது இல்லை. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வசதி படைத்தவர்களுக்குத்தான் இந்த நிலைமை கிடைத்திருக் கிறது என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, எந்த ஊராட்சியை எடுத்துக்கொண்டாலும், அரசாங்கம் வழங்குகின்ற சலுகைகள் குறுவிவசாயிகளுக்கும், சிறு விவசாயிகளுக்கும் போய்ச் சேராத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. அதை சரி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு குறிப்பிட்ட வர்க்கம்தான், பணம் படைத்த முதலாளிகள் தான், பெரும் வசதி படைத்தவர்கள்தான் சலுகைகளை, சப்சிடியை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக எனது குறிஞ்சிப்பாடி தொகுதியில், குறிஞ்சிப்பாடி யூனியனில் இந்த நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசிய அத்தனை அங்கத் தினர்களும் சுட்டிக்காட்டிய இந்த நிலையை, நானும் சுட்டிக் காட்டுகின்ற இந்த நிலையை நன்கு கவனித்து, அரசாங்கத்தின் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய நல்ல ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப் பல காரியங்களை நாம் விவசாயிகளுக்குச் செய்தாலும், மேலும் மேலும் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக நான் குடிநீர் வடிகால் வாரியத்தைப் பற்றி சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். குடிநீரைப் பொறுத்தவரையில் தமிழகம் முழுவதும் நல்ல நிலைமைகளை உருவாக்கவேண்டுமென்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர் களின் எண்ணமாகும். ஏழை எளிய மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டுவருகிறார்கள். அதனால்தான், 1977-ம் ஆண்டாக இருந்தாலும், 1980-ம் ஆண்டாக இருந்தாலும் 1985-ம் ஆண்டாக இருந்தாலும் கிராமப் பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்கள், தமிழக அரசு தங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தருவார்கள் என்ற எண்ணத்தில்தான் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

குடிநீர் வசதியைப் பற்றி, குடிநீர் வடிகால் வாரியம் இங்கே தந்திருக்கிற புள்ளி விவரங்களைப் பார்த்தாலே நிலைமை தெரிகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தால் போதுமான அளவு

நீர் இல்லாத திட்டங்கள் 18,167 என்றும், போதுமான அளவு நீர் இருக்கிற திட்டங்கள் 28,908 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இன்னும் பயன் பெற வேண்டிய பகுதிகள் நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் 3-ல் 1 பங்கு இருக்கிறது என்பதுதான் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியம் திட்டங்களை நிறைவேற்றுவதில் பல்வேறு குறைகள் இருக்கின்றன. பல்வேறு அதிகாரிகள் சேர்ந்து இந்தத் திட்டங்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்தும், கணிப்புமாகும். என்னுடைய குறிஞ்சிப்பாடி யூனியனை எடுத்துக் கொண்டால் குடிநீர் வடிகால் வாரியம் பல்வேறு வேலைகளை செய்து இருக்கிறது.

அதை இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் பயன் உள்ள திட்டங்கள் 3-ல் 1 பங்குதான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. காரணம், அவர்கள் எந்த கிராமத்தில் பணியை மேற்கொண்டாலும் அந்த கிராமத்திலுள்ள பஞ்சாயத்துத் தலைவரையோ அல்லது அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவரையோ ஒன்றிய ஆணையரையோ கலந்து செய்வதில்லை. அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினரையும் கலந்து கொள்வதில்லை. பவர் டிரில்லரை எங்கோ கொண்டுபோய் போட்டுவிடுகிறார்கள். அது பயன்படுவதில்லை. குடிநீர் வடிகால் வாரியம் மூன்று பகுதியாக பிரிக்கப்பட்டிருக்கிறது. கை பம்ப் போடுவது பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

வளர்ந்து வரும் சமுதாயத்தில் கை பம்ப் என்பது ஒத்துவராத ஒரு நிலைமைதான். இன்றைக்கு இவ்வாறு போடப்பட்ட கை பம்ப்கள் எல்லாம் யானை தும்பிக்கை போல ஒவ்வொரு இடத்திலும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. வளர்ந்து வருகிற சமுதாயத்தில் நாம் பவர் பம்பைத்தான் போடவேண்டும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது என்ற நிலைமையில், கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் ஒரு பஞ்சாயத்தை எடுத்துக் கொண்டால் அதன் கீழ் 3, 4 கிராமங்கள் வருகின்றன. ஒரு பஞ்சாயத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொட்டி கட்டினால், அந்தப் பஞ்சாயத்து முழுமைக்கும் பயன் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஊராட்சி ஒன்றிய தலைவரை, ஆணையரை, சட்ட மன்ற உறுப்பினரை கலந்து குடிநீர் வாரியம் செயல்பட்டால், அரசாங்கம் தருகிற குடிநீர் மக்களுக்கு போய்ச் சேர வழி ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 6-00)

அந்த நிலைமை ஏன் ஏற்படுகிறது என்பதை நான் கடந்த ஒரு வருஷமாகப் பார்த்தேன். என்ன காரணத்தினால் அந்த நிலைமை ஏற்படுகிறது என்றால் குடிநீர் வடிகால் வாரியத்திலே குறிப்பிட்ட 7, 8 அதிகாரிகள் சேர்ந்து சூழ்ந்துகொண்டு ஒருவருக்கொருவர் ஒத்துவரவில்லை என்று சொல்கிறார்கள். மின்வாரியத்திற்கு





300 கோடி ரூபாய் பணம் ஒதுக்குகிறோம். அதைப்போல விவசாயத்திற்குப் பணம் ஒதுக்குகிறோம், ஹவுசிங் போர்டுக்குப் பணம் ஒதுக்குகிறோம்; சுகாதாரத்திற்காக பணம் ஒதுக்குகிறோம். இப்படி அத்தனை இலாக்காக்களுக்கும் பணம் ஒதுக்குகிற போது நேரடியாகவே அந்தப் பணம் அவர்களுக்குப் போய்ச் சேருகிறது. இப்போது 127 கோடி ரூபாய் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒதுக்காமல் இவ்வளவு தொடர்புள்ள இலாகா அதிகாரிகள் மூலம் செய்யப்படவேண்டுமா என்பதைப் பார்க்க வேண்டும். குடிநீர் வடிகால் வாரியத்திற்கே அந்தப் பணத்தை ஒதுக்கி அதன் தலைவருக்கே அந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். எப்படி ஹவுசிங் போர்டு தலைவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறதோ, எப்படி குடிசை மாற்று வாரியத் தலைவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறதோ, எப்படி மின்வாரிய தலைவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறதோ, அதைப்போலவே குடிநீர் வடிகால் வாரியத் தலைவருக்கும் அந்த அதிகாரத்தை வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அதன் மூலமாக நேரடியாக அந்தப் பணம் மக்களுக்கு உடனடியாகக் கிராமப் புறங்களுக்குப் போய்ச் சேருகின்ற வகையிலே நிலைமைகள் ஏற்படவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் ஆய்வுக் கட்டணம் என்று வாங்குகிறார்கள். எத்தனையோ நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் குடிநீர் வழங்குவதற்காக ஆய்வுக் கட்டணம் தேவையா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படி வாங்குவதாக இருந்தாலும் அதை மதிப்பீட்டிலே சேர்த்துக் கொள்ளுங்கள், அப்படிச் சேர்த்துக் கொண்டால் அமைச்சர் அவர்கள் மீது தமிழ்நாட்டு மக்கள் நல்ல எண்ணத்தோடு இருந்து வருகிறார்கள், அவர்கள் அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வடலூரில் வாழ்ந்த வள்ளலார் பகுதியிலே குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று போன பட்ஜெட் விவாதத்தின்போதே அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இன்று வரையிலும் ஒரு வருஷமாக தலைமைச் செயலகத்திலே அது இருந்து கொண்டிருக்கிறது. போன வாரத்தில் நம்முடைய இயக்குநர் கமிஷனரை நேரடியாகப் பார்த்து உடனடியாக அனுமதித்து இருக்கிறார்கள். ஆகவே வடலூரில் வாழ்ந்த வள்ளலார் பகுதியிலே நடப்பு ஆண்டிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று முடிக்கிறேன்.

*டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அரசு சார்பாகக் கொண்டு வரப்பட்டுள்ள இந்த வேளாண் துறை, குடிநீர் வடிகால் துறை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

விவசாயிகள் தமிழ்நாட்டின் உயிர்நாடிகளாக இருக்கிறார்கள் என்பதை முற்றிலும் உணர்ந்தவர் தமிழக முதல்வர் அவர்கள். இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய அந்த விவசாயிகளின் முதுகெலும்பை உடைத்துவிடக்கூடாது. அவர்களின் முன்னேற்றம்தான் நம்முடைய முன்னேற்றம் என்பதை நன்கு உணர்ந்துதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று எண்ணினாலும் நியாயமான விலை கொடுக்க முன்வந்திருக்கிற அரசை நான் பாராட்டுகிறேன். இடுபொருட்களை நியாயமான விலையில் கொடுக்கிற இந்த அரசை நான் பாராட்டுகிறேன். ஆனால், இலவசமாகத் தருகிறோம் என்று விதைகள், நாற்றுகள், உரம், பூச்சி மருந்து போன்றவை எல்லாம் விவசாயிகளுக்குச் சென்றடைகிற வகையில் அரசு அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் ஒரே பொருளை அதிகமாகப் பயிரிட்டு உற்பத்தியை அதிகம் செய்து அதிக நட்டத்திற்கு ஆளாகாமல் தகுந்தபடி அவர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை நல்ல விலைக்கு விற்பதற்கு நல்ல மார்க்கட்டிங் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் இடைத்தரகர்கள் இடைச்செருகல் குறையும். வெளிநாடுகளைப் போன்று துண்டு துண்டாக இருக்கிற நிலங்களை, விவசாயிகளையெல்லாம் ஒன்றுபடுத்தி கூட்டுப் பண்ணை மாதிரியாக பெரியார் மாவட்டத்திலே குறிப்பாக பெருந்துறைத் தொகுதியிலே ஏற்படுத்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் பருவ மழை அடிக்கடி தவறி விடுகிறது. எனவே, ஒன்று, பயிர்க் கடன்களை ரத்து செய்ய வேண்டும் அல்லது பயிர்க் கடன்கள் வசூல் செய்வதைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்துறை பகுதியில் மட்டுமல்ல, எங்கெங்கு தண்ணீர் கிணற்றில் இல்லையோ அங்கெல்லாம் வைக்கப்பட்டுள்ள பம்ப் செட்டுகளுக்கு ப்ளாட் ரேட் போடப்பட்டுள்ளதால், மாதம் 5 அல்லது 10 ரூபாய் என்று இருந்தது. ஆனால், இப்போது ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் வீதம் வசூலிக்கிறார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இது மேலும் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. ஆனால், தண்ணீரை அதிகமாகப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு இது இலாபத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, இதனைப் பழையபடியே மாற்ற வேண்டும் அல்லது 100 யூனிட்டுகளுக்குக் குறைவாக ஓட்டுபவர்கள் அனைவருக்கும் இலவசமாக மின்சாரத்தைத் தர வேண்டும்.

பெரியார் மாவட்டத்தில் மின்னிணைப்பிற்காக மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகக் காத்திருக்கின்ற விவசாயிகளுக்கெல்லாம் உடனடியாக மின்சார இணைப்பை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





கீழ் பவானி வாய்க்காலிலிருந்து ஆண்டுக்கு ஒரு முறையாவது கண்டிப்பாகத் தண்ணீர் பாசனத்திற்கு விடப்பட வேண்டும்; குறிப்பாகப் பாசனத்திற்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், தஞ்சைக்குத் தண்ணீர் விட வேண்டாம் என்று நான் கூறவில்லை. எங்கே குறைந்த தண்ணீரைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைத் தருகின்றார்களோ அங்கே தண்ணீர் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆய்வுகள் கூட கூறுகின்றன, பெரியார் மாவட்டத்தில் கீழ் பவானி வாய்க்காலின் மூலமாகக் குறைந்த தண்ணீரைப் பயன்படுத்தி நிறைய விளைச்சலைப் பெறுகிறார்கள். எனவே, ஓவர் ஃபீட் செய்யும் தஞ்சை மாவட்டத்திற்குக் கொடுக்காமல், அதிகமான தண்ணீரைக் கீழ்பவானி வாய்க்காலுக்குக் கொடுத்து அதிக மகசூலைப் பெறுவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கீழ்பவானி வாய்க்காலில் எனக்கு இரண்டு முறை தண்ணீர் விட்டிருக்கிறார்கள். இன்னும் இரண்டு முறையாவது தண்ணீர் விட வேண்டுமென்ற கோரிக்கையை வைக்க விழைகிறேன்.

இப்பொழுதெல்லாம் ஸ்வீப்பேஜ் வாட்டர் வந்து தேண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தி நெல்லுக்குக் கூட நாற்று நட்டிருக்கிறார்கள்; கரும்பு போட்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் இருபது மடங்கு தண்டத் தீர்வை போட்டிருக்கிறார்கள். இந்த இருபது மடங்கு தண்டத் தீர்வையை அவர்களால் கட்ட முடியாது, எனவே, ஒன்று அதைக் குறைக்க வேண்டும் அல்லது அதை அடியோடு நீக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு சிறு நீர் நிலைகளை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல நாட்டிற்கு நலம் தர இருக்கின்ற திட்டங்களையெல்லாம் நமது அரசு கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதனால் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் மட்டுமல்லாமல், பணப் பயிர்களைப் பயிரிடுகின்ற விவசாயிகள் ஆகியவர்கள் பொருளாதாரத்தை உயர்த்த, பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகளின் நண்பனாக விளங்கும் நமது தமிழக அரசைப் பாராட்டுகின்றேன்,

நீர் இன்றி அமையாது இவ்வுலகம் என்னும் பொன் மொழிக்கிணங்க நமது அரசு நாட்டிலே உள்ள 47,075 குடியிருப்புகளுக்கும் நீர் வழங்க முற்படுவதைப் பாராட்டுகிறேன். இவற்றில் நல்ல நீர்நிலைகள் கொண்டவை 28,908. மற்றவைகள் 18,167 இந்த 18,167-இல் எங்கள் பெருந்துறை தொகுதியில் மட்டும் 197 குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை. அவைகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பெருந்துறை தொகுதியில் பெரும் பகுதி வறண்ட பகுதி, மழையும் சரிவரப் பெய்வதில்லை, விஞ்ஞான ஆய்வாளர்கள் கூறுகின்றனர், இன்னும் ஐம்பது ஆண்டுகளில் தண்ணீரே

கழிவு நீரை ஆற்றிலே விடுவதைத் தடுக்கவேண்டும். நல்ல முறையிலே சாக்கடை கட்டி, அவற்றை அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்துறை பேரூராட்சியில் வருமானம் இல்லாததால், காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்திற்குக் கொடுத்த கடனையே இன்னும் கட்டமுடியவில்லை. அதிலே வட்டி வேறு; பராமரிப்பு செலவு வேறு; ஆகவே, அரசு மானியமாகக் கொடுத்து உதவ வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள விவசாய மானியக் கோரிக்கை, குடிநீர் வழங்கல் மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்துள்ள காந்தி-காமராஜ் தேசிய காங்கிரசின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

இன்று நாட்டில் வெகு முக்கியத்துவம் வாய்ந்த தொழில் விவசாயம். இந்த விவசாயம் செய்து தரக்கூடிய மக்கள், அன்றாடம் உற்பத்தியை செய்யக்கூடிய நிலையில், நெல். கரும்பு போன்றவைகளுக்குச் சரியான விலை கிடைக்கவில்லை. அவர்களுக்குச் சரியான விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு அரசு இப்பொழுது கொடுக்கக்கூடிய மானியத்தைக் கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயக் கடன் கூட்டுறவுக் கடன்களைக் கெடுபிடியுடன் வசூல் செய்வதை நிறுத்தி விளையாத இடங்களில் ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு கடன் வசூலை நாள் நீடிப்புச் செய்துகொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டம், விவசாயப் பொறியியல் துறைக்கு, ஆழ்குழாய் போடும் இயந்திரம் ஒன்று கூடுதலாக வழங்கப்பட வேண்டுமென்று நான் டி.டி.சி. மீட்டிங்கில் சொல்லி, சம்பந்தப் பட்ட அலுவலர்கள் எழுத்துமூலமாகத் தெரிவித்துள்ளார்கள். அங்கே கூடுதலாக ஒரு இயந்திரம் வேண்டுமென்பதற்குக் காரணம் என்னவென்றால், விவசாயம் அபிவிருத்தி செய்ய பொறியியல் துறைக்குச் சென்று பணம் கட்டி, சுமார் 3,4 மாதங்கள் காத்திருந்து துளைபோடும் இயந்திரத்தைக் கொண்டுசெல்லக் கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே, இங்கே ஒரு கூடுதல் இயந்திரத்தைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஆழ்குழாய் போடப்பட்டுள்ள குடிநீர் கிணறுகளிலே அடிக்கடி ரிப்பேர் வந்துவிடுகிறது. இந்த கொள்கை விளக்கப் புத்தகத்திலே சொல்லப்படுவதைப்போல ஒன்றும் நடைபெற வழி யில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏழு நாட்களுக்குள் ரிப்பேர் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு மாதம், ஒன்றரை மாதம் ஆனாலும் ரிப்பேர் செய்ய முடியவில்லை. காரணம் என்னவென்றால், ஒரு பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள் 200 அல்லது 250 அடி பம்புகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் ரிப்பேர் பார்ப் பதற்கு ஒரே ஒரு நபர் தான் இருக்கிறார். ஆகவே, ஒரு பஞ்சாயத்து யூனியனில் இரண்டு ரிப்பேர் பார்ப்பவர்களை உடனடியாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கூடுதல் ரிப்பேர் பார்ப்பவர்களை நியமிப்பதாகச் சொல்லியிருந்தும் கூட, இதுவரையில் எந்த யூனியனிலும் கூடுதலாக ரிப்பேர் செய்பவரை நியமித்ததாகத் தெரியவில்லை.

எனது தொகுதி மிகவும் வறட்சியான தொகுதி. எந்த விதமான பாசனமும் அங்கே இல்லை. நிலத்தடி நீரைத்தான் குடிநீருக்கு பயன்படுத்த வேண்டியுள்ளது. அதன் காரணமாக கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்து, தாம்பிர வருணி ஆற்றில் கருங்குளம் பக்கத்தில் ஒரு பெரிய திட்டத்தைத் தயார் செய்து அதிலிருந்து வறட்சிப் பகுதியான பேய்குளம் பகுதியை ஒரு மையமாகவும் கோமாநேரி கூவங்கிணறு பகுதியை ஒரு மையமாகவும் அமைத்து குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில பகுதிகளில் சமுதாய நல கிணறுகள் அடிக்கப்பட்டு அதில் நிறைய தண்ணீர் இருந்துள்ளது, அதை விவசாயத்திற்குப் பயன்படுத்தாமல் உள்ள நிலையில், அது குடிநீருக்கு தகுதி உடைய தண்ணீராக இருக்கிறது. அதுபோன்ற கிணறுகளில் ஒரு ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்து, சிறிய டாங்க் அமைத்து 4 நல்லிகள், 6 நல்லிகள் வைத்து தண்ணீர் விநியோகம் செய்தால் சுற்றுப் புறங்களில் இருக்கிற கிராமப்புற மக்கள் பயனடைவார்கள். அந்த கிராம மக்கள் வந்து குடிநீர் எடுத்துச் செல்வதற்கு அது மிகவும் நல்லதொரு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமுதாய நல கிணறுகளிலிருந்து இந்த வகையிலே குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் திருப்பேனா பஞ்சாயத்தில் மாவீடுபண்ணையின் சமீபம் ஆற்றில் ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்திற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் தென்திருப்பேனா, குருகாட்டூர், கோட்டூர், மணத்தி, மேலகடம்பா, கீழக்கடம்பா, கல்லாம்பாறை

பகுதிகளுக்கு குடிநீர் வழங்க முடியும். தற்போது இநதப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வாய்க்கால் தண்ணீரைத்தான் குடித்துவருகிறார்கள்.

மேலும் மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு எடுத்து பயிர்களை அழிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கடம்பா பாசனம் குருகாட்டூர் பகுதியில் இருந்து இராஜபதி, வெள்ளக் கோயில் வரை இந்த பாதிப்பு இருக்கிறது. இந்தக் குறையைப் போக்க பத்து ஆண்டுகளுக்கு முன்னால் 12 இலட்சம் ரூபாய் செலவில் ஆலங்கால் வடிகால் திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் இன்னும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அதனால் மழைக் காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பயிர்கள் அழிந்து வருகின்ற சூழ்நிலை இருப்பதால் உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனது தொகுதியைச் சேர்ந்த செய்துங்க நல்லூர் பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்காக தாம்பிரவருணி ஆற்றில் வசவப்புரம் பக்கத்தில் போர் போட்டு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு, சுமார் மூன்று ஆண்டுகள் ஆகியும் அந்தத் திட்டம் இன்னும் முடிவானதாகத் தெரியவில்லை. இந்த நிதி ஆண்டில் அந்தத் திட்டத்தையும் சேர்த்து அந்தப் பகுதி மக்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தான்குளம் யூனியன் கொம்பன்குளம் பஞ்சாயத்து, கீழ்குளம், இடவுட்டான் குடியிருப்பு, வேட்டைராஜன் குளம், அதைச் சேர்ந்த அரிசன காலனியாவையும் சேர்த்து, பஞ்ச நிவாரணப் பணியின் மூலம் ஒரு குடிநீர் திட்டம் தயார் செய்து டாங்க் அமைத்து, 3 ஹார்ஸ் பவர் மோட்டார் மாட்டி சுமார் மூன்று ஆண்டுகளாகியும் அதற்கு எலக்ட்ரிக் லைன் போடப் படாமல் உள்ளது. அதை உடனடியாக சீர்செய்து, மின்சார லைன் போட்டு, அந்தப் பகுதி மக்கள் குடிநீர் பெற வசதி செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கருங்குளம் யூனியன் விட்டலாபுரத்தில் இயங்கிவரும் நீர்த்தேக்கத் தொட்டியில் பைப்பு அமைத்து நல்லி வைத்து கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் கிடைக்க நல்ல வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6-20)

தமிழ்நாட்டில் ஆயிரம் கிலோமீட்டர் நீளமான கடற்கரை இருக்கிறது. மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்களும் மற்றும் மற்ற தொழில்களில் ஈடுபட்டவர்களும் 402 கிலோ



மீட்டர் பகுதிகளில்வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் குடிநீர் கிடைப்பதில் மிகச் சிரமமான சூழ்நிலை இருந்து வருகிறது. ஆனால் கடல் நீருக்கு அடியில் இருக்கும் மணல் பரப்பின் கீழே பல இடங்களில் ஏராளமான நல்லதண்ணீர் தேங்கி இருக்கிறது என்று இப்போது விஞ்ஞானிகள் எல்லாம் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகவே கடல் நீரைக் குடிநீராக ஆக்கவேண்டும் என்று நீண்டநாட்களாக வேண்டுகோள் விடுத்து வரும் காந்திகாமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கடலில் தேங்கி இருக்கும் தண்ணீரைக் கண்டுபிடிக்கவும், அதை மக்களுக்கு வழங்கவும் தமிழக அரசு உடனடியாகத் திட்டமிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சாத்தான்குளம் யூனியனில் வெளிநாட்டைச் சேர்ந்த 40 ஹார்ஸ் பவர் கொண்ட ஒரு உழவு இயந்திரம் வந்து, அது நல்ல முறையில் வேலை செய்துகொண்டிருக்கிறது. சிறிது நாட்களுக்குள்ளாகவே அதனை ஏலத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். அந்தப் பகுதி விவசாயிகள் அந்த இயந்திரம் அங்கே இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அது 40 ஹார்ஸ் பவர் கொண்ட இயந்திரமாகவும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரமாகவும் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறது. எனவே அதனை ஏலம் விடக்கூடாது என்று சொல்லி பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே விவசாயம் மற்றும் குடிநீர் வழங்கல் பற்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பிலே நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைக்கு தமிழகத்தில் விவசாயப் பணிகள் என்ற முறையில் பலவற்றை எடுத்துக்கூறி வந்தாலும் கூட அடிப்படை விவசாயியாக இருப்பவர்களுக்கு இதைப்பற்றிய போதிய அறிவுரைகள் அங்கே எடுத்துச் சொல்லப்படவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேரடி யாக மக்களிடத்திலே சென்று எஜுகேட் செய்வதற்குரிய வகையில் பல வேளாண்மை சம்பந்தப்பட்ட அமைப்புகள் எல்லாம் இருந்தாலும்கூட, அவை எல்லாம் சரிவர அங்கே நடந்து வரவில்லை என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன். விவசாயிகளைப் பொறுத்தமட்டில் நவீனக் கருவிகளை எல்லாம் எந்த அளவுக்குப் பயன்படுத்தி நல்ல முறையில் நன்மைகளை அடைய முடியும் என்பது பற்றி தெளிவாக எடுத்துச் சொல்லபட வேண்டும் என்று மீண்டும் நான் வலியுறுத்துகிறேன்.

அடுத்து விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் தங்கள் பணிகளை நல்லமுறையில் ஆற்றுவதற்கு உதவுகிற வகையில் சரிவர களங்கள் இல்லாமல்

இருக்கிற நிலைமை இருக்கிறது. ஆனால் களங்கள் ஒரு சில இடங்களில் கட்டுவதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாறு உலக வங்கியின் உதவியுடன் நடைபெறக்கூடிய இந்த களங்கள் அமைக்கின்ற பணி மிகச் சிறியதாக இருந்தாலும், அனைத்து மக்களுக்கும், அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கும் படியாக அது அமைக்கப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதுபோல் உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் போன்றவற்றை வழங்குவதைப் பொறுத்தவரையில், கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் அவற்றை எல்லாம் பெற்று நல்ல முறையில் பயனடையக்கூடிய வகையில் நல்ல முறையில் அவர்களுக்கு அறிவுறுத்தப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகள் வறட்சியால் மிகவும் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள். அதே நேரத்தில் இயற்கைச் சீற்றங்கள் என்ற முறையிலும், அதாவது புயல், வெள்ளம் போன்ற வற்றாலும் அதிகப்படியான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களையும் மற்ற தொழிலாளர்களையும் ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் இயற்கைச் சீற்றங்கள் என்ற அடிப்படையில் பல வகைகளில் அவர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஏனைய தொழில்களில் இருப்பவர்களுக்கு இந்த மாதிரியான பாதிப்புகள் நிச்சயமாக இல்லை. எனவே அப்பேர்ப்பட்ட ஒரு கஷ்டமான சூழ்நிலையில் இன்றைக்கு இந்த நாட்டுக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு இன்னும் நல்ல முறையில் உதவிகளைச் செய்ய வேண்டும். உரங்கள் எல்லாம் அதிகப்படியாக அவர்களை ஊக்கப்படுத்துவதற்குரிய முறையில் அதிகமான பகுதிகளில் வழங்கப்படவேண்டும். ஒரு சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் 35 ரூபாய் என்று ஊக்கத்தொகை எல்லாம் கொடுக்கிறார்கள். மற்ற இடங்களில் உள்ள விவசாயிகளுக்கும் அந்த ஊக்கப் பணம் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

வாட்டர் மேனேஜ்மென்ட் என்ற முறையில் நவீனமான திட்டங்களை எல்லாம் இன்றைக்கு செயல்படுத்துகிறார்கள். ட்ரிப் இர்ரிகேஷன் என்ற முறைகளை எல்லாம் அந்த மக்களுக்கு எடுத்துச் சொல்லி, எந்த அளவுக்கு மிகக் குறைந்த தண்ணீரைக் கொண்டு அதிகப்படியான அளவுக்கு விவசாயம் செய்ய முடியும் என்பதை எல்லாம் எடுத்துச் சொல்லி அறிவுறுத்தக்கூடிய திட்டங்களை மிகப் பரவலாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மானாவாரி பகுதிக்குள் இருக்கக்கூடிய சாகுபடி திட்டத்தையும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால், பெரும்பான்மையான தென் மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாய மக்கள் எல்லாம் அங்கே மழையை





நம்பி வாழக்கூடிய மக்களாக இருக்கிற காரணத்தினாலே, அங்கே இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய வகையிலே, அந்தத் திட்டத்தை நல்ல முறையிலே விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல மலைப்பகுதியிலே வாழ்கின்ற மக்கள் விவசாயத் துறையிலே அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நிலஅரிப்பு போன்ற இயற்கைச் சீற்றங்களின் காரணமாகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். கொடைக்கானல் பகுதியை எடுத்துக் கொண்டால் அங்கே பூம்பாறை, பள்ளங்கி போன்ற பகுதிகளில் எல்லாம் அதிகமாக—கேஷ் கிராப்ஸ் என்று சொல்லக்கூடிய—முள்ளங்கி, கேரட், பட்டாணி போன்ற பயிர்களை அதிகமாக பயிரிடுகிறார்கள். ஆனால் அவர்களுடைய விவசாயம் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற இயற்கைச்சீற்றங்களாலும் மற்றும் உள்ள பல விவசாயப் பிரச்னைகளின் காரணமாகவும் பாதிக்கப்பட்டிருக்கிற இப்பேர்ப்பட்ட மக்களிடமிருந்து வரி மற்றும் கடன் வசூல் செய்வதை மிக கெடுபிடியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி அந்த மக்கள் பலவகையிலும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலைமையிலே, இதையெல்லாம் யோசித்து, அவர்கள் பட்டிருக்கிற கூட்டுறவு மற்றும் விவசாயக் கடன்களையெல்லாம் சிறிது காலம் தாழ்த்தியாவது பெறக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல என்னுடைய தொகுதியாக இருக்கக்கூடிய உசிலம்பட்டி தொகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று ஏற்கெனவே கேட்டோம். பொது விவாதத்திற்குப் பின்னர் மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அதனை எடுத்துச்சொல்வார், அப்படி ஒருஅறிவிப்பைச் செய்வார் என்று ஆவலோடு எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் அறிவிக்கவில்லை. நமது மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னதைப்போல எந்த அறிவிப்பும் அது குறித்து இல்லை. ஆகவே எங்கள் மதுரை மாவட்டத்திலே இருக்கிற உசிலம்பட்டி மற்றும் திருமங்கலம் தாலுக்காக்களை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டும். அத்தோடு விவசாயிகளின் கடன்களையும் காலம் தாழ்த்திப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல வறட்சிப் பகுதியாக இருக்கக்கூடிய எங்கள் பகுதியிலே கட்டாயமாக கரும்பு ஆலை வரவேண்டும் என்ற கோரிக்கையை இந்த மானியத்தின் மூலமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அந்தப் பகுதி கரும்பு உற்பத்தி செய்யப்படுகிற பகுதியாக இருப்பதால் மிக அதிகமான மக்கள் கரும்பு ஆலை ஒன்று அங்கே வரவேண்டும் என்ற விருப்பத்தில் இருக்கிறார்கள். ஏனென்றால் மக்கள் சக்தி அதிகமாக அங்கே இருக்கிறது. உழைக்கக்கூடிய மக்கள் அதிகமாக அங்கே இருக்கிறார்கள். விவசாயப் பணிகளை எல்லோரும் செய்யமுடியாத

நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலும், வறட்சியான பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் கரும்பு ஆலை ஒன்று அங்கே நிறுவப்படுமானால், அந்த மக்களுக்கு. அது நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று சொல்லி, குடிதண்ணீர் வழங்கலைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குடிதண்ணீரைப் பொறுத்த மட்டில் ஓ. எச். டி. என்ற முறையிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பல இடங்களிலே அமைத்திருக்கிறார்கள். ஒரு சில இடங்களிலே பார்க்கிறபோது ஒரு சில காலத்திற்குத்தான் அந்த நீர் ஊற்று நல்ல நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே அது எதற்கும் பயன்படாத நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறது. இவற்றை எல்லாம் மாற்ற, காம்பிரஹென்சிவ் ஸ்கீம் என்ற முறையிலே கூட்டுக் குடிதண்ணீர் திட்டமாக—ஒரு இடத்திலே நல்ல நிலைமையிலே குடிதண்ணீர் ஊற்று இருந்துகொண்டிருக்கிறது என்றால், அதைச் சுற்றியுள்ள 3, 4 கிராமங்களோடு, அந்தத் திட்டத்தை சேர்த்து அமைக்க வேண்டும். ஒருசில இடங்களிலே அப்படிப்பட்ட முறை தற்போது இருந்தாலும், அதை நல்ல முறையிலே இன்னும் விரிவுபடுத்த வெண்டும் என்பதைத்தான் இதிலே குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். எனவே அப்படிப்பட்ட திட்டங்களை நிறை வேற்றி குடிதண்ணீர் மட்டுமாவது, வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தரமாக கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல அடி குழாய்கள் பரவலாக இருக்கின்றன. ஆனால் பெரும்பாலான கிராமங்களில் அடி குழாய்கள் கூட இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அத்தோடு அடி குழாய்கள் பராமரிப்பு என்ற நிலைமையைப் பார்க்கிறபோது, பராமரிப்பு மிகவும் மோசமாக இருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் என்று எடுத்துக்கொண்டாலும் ஒரே ஒரு பிளம்பர் தான் இருக்கிறார். அப்படி இல்லாமல் இந்த வறட்சி நேரத்தைக் கருதியாவது தற்காலிகமாக ஒவ்வொரு ஒன்றியத்திலும் 4 பேர்கள் 5 பேர்கள் என்று நியமித்து, அந்த அடி குழாய்களை ரிப்பேர் செய்கிற நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இந்த அடிகுழாய்கள் சம்பந்தப்பட்ட அளவிலே ஒரு யூனியன் என்று சொன்னால், அதற்கு 25 ஆயிரம் ரூபாயை ஒதுக்கி உதிரி பாகங்களை—குழாய் ரிப்பேர் போன்ற அனைத்து மெக்கானிக்கல் வேலைகளுக்கும்—வாங்கி கட்டாயமாக கொள் முதல் செய்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அடிக்கடி பழுது போகின்ற பாகங்கள் என்ன என்பதையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்காமல், தேவையில்லாமல் இருக்கக் கூடிய உதிரி பாகங்களையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக வாங்கி, அந்த யூனியனிலே காண்டிராக்ட் மூலம் எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே அவைகளில் பல பொருள்கள் பயன் இல்லாத நிலைமையிலேயே இருந்து



கொண்டிருக்கின்றன. அவைகளையும் நல்ல முறையிலே பார்த்து ஒழுங்குபடுத்த வேண்டும். ஒதுக்கப்படுகிற பணமும் நல்ல முறையில் செலவாக வேண்டும். தேவையில்லாமல் பொருள்களை வாங்குவதை தவிர்த்திருந்தால் இன்னும் கூட 4, 5 இடங்களில் அடி குழாய்களை போடக்கூடிய நிலைமை—வாய்ப்பு—இருக்கும்.

(மாலை 6—30)

எனவே நல்லமுறையில் பயன்படக் கூடிய அளவிலே பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக உசிலை மாநகரத்தில் மேல்நிலை நீர்த்தொட்டி ஒன்று இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. திறப்பு விழா நடத்தப்படாமல் இருக்கிறதென்று பார்த்தால், அது இன்னும் முடிவுபெறாமல் கூட இருக்கிறது. பேரணையில் குடிதண்ணீர் எடுக்கிற மோட்டார் வந்து சேர்ந்திருக்கிறது. பாலம் கட்டும் பணி நடந்துகொண்டிருக்கிறது என்று மூன்று ஆண்டுக் காலமாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணி இன்னும் முடிவடையாமல் இருக்கிறது. ஆகவே விரைவாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். உசிலை நகரை ஒட்டிய பல பகுதிகளுக்கு அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை உடனடியாக நிறை வேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

* திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் எண். 20—வேளாண்மை, 49—குடிநீர் வழங்கல், 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசுவதற்கு எனக்கு வாய்ப் பளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சிகளில் உள்ளவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைப் பார்க்கிறபோது, வேளாண்மை பற்றிய மானியக் கோரிக்கையில் கொடுக்கப்பட்டவை 91 வெட்டுத் தீர்மானங்களாகும். குடிநீர் வழங்கல் மானியக் கோரிக்கையில் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் 66 ஆகும். வேளாண்மை குறித்த மூலதனச் செலவு மானியக் கோரிக்கையில் 38 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 195 வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றால் அதிலேயிருந்து நமக்குத் தெரிவது என்னவென்றால், இந்தத் துறை இன்னும் மக்களுக்கு எவ்வளவு பணிகளைச் செய்யவேண்டியிருக்கிறது என்பதைத் தான் காட்டுவதாக இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள்கூட இந்தத் திட்டங்களின்மீது பேச வாய்ப்பு ஏற்பட்டபோது முதலில் அமைச்சர் அவர்களுக்கு தங்களுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துவிட்டு, அடுத்தபடியாக தங்களுடைய தொகுதியிலே இருக்கிற குறைபாடுகளையும், அதிகாரிகள் செய்யவேண்டிய, செய்யாத காரியங்களையும், குறைகளையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே எங்களுக்கு அளித்திருக்கிற, வெட்டுத் தீர்மானம்கொடுக்கிற வாய்ப்பு, ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்கும் இருக்குமானால் இதைவிட இன்னும் அதிகமாக வெட்டுத் தீர்மானங்கள் அவர்கள் சார்பாக கொடுக்கப்படும் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களோடு, இங்கே ஆளும் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களோடு, என்னுடைய கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். கடைசியாகப் பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பொன்னுசாமி அவர்கள் பேசிய நேரத்தில், எவ்வளவு குறைபாடுகளை இந்த அரசுக்கு எடுத்துக் கூறினார்கள் என்பதைப் பார்க்கிறபோது இந்த ஒரு துறைதான் மக்களை வாழவைக்கக்கூடிய துறையாக, மக்களிடத்தில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது என்பதை நாமெல்லாம் உணர்கிறோம். ஆகவேதான் இந்தத் துறையிலே பேசுகிற நேரத்தில் மக்களுக்கு இந்தத் துறை செய்ய வேண்டிய பணிகளை நல்லமுறையில் செய்ய வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே இங்கே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களோடு, கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களோடு நானும் அவற்றை முன்மொழிந்து, குடிநீர் வழங்கல் என்ற மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

குடிநீர் வழங்கல் திட்டமானது, 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு வளர்ந்து வருகிற பெருநகரத்திற்கு நல்ல வசதிகளை, குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் பணிகளைச் செய்ய வேண்டுமென்றுதான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்பது தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புப் புத்தகத்தில் தற்போது நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 250 இலட்சம் லிட்டர் நிலத்தடி நீர் உள்ளிட்ட 2,450 லட்சம் லிட்டர் அளவு குடிநீர் சென்னை நகருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 550 இலட்சம் லிட்டர் அளவு நிலத்தடி நீர் வழங்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. மேலும் நகரின் குடிநீர் வழங்கு குழாய்களின் மொத்த நீளம் 1,446 கிலோ மீட்டர்கள் என்றும், நகரின் கழிவு நீரகற்றும் குழாய்களின் மொத்த நீளம் 1,282 கிலோ மீட்டர்கள் என்றும்



சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த அளவானது சென்னை நகராட்சியிடம் இருந்த நேரத்தில் போடப்பட்டதா? அல்லது 1978 ஆம் ஆண்டு தனியாக பிரிக்கப்பட்ட நேரத்தில் இந்தக் குழாய்கள் பொருத்தப்பட்டதா என்பது தெளிவாக சொல்லப்படவில்லை.

அதுமட்டுமல்லாமல் நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக சென்னை நகரின் பல்வேறு இடங்களில் கிணறுகள் வெட்டப்பட்டன. அப்படி வெட்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை 75 என்றும், நகரின் குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை 4,200 என்றும், நகரில் உள்ள இந்தியா மார்க்—2 பம்புகளின் எண்ணிக்கை 1,125 என்றும், சத்துணவுத் திட்ட மையங்களில் வைக்கப்பட்டுள்ள குடிநீர்த் தொட்டிகளின் எண்ணிக்கை 397 என்றும், நலிந்த பிரிவு மக்களின் குடிநீர் உபயோகத்திற்கென வைக்கப்பட்டுள்ள உருக்குத் தொட்டிகள் 455 என்றும், நகரின் குடிநீர் வினியோகத்திற்கென பயன்படுத்தப் படும் லாரிகளின் எண்ணிக்கை 42 என்றும், கழிவு நீரேற்று நிலையங்கள் 61 என்றும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 3 என்றும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இன்றையதினம் இந்தியா மார்க்-2 பம்புகள் அமைக்கப்பட்ட இடங்களைப் பார்க்கிறபோது, ஆரம்பத்திலே அவைகள் அமைக்கப்பட்ட நேரத்திலேதான் அதிலே தண்ணீர் வந்தது. பிறகு 1 மாதம், 2 மாதம் பொறுத்து, அந்தப் பம்புகளைப் பார்க்கிறபோது, அவைகளில் 75 சதவீதம் பம்புகள் பயன்படாமல் இருக்கின்ற நிலைமையிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், 20 அடி ஆழத்திலே தண்ணீர் வருவதற்காக கைப் பம்புகளைப் போட்டார்கள். கடந்த முறை, இந்தத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய வட்டத்திலே அமைக்கப்பட்ட கைப் பம்புகள் இடத்தை வந்து பார்த்தார்கள். அப்போது தண்ணீர் வந்தது. ஆனால் மறுநாள் அந்தக் குழாயிலே தண்ணீர் வரவில்லை. நான் இதை அமைச்சர் அவர்களிடம் கூட குறிப்பிட்டு இருக்கிறேன். எனவே இப்படிப்பட்ட அதிகாரிகள் உங்களுக்கு மக்களைக் சாட்சிப் பொருளாக காட்டுகிறார்களே தவிர, இந்தக் குழாய்கள் முழுவதும் பயன்படுகிற அளவிலே தற்போது இல்லை என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அப்போது போட்ட கைப் பம்புகள் அப்படியேதான் எப்படி பெயின்ட் அடித்து போட்டார்களோ, அப்படியேதான் இருக்கின்றன. எனவே இப்படிப்பட்ட நிலையில் குடிநீர் வாரியம் நடத்துகிற நடவடிக்கைகளைப் பார்க்கிற போது, மக்களுக்கு இந்தப் பம்புகள் பயன்படாத வகையில் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றபோது, நமக்கு வேதனையாக இருக்கிறது.

மேலும் இந்த மார்க்-2 பம்புகள் போடுவதற்கு ஏறக்குறைய 5 ஆயிரம் ரூபாய் செலவாகிறது என்று சொல்கிறார்கள். இதிலே 100-க்கு 75 குழாய்கள் பயன்படாமல் அப்படியே இருக்கின்றன.

காரணம் கேட்டால் அதை ரிப்பேர் செய்ய ஆட்கள் இல்லை என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். என்ஜினியர்களைக் கேட்டால், எங்களுக்கு ஆட்கள் இல்லை என்று சொல்கிறார்கள். வேறு இடத்திலிருந்துதான் அவர்கள் வரவேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த நிலை ஏன்? மக்களுக்காக பல கோடி ரூபாய் செலவு செய்து இப்படி குழாய்களை அமைத்து, தண்ணீர் வரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு செய்கிறார்கள். ஆனால் 1, 2 மாதங்களுக்குப் பிறகு இவைகள் பழுதடைந்துவிடுகின்றன என்றால், அதை ரிப்பேர் பார்ப்பதற்கு ஆட்கள் இல்லை என்று சொல்வது எவ்வளவு வெட்கக்கேடான நிலை என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

மேலும் சென்னை நகரில் கிணறுகளைத் தோண்டினார்கள். அப்படி தோண்டப்பட்ட கிணறுகள் பயன்படாமல் அப்படியே இருக்கின்றன. காரணம் சமீபத்திலே வெள்ளம் ஏற்பட்டது. அந்த வெள்ளத்தினால், அசுத்தமான தண்ணீர் எல்லாம் இந்த கிணற்றுக்குள்ளே வந்துவிட்ட காரணத்தாலே, இந்தக் கிணறுகளில் உள்ள தண்ணீரும் அசுத்தமாக இருக்கின்றது. இதைப் பற்றி நான்கூட அதிகாரிகளிடம் எடுத்துச் சொன்னேன். கிணறுகளில் உள்ள தண்ணீரை எல்லாம் வெளியே எடுத்துவிட்டு, நல்ல தண்ணீர் கிடைக்குமானால் மக்கள் அதைப் பயன்படுத்திக்கொள்வார்கள், குடிப்பதற்கும், துணிகளைத் துவைப்பதற்கும், சாமான்கள் துலக்குவதற்கும் அந்தத் தண்ணீர் பயன்படும் என்று அந்த அதிகாரிகளிடத்திலே சொல்லியும், அவர்கள் செவி சாய்க்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி பயன்படாத கிணறுகள் இருப்பதால் மக்களுக்கு பல விதங்களில் தொல்லைகள் ஏற்படுகின்றன. கொசுத்தொல்லை, துர்நாற்றம் போன்ற சுகாதாரக் கேடுகள் விளைகின்றன. இப்படி பயன்படாத கிணறுகளை மூடிவிடுங்கள் என்று சொன்னாலும் கேட்கவில்லை. இப்படி மூடப்படாமல் உள்ள கிணறுகளில் குழந்தைகள்கூட தவறி விழுந்து இறக்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றது. இப்படி குழந்தைகள் விழுந்து இறந்தபிறகு, அந்தக் கிணறுகளை மூடுகிறார்களே தவிர, முன்னாலேயே மூடுவதில்லை. கிணறுகளில் உள்ள அசுத்தமான தண்ணீரை வெளியேற்றிவிட்டு, நல்ல தண்ணீர் வருவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்றும், மக்களுக்கு அவைகள் பயன்படுகின்ற வகையில் பணிகளைச் செய்யவேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6-40)

பயன்படாத அந்தக் கிணறுகளையெல்லாம் மூடுவதற்கான வழிவகைகளை அரசு செய்யவேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் ஆங்காங்கே இருக்கின்ற தெருக்களில் பார்க்கும்போது, கை பம்புகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தக் கைபம்புகள் சரிவர வேலை செய்வதே இல்லை. அந்தத் தெருக்களில் உள்ள பம்புகள் உடைந்துவிட்டால் அந்த வீதியிலுள்ள 10 பேர்கள் அந்தப் பம்பை பணம் கொடுத்து ரிப்பேர் செய்து அவர்களே உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். காரணம் அதிகாரிகளைக் கேட்டால் நாங்கள் இப்போதுதான் போட்டோம், மேலும் பம்புகள் கிடையாது; கை பம்பும் கிடையாது; எதுவும் கிடையாது என்று அவர்கள் சொல்லிவிடுகின்ற காரணத்தால் மக்களே அந்தப் பொருட்களை வாங்கி பயன்படுத்திக்கொள்கிற சூழ்நிலை இருக்கிறது. குழாய் போடுகிறார்கள்; பம்ப் போடுகிறார்கள்; அதை சரியான மேசன் ஒர்க் செய்து கட்டுகிறார்களா என்றால் அதுவும் கிடையாது. பம்ப் போடப்பட்டு அடித்தவுடனே, அது உடைந்துவிடுகிறது. ஆகவே ஒரு பம்ப் போட்டால் அந்த பம்பை நல்லபடியாக சிமெண்ட் செய்து நல்லமுறையிலே செய்தால்தான் அது மக்களுக்கு உபயோகப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த 67, 68, 69 ஆகிய வட்டங்களில் நீண்ட நெடுங்காலமாகவே குடிதண்ணீர் சரிவர கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டு வருகிறது; இதுபற்றி புகாரும் செய்யப்பட்டிருக்கிறது. அதிகாரிகளிடம் சொன்னால் அவர்கள் அதற்கான திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனாலும் இன்னும் அவர்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய வழி இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சாக்கடைத் திட்டம். இன்றையதினம் வடிகால் அமைப்பதைப்பற்றி சொல்லப்போனால் மிக மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் இன்றைய தினம் சாக்கடை அடைப்பு ஏற்பட்டிருக்கிறது. காரணம் அந்தக் காலத்திலே போடப்பட்ட திட்டம்தான், அவர்கள் போட்ட பைப்புகள் தான் இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது. மக்கள் பெருக்கத்தின் காரணமாக இன்றைக்கு அந்தப் பைப்புகளில் எல்லாம் அடைப்பு ஏற்படுகிறது. அந்த அடைப்புகளைப் போக்குவதற்காக நம்முடைய அதிகாரிகள் மேலை நாடுகளுக்குச் சென்று ஒரு நல்ல நவீன முறையிலே அடைப்புகளை நீக்குவதற்கான திட்டத்தை அறிந்துவந்து, இங்கே அறிமுகப்படுத்துவதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டத்தை அவர்கள் இங்கு உபயோகப்படுத்துகிறார்களா என்றால், உபயோகப்படுத்துவதில்லை. அந்தக் காலத்தில் எப்படி பத்தைகளைக் கட்டி அடைப்பை எடுத்தார்களோ அதேபோலத்தான் இன்றும் பத்தைகளைக் கட்டிக் கொண்டு அடைப்புகளை சரி செய்கிறார்கள். இந்தப் பக்கத்திலே இருந்து ஒருவன் ஒரு குத்து குத்துவான்; அந்தப் பக்கத்திலே இருந்து ஒருவன் ஒரு குத்து குத்துவான். அப்போது அடைப்பு நீங்கி தண்ணீர் போய்விடும். மறுநாள் பார்த்தால் உடனே அடைப்பு வந்துவிடும். அதிலே மலம் இருக்கும்; சேர் இருக்கும். அதையெல்லாம் மேலே வாரி போட்டு விடுகிறார்கள். அப்படி போடப்பட்ட சாக்கடைப் பொருட்களை உடனே எடுத்துக் கொண்டு போகமாட்டார்கள். மறுநாள்தான் அதை எடுப்

பார்கள். இதற்கிடையில் அவைகளின் மேலே லாரி ஓடும்; வண்டி மற்ற வாகனங்கள் ஓடும். இதனால் ரோடெல்லாம் அசிங்கமாகி விடும். ஆகவே நான் அமைச்சரைக் கேட்டுக்கொள்வது, அப்படி எடுக்கப்பட்ட அந்த துர்நாற்றம் உள்ள பொருட்களை உடனடியாக எடுப்பதற்கு அவர்களுக்கு வண்டி வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதுதான். அப்படி செய்தால்தான் சென்னை மாநகரம் நல்லபடியாக இருக்கும். அதே நேரத்தில் இந்தத் திட்டத்தை சென்னையில் அமல்படுத்துவதற்கான செயல் முறைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும், உடனடியாக செய்ய வேண்டிய திட்டங்கள் குறித்து அதன் அதிகாரிகள் மேல் நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள், பல திட்டங்களை அவர்கள் படித்து அறிந்தவர்களாக இருக்கிறார்கள். மேலை நாடுகளிலிருந்து வந்தவர்கள் அவர்களுக்கு அறிவுரை கொடுக்கின்றார்கள். ஏதோ ஒரு திட்டம், திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி ஒரு திட்டம் இருந்தால் அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்துமாறு கேட்டுக் கொண்டு இந்த நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தலைமை இடமான கோவையிலிருந்து வந்திருக்கிற, இந்தத் துறையின்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தை வரவேற்று சில கருத்துக்களை முன் வைக்கவும், பல கோரிக்கைகளை முன் வைக்கவும் வாய்ப்பு தந்த தங்களுக்கும், கொரடா அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொரடாவுக்கெல்லாம் இங்கே நன்றி சொல்லக் கூடாது.

திரு. மா. சின்னராசு: தலைவருக்கு என்றுமே நாங்கள் நன்றி உடையவர்களாக இருக்கிறோம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் தான் இந்த தமிழகத்தில் இருக்கின்ற வேளாண்மைத் துறையை நிர்வகிக்கிற எல்லா அதிகாரிகளையும் ஆராய்ச்சியாளர்களையும் உற்பத்திச் செய்கிறது. வேளாண்மைப் பட்டதாரிகளையும், வேளாண்மைப் பொறியியல் பட்டதாரிகளையும் உருவாக்குகிற இந்த பல்கலைக் கழகம் கிட்டத்தட்ட ஒரு பாண்டிச்சேரி பட்ஜெட் அளவுக்கு தன்னுடைய நிதிநிலை அறிக்கையை நம்முடைய மன்றத்திலே வைத்து இருந்தது. ஏனோ தெரியவில்லை நம்முடைய மன்ற உறுப்பினர்களின் கவனத்தில் இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் பற்றி விவாதம் அதிகம் வரவேண்டும் என்ற எண்ணம் வரவில்லை என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் அந்தக் குறையை நிறைவேற்றுவதற்காகத்தான் நான் தங்களிடம் இந்த வாய்ப்பைப் பெற்றேன் என்பதை சொல்லிக்கொள்கிறேன்.



அண்மைக் காலத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் இடத்திலும் ஆசிரியர்கள் மத்தியிலும் ஒரு மனக் கசப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை மன்றத்தின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

ஆராய்ச்சியாளர்களிடையே பல விருப்பு, வெறுப்பு ஏற்படுவது வேளாண்மைத் துறை ஆராய்ச்சிப் பணியையும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருப்பவர்களுடைய ஆர்வத்தையும் குறைப்பதாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவைகளை களைவதற்கும் தவிர்ப்பதற்கும் அரசுக்கும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும் நல்ல முறையில் அன்றாடப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வகைகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மைப் பல்கலைக் கழகத்து ஆசிரியர்கள் சங்கத்தின் மூலம் சில கோரிக்கைகளை முன் வைத்து இருக்கிறார்கள். மற்றைய சங்கங்களைப் போல என்றும் அரசை எதிர்க்கிற சங்கத்து உறுப்பினர்களாக அவர்கள் இல்லை. அவர்கள் வைத்து இருக்கிற 4 கோரிக்கைகளில் ஒன்று அதிலே எம்.எஸ்.சி. பட்டம் படித்த எம்.எஸ்.சி. அக்ரிகல்சர் கிராஜ்வேட் ஆசிரியர்களுக்கு சம்பள விகிதம் ரூ. 1,100 என்று அளிக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். ரூபாய் 750 என்பது மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு எம்.எஸ்.சி. பிசிக்ஸ், மேத்ஸ் ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படுகிற சம்பளம்.—மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கொடுத்துக் கொண்டு இருக்கக்கூடிய சம்பளம்—அதே சம்பளத்தை எம்.எஸ்.சி. அக்ரிகல்சர் கிராஜ்வேட்டுக்கும் கொடுக்கிற பட்சத்தில் அங்கே வேறு வேலை இல்லை என்றால் தான் வங்கிகளிலோ, வேறு கழகங்களிலோ, கார்ப்பரேசன்களிலோ, கம்பெனிகளிலோ வேலை கிடைக்காத அம்சத்திலே தான் அங்கே பணிக்கு வரக்கூடிய நிலை இருக்கிறது. அப்படி வந்தாலும் வேறு பணி கிடைத்தால் அங்கிருந்து சென்று விடுகிற நிலைமை இருக்கிறது. இதனால் சிறந்த ஆராய்ச்சியாளர்கள் நல்ல ஆர்வம் உள்ளவர்கள் மேலும் படிக்கவேண்டும், டாக்டர் பட்டம்பெறவேண்டும், ஆராய்ச்சிசெய்யவேண்டும்' என்ற ஆர்வம் உள்ளவர்கள் எல்லாம் கூட பல்கலைக்கழகத்தில் தங்காமல் பல நூற்றுக்கணக்கான இடங்கள் அங்கே காலியாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதை நிரப்புவதற்கு ஆசிரியர்களின் கோரிக்கையை நிரப்புவதற்கு மட்டும் அல்ல, ஆராய்ச்சியாளர்களின் பணிகள் தடை இல்லாமல் நடக்க வேண்டும் என்பதற்காக அவர்களுடைய மிக முக்கியமான கோரிக்கையாக இருக்கிற இந்த 1,100 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்பதை நாம் அவசியம் கொடுக்கவேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். நம்முடைய அரசு முழு அளவுக்கு அந்த நிதியை ஏற்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஐ.சி.ஏ.ஆர். கிராண்ட் இருக்கிறது. இந்தியன் அக்ரிகல்சரல் ரிசர்ச்

இன்ஸ்ட்டிடியூட் அதற்கான நிதியில் பெரும் பகுதியை கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் ஆராய்ச்சிக்கு இதை எல்லாம் மேற்கொள்ள வேண்டும் என்று கொடுத்து அதற்காக ஒதுக்குகிற நிதியை நாம் முழு அளவுக்கு பயன்படுத்தி விட்ட பின்னால் மேலும் நாம் இதை நிறைவேற்றி விட்டோம், கூடுதலாக நிதி வேண்டி பெறுவதற்கு அது வாய்ப்பாக அமையும். அந்த வகையில் அவர்களுடைய கோரிக்கைகளை பரிவோடு ஏற்று அங்கே உள்ள ஆசிரியர்கள் மத்தியில் ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் தொடர்ந்து ஒரு மனக் குறையும் இல்லாமல் அதை வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் ஏற்கனவே கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் தமிழக விவசாயத் துறைக்கு பல நல்ல ஆராய்ச்சி முடிவுகளை கொடுத்து இருக்கிறது. உயர் விளைச்சல் ரகங்களை உற்பத்தி செய்வது ஆகட்டும், அல்லது விவசாயிகளின் பொருளாதார கொள்கையை வகுத்துத் தருவது ஆகட்டும், உலகத்திலேயே ஒப்பற்ற ஒரு உயர்ந்த கல்விநிலையமாக இருக்கின்றவேளாண்மைப் பல்கலைக்கழகம் நல்ல நீர் நிர்வாகத்தில் ஒப்பற்ற ஒரு இடத்தைப் பெற்று வருகிறது. உலகம் போற்றுகின்ற அளவுக்கு உலக விஞ்ஞானிகள் போற்றுகின்ற அளவுக்கு இங்கிருந்து வருகின்ற விஞ்ஞானிகளை ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே அவர்களுடைய போராட்டம் என்று வருவதற்கு முன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்கள் தந்த கோரிக்கைகளை நிறைவேற்றி வெகு விரைவில் குறைகளைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது கேரள கங்கையைப் பார்த்து என்றும் ஏங்கிக் கொண்டு இருக்கிற ஒரு மாவட்டம். நிலத்தடி நீர் இல்லாமலேயே பயிர் செய்வதிலே நிபுணத்துவம் பெற்ற வேளாளர்களைக் கொண்ட பகுதி கோவை மாவட்டம். அங்கு இருக்கிற நீர்த் தேவையை நாம் முழு அளவுக்கு நிறைவேற்ற முடியாவிட்டாலும் கூட வேளாண்மைப் பொறியியல் துறையில் இன்று இயங்கிக்கொண்டு இருக்கிற கசிவு நீர்க்குட்டைகள் கடந்த 4,5 ஆண்டுக்காலமாக மேட்டுப்பாளையம், அவிநாசி, பல்லடம் போன்ற தாலுக்காக்களில் ஓரளவுக்கு விவசாயம் செய்து அந்த மக்கள் குடி பெயராமல் இருப்பதற்கு காரணமாக இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அந்த கசிவு நீர்க் குட்டைகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மிகச்சிறப்பாக இன்று ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. கசிவு நீர்க் குட்டைகள் தொடர்ந்து அங்கு அமைக்கப்படவேண்டும். இன்னும் ஏராளமான அளவில் அமைப்பதன் மூலம் இருக்கிற நீரை அங்கே நாம் நிறுத்தி ஆராய்ச்சியாளர்கள் சொல்லியது போல் இன்னும் 50, 60 ஆண்டுக் காலத்தில் முழு அளவுக்கு பாலைவனமாக போகக்கூடிய அபாயத்தை கோவை மாவட்டத்திலே தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



(மாலை 6—50)

ரிவர் வேலி ப்ராஜக்ட் மூலமும் மண் வளப் பாதுகாப்பு துறை மூலமும், அந்தத் துறை பல பணிகளை இன்று மேற்கொண்டு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உச்சி கவுடர் அவர்களுக்காக இங்கே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைப் போல, அந்த மாவட்டத்திலும் பல இடங்களில் இந்தத் துறையில் இருக்கிற 'பல சப்—டிவிஷன்கள், இந்த நிதி இல்லாத காரணத்தால் மூடப்படவேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. அது மூடப்படாமல், மத்திய அரசாங்கம் வழங்குகிற ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தில் இதற்கென்று ஒதுக்கப்படுகிற தொகையைக் கூடுதலாகப் பெற்று அந்தத் துறையை விரிவாக்கி மேலும் கசிவு நீர்க் குட்டை—செக் டாம்—போன்றவற்றை அதிகம் நிறுவி, நிரந்தர நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தி அவர்களுக்கு பயன் கிடைக்கச் செய்யவில்லையென்றாலும் கூட, கிடைக்கின்ற பயனை முழு அளவுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, தோட்டக் கலைத் துறையின் மூலம் கோவை மாவட்டத்திற்கென்று, தோட்டக் கலைப் பண்ணையை நிறுவுவதற்கான செயற்குறிப்பு பல காலமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் அதற்கேற்றதாக இல்லை என்றாலும், வேறு இடத்தையாவது மாற்றி உடனடியாக அதை நிறுவித்தரவேண்டும் என்று இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அது போல, தோட்டக் கலையிலே, கல்லாறில் மிகச் சிறந்த ஒரு பண்ணை இருக்கிறது. மேட்டுப்பாளையம் தொகுதியின் கோடியில் நீலகிரியின் அடிவாரத்திலே இருக்கிற அந்தப் பண்ணை உலகத்திலே ஒரு சில இடங்களிலே கிடைக்கக்கூடிய சில பழ வகைகளை உற்பத்தி செய்யக்கூடிய பண்ணையாக இருக்கிறது. அந்தப் பண்ணை இன்று நிதி இல்லாமல், இருக்கிற ஆட்களைக் கூட குறைக்கவேண்டும் என்கிற ஒரு நிலை இருக்கிறது.

ஆதிவாசி மக்கள் 50 பேர்—பெரும்பாலும் பெண்கள்—அந்தப் பணியிலே தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுடைய வேலை 6 மாத காலமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. வேறு வேலைக்குச் செல்லத் தகுதி இல்லாதவர்கள், அந்தப் பண்ணையை நம்பி இருக்கக்கூடியவர்கள், அவர்கள். அந்தப் பண்ணையின் விரிவாக்கத்திற்கு அங்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அதற்கான நிதியை ஒதுக்கித் தந்து குறைந்தபட்சம் தினக்கூலிகளாக, வேலை செய்கிற அந்தப் பெண்களுக்கு வேலை உத்தரவாதத்தை அளிக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மை பணிக் கூட்டுறவு இணையம், வேளாண் தொழில் கழகம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி இணையம்—இதுபோன்ற பல கார்ப்பரேஷன்கள் நம்முடைய வேளாண்மைத் துறையின் நிர்வாகத்திலே இருந்து வருகின்றன. தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்திலே அர

அதிகார பற்றற்ற தலைவர் மதிப்பிற்குரிய நமது திரு. லியாகத்
அலி கான் அவர்கள் சில ஆண்டுகளாகப் பொறுப்பேற்று
அதனுடைய நல்ல முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்து
இருக்கிறார்.

ஆகவே அரசு பற்றற்ற ஒருவர் அதை நிர்வகிப்பதன் மூலம்
பல ஆண்டுக் காலம் நஷ்டத்தில் இயங்கி வந்த ஒரு கழகத்தை
நாம் லாபத்திற்கு கொண்டு வந்தது மட்டும் அல்லாமல்,
மாண்புமிகு அமைச்சருடைய முயற்சியால் பல பெரிய வேளாண்
தொழில்களை இன்று துவக்குவதற்கு காரணமாக இருந்திருக்
இறது. ஆகவே, அரசு பற்றற்ற ஒருவர் வேளாண் தொழில்
கழகத்தில் இருப்பதைப் போல, தமிழ்நாடு அரசின் நிர்வாகத்தில்
இருக்கிற தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி
யாளர் இணையம்—ஆனந்த் பாட்டர்னில் பால் உற்பத்தியாளர்
இணையத்தைப் போல—ஆரம்பிக்கப்பட்டது. அதிலே அரசு
அதிகார பற்று அற்றவர்கள், சமுதாய நலத்திலே, அரசினுடைய
திட்டங்களை, கொள்கைகளை நிறைவேற்றுவதிலே அக்கறை
உள்ளவர்களை நியமிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மை கூட்டுறவு இணையத்தின் பணிகள் விரிவாக்கப்
பட்டு விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகளை இன்னும் உற்பத்தி
செய்தும், வேண்டிய கருவிகளை மிக சகாயமான வாடகையில்
கிடைப்பதற்கான முயற்சியில் விரிவாக்கப்பட வேண்டும். நிதித்
தட்டுப்பாடு காரணமாக நிச்சயமாக பணிகளை குறைத்துவிடக்
கூடாது.

விவசாயத்திற்கு பல சலுகைகளைக் கொடுப்பதை விட
விவசாயத்திற்கு வேண்டிய உபகரணங்களை, இன்புட் என்று
சொல்லப்படுகிற தேவைகளை எளிதாகக் கிடைக்கக்கூடிய
வகையில் விவசாயத்திற்கென்று கிடைக்கக்கூடிய விவசாய
விளை பொருளுக்கு கிடைக்கக்கூடிய விலையை நிச்சயப்
படுத்திக் கொடுப்பதன் மூலம் தான் அவர்களுடைய குறையைப்
போக்கமுடியும்.

ஆகவே, அந்த வகையிலே வேளாண்மை விற்பனை குழுக்கள்
மாவட்ட அளவில் இருப்பதற்கும், நாம் பொதுமக்களின்
பிரதிநிதிகள் சில பேரை, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்
இல்லையென்னும் கூட ஆலோசனைக் குழுக்களாக இன்னும்
சாதாரணமாகச் சொல்வதென்றால், ஆளும் கட்சியைச் சேர்ந்
தவர்களைக் கூட நியமிப்பதில் தவறு இருக்காது என்று கருது
கிறேன். அதிலேயும் விவசாயத்திலே ஈடுபட்டு இருக்கிற சிலரை
யாவது நியமித்து முழு அளவு அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகிற
அந்த விற்பனைக் குழுக்கள் இன்று மக்களுக்கு உரிய பயனை
அளிக்கவில்லை என்பதை கருத்தில் கொண்டு செய்யவேண்டும்.
இன்றைக்கு அதிகாரிகள் அதிலே பெரும்பாலும் நம்முடைய
அரசைப் பொறுத்தவரையில் நம்முடைய கொள்கையை நிறை
வேற்றுவதற்கு ஈடுபாட்டோடு பணியாற்றக் கூடியவர்கள் அல்ல.
அந்த வகையில் அவர்களுக்கு ஒரு கவுண்டர்—செக்—ஆக நாம்
இருந்து அந்தப் பணியை, அரசினுடைய திட்டங்களை



கொள்கைகளை நிறைவேற்றுவதற்கும், மக்கள் மத்தியில் எந்த
அவப் பெயருக்கும் அந்த நிறுவனங்கள் ஆளாக்கப்படாமல் பாது
காத்துக்கொள்ள நம்மில் சிலரை அதற்கான ஆலோசனைக் குழு
வாக அமைத்து நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்த அளவில், கோவை மாவட்டத்தில்
உலக வங்கியின் உதவியோடு, நம்முடைய அரசு, புரட்சித்
தலைவருடைய அரசு மிகப் பெரிய திட்டத்தை நடைமுறைப்
படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்தின் துவக்கமே என்னுடைய
மேட்டுப்பாளையம் தொகுதியில் காரமடை பகுதியில் தான்
ஆரம்பிக்கிறது.

ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற
விளக்கக் குறிப்பில் இருக்கிற பட்டியலில் காரமடை பேரூராட்சி
விடப்பட்டு இருக்கிறது. நான் ஏற்கெனவே மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமைச்சர் அவர்
களும் அதற்கு உத்தரவு வழங்கி குடிநீர் வடிகால் வாரியமும்
அதை ஏற்றுக்கொண்டு அந்தப் பகுதியை சேர்த்துக் கொள்ள
லாம் என்ற உறுதியை எனக்குத் தந்தது. ஆனால் கொடுக்கப்
பட்டிருக்கிற பட்டியலில் அந்த பேரூராட்சி விடப்பட்டு இருக்
கிறது. அது மட்டுமல்ல, காரமடை ஒன்றியத்திற்குள்ளே
இருக்கிற பல கிராமங்களும் அந்தப் பயனை பெறத் தகுதியுடைய
கிராமங்கள் தான். ஆகவே அந்தக் குடிநீர்த் திட்டத்திலே
அந்தப் பகுதியைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

மேட்டுப் பாளையம் நகராட்சியில் இருக்கிற குடிநீர்த் திட்டத்
திற்கு, இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் என்ற அந்தத் திட்டத்திற்கு
3 ஆண்டுகளுக்கு முன்னாலே 8 லட்ச ரூபாய் அரசினுடைய
உதவிகோரி கோரிக்கை வந்தது. நானும் சென்னைக்கு வருகிற
போது எல்லாம் செயலகத்தில் இருக்கிற பல மாடிக் கட்டடத்
திலே ஏறி இறங்கிக்கொண்டு இருக்கிறேன். அங்கே அந்தக்
கோப்பில் 8 லட்சம் உதவி தருகிற திட்டத்தை நிறைவேற்றித்
தருகிற நாள் வரவில்லை. ஆகவே அதைக் கொடுக்கவில்லை
என்றால் பவானி நதிக்கரையில் இருக்கிறது மேட்டுப் பாளையம்.
திருப்பூருக்கும் மற்ற நகரங்களுக்கும் தண்ணீர் கொண்டு
போகப்படுகிறது. மேட்டுப்பாளையத்திலே ஆல்டர்நேடிவ்
டேஸ், ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் தண்ணீர்
கொடுக்கப்படுகிறது என்ற நிலையைக்கருதி கோடைக்காலம்
வருகிறது, மிகப்பெரியப் பிரச்சனையை சந்திக்கவேண்டிய
நிலை வரும். ஆகவே கேட்கப்பட்டிருக்கிற தொகையைக்
கடனாகவோ மானியமாகவோ தருவதற்கு ஏற்கெனவே அது
நிதித் துறையைத் தாண்டி வந்திருக்கிறது என்று கருதுகிறேன்,
அதை நிறைவேற்றித்தரவேண்டுமென்று நான் துறை அதிகாரி
களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறுமுகைப் பேரூராட்சிக்கு தனி பீடர் லைன் கொடுக்க
வில்லை என்றால் கோடைக் காலத்திலே மின் தட்டுப்பாடு
காரணமாக மிகப் பெரிய திட்டமாக இருப்பதால்—அங்கே
குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும். அதற்கான நிதி உதவி அளிப்பது
அரசின் பரிசீலனையில் இருப்பதைப் பெற்றுத் தரவேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக—நர்த் ஏற்கெனவே கேட்டுத் கொண்டிருக்கிறேன்—கூட்டுக் குடிநீர்த் திட்டம் இரும்பொறைக்கு பவானி ஆற்றிலிருந்து எடுக்கிற திட்டம், அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை நிவாரண நிதி நிறுவனம் ஒன்று துவக்கப்படும் என்று புரட்சித் தலைவர் அரசு, நம்முடைய துறை சில காலத்திற்கு முன்பு பரிசீலனை செய்தது. வெகு விரைவில் அதை நிறைவேற்றி இன்சூரன்ஸ் திட்டத்தை முழு அளவுக்கு ஏற்றுக் கொள்கிற ஒரு நிறுவனத்தை துவக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, வைக்கப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 18 பேர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். பதினென்கீழ்கணக்கு என்பது ஒரு நல்ல எண்ணிக்கை என்றாலும் அவர்கள் வழங்கியிருக்கின்ற கருத்துக்களும் பதினென்கீழ்க்கணக்கைப்போலவே பல பயனுள்ள கருத்துக்களை எல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிற கோரிக்கைகளைப் பரிசீலித்து ஆவன செய்யவும், அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிற குறைபாடுகளைப் போக்கிக் கொள்வதற்கும் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிற சில தவறுகளைக் களைந்து அதற்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் எல்லாவிதமான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதை நான் இப்போது தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் திரு. பாலன் அவர்கள் வெட்டுத் தீர்மானங்களுடைய எண்ணிக்கையைச் சுட்டிக் காட்டி ஆகவே இந்தத் துறை எவ்வளவு கண்டனத்திற்கு ஆளாகியிருக்கிறது என்பதைப்போல ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். வெட்டுத் தீர்மானங்கள் என்பவை கண்டனத்தைத் தெரிவிக்கக் கூடியவை அல்ல. அவை அரசிடமிருந்து நிரம்ப எதிர்பார்க்கின்றன, இந்தத் துறையிடமிருந்து நிரம்ப எதிர்ப்பார்கின்றன என்பதுதான் அவைகளுக்கான மெய்யான பொருள் ஆகும். பழுத்த மரத்திலே கல்லடி விழுவதைப் போல் தேவைப்படுகிற துறையின் மீதுதான் அவர்கள் பல்வேறு எதிர்பார்ப்புகளைச் சுட்டிக்காட்ட முடியும், வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரமுடியும். வேளாண்மைத் துறையினுடைய மானியக் கோரிக்கைகள் மீது காலையும் மாலையும்கூட கருத்துக்கள் பரிமாறப் பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது என்று நான் கருதுகிறேன். தமிழ்நாட்டு வேளாண் பெருமக்கள் காலை புலர்ந்ததிலிருந்து அந்தி மயங்குகிற வரைக்கும் கழனியிலே உழைக்கக்கூடியவர்கள் என்பதை நிருபித்துக் காட்டும் வகையில் அவையும் மாலை நேரம் வரைக்கும் நடைபெற்று பல கருத்துக்கள் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.





(இரவு 7-00)

இங்கே மாண்புமிகு உறுப்பினர் கொறடா சகோதரர் துரை கோவிந்தராசன் அவர்கள் பேசுகிறபொழுது, உழவுத் தொழிலினுடைய சிறப்பை வள்ளுவர் எப்படியெல்லாம் சொல்லியிர்ருகிறார் என்பதையும் சொல்லிவிட்டு, அவர் இப்பொழுது இக்ந்திருந்தால் திருக்குறளைக்கூட கொஞ்சம் மாற்றி எழுதுவாடு, ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'' என்பதை 'தொழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் உழுதுண்டு பின் செல்பவர்'' என்று எழுதுவார் என்று குறிப்பிட்டார்கள். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், வள்ளுவப் பெருந்தகை, சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குத்தான் குறளை எழுதினாரே தவிர, சமுதாயம் இருக்கிற நிலைமையைச் சுட்டிக்காட்டுவதற்காகக் குறளை எழுதவில்லை. ஆகவே, திருக்குறள் எப்படி இருக்கிறதோ அதற்குத் தகுந்தாற்போல் நாம் சமுதாயத்தை மாற்று வேண்டுமே தவிர, சமுதாயம் இருக்கிற நிலைமைக்கு வள்ளுவரை மாற்றி எழுதச் சொல்லி அழைப்பது சரியல்ல என்பதை நான் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே பாரதியார் கருத்தையெல்லாம் சொல்லி அருமைச் சகோதரர் அண்ணாதாசன் அவர்கள் பாரதிதாசன் கருத்து என்று ஒன்றையும் சுட்டிக்காட்டினார். சகோதரர் ரகுமான்கான் அவர்கள், அது பாரதிதாசன் சொன்னது அல்ல என்று குறிப்பிட்டார். அண்ணாதாசன் என்கின்ற காரணத்தினால் பாரதிதாசன் மேல் அவருக்கு இயல்பாகவே அன்பு இருப்பது இயற்கையானது. ஆனால் ரகுமான்கான் அவர்கள், பாரதிதாசன் அப்படிப் பாடவில்லை என்று தெரிவித்த காரணததினால், பாரதிதாசனுக்குச் சிறப்பு குறைந்து விடக் கூடாது என்பதற்காக நான் ஆரம்பத்திலே சொல்லி விட விரும்புகிறேன்.

''நெச்சேர உழுதுழுது பயன் விளைக்கும்

நிரை உழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்''

என்று கவிதை யாத்தவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் என்பதையும்,

''சித்திரச் சோலைகளே உனை நன்கு திருத்த

இப்பாரினிலே எத்தனை தோள்கள் ரத்தம் சொரிந்தனவோ
உங்கள் வேரினிலே''

என்று கவிதை பாடியவர் பாரதிதாசன் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இவைகளையெல்லாம் சொல்லுகின்ற காரணத்தினால் ஒரு வேளை அமைச்சருக்கு மாலை நேரப் பொதுக்கூட்ட நினைவு வந்து இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறாரோ என்று கருதத் தேவையில்லை. நான் அவைகளை முன்னுரையாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

முதலில் சென்னைப் பெருநகரத்தைப் பொறுத்தவரையில் எடுக்கப்பட்டு இருக்கின்ற அரசினுடைய சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் கழிவு நீர் அகற்றல் வாரியத்தினுடைய நல்ல முயற்சிகளை ஆரம்பத்திலேயே தெரிவித்து விட விரும்புகிறேன், பாலன் அவர்கள் இங்கே பேசினார்கள். நானும் அதைச் சென்னையிலேயிருந்தே தொடங்கலாம் என்று கருதுகிறேன். ஏனென்றால், கோட்டை மட்டும் தான் எங்களுக்குச் சொந்தம் என்றெல்லாம்கூடச் சொல்லப்படுகிறது. ஆகவே, கோட்டை இருக்கின்ற இடத்தில் இருந்தே எந்தெந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதைச் சுருக்கமாகச் சொல்லி, உங்களுடைய நேரத்தைப் பெரிதும் எடுத்துக்கொள்ளாமல் குறிப்பிட்ட கருத்துகளை மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1985—லே பெய்த பெருமழை காரணமாகப் பல பாதிப்புக்களை, இடர்களை, துன்பங்களை, துயர்களை நாம் சந்தித்தோம். ஆனால் அந்தத் துன்பங்களுக்கு இடையிலேயும் ஒரு மகிழ்ச்சி தரத் தக்க வகையில், சென்னைப் பெரு நகருக்குக் குடிநீர் வரக்கூடிய நீர்த்தேக்கங்கள் நிரம்பி நின்றன. அந்த வகையில், பூண்டி, சோழவரம், புழலேரி ஆகிய இந்த நீர்த்தேக்கங்களெல்லாம் கடந்த ஆண்டு இதே நேரத்தில் 3,000 மில்லியன் கன அடி தண்ணீரைக் கொண்டு இருந்தது. இப்பொழுது 4,575 மில்லியன் கன அடி தண்ணீரைக் கொண்டிருக்கிறது என்பதையும் இனியும் கடுமையான கோடை வந்தலும் தலைநகரத்திலே குடிநீர்ப் பஞ்சம் தலைகாட்டாது என்பதை, உறுதியை இப்பொழுதே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978—லே சென்னையிலே 26.39 இலட்சம் மக்களுக்கு 223 மில்லியன் லிட்டர் தண்ணீர் நாள்தோறும் வழங்கப்பட்டது இப்பொழுது 34 இலட்சம் மக்களுக்கு 245 மில்லியன் லிட்டர் தண்ணீர் நாள்தோறும் வழங்கப்படுகிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அதைப்போலவே, சென்னை மாநகரத்தோடு இணைக்கப்பட்ட திருவான்மியூர், சாலிகிராமம், கோடம்பாக்கம் ஆகிய உள்ளாட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

வில்லிவாக்கம், கொளத்தூர், திருமங்கலம், மேற்கு அண்ணா நகர், போன்ற பகுதிகளுக்குக் கீழ்ப்பாக்கம் நீர் வழங்கு நிலையத்தில் இருந்தே தண்ணீரை வழங்குவதற்கு உரிய முயற்சி எடுக்கப்படுகிறது என்பதையும் அதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

குடிநீர் வசதி இல்லாத பகுதிகளுக்கு 30 கிலோமீட்டர் தூரத்திற்குப் புதிய குழாய்கள் பதிக்கின்ற முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்று, உலக வங்கியினுடைய உதவியோடு 98 கோடி ரூபாய் செலவில் நாம் நிலத்தடி நீரை எடுத்து சென்னை நகரத்து மக்களுக்குக் கொடுப்பது என்கின்ற ஒரு திட்டத்தைத்



தயாரித்திருந்தோம். உலக வங்கியினுடைய நிபுணர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். அவர்கள் அதிலே கொஞ்சம் விரிவாக்கம் செய்து அந்தத் திட்டத்தை 136 கோடிக்கு உரிய திட்டமாக அவர்கள் தந்திருக்கின்றார்கள். அந்தத் திட்டம் நிறைவேறுகிற பொழுது சென்னைப் பெரு நகரத்திற்கு ஒரு நாளைக்கு 393 மில்லியன் லிட்டர் தண்ணீர் கிடைக்கும் என்பதை நான் இப்பொழுது தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒருவேளை இந்தத் திட்டத்தை நான் தெரிவிக்கின்ற காரணத்தினால், தெலுங்கு கங்கை திட்டத்திலே சிக்கல் ஏற்பட்டு விட்ட காரணத்தினாலே, இப்படி நிலைமை நேரிடுகிறதோ என்று நிச்சயமாகக் கருதத் தேவையில்லை. கடவுளை நம்பு, ஆனால் ஒட்டகத்தையும் கட்டிப்போடு என்று சொல்வார்கள். அதைப் போல நாம் இப்பொழுதே பல்வேறுவகையான சூழ்நிலைகளையும் கருத்திலே கொண்டு சென்னைப் பெருநகர் எந்தச் சூழ்நிலையிலும் தண்ணீருக்காக அல்லல்படக் கூடிய அவலம் நேர்ந்து விடக் கூடாது என்ற வகையில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

பூண்டி, தாமரைப்பாக்கம், கன்னிகைப்பேர் ஆகிய பகுதிகளில் 30 ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து ஒரு நாளைக்கு 55 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீரை எடுத்து, புழலேரியிலே கொண்டு வந்து சேர்ப்பதற்கு ரூ. 15 கோடி அரசு வழங்கியிருந்தது. அப்படித் தண்ணீர் இந்த ஆண்டே கிடைக்கும் என்பதையும் 55 மில்லியன் லிட்டர் தண்ணீர் புழலேரிக்கு வந்து சேர்க்கப்படும் என்பதையும் நான் இப்பொழுது தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே 80 மில்லியன் அளவுக்குள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கொடுங்கையூரிலே அமைக்கப்படுகிறது. 1986–87–லே இது பயனுக்கு வந்துவிடும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்குத் தனித் தன்மையான இடத்தை, சிறப்பான இடத்தைத் தந்து, எந்த எந்த வகைகளிலே எல்லாம், எந்த எந்த வாய்ப்புகளிலே எங்கெங்கே கடன் பெற முடியுமோ, அந்தச் சூழ்நிலைகளை எல்லாம் முழுமையாகப் பயன்படுத்தி, தமிழகத்தினுடைய கிராமப்புறங்கள், நகர்ப் புறங்கள் அனைத்துக்கும் குடிநீர் வழங்குகிற திட்டங்களைத் தொடர்ந்து, தொய்வின்றி, நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

1976–77–ல், குடிநீர், எந்த எந்த வகைகளிலே தேவைப்படுகிறது என்பதை 6 பிரிவுகளிலே பகுத்து ஆய்வு செய்தோம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழகத்திலேதான்

அப்படிப்பட்ட ஒரு ஆய்வு நடைபெற்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது அதிலே மறு ஆய்வு தேவைப்படுகிறது என்ற வகையில் மறு ஆய்வு ஒன்றினை, நம்முடைய உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல, செப்டம்பர் திங்களுக்குள்ளே அந்த மறு ஆய்வு முடிவடையும் என்பதை நான் தெரிவிக்க விரும்பு கிறேன்.

மற்றொன்று, பேரூராட்சிப் பகுதிகள், நிதிப் பற்றாக்குறை யாலே அல்லல்படக் கூடிய காரணத்தினாலே, அவர்கள் குடி தண்ணீர் ஏற்பாடு செய்கின்றபொழுது, ஆய்வுக் கட்டணமாக முதலிலே பணம் செலுத்த வேண்டியிருக்கிறது. அப்படி ஆய்வுக் கட்டணமே செலுத்த முடியாத காரணத்தினால், குடிநீர் திட்டத்தினுடைய ஆரம்பமே நடக்க முடியாமல் எங்கேயிருந்து அந்த பேரூராட்சிக்குக் குடிநீர் கொண்டு வருவது என்பதைப் பற்றிய சிந்தனைக்கே இடமில்லாத அளவுக்கு நிலைமைகள் இருப்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பேரூராட்சிப் பகுதிகளையும் கூட கிராமப்புற பேரூராட்சிப் பகுதிகள், நகர்ப்புற பேரூராட்சிகள் என்கின்ற வகையிலே பிரித்து, அதிலே கிராமப்புற பேரூராட்சி களுக்கு கிராமக் குடிநீர் திட்டங்களை எப்படி நிறைவேற்றித் வருகிறோமோ அந்த வகையில் நிறைவேற்றலாம் என்கின்ற தகையில் ஒரு ஏற்பாட்டை அரசு செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப் போலவே, நகராட்சி, பேரூராட்சிகளைப் பொறுத்த அளவிலேகூட, இப்பொழுது புதிதாக அமைந்திருக்கிற பேரூராட்சி மன்றம் கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றி, குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றலாம், அந்தத் திட்டம் நிறைவேறியதற்குப் பிறகு அந்தத் திட்டத்திற்குரிய மொத்தத் தொகையோடு ஆய்வுக் கட்டணத்தையும் சேர்த்து நாங்கள் திரும்பக் கட்டிவிடுகிறோம் என்கின்ற வகையில், ஒரு தீர்மானம் நிறைவேற்றித் தருவார் களானால் அங்கேயும் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வு வர வேற்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வறட்சி நிலைமைகளை நாம் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டிய நேரம் இது. பல இடங்களிலே, வறட்சி தலைதூக்கு கிறபொழுது, குடிதண்ணீருக்குப் பல கிராமங்களிலே அல்லல் ஏற்படக்கூடிய அளவுக்கு சூழ்நிலை உருவாகக் கூடும். இப் பொழுது ரூ. 40 இலட்சம் வறட்சிக்கு என்று ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் எந்த அளவு தேவையோ, எத்தனை ஆழ்துளை கிணறுகள் போடப்பட வேண்டுமோ, எந்த அளவுக்குக் குடிநீர் பற்றாக்குறை இருப்பதை நீக்க வேண்டுமோ, அந்த உரிய அளவுக்கான தொகை அரசின் மூலமாக நிச்சயமாகச் செலவிடப்படும் என்கின்ற உறுதியினை நான் இப்பொழுது தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





20 அம்சத் திட்டத்திலே 2,000 குடியிருப்புகளுக்குக் குடி நீர் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் நேற்றோடு அந்த 2,000 குடியிருப்புகளுக்கான பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உலக வங்கி உதவியோடு ரூ. 150 கோடி செலவிலே நாம் பெரிய திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு அதிலே ரூ. 24 கோடி செலவிடப்பட இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஐரோப்பிய பொருளாதார வளர்ச்சிக் குழுமத்தின் மூலமாக, கோவை, பெரியார் மாவட்டங்களில் 726 குடியிருப்புகளில் ரூ. 4.8 கோடி செலவிலே குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற இருக்கின்றன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போல, நீலகிரி மாவட்டத்தில் மலைவாழ் மக்கள், பழங்குடி மக்கள் மேம்பாடு திட்டத்தினுடைய அடிப்படையில் 61 திட்டங்கள் ரூ. 25 இலட்சம் செலவிலே நிறைவேற இருக் கின்றன என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆண்டு 3,500 கிராமக் குடிநீர்த் திட்டங்கள், ரூ. 50 கோடி செலவிலே நிறைவேற்றப்பட இருக்கின்றன. நகரக் குடி நீர்த் திட்டங்கள் 54, ரூ. 19 கோடி செலவிலே நிறைவேற்றப் பட இருக்கின்றன.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினுடைய கடன் உதவியோடு ரூ. 13.62 கோடி கடன் உதவியைப் பெற்று, 184 திட்டங்களை நாம் இந்த ஆண்டிலே மேற்கொள்ள இருக்கிறோம்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் திருப்பூர் குடிநீர்த் திட்டம் பற்றி தெரிவித்தார்கள். திருப்பூர் குடிநீர்த் திட்டத்திற்காக, இந்த ஆண்டு ரூ. 113 இலட்சம் செலவிடப்பட இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(இரவு 7-10)

அதைப்போலவே அண்ணா மாவட்டத்தினுடைய தலை நகரான திண்டுக்கல்லில் இந்த ஆண்டு எல். ஐ. சி. கடன் உதவி மூலம் 105 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டம் நிறை வேற்றப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாதாளச் சாக்கடை வசதிக்காக ஏறத்தாழ 15.40 கோடி ரூபாய் செலவு செய்யப்பட விருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களின் தலைநகர்களில் பாதாளச் சாக்கடைத் திட்ட ஆய்வு மேற்கொள்ளப்படவிருக்கிறது.

அதைப்போலவே உலக வங்கி துணையுடன் வைகை, தாமிர வருணி, பொன்னையாறு ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீரையும் அந்த ஆறுகளிலிருந்து கிடைக்கும் மற்ற தண்ணீரையும் எந்த அளவுக்குப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத் திட ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் இரண் டாண்டுக் காலத்தில் அந்தப்பணி முடிவடையும் என்று எதிர்ப் பார்க்கிறோம்.

கைப்பம்பு பராமரிப்பு பற்றி பலரும் இங்கே குறிப்பிட் டார்கள். அதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிக மிக குறைவு என்பதால் அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்கள். இருபது இலட்சம் ரூபாயாக இருந்த அந்த பராமரிப்புச் செலவு கடந்த ஆண்டு 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இந்த ஆண்டு மூன்று கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே வேளாண்மைத் துறையினுடைய துணை அமைப்புகளான என்கோஃபெட், அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் போன்றவை சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. வேளாண் தொழில் கழகத்தின் மூலம் சத்துணவு என்ற முறையில் கோதுமை, வெல்லம், வைட்டமின்கள் அடங்கிய உணவைத் தயாரிப்பதற்கான இரண்டு தொழிற்சாலைகள் மூன்று கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப்படவிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை சேலம். தர்மபுரி பகுதியில் மூன்று கோடி ரூபாயில் அமைக்கப்பட விருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக் கழகத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொன் னார்கள். கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. அதிலே 75 மாணவர்கள் பயின்று கொண்டிருக்கிறார்கள்

அதைப்போலவே வனயியல் பட்டப்படிப்பு ஒன்று தொடங்கப் பட்டது. வேளாண் அறிவியல் நிலையங்கள் விருத்தாச்சலம், காட்டுப்பாக்கம் ஆகிய இரண்டு இடங்களிலே அமைய இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





கடந்த ஆண்டு 15 புதிய இரகங்களும் 7 புதிய வேளாண் கருவிகளும் வேளாண் பல்கலைக் கழக ஆய்வாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டு, வேளாண் மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மூல விதைகளை அதிகரிக்கச் செய்வது, சாகுபடிச் செலவை குறைத்து விவசாயிகளுக்கு நலம் பயக்கும் வகையில் உற்பத்தியை மேம்படுத்துவது என்ற வகையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூரிலே கல்லூரி தொடங்கப்படும் என்று சொன்னீர் களே, என்னவாயிற்று என்று கேட்டார்கள். ஐ.சி.ஆர்.-உடைய ஒப்புதலோடு அது நிறைவேற்றப்படவிருக்கிறது என்கின்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பல்கலைக் கழகத்தினுடைய ஆசிரிய பெருமக்களுடைய குறையை மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. சின்னராசு அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அதற்கான ஆணை விரைவிலே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், அவர்களுடைய சம்பளம் மற்ற பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய சம்பளம் அளவுக்கு சீரமைக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

விற்பனைத் துறை மூலமாகக் கடந்த ஆண்டு 5 இலட்சம் டன் பருத்தி வந்திருக்கிறது. இந்த ஆண்டு 6.5 இலட்சம் டன் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அக்மார்க் தரம் பிரிப்பில் இந்தியத் துணைக் கண்டத்திலே நடைபெற்ற ஒரு போட்டியில் தமிழ்நாடு இரண்டாவது பரிசைப் பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்பு கிறேன்.

அக்மார்க் தரம் பிரிப்பு நிலையம் சித்தோடு, விருத்தாச்சலம், பெருந்துறை ஆகிய மூன்று இடங்களில் நிறுவப் படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, அக்மார்க் சோதனைக் கூடம் ஒன்றும் நிறுவப்படவிருக் கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு இலட்சம் மக்கள் தொகை கொண்டிருக்கிற இடங்களில், நகரங்களில், குறிப்பாக 5 இடங்களில் காய்கறி விற்பனைக் கூடங்கள் 75 இலட்சம் ரூபாய் மானியத்தில் விற்பனைத் துறை மூலமாகத் தொடங்கப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

89 ஊரக கிட்டங்கிகளின் வேலை முடிவுற்றிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சகோதரர் திரு. சின்னராசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல
கசிவுநீர்க் குட்டைகள் 1,754, ரூபாய் 14.15 கோடியில் நிறை
வேற்றி முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 355 கசிவுநீர்க்
குட்டைகள் அமைக்கும் திட்டத்தை 3.14 கோடி ரூபாய் செலவில்
நிறைவேற்ற இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ள நிவாரணப் பணிகளை வேளாண் பொறியியல்
துறையைச் சேர்ந்தவர்கள் இரண்டு மாதங்களில் 50 புல்டோ
சர்களை வைத்து ஏறத்தாழ 551 ஹெக்டேர் பயனற்றுப்போன
நிலங்களை, 5 அடி, 6 அடி மணல் மூடியிருந்த நிலங்களைப்
பக்குவப்படுத்திக் கொடுத்து, இப்போது விதைப்புக்குரிய நிலங்
களாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பது மிக மிகப் பாராட்டுக்
குரிய ஒன்று. அரசின் சார்பிலே அந்தத் துறையைச் சேர்ந்த
அலுவலர்களைப் பாராட்டுகிறேன்.

நிலநீர் பாதுகாப்புத் திட்டம் நெல்லை மாவட்டத்தில் அழகிய
பாண்டிபுரத்தில் 325 ஹெக்டேரில் 8.25 இலட்சம் ரூபாய்
செலவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

நதிப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் அடிப்படையில் நீலகிரி
மாவட்டத்தில் மண் அரிப்பைத் தடுக்கின்ற வகையில் 3,500
ஹெக்டேரில் 140 இலட்சம் ரூபாய் செலவில் பணி மேற்கொள்ளப்
படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிமெண்ட் களம் அமைப்பதனைப் பற்றி தஞ்சை மாவட்டத்
தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே எடுத்துச்
சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு அது மிக மிகத் தேவை
என்பதை அவர்கள் உணர்வார்கள். ஆகவே அந்த வகையில்
மொத்தம் 100 களங்கள் ரூபாய் 20 இலட்சம் செலவில்
அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

தோட்டக்கலைத் துறையில் ஒட்டுமாஞ்செடி 1½ இலட்சம்
கடந்த ஆண்டு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 2½ இலட்சம்
வழங்க திட்டமிட்டு இருக்கிறோம். கீழ்பழனி மலையில் 500
ஹெக்டேரில் மலைப்பயிர் நாற்றங்கால் அமைக்கத் திட்டமிட்டிருக்
கிறோம். கோக்கோ பயிருக்குரிய திட்டத்தைப் பொறுத்த
வரையில் 100 ஹெக்டேரில் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம்,
காய்கறி விதை மினிகிட் என்பதைப் பொறுத்தவரையில் கடந்த
ஆண்டு 3,000 வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 4,500 வழங்கத்
திட்டமிட்டு இருக்கிறோம். மேற்குத் தொடர்ச்சி மலை மேம்
பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் கோவை, அவினாசி,
அன்னூர் வட்டாரங்களில் ஒரு இலட்சம் பெருமான பழச்செடிகள்
இந்த ஆண்டு வழங்கப்பட இருக்கின்றன.





எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரையில் அதனுடைய
குறியீடு நிறைவேறி இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்பு
கிறேன். கடலை உற்பத்தித் திறன் அதிகமாக ஆகி இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சோயாபீன்ஸ்
உற்சாகம் தரக்கூடிய அளவுக்கு பெருமளவுக்கு வளர்ச்சி பெற்று
இருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.
தென்னை நாற்றுக்கள் விநியோகம் செய்வதைப் பொறுத்த
வரையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் முதலிடம்
பெற்றிருக்கிறது. தென்னை உற்பத்தித் திறனில் ஒரு ஆண்டுக்கு
ஒரு மரத்தில் 56 காய்கள் என்று நாம் பெற்று இருக்கிறோம்.
அகில இந்தியாவிலேயே தமிழகம் தான் தென்னை உற்பத்தியில்
முதலிடம் வகிக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் தொழில்
நுட்ப செயல் விளக்கம் என்ற வகையில் நஞ்சையில் 20 ஹெக்
டேரும், புஞ்சையில் 40 ஹெக்டேரும் எடுத்து ஏறத்தாழ நஞ்சை
291 இடங்களிலும், புஞ்சை 198 இடங்களிலும் அமைக்கப்பட
இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பருவ இயக்கமாக 32,000 இனங்களில் நாம் கிராமப்புற
மக்களுக்கு இந்த விவசாயத் துறையின் நுட்பங்களை எடுத்துச்
சொல்கிற வகையில் ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

டேனிடா திட்டத்தின் கீழ் பெண்களுக்கு 6 இடத்தில் உழவர்
பயிற்சி நிலையங்களில் பயிற்சி தர ஏற்பாடு செய்திருக்கிறோம்.
அதற்காக 3.21 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட இருக்
கிறது.

எலி ஒழிப்புத் திட்டத்தில் கடந்த ஆண்டு 75,000 ரூபாய்
மட்டும்தான் நாம் செலவு செய்தோம். இந்த ஆண்டு 3,36,000
ரூபாய் செலவு செய்ய இருக்கிறோம்.

மானாவாரி மேம்பாட்டுத் திட்டம் என்ற அடிப்படையில்
2,000 ஹெக்டேர் நிலத்தை பசும்பொன் முத்துராமலிங்கம்
மாவட்டத்தில் இளையாங்குடி பகுதியில் எடுத்து 11 இலட்சம்
ரூபாய் செலவு செய்து மானாவாரி மேம்பாட்டுத் திட்டத்திற்கான
முன்னுதாரணமாக நாம் காட்ட இருக்கிறோம்.

இங்கே அருமைப் பெருமக்கள் எல்லாம் வேளாண்மைத்
துறையில் இருக்கின்ற பல்வேறு சிக்கல்களை எல்லாம் எடுத்துச்
சொன்னார்கள். இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.
கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தாமதம் ஆகியது.
வடகிழக்குப் பருவமழை பரவலாக பெய்யவில்லை. நீர்த்தேக்கங்
களிலும் தண்ணீர் குறைவாகத்தான் இருந்தது. வெள்ளச்
சேதத்தால் கடலோரப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. வறட்சியால்
மற்ற பகுதிகள் பாதிக்கப்பட்டன. இவ்வளவு சூழ்நிலைகளையும்

கணக்கில் எடுத்துப் பார்க்கிறபோது விவசாய உற்பத்தி பாதியாகக் குறைந்துவிடும் என்கிற அச்சம் எங்களுக்கெல்லாம் இருந்தது.

இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் பேசுகிறபோது, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்க்கிற போது ராசிபலனைப் படிப்பது போல் இருக்கிறது என்று சொன்னார்கள். நான் ஒரு வகையில் ஏற்றுக்கொள்கிறேன். ஒரு பலன் உள்ள ராசி இந்த வகையில் கிடைத்து இருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். 10 இலட்சம் ஏக்கராக நெல் சாகுபடி குறைந்தாலும்கூட நாம் கடந்த ஆண்டு பெற்றிருக்கிற வளர்ச்சியைவிட அதிகமாகப் பெற்றிருக்கிறோம். இது மிகமிகப் பாராட்டுதற்குரிய ஒன்று. அந்தப் பாராட்டை உழவர் பெருமக்களுக்கும், துறையினுடைய அலுவலர்களுக்கும் நான் வழங்க விரும்புகிறேன். ஏனென்றால் ஏதாவது சாதனை ஏற்படுகிற நேரத்தில் நாம் மற்றவர்களைப் பாராட்டலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதாவது வேதனை ஏற்படுகிற நேரத்தில்தான் அரசின் மீது குற்றம் சுமத்துகிறார்களே ஒழிய சாதனைகளை நிச்சயமாக பாராட்டுகிற மன வளத்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை என்று நான் கருதுகிறேன். ஒருவேளை ஒரு புது மாற்றம் ஏற்பட்டு அவர்கள் பாராட்டக்கூடிய நிலைமைக்கு வந்தாலும் வரலாம். இது மிகப் பெரிய சாதனை என்பதைத தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த ஆண்டு 54.45 இலட்சம் டன அரிசி கிடைத்தது என்றால் இந்த ஆண்டு 55.44 இலட்சம் டன் அரிசியை நாம் பெற்று இருக்கிறோம். ஒரு ஹெக்டேருக்கு 5 டன் என்ற குறியீடு கடந்த ஆண்டு 30 விழுக்காடாகத்தான் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு அதிலே நாம் 50 விழுக்காட்டை எட்டி இருக்கிறோம். கோவை மாவட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் குறிப்பிட்டார்கள். வறண்ட மாவட்டம் என்று குறிப்பிட்டார்கள். கொங்கு விளைந்தால் எங்கும் விளையும் என்று ஒரு பழமொழி உண்டு. அப்படிப்பட்ட வறண்ட அந்தக் கோவை மாவட்டம் என்று சொல்லப்படக்கூடிய பகுதியில் பழைய ஆழியாறு என்ற பகுதியில் ஒரு ஹெக்டேரில் 10½ டன் என்ற அளவுக்கு நெல் விளைச்சலை விவசாயப் பெருமக்கள் பெற்றிருக்கிறார்கள் என்பது மிக, மிக பாராட்டுதலுக்குரிய ஒன்று.

திரு. முருகானந்தம் அவர்கள் பேசுகிறபோது விவசாயிகளை எல்லாம் நீங்கள் தரம் பிரிக்கிறீர்கள் என்று சொன்னார்கள். சிறு விவசாயி, குறு விவசாயி என்று தரம் பிரிக்கிறீர்கள், எல்லாம் பிரிக்கக்கூடாது என்று சொன்னார்கள். அப்படி வங்கி வைத்திருக்கிற பிரிவு. அது தேவையான பிரிவு. ரிசர்வ் ஏப்பக்காரனுக்கும், புளி ஏப்பக்காரனுக்கும் ஒரே வகையில் உதவி செய்வது சரியாக வராது. அவர்கள் ஒரு திருக்குறளைக் கூட உதாரணமாகச் சொன்னார்கள். நானும் கூட சொல்ல விரும்புகிறேன்.

''பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.''

என்பது திருக்குறள்.



(இரவு 7-20)

மன்னன் உதவி செய்யக்கூடிய நேரத்தில் எல்லோருக்கும் ஒரே வகையிலே உதவி செய்வது சரியல்ல. ஆக யாருக்கு எந்தெந்த வகையிலே, எந்த வகையான உதவி தேவையோ அப்படிச் செய்வது தான் சரியானது. ஆகவே அந்த வகையிலே அந்தப் பிரிவு இருப்பது அவசியமான ஒன்று என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு கரும்புப் பண்ணை கழகத்தின் கீழ் ஒரு அறிவிப்பை நான் இப்போது குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

1974-லே நிறுவப்பட்ட தமிழ்நாடு கரும்புப் பண்ணை கழகம் தொடர்ந்து நஷ்டத்திலேயே நிலவி வருவதால், இக்கழகத்தின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதால் இக்கழகத்தை தொடர்ந்து நடத்துவது குறித்து 28-2-1986-ல் நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் பரிசீலிக்கப்பட்டதில் எடுக்கப்பட்ட முடிவு-விதைப் பண்ணைக்காக ஆயிரம் ஏக்கர் நிலத்தை வேளாண்மை துறைக்கும், தென்னை பண்ணைக்காக 300 ஏக்கர் நிலத்தை எண்ணெய் வித்துத் துறைக்கும் அளிப்பது; கரும்பு பண்ணைக் கழகத்தில் தொடர்ந்து நடைபெற வேண்டிய பணிகளுக்காக 25 முதல் 30 லட்சம் ரூபாய் வரை வழிவகை முன் பணமாக அளிப்பது, செலவினத்தைக் குறைத்தவுடன் அலுவலர்கள் மற்றும் தொழில் நுட்ப அலுவலர்களை குறைப்பது குறித்து தீவிர நடவடிக்கையை மேற்கொள்வது; வேளாண்மைத் துறையும் எண்ணெய் வித்துத் துறையும் தொடங்கியுள்ள விதைப் பண்ணைகளுக்கு சில அலுவலர்களை மாற்றுவது; மீதம் உள்ள 2,681 ஏக்கர் நிலத்தை விற்பதற்கு சட்ட ரீதியாக வருவாய்த் துறை பரிசீலனை செய்வது; கூத்தனூருக்கு அருகில் உள்ள நிலத்தில் வீடுகளைக் கட்டுவதற்காக சாத்தியக் கூறுகளை ஆராய்வது என்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வகுத்திருக்கிற ஒரு திட்டத்தை இங்கே நான் மகிழ்ச்சியோடு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கொள்கை அளவிலே அந்த திட்டம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது மிகப் பெரிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிச்சயமாக மிகச் சிறப்புள்ள திட்டமாக மலரும், என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

காவிரிப் படுகை மேம்பாட்டிற்காக மாநில மேம்பாட்டுக் குழு என்ற ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். காவிரிப் படுகை தமிழகத்தினுடைய உயிர்நாடி. தமிழகத்தினுடைய வளர்ச்சியில் 35 விழுக்காடு இப்பகுதியில் விளைகிறது. தென்னையும், வாழையும்

கரும்பும் மிகுதியாக விளைகிறது. மக்கள் நெரிசல் மிகுந்த பகுதி இது. வேளாண்மையை நம்பி வாழும் விளை நிலம் இல்லாத மக்களின் தொகையும் இப்பகுதியில் அதிகம். தண்ணீர் பற்றாக் குறையாலும், வெள்ளச்சேதத்தாலும், ஆண்டுதோறும் அவதிக் குள்ளாகும் பகுதி இது. இப்பகுதி மக்களின் துயர் துடைக்க தமிழ்நாடு அரசு அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. பல்வேறு துறைகளின் மூலமாகவும் இப்பகுதி மக்களின் மேம்பாட் டிற்கான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் பல்வேறு துறைகளின் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு மக்களின் தேவைக்கேற்ப கிடைக்கவில்லை. இந்நிலை மாற்றப் பட்டு துயர் துடைப்பு பணிகளை துயர் தடுப்பு பணிகளாக மாற்றிட ஒரு நிரந்தர அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மாநில அளவிலான ஒரு ஒருங்கிணைப்பு குழுவை அமைத்துள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்குழு 3 மாதத்திற்கு ஒரு முறை காவிரிப் படுகையின் பகுதியின் தேவை மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்களை ஆராய்ந்து, பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்து, தேவையெனில் புதிய திட்டங்களை உருவாக்கி, காவிரி படுகை மேம்பாட்டிற்கு உதவும். இதனால் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரிப் படுகை பகுதி தமிழகத்தினுடைய பால்பண்ணையாகவும், பழப்பண்ணையாகவும், மீன் பண்ணையாகவும் திகழும் என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தஞ்சைத் தரணிக்கு ஒரு புதிய உயிரோட்டத்தை வழங்கக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (கரவொலி)

கடுமையான இயற்கையின் சோதனைகளுக்கும், உற்பாதங் களுக்கும் இடையிலே மிகப் பெரிய அளவிலே வேளாண்மைத் துறை விளைச்சலை பெருக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு குறைபாடுகளை சுட்டிக் காட்டியிருக் கிறார்கள். அரசு அறிவிக்கின்ற சலுகைகள் விவசாய பெரு மக்களுக்கு கிடைப்பதிலே பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. ஆங்காங்கு தவறுகள் நிகழ்கின்றன என்பதையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். நான் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், பெரும்பாலும் விதை, பூச்சி மருந்து, உரம் போன்றவை வழங்கக்கூடிய டெப்போக்கள் எல்லாம் ஊராட்சி ஒன்றிய வளாகத்திற்குள்ளேதான் அமைந்திருக் கின்றன. தேர்ந்து எடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர்கள் அதனைக் கண்காணிக்க வேண்டும் என்பதையும், ஊராட்சித் தலைவர்கள் அதனைக் கண்காணிக்க வேண்டும் என்பதையும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் அவர்களால் உரிய அளவுக்கு, இயன்ற அளவுக்கு கண்காணிக்கவேண்டும் என்பதையும், அப்படி கண்காணிப்பதற்குரிய உரிமை அவர்களுக்கு ெழங்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் டமைப்பட்டிருக்கிறேன்.



ஆக, அந்தத் தவறுகளை நாம் நீக்கிக் கொண்டு, இந்தத் துறையிலே புதிய வளர்ச்சியை பெறுவதற்கு, நீங்கள் வழங்கி யிருக்கக்கூடிய கருத்துக்கள் நிச்சயமாக துணைபுரியும் என்று கூறி வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர் களே, தொழிலாளர் வர்க்கத்தின் சார்பாக ஒரு கோரிக்கையை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திலே ஏறத்தாழ 13 ஆயிரத்திற்கு மேற் பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஏற்கெனவே மாநகராட்சியிலே பணியாற்றியவர்கள். வாரியம் தனியாக உருவாக்கப்பட்ட காரணத்தாலே அங்கிருந்து இந்த வாரியத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்களும் மாநகராட்சி பணியாளர்களும் ஒரே பணிகளைத்தான் செய்து கொண்டிருக் கிறார்கள். ஆனால் மாநகராட்சியிலே இருக்கிற பணியாளர்கள் எஸ்டாபிளிஷ்மெண்ட் என்ற முறையில்அரசுப் பணியாளர்கள்என்று அரசால் அறிவிக்கப்பட்டு, மாநகராட்சியாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டு அதன் மூலம் பல சலுகைகளை பெறுகிறார்கள். எல்லா விதமான அரசாங்க சலுகைகளையும் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த 13 ஆயிரம் தொழிலாளர்கள் வாரியம் துவக்கப்பட்ட காலத்திலேயிருந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சலுகைகள் இல்லை. இந்த 8 ஆண்டு காலமாக சட்டமன்றத்திலே அந்தத் தொழிலாளர் வர்க்கத்தின் சார்பாக நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். ஆகையினால் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். துயரச் சுமைகளை சுமந்து கொண்டிருக்கின்ற இந்தத் தொழிலாளர் வர்க்கத்தின் துயரைத் துடைக்கின்ற விதத்திலே அந்த வாரியத்தில் இருக்கிற தொழிலாளர்களையும் அரசு எஸ்டாபிளிஷ்மெண்டாக அறிவிக்குமா? அறிவிக்க வேண்டு மென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நியாயமான கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றுகிற பொன் மனம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் இந்தக் கோரிக்கை யையும் நிறைவேற்றுவதற்கு வெகுவிரைவிலே ஆணையிடுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன்: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு கொடுத்து வருகிற உதவித் தொகை 35 ரூபாய் என்பது 31-3-1986 வரையில் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது இந்த ஆண்டு விவசாய அறுவடைக் காலம் முடிவடையும்

வரையில் தொடருமா? அல்லது நேற்றோடு முடிந்துவிட்டதா? அப்படி கொடுப்பது தொடர வேண்டுமென்று விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அது பற்றி மற்ற துறைகளோடு கலந்தாலோசித்து விரைவில் முடிவு செய்யப்படும்.

**திரு. ஆ. நடராசன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் இருக்கிற ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே பணியாற்றுகிற ஆயிரக்கணக்கான நிரந்தரமற்ற தொழிலாளர்களுக்கும் நல்லதொரு அறிவிப்பை அமைச்சர் அவர்கள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல இப்போது ரிக் ஒன்றுக்கு வாடகை நாளொன்றுக்கு 250 ரூபாய் வசூல் செய்கிறார்கள். அதுகுறித்தும் நல்லதொரு அறிவிப்பினை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இராமாயணம் முடிந்ததற்குப் பிறகு உத்திரகாண்டத்திலிருந்து மறுபடியும் ஆரம்பிப்பதைப் போல புதிதாக சில பிரச்சனை களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவைகள் எல்லாம் அரசினுடைய ஆய்விலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, விவசாயிகளிட மிருந்து கொள்முதல் செய்கிற நெல்லுக்கு தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 35 ரூபாய் வழங்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் கொள்முதல் செய்கிறநெல்லுக்கு இந்த 35 ரூபாயை கொடுத்தால் விவசாயிகளுக்கு ஒரு ஊக்க போனசாக இருக்கும். அரசாங்கத் திற்கும் அதிக அளவில் நெல் கிடைப்பதற்கு வசதியாக இருக்குமே. இதுகுறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, விரலுக்கேற்ற வீக்கம், மாவுக்கேற்ற பணியாரம். அந்த வகையிலே தான் இருக்கமுடியும்.

**திரு. பி.எம். தங்கவேல்ராஜ்:** தலைவர் அவர்களே, புயலாலும் வெள்ளத்தாலும் விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதனால் குத்தகை பாக்கியைக்கூட திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே குத்தகையை தள்ளுபடி செய்கிற அளவிற்கு ஒரு சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக்கோரிக்கை போன்றவை வருகிற போது இவைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் விரிவாகப் பேசலாம்.

திரு. வே. கு. சின்னசாமி: தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத் தலைவருக்கு வீட்டுவசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியம் போன்றவற்றின் தலைவர்களுக்கு இருக்கும் அதிகாரங்களைப் போல திட்டங்களை நிறைவேற்று வதற்கு அதிகாரங்கள் தரப்படவில்லை. ஆகவே அந்த அதிகாரங் களை தனிப்பட்ட முறையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 20—வேளாண்மை.

டாக்டர் ந. மாசிலாமணி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

திருவாளர்கள் பொ.உத்திராபதி, சு. பாலன், கோ.வீரய்யன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''மானியக் கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,15,56,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல்.

திரு. கு. சுப்பராயன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

திருவாளர்கள் சு. பாலன், கோ. வீரய்யன், ஈ.வே.கி.ச. இளங்கோவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 49—குடிநீர் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,27,13,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(இரவு 7-30)

கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

திரு. டி. ஆர். வேங்கடரமணன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

திருவாளர்கள் சு. பாலன், கோ. வீரய்யன் ஆகியவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,28,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (2-4-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும் ஏதுமில்லை

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

50. கோரிக்கை எண் 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

51. வேளாண்மைத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1986-87 (தமிழ், ஆங்கிலம்).



52. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி யாளர் இணையம் பற்றிய ஆய்வுரை, 1985-86 (தமிழ், ஆங்கிலம்)

53. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் பற்றிய ஆய்வுரை, 1985—86 (தமிழ், ஆங்கிலம்).

54. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை, 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

55. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை, 1985-86 (தமிழ், ஆங்கிலம்).

56. கோரிக்கை எண் 49—குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

57. 'சென்னை குடிநீர்' என்கிற புத்தகம்—1986 (தமிழ்)

58. 'தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்—1986' என்கிற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு—I.

(76ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### வேளாண்மைத் துறை.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மை உயர் பங்கு ஆற்றுகிறது. இது நம் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பங்கு பேருக்கு வாழ்வு அளிப்பதாகவும், தொழிலாளர் களின் மொத்த எண்ணிக்கையில் 56 விழுக்காடு அளவிற்கு வேலை வாய்ப்பு அளிப்பதாகவும். மாநில மொத்த வருவாயில் 37 விழுக்காட்டினை ஈட்டித் தருவதாகவும் இருக்கிறது. எனவே வேளாண்மைக்கும் இதனைச் சார்ந்த பிற பணிகளுக்கும் முதன் மையும் உயர் கவனமும் கொடுக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் மிகுதிப் படுத்தி அதன் மூலம் ஊரகப் பொருளாதாரத்தை உயரச் செய்ய உழவர்களுக்கு ஊக்கம் அளிக்க அரசுத் துறை கள் பலவும் பெரும் எண்ணிக்கையில் செயல் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றன. அவை தரமான உயர் விளைச்சல் தரும் பொறுக்கு விதைகளை உற்பத்தி செய்து விநியோகித்தல், உழவர்களுக்கு வழங்கப்படும் இடு பொருள்கள் தரமானதாக இருக்கச் செய்தல்: எக்டேருக்கு 5 மெட்ரிக் டன் உற்பத்தி காணுதல். ''3பி'' செயல் விளக்கங்கள் (உற்பத்தித் திறன். இலாபம் மற்றும் பொருள் வளம்) மானாவாரி சாகு படியில் பாசன வசதி, ஒருங்கிணைந்த பயிர் நோய் பாதுகாப்பு நீர் பராமரிப்பு, மண் வளபரிசோதனைகள், பயனுள்ள தகவல் பணிகள் மற்றும் பல. உழவர்களுக்கு உழவுத் தொழிலில் உதவி செய்ய இத்தகைய திட்டப் பணிகள் 1986—87 ஆம் ஆண்டில் மேலும் தீவிரப்படுத்தப்படும்.

1985–86 ஆம் ஆண்டில் பருவ நிலை ஒரு மாறுபட்ட நிலையாகும். மாநிலத்தின் சில பகுதிகள் வறட்சியினாலும், கடலோரப் பகுதிகள் அதிகமாக பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ள நிலையின் சேதத்தினாலும் ஏரி உடைப்புகளாலும் குறித்த காலத்தில் விவசாய பணிகள் ஆரம்பிக்கப்பட முடியவில்லை. நீர் நிலைகளில் நிலவிய மிகக் குறைவான நீர் மட்டம் காரணமாகவும், காலந்தாழ்ந்து பெய்த தென் மேற்குப் பருவ மழையின் காரணமாகவும், பயிர் சாகுபடி பணிகளை காலத்தே துவக்க தடை ஏற்பட்டது. காவிரி நதிப் படுகையில் குறுவை நெல் சாகுபடிக்கான முக்கிய தேவையான மேட்டூர் நீர்த் தேக்கம் சுமார் 1 மாத காலம் தாமதமாக திறக்கப்பட்டது. இதனால் குறுவை சாகுபடியில் 32 சதவீதம் இழப்பு ஏற்பட்டது. மேலும் சிறு தானியங்கள், பயிறு வகைகள் மற்றும் மணிலா போன்ற மானாவாரி பயிர்களின் விதைப்பு தாமதம் ஆகியது. இருப்பினும் தென் மேற்கு பருவ காலத்தின் பிற்பகுதியில் கிடைக்கப் பெற்ற மழையின் உதவியால் மானாவாரி சாகுபடி இயல்பான பரப்பில் பயிராகியது. தவிரவும், சம்பா மற்றும் தாளடி சாகுபடிக்கு இம்மழை ஓரளவு உதவியது.

வடகிழக்கு பருவ மழையும் மாநிலத்தின் சீரான சாகுபடிக்கு உதவவில்லை. நவம்பர் 1985-ஆம் மாதத்தில் ஏற்பட்ட பெரு மழை, கடலோர மாவட்டங்களான தஞ்சை, தென் ஆற்காடு, செங்கை மற்றும் வட ஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் வெள்ள சேதத்தை ஏற்படுத்தியது. அதே சமயம் தென் மாவட்டங்கள் மற்றும் உள் அடங்கிய மாவட்டங்களில் மிகக் குறைவான மழை பெய்து வறட்சி நிலை ஏற்பட்டது. வெள்ள சேதம் மற்றும் வறட்சி நிலைகளைச் சமாளிக்க வேண்டிய நிலையும் காவிரி படுகையில் சம்பா, தாளடி பயிரைக் காப்பாற்ற தண்ணீர் பெற கர்நாடக மாநில அரசை நம்ப வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. இவ் விழப்பை ஓரளவு ஈடுகட்டும் நோக்குடன், கோடை சாகுபடி திட்டம் வகுக்கப்பட்டு செயல் படுத்தப்பட்டது.

மேற்கூறிய காரணங்களைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டின் உற்பத்தி அளவு கீழ்க்கண்டவாறு இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது:—

| | | |
|---|---|---|
| நெல் (அரிசி) | .. | 55.44 இலட்சம் மெ. டன்கள். |
| சிறு தானியங்கள் | .. | 20 இலட்சம் மெ. டன்கள். |
| பயறு வகைகள் | .. | 3.54 இலட்சம் மெட்ரிக் டன்கள் |
| பருத்தி (பஞ்சு) | .. | 6 இலட்சம் பொதிகள் |
| கரும்பு (வெல்லம்) | .. | 22 இலட்சம் டன்கள் |

**1986-87 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி திட்டம் நெல் மற்றும் சிறு தானியங்கள்.**

1986–87 ஆம் ஆண்டில் இயல்பான பருவ நிலை இருக்கும் என்ற நம்பிக்கையுடன், 26.50 இலட்சம் எக்டேரில் நெல் பயிரிட்டு, 64 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யும்



குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே போல் சிறு தானியங்களை 18 இலட்சம் எக்டேரில் பயிரிட்டு உற்பத்தியை 24 இலட்சம் டன்களாக உயர்த்த, தேவையான விடா முயற்சிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான வழி முறைகளாக, உயர் விளைச்சல் ரகங்களின் பரப்பினை அதிகப்படுத்துவதுடன், திருந்திய மானாவாரி சாகுபடி முறைகள் மேற்கொள்ளப்படும்.

பயறு வகைகள் :

1985–86 ஆம் ஆண்டில் இலக்கான 10.10 இலட்சம் எக்டேர் பயறு வகைகள் பரப்பில் உற்பத்தி இலக்கு 3.5 இலட்சம் டன்கள் என நிர்ணயித்து 1985 டிசம்பர் மாதம் வரை 7.15 இலட்சம் எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டு அதிலிருந்து 2.8 இலட்சம் டன்கள் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சியுள்ள பரப்பும் உற்பத்தியும் கோடை சாகுபடியில் அடையப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1986–87 ஆம் ஆண்டில் 11.00 இலட்சம் எக்டேரில் பயறு வகைகளைப் பயிரிட்டு, 4.00 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பருத்தி :

1985–86 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் வரை 2.18 இலட்சம் எக்டேரில் பருத்தி பயிராகி, 4.53 இலட்சம் பொதி பஞ்சு உற்பத்தியாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இலக்கு, 2.74 இலட்சம் எக்டேர் பரப்பும், 5.00 இலட்சம் பொதி பஞ்சு உற்பத்தியுமாகும். 1986–87 ஆம் ஆண்டில் 2.80 இலட்சம் எக்டேர் பரப்பில் பருத்தி பயிர் செய்து, 5.20 இலட்சம் பொதி பஞ்சு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்பு :

1985–86 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் வரை 1.57 இலட்சம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இலக்கு 1.82 இலட்சம் எக்டேர். 1986–87 ஆம் ஆண்டில் இப்பரப்பு 2.30 இலட்சம் எக்டேருக்கு விரிவுபடுத்தி 24 இலட்சம் டன் வெல்லம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு 7-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எய்த வேண்டிய குறிக்கோளை நினைவில் கொண்டு 1986–87 ஆம் ஆண்டில் இயல்பான பருவ நிலை இருக்கும் என்ற நம்பிக்கையுடன் கீழ்க் கண்டவாறு உற்பத்தி திட்டம் வகுக்கப்பட்டுள்ளது :—

| | | உற்பத்தி. |
|---|---|---|
| அரிசி | .. .. .. | 64.00 இலட்சம் மெ. டன். |
| சிறு தானியங்கள் | .. | 24.00 இலட்சம் மெ. டன். |

| | | |
|---|---|---|
| பயறு வகை | .. .. | 4.00 இலட்சம் மெ. டன். |
| பருத்தி (பஞ்சு) | .. | 5.20 இலட்சம் பொதிகள். |
| கரும்பு (வெல்லம்) | .. | 24.00 இலட்சம் மெ. டன். |

அரசு விதைப் பண்ணைகள் :

நம் மாநிலத்தில் 45 அரசு விதைப் பண்ணைகள் உள்ளன. அவை பெரும்பாலும் ஆதார விதையையும், சான்றிதழ் விதையையும் உற்பத்தி செய்து வருகின்றன. சிறிய அளவில் கேழ்வரகு, சோளம், கம்பு, மக்காச் சோளம், நெல், பருத்தி, காய்கறி வகைகள் மற்றும் பயிறு வகைகள், ஆகிய பயிர்களின் மூல விதையைக் கொண்டு எண்ணெய் வித்துக்கள் கண்காணிப்பில் ஆதார விதையாகப் பெருக்கப்பட்டு தொழில் நுட்ப மையங்கள் மூலம் சான்று பெற்ற விதையாக உற்பத்தி செய்யப் பட்டு வழங்கப்படுகின்றன. இவ்வரசு விதைப் பண்ணைகள் வணிக ரீதியாக நடத்தப்படுகின்றன.

விதைப் பெருக்கத் திட்டம் :

வேளாண்மைக்கு விதை ஒரு முக்கியமான இடு பொருள். இத்துறையின் தற்போதைய விதை விநியோகக் கொள்கையானது நெல் பரப்பில் 12 விழுக்காட்டிற்கும், கேழ்வரகு பரப்பில் 16 விழுக்காட்டிற்கும், இரகச் சோளத்தில் 7 விழுக்காட்டிற்கும் மற்றும் வீரிய ஒட்டு சிறு தானியங்கள் பரப்பில் 40 சதத்திற்கும் தரமான விதைச் சான்று பெற்ற விதைகளை வழங்குதல் ஆகும்.

1985–86 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் வரை, 12,306 மெ. டன்கள் நெல் மற்றும் 1,045 டன்கள் சிறுதானியங்களின் சான்றிதழ் விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் விதை விநியோகம் கீழ்க்கண்டவாறு திட்டமிடப் பட்டுள்ளது :—

| பயிர். (1) | விழுக்காடு. (2) | விதைக்கான அளவு. (3) (மெ. டன்களில்.) |
|---|---|---|
| நெல் .. .. .. .. | 12 | 16,200 |
| கேழ்வரகு .. .. .. | 16 | 226 |
| இரகச் சோளம் .. .. | 7 | 161 |
| வீரிய ஒட்டுச் சோளம் .. | 40 | 157 |
| கம்பு .. .. .. .. | 40 | 432 |
| மக்காச் சோளம் .. .. | 40 | 128 |

**உயர் விளைச்சல் இரகத் திட்டம் :**

உணவுப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்க உயர் விளைச்சல் இரகத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டில் 21.11 இலட்சம் எக்டேரில் நெல் பயிரும், 10 இலட்சம் எக்டேரில் இதர தானியப் பயிர்களும் பயிரிடப்பட்டன. 1986–87 ஆம் ஆண்டில் 24 இலட்சம் எக்டேரில் நெல் மற்றும் 10 இலட்சம் எக்டேரில் இதர தானிய பயிர்களின் உயர் விளைச்சல் இரகங்களைப் பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சிறப்புத் திட்டங்கள் :**

இலாப நோக்குடன் கூடிய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கத் தேவையான வழிமுறைகளை செயல் விளக்கம் செய்து காண்பிக்க வகுக்கப்பட்ட "எக்டேருக்கு 5 மெ. டன் நெல் உற்பத்தி", மற்றும் மும்மணித் திட்டம் போன்ற சிறப்பு திட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1986–87 ஆம் ஆண்டு இம்முயற்சிகள் தீவிரப்படுத்தப்படும்.

இச்செயல்முறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும், இத்திட்டங்களை மானாவாரி நிலங்களுக்கு விரிவுபடுத்தவும் "தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் செயல் விளக்க மையங்கள்" என்ற புதிய முறை புகுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் மாநிலத்தில் 381 இடங்களில் மானாவாரி மற்றும் இறவை நிலங்களில் செயல் விளக்கங்கள் அமைக்கப்படும்.

பயறு பெருக்குத் திட்டம்.—பயறு வகைகளில் விதை உற்பத்தியில் டிசம்பர் மாதம் வரை 1,715 டன்கள் தரமான விதை உற்பத்தி செய்யப்பட்டு 1,480 டன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் மொத்த பரப்பில் 10 விழுக்காடு பரப்பிற்கு விதை விநியோகம் செய்யவும் 1,700 டன்கள் விதை உற்பத்தி செய்யவும், 2,650 டன் விநியோகம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்க டிசம்பர் 1985 வரை 2.48 இலட்சம் நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1986–87 ஆம் ஆண்டில் 5 இலட்சம் பொட்டலங்கள் விநியோகிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. டை-அம்மோனியம் பாஸ்பேட் உரத்தை இலை மூலம் செலுத்துவதால் பயறு வகைப் பயிரில் அதிக உற்பத்தி கிடைக்கிறது. டிசம்பர் 1985 வரை 1,966 எக்டேரில் இலை மீது டிஏபி தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை 10,000 எக்டேரில் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அரசின் பயிறு வகைகள் பெருக்கத் திட்டத்தின் கீழ் டிசம்பர் 1985 வரை 2,700 எக்டேரில் நீர்ப்பாசன மானியம் வழங்கப்பட்டுள்ளது. 463 எக்டேரில் நிரூபண தளைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1,667 எக்டேருக்கு பயிர் பாதுகாப்பு மருந்துகள் 50 விழுக்காடு மானிய விலையில்

வழங்கப்பட்டுள்ளன. 311 பயிர் பாதுகாப்பு கருவிகள் மற்றும் 38,383 நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்கள் 50 விழுக்காடு மானிய விலையில் வினியோகிக்கப்பட்டுள்ளன. 3,226 குவிண்டால் விதைகள் ரூ. 6.53 இலட்சம் மானிய உதவியுடன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் 1985 டிசம்பர் வரை 9,794 பயறு வகைகள் மினிகிட்டுகள் வினியோகிக்கப்பட்டுள்ளன. அவை மட்டுமின்றி சிறு/குறு உழவர்களுக்கு 1,27,913 மினிகிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. பயறு வகைகள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மேற்கூறிய அனைத்துத் திட்டங்களும் 1986–87 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

புகையிலை.—1985 டிசம்பர் மாதம் வரை 10,350 எக்டேரில் புகையிலை பயிரிடப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டில் 12,000 எக்டேரில் புகையிலை சாகுபடி செய்ய திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

விதை வினியோக திட்டத்தின்கீழ் 1985 டிசம்பர் மாதம் வரை 252 கிலோ புகையிலை விதை வினியோகம் செய்யப்பட்டுள்ளது. 1986–87-ல் 350 கிலோ விதை விநியோகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பருத்தி.—மொத்த பருத்தி சாகுபடி பரப்பில் மானாவாரி பயிரில் 10 விழுக்காடு பரப்புக்கும், இறவைப் பயிரில் 15 விழுக்காடு பரப்புக்கும் சான்று பெற்ற விதைகள் வினியோகம் செய்வது அரசின் கொள்கையாகும். 1985–86 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் வரை 3,349 குவிண்டால் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு 2,214 குவிண்டால் விதைகள் வினியோகம் செய்யப்பட்டன. 1986–87-ல் 4,100 குவிண்டால் விதை உற்பத்தி செய்து வினியோகம் செய்யப்படும். மைய அரசு உதவியுடன் செயல்படும் திட்டத்தில் இருக்கும் மானியத்தைக் கொண்டு இவ்வாண்டு டிசம்பர் மாதம் வரை 1,178 குவிண்டால் சான்றிதழ் விதைகளும் 405 பயிர் பாதுகாப்பு கருவிகளும் வினியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் 375 செயல் விளக்கங்கள் நடத்தப்பட்டன. 1986–87-ல் இம்மானியத்தைக் கொண்டு 4,100 குவிண்டால் சான்று விதை வினியோகம் செய்யவும் 1,200 பயிர் பாதுகாப்பு கருவிகள் வினியோகம் செய்யவும், 520 செயல்விளக்கங்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கரும்பு.—விதைப் பெருக்கத் திட்டத்தின்கீழ் டிசம்பர் 1985 வரை 29 எக்டேர் முதல் தர, 290 எக்டேர் 2 ஆம் தர மற்றும் 2649 எக்டேர் வணிக முறை நாற்றங்கால் நிறுவப்பட்டுள்ளன. 1986–87-ல் தரமான நோயற்ற அதிக சர்க்கரை உள்ள விதைக்



கரணைகள் வழங்க 235 எக்டேர் முதல்தர, 350 எக்டேர் இரண்டாம் தர, 3,500 எக்டேர் வணிக முறை நாற்றங்கால் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வணிக முறை நாற்றங்கால்களிலிருந்து கிடைக்கப் பெறும் கரணைகளை 3,500 எக்டேரில் கரும்பு பயிர் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இவை மட்டுமின்றி 21 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் செயல்படுகின்றன. அவை மூலம் 10,500 எக்டேரில் கரும்பின் இளங் குருத்துப் புழு மற்றும் இடைக்கணுப் புழு ஆகியவைகளைக் கட்டுபடுத்த ஒவ்வொரு நிலையம் மூலமாகவும் 500 எக்டேருக்குத் தேவையான ஒட்டுண்ணி பெருக்கப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது. திருத்திய கரும்பு சாகுபடித் திட்டத்தை உழவர்களுக்கு விளக்க 575 செயல் விளக்கங்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டங்கள் 1986-87 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

எருவும் உரங்களும்.—1985–86 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 3.02 இலட்சம் டன்கள் தழைச் சத்தும், 1.19 இலட்சம் டன்கள் மணிச்சத்தும், 1.16 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் கொண்ட 5.37 இலட்சம் டன் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டன. 1986-87-ல் இவ்விநியோகம் 7 இலட்சம் டன்களாக உயர்த்தப்படும். உர உபயோகத்தை அதிகப்படுத்த 198 செயல் விலக்கங்கள் அமைத்து அவை மூலம் தழைச்சத்து உபயோகப் படுத்துவதில் ஏற்பட்டு இருக்கும் முன்னேற்றங்களை விவசாயிகளுக்கு செயல்விளக்கம் மூலம் செய்து காண்பிக்கப்படும். உழவர்களனைவருக்கும் இரசாயன உரங்கள் மட்டுமின்றி உயிரியல் உரங்களையும் பயிருக்கு இடுமாறு அறிவுரை வழங்கப்படுகிறது. அதன்படி டிசம்பர் 1985 வரை 1.15 இலட்சம் எக்டேர் நெல் வயல்களுக்கு நீலப் பச்சைப் பாசியை உற்பத்தி செய்து வழங்கப் பட்டுள்ளது, இது மட்டுமின்றி 4,368 எக்டேரில் மற்றொரு உயிரியல் உரமான அசோலா விநியோகிக்கப்பட்டுள்ளது. மானாவாரி நிலங்களுக்கு மிக உகந்த மற்றுமொரு உயிரினமான அசோஸ்பிரில்லம், உழவர்களிடையே பரவிட ஆவன செய்யப்படுகிறது. 1985 டிசம்பர் மாதம் வரை 1,05,662 அசோஸ்பிரில்லம் பொட்டலங்கள் பருத்தி மற்றும் சிறு தானியங்கள் விதை நேர்த்தி செய்ய வினியோகிக்கப்பட்டுள்ளன.

1986-87 ஆம் ஆண்டில் 1.20 இலட்சம் எக்டேருக்கு நீலப் பச்சை பாசி வினியோகம் செய்யவும் 10 000 எக்டேருக்கு அசோலா வழங்கவும் பருத்தி மற்றும் சிறு தானியங்களில் விதை நேர்த்திக்கு 2 இலட்சம் அசோஸ்பிரில்லம் பொட்டலங்கள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

உற்பத்தி ஊக்கமளிப்பு.—தஞ்சை, திருச்சி மற்றும் தென் ஆற்காடு மாவட்ட காவிரி ஆற்றுப் படுகை உழவர்களின் உற்பத்தி முயற்சிகளில் உதவிட, அவர்களால் நுகர்வோர் பொருள் வாணிக கழகத்திற்கு கொள்முதலுக்காக கொடுக்கப்படும் ஒவ்வொரு குவிண்டால் நெல்லுக்கும் உற்பத்தி ஊக்கத்தொகையாக ரூ. 35 பொருளாக வழங்கப்பட்டது. இது வரை மொத்தம் 10.5 கோடி ரூபாய் இதற்காக வழங்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 1

**பயிர் பாதுகாப்பு.**—1985–86 ஆம் ஆண்டு 56.87 இலட்சம் எக்டேரில் பூச்சி தாக்குதலையும், 17.35 இலட்சம் எக்டேரில் நோய் தாக்குதலையும், கட்டுபடுத்தத் திட்டமிட்டதில் டிசம்பர் மாதம் வரை 42.92 இலட்சம் எக்டேரில் பூச்சி தாக்குதலையும் 13.94 இலட்சம் எக்டேரில் நோய் தாக்குதலையும் கட்டுப் படுத்தபட்டுள்ளது. 1986–87 ஆம் ஆண்டில் 57.23 இலட்சம் எக்டேரில் பூச்சி தாக்குதலையும் 17,68 இலட்சம் எக்டேரில் நோய் தாக்குதலையும் கட்டுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு உத்தேசிக்கப்பட்ட 9,000 டன் தூள் மருந்து களும் மற்றும் 5 இலட்சம் லிட்டர் திரவ மருந்துகளும் விநி யோகிக்க உள்ள இலக்கில் டிசம்பர் மாதம் வரை 3 738 டன் தூள் மருந்துகளும் 1,95 021 லிட்டர் திரவ மருந்துகளும் வேளாண் கிடங்குகள் மூலம் விநியோகிக்கப்பட்டன. இத்திட்டம் 1986-87ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

நெல் குருத்துப் புழுவைக் கட்டுப்படுத்த டிசம்பர் மாதம் வரை 6,800 எக்டேரில் மருந்து தெளிக்கப்பட்டது. 1986–87ஆம் ஆண்டில் இப்பணி 40,000 எக்டேரில் மேற்கொள்ளப்படும்.

நெல்லில் தோன்றும் புகையானைக் கட்டுப்படுத்த 15,300 எக்டேரில் டிசம்பர் 1985 வரை பரந்த அளவில் மருந்து தெளிக்கப் பட்டது. 1986-87 ஆம் ஆண்டில் 20,000 எக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நெல்லில் தோன்றும் குலை நோயைக் கட்டுப்படுத்த 32,000 எக்டேரில் இவ்வாண்டு பரந்த அளவில் மருந்து தெளிக்க திட்ட மிட்டதில் டிசம்பர் மாதம் வரை 18,700 எக்டேரில் தெளிக்கப் பட்டது. இத்திட்டம் 1986–87 ஆம் ஆண்டில் 32,000 எக்டேரில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நெல்லில் துங்க்ரோ நோய் தோன்றாமல் தடுக்க, பச்சைத் தத்துப் பூச்சிகளை ஒழிக்க டிசம்பர் 1985 வரை 10,000 எக்டேர் நாற்றங்கால்களில் பரந்த அளவில் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டில் இத்திட்டம் 10,000 எக்டேரில் செயல்படுத்தப்படும்.

1985–86 ஆம் ஆண்டு நெல்லில் இலை சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்த 20,000 எக்டேரில் பரந்த அளவில் மருந்து தெளிக்க திட்டமிடப்பட்டது. இப்பணி ஜனவரி 1986-ல் தான் தொடங்கியது. 1986-87 ஆம் ஆண்டில் 20,000 எக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

1985–86 ஆம் ஆண்டு 1.68 இலட்சம் எக்டேரில் எலிகளை ஒழிக்க திட்டமிட்டதில் டிசம்பர் மாதம் வரை 0.23 இலட்சம் எக்டேரில் பணி மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள பரப்பில் கோடை மாதங்களில் இப்பணி மேற்கொள்ளப்படும், இத்திட்டம் 1986–87 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

மிளகாய் பயிரில் தோன்றும் இலைப்பேன் பூச்சியைக் கட்டுப் படுத்தும் திட்டம் மற்றும் கரும்பில் தோன்றும் செதில் பூச்சியைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் 1986–87 ஆம் ஆண்டில் செயல் படுத்தப்படும்.



1986 ஏப்ரல் 1]

பயிர் பாதுகாப்பு முறைகளின் தரத்தை உயர்த்தவும் குறைந்த செலவில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை உழவர்களுக்கு செயல்விளக்கம் செய்து காட்டவும் 99 ஒருங் கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் இவ்வாண்டு அமைக்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டிலும் இவை தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பயிர்களில் தோன்றும் பூச்சி தாக்குதலைக் கண்டறிந்து அவை களைக் கட்டுப்படுத்தத் தேவையான பயிர் பாதுகாப்பு முறை களை விவசாயிகளுக்கு முன்கூட்டியே அறிவிக்க பூச்சி நோய்க் கணக்கெடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் 7,116 தளங்கள் அமைக்கப்பட் டுள்ளன. அவற்றில் ஒவ்வொரு வாரமும் பூச்சி நோய் தாக்குதல் கணக்கெடுப்பு செய்து மாவட்ட வாரியாக அவற்றை ஆராய்ந்து ஆராய்ச்சியாளர்களுடன் கலந்தாலோசித்து உரிய பயிர் பாது காப்பு செய்திகளை பணியாளர்கள் மற்றும் வானொலி மூலம் உழவர்களிடையே பரவிடச் செய்யப்படுகிறது.

இவ்வாண்டு களைக்கொல்லிகளை உபயோகப்படுத்தி, களை களைக் கட்டுப்படுத்த 2,000 எக்டேரில் செயல் விளக்கம் அமைக்க திட்டமிட்டதில் டிசம்பர் மாதம் வரை ,538 எக்டேரில் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டன. இத்திட்டம் 1986–87 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**உழவர் பயிற்சி நிலையங்கள்.**—தமிழ்நாட்டில் மாவட்டத் திற்கு ஒன்றாக மொத்தம் 15 உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றுள் கோவையிலும், மதுரையிலும் உள்ள நிலையங்கள் வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டி லும், உதகையில் உள்ள நிலையம் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்களின் இயக்குநர் கட்டுப்பாட்டிலும் உள்ளன. மீதம் உள்ள 12 நிலையங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றில் இவ்வாண்டு சாதனை மற்றும் 1986-87 ஆம் ஆண்டில் இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| வரிசை எண்ணும் பயிற்சியின் பெயர். | 1985–86 டிசம்பர் மாதம் வரை சாதனை. | 1985–86 ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சாதனை. | 1986–87-ம் ஆண்டின் திட்டம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 ஆண், பெண் விவசாயி களுக்காக நிலையப் பயிற்சி. | 185 | 240 | 240 |
| 2 உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக் கான பயிற்சி. | 70 | 70 | 70 |

| வரிசை எண்ணும் பயிற்சியின் பெயர். | 1985–86 டிசம்பர் மாதம் வரை சாதனை. | 1985–86 ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சாதனை. | 1986–87-ம் ஆண்டின் திட்டம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 3 கிராமப்புற களப் பயிற்சியின் செயல் விளக்கங்கள். | 912 | 1,200 | 1,200 |
| 4 பெண்களுக்கான செயல் விளக்கப் பயிற்சி. | 96 | 120 | 120 |

**டென்மார்க் நாட்டு உதவியுடன் செயல்படும் திட்டம் :**

பண்ணை பெண் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க டச்சு அரசிடமிருந்து கிடைக்கும் ரூபாய் 3.21 கோடி மானிய உதவி யுடன் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் செங்கை, தென் ஆற்காடு, தஞ்சை, புதுக்கோட்டை, நெல்லை மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் செயல் படுத்தப்படும்.

**வேளாண்மை பள்ளிகள் :**

இம்மாநிலத்தில் 13 வேளாண் பள்ளிகள் உள்ளன. அவை ஆண்டுதோறும் 325 ஊரக இளைஞர்களுக்கு அறிவியல் வேளாண் நுணுக்கங்களில் பயிற்சி அளிக்கின்றன. இத்திட்டம் 1986–87-ல் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**பயிற்சி வழித் தொடர்பு திட்டம்:**

தற்போது பயிற்சி வழித் தொடர்பு திட்டம் உதகை உட்பட எல்லா 18 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகின்றது. இத் திட்டம் 1986-87 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

இத்திட்டத்தில் முன்பிருந்தது போலவே மண்டல கருத்தரங்கு கள் இருவாரப் பயிற்சிகள், நிரந்தர கிராமப்புற பயணம், காலம் மற்றும் இடத்திற்கு ஏற்ப தேவைப்படும் தொழில் நுட்பங்களை உழவர்களுக்கு பரிந்துரை செய்தல், சாகுபடியில் தோன்றும் பிரச்சினைகளை ஆராய்தல், இத்திட்டத்தின் செயல் முறைகள் மாவட்ட தொழில் நுட்ப குழுவால் ஆய்வு செய்யப்படுதல் போன்ற எல்லா செயல் முறைகளும் தொடர்ந்து தீவிரமாக செயற்படுத்தப்படும்.

சாகுபடியில் கண்டறியப்படும் நவீன உத்திகளை உழவர்கள் அறிந்திடச் செய்ய 1986–87 ஆம் ஆண்டில் உட்கோட்டங்கள் தோறும் 80 தகவல் நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட் டுள்ளது.



**மானாவாரி சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் :**

மானாவாரி நிலங்களில் மழை நீரை சேமித்து அதற்குத் தக்கவாறு பயிர் சாகுபடி செய்யும் முறைகளை பரவிடச் செய்ய ஒரு புதிய திட்டம் இவ்வாண்டு பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், இளையான்குடி வட்டத்தில் ஒரு அலகுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2,000 எக்டேரில் செயல் படுத்தப்படுகிறது. முன்னேற்றம் அடைந்த மானாவாரி சாகுபடி முறைகளை செயல் விளக்கம் செய்து காண்பிக்க வகுக்கப்பட்ட இத்திட்டம் 1986–87 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாடு திட்டம், சிவகாசி:**

1985-86 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் வரை இத்திட்டத்தின் கீழ் சிவகாசியில் 1,400 எக்டேரில் மானாவாரி சாகுபடி பற்றிய செயல் விளக்கங்கள் நடத்தப்பட்டன. 6.50 இலட்சம் பழக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டதுடன் மானாவாரி சாகுபடி பற்றிய நுட்பங்கள் பற்றி 2 உழவர் பயிற்சிகளும் நடத்தப்பட்டன. இவை மட்டுமல்லாமல், வேளாண்மை பொறியியல் பணிகளில் 14 நீர் தடுக்கும் சிறிய அணைகள், 44 வண்டல் சேர்க்கும் குட்டைகள், 25 உழவர்களின் நிலங்களில் நீர்பாசன குழாய்கள் அமைத்தல், 24 உழவர் நிலங்களில் நீர் அறுவடை நிலைகள் அமைத்தல் போன்றவை செய்யப்பட்டன. இத்திட்டம் சென்ற ஆண்டுபோல் 1986–87 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நீர்ப்பாசன ஏரிகளின் கீழ் பண்ணை மேம்பாடு:**

ஏரிப்பாசன பகுதிகளில் பாசன நீரின் உபயோகத்தை உயர்த்து வதன் மூலம் உற்பத்தியைப் பெருக்க 1985-86 ஆம் ஆண்டு ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ் வொரு ஏரியின் பாசன நிலத்தில் 100 எக்டேரில் நவீன சாகுபடி முறைகள் சீரிய நீர்ப்பாசன முறைகள் மற்றும் சீர்மிகு பயிர் சுழற்சி ஆகியவைகளை செயல் விளக்கம் செய்து காண்பிக்கப் படுகிறது. இத்திட்டம் செங்கை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் தலா 2 ஏரிகள் வீதம் செயல்படுத்தப்படுகின்றது. நிலச் சமன்பாடு, பாசன வடிகால் அமைத்தல், நிலச் சீர்திருத்தம் போன்ற பணிகளுக்கான எக்டேருக்கு ரூபாய் 250 மற்றும் இடு பொருள் வழங்க எக்டேருக்கு ரூபாய் 150 மானிய வசதி இத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. 1986–87 ஆம் ஆண்டும் இத் திட்டத்தை தொடரவும் பிற மாவட்டங்களில் செயல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மினிகிட்டுகள்:**

1985-86 ஆம் ஆண்டில் 52,500 நெல் மற்றும் 19,100 சிறு தானிய மினிகிட்டுகள் மைய அரசு முழு உதவியுடன் இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டது. அதில் 1985 டிசம்பர் வரை 48,795 நெல் மற்றும் 16,583 சிறு தானிய மினிகிட்டுகள் வழங்கப்பட்டன. இத்திட்டம் 1986-87-ல் தொடர்ந்து செயல் படும்.

**மண் ஆய்வு:**

தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 15 மண் ஆய்வுக் கூடங்களும், 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களும் செயல்படு கின்றன. காஞ்சி, ஆடுதுறை, கோவில்பட்டி, கோவை மற்றும் திருச்சியில் உள்ள மண் ஆய்வுக் கூடங்கள் நுண் ஊட்டக் சத்துக்களை ஆய்வு செய்வதற்கேற்றாற்போல் தேவையான உப கரணங்களுடன் செயல்படுகின்றன. மண் ஆய்வுக் கூடங்களின் இவ்வாண்டின் இலக்கான 6.96 இலட்சம் மண் மாதிரிகளில் 1985 டிசம்பர் வரை 4.51 இலட்சம் மாதிரிகள் ஆய்வு செய்யப் பட்டுள்ளன. மண் மாதிரிகள் மட்டுமின்றி பாசன நீர் மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன.

நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களின் ஆண்டு இலக்கான 2.70 இலட்சம் மாதிரிகளில், 1985 டிசம்பர் வரை 1:90 இலட்சம் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு:**

இம்மாநிலத்தில் வேலூர், கோவை, தஞ்சை மற்றும் பாளையங்கோட்டையில் மொத்தம் நான்கு மண் அளவை அலகு கள் உள்ளன. எல்லா வட்டங்களிலும் மண் அளவைப் பணிகள் முடிவுற்று விட்டன. அதனைக் கொண்டு மாவட்ட மண்வள வரை படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வரை படங்களில் கிராமம் மற்றும் வட்டங்களின் மண் வளம், நீர் வளம் பற்றிய அரிய தகவல்கள் அடங்கியுள்ளன. இவ்வரைபடங்கள், ஆராய்ச்சி யாளர்கள், விரிவாக்க பணியாளர்கள், திட்டம் தீட்டுபவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆகிய எல்லோருக்கும் பலனளிக்கும் வகையில் தயாரித்து வெளியிடப்படும்.

**செங்கல்பட்டு மாவட்டத்தில் களர் உவர் நிலங்களை மேம்படுத்துதல்:**

செங்கை மாவட்டத்தில் களர் மற்றும் உவர் தன்மைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலங்களை பார்வையிட்டு மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்து தேவைப்படும் ஜிப்சத்தை 50 விழுக்காடு மான்ய விலையில் விவசாயிகளுக்கு அளித்து அந்நிலங்களை சீர் படுத்தும் இத்திட்டத்தில் 1985-86 -ஆம் ஆண்டு குறியீடான 500 ஏக்கருக்கு டிசம்பர் வரை 584 ஏக்கர் பரப்பில் பணி மேற் கொள்ளப்பட்டது. இத்திட்டம் 1986–87 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**நுண்ணுயிர் கலவை தயாரிக்கும் திட்டம்:**

பல்வகைப் பயிர்களுக்கும் பயன்படும் நுண்ணுயிர் கலவையை தயாரித்து வழங்கும் கூடம் ஒன்று கடலூரில் செயல்பட்டு வரு கிறது. இவ்வாண்டு இலக்கான 7.50 இலட்சம் பொட்டலங்களில் டிசம்பர் 1985 வரை 6,93,906 பொட்டலங்கள் இக்கூடத்தில் தயாரித்து வழங்கப்பட்டுள்ளன. 1986-87-ல் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



**நுண்ணூட்டக் கலவை தயாரித்தல் :**

மணிலா மற்றும் இதர பயிர்களுக்குத் தேவையான நுண் ணூட்டக் கலவை தயாரிக்கும் நிலையம் புதுக்கோட்டை மாவட் டத்தில் குடுமியான் மலையில் உள்ளது. இக்கலவையைத் தய ரித்து உற்பத்தி விலையில் வேளாண் கிடங்குகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாண்டு இலக்கான 500 மெட்ரிக் டன் அளவில் டிசம்பர் 1985 வரை 411 மெட்ரிக் டன் அளவு தயாரித்து விநியோகம் செய்யப்பட்டது. 1986–87-ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**உரக்கட்டுப்பாடு ஆய்வகங்கள் :**

தமிழ்நாட்டில் மொத்தம் 6 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் உள்ளன. அவை மூலம் ஆண்டுதோறும் 10,600 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. இவ்வாண்டு டிசம்பர் வரை 8,402 உரமாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. 1986-87 ஆம் ஆண்டில் 10,600 மாதிரிகள் ஆய்வு செய்யப்படும்.

**பூச்சி கொல்லி ஆய்வகங்கள் :**

மாநிலத்தில் உள்ள 9 பூச்சி கொல்லி ஆய்வகங்கள் மூலம் ஆண்டுதோறும் 18,360 பூச்சி கொல்லி, பூஞ்சான் கொல்லி மற்றும் களைக் கொல்லி மாதிரிகள் ஆய்வு செய்ய முடியும். இவ்வாண்டில் டிசம்பர் 1985 வரை 12,011 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. 1986-87ஆம் ஆண்டில் இவ்வாய்வகங்கள் முழுமையான திறனுடன் செயற்படும்.

**உப்பு படிந்த நிலங்களை சீர்படுத்துதல் :**

தென்னாற்காடு, புதுக்கோட்டை, மதுரை மற்றும் இராம நாதபுரம் மாவட்டங்களில் தலா 500 எக்டேர் வீதம் 2,000 எக்டேர் உப்பு படிந்த நிலங்களை சீர் செய்ய இத்திட்டம் புதி தாக இவ்வாண்டு தொடங்கப்பட்டது. உப்பு படிந்த நிலங்களை சீர் செய்ய 50 சதவீதம் மானியத்தில் ஜிப்சம் வழங்கப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை தொடர்வதோடு, மேலும் விரிவுபடுத்தி இதர மாவட்டங்களில் 5,000 எக்டேரில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1986-87 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

1. **ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் :**

கரும்பு பயிரில் தோன்றும் இளங்குருத்துப்புழு, இடைக்கணு புழு மற்றும் பருத்தியில் புருடினியா புழுக்களை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தும் முயற்சிகளை தீவிரமாக தற்போதுள்ள 6 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்களில் தேவையான கூடுதல்

வசதிகள் செய்து தரப்பட்டு மேம்படுத்தப்படும். அவைகளின் ஒட்டுண்ணி உற்பத்தியை அதிகப்படுத்துவதன் மூலம் ஆண்டுக்கு தலா 1,000 எக்டேர் கரும்பு பயிருக்கு ஒட்டுண்ணிகளும், 400 எக்டேர் பருத்தி பயிருக்கு வைரஸ் பெருக்கி விடுதலும் இத் திட்டத்தின் நோக்கம் ஆகும்.

2. நஞ்சை தரிசு பயறுவகை சாகுபடியில் திருந்திய முறைகளை பரவிடச் செய்தல்.

நஞ்சை தரிசில் பயிராகும் பயறு வகைகளின் பரப்பில் இலை மீது டி.ஏ.பி. தெளித்தல் மற்றும் பயிர் பாதுகாப்பு செய்தல் போன்ற சாகுபடி முறைகளை பரவிடச் செய்ய ஒரு எக்டேருக்கு தேவையான டி.ஏ.பி. உரத்தை மினிகிட்டுகளாக வழங்கிடவும், தேவையான பயிர் பாதுகாப்பு மருந்துகளை மானிய விலையில் வழங்கிடவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது.

3. அரசு விதைப் பண்ணைகளின் அடிப்படை வசதிகளைச் செம்மைப் படுத்துதல் :

அரசு விதைப் பண்ணைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, 1986-87 ஆம் ஆண்டில் 3.95 இலட்சம் ரூபாய் செலவில் அடிப் படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

4. விதை சுத்திகரிப்பு மற்றும் தரம் பிரிக்கும் கருவிகள் வாங்குதல் :

தரமான விதை உற்பத்தி செய்ய ரூ. 7.50 லட்சம் செலவில் ஐந்து விதை சுத்திகரிக்கும் கருவிகள் வாங்கி கூடங்களில் நிறுவப் படும்.

5. பெரிய விதை சுத்திகரிப்பு நிலையம் நிறுவுதல் :

தற்போது இத்துறையின் விதை சுத்திகரிப்புத் திறன் 16,00( மெட்ரிக் டன்களாகும். இத்திறனை அதிகரிக்க கோவை மற்றுப் புதுக்கோட்டையில் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு 1,000 மெட்ரிக் டன் திறன் கொண்ட இரண்டு புதிய விதை சுத்திகரிப்பு நிலை யங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. வைகை அணை விவசாய பண்ணையில் உள்ளமைப்புகளை செம்மைப்படுத்துதல் :

வைகை அணைப் பண்ணையில் செய்யப்படும் பருத்தி கரு விதை உற்பத்தியை மேம்படுத்த கீழ்க்காணும் பணிகளை மேற் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது:—

(அ) பணியாளர்கள் குடியிருப்பு கட்டுதல்.
(ஆ) பண்ணை வேலி அமைத்தல்.
(இ) நீர்ப்பாசன மேம்பாடு.



7. உயிரியல் உரங்கள் தயாரித்தல் :

பெருகி வரும் உயிரியல் உரங்களின் (ரைசோபியம், அக்சடோ பெக்டர் மற்றும் அசோஸ் பிரில்லம்) தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு புதிய உயிரியல் உர உற்பத்தி நிலையம் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

8. தற்போதுள்ள அலுவலகக் கட்டிடங்களில் கூடுதல் இட வசதி செய்தல்:

மதுரையில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவல கத்தில் கூடுதல் இடவசதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறை

வேளாண்மைப் பொறியியற் துறை, உழவர்களுக்கு நிலங் களை மேம்படுத்தவும், சீரிய விவசாய கருவிகளைக் கொண்டு குறித்த நேரத்தில் சாகுபடி பணிகளை செய்யவும், நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்தும் மண் மற்றும் நிலவளத்தை மேம் படுத்தியும் ஊரக மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தும், இயற்கையின் சீற்றத்ினால் ஏற்படும் வெள்ளம் மற்றும் வறட்சி யின் போது தகுந்த நிவாரணம் அளித்தும், மற்றும் பயனுள்ள பல சிறப்புத் திட்டங்களையும் நிறைவேற்றியும் வருகிறது. மேற்கண்ட பணிகள், மாநில மற்றும் மத்திய அரசுகளின் திட்டங் களின்கீழ் நிறைவேற்றப்படுகிறது.

நில மேம்பாடு:

வேளாண்மை வளர்ச்சிக்கு, நிலமேம்பாடு ஒரு முக்கிய அம்ச மாக திகழ்கிறது. இத்துறை விவசாயிகளின் தரிசுநிலம் மற்றும் மேடுபள்ளமான நிலங்களை சமப்படுத்திக் கொடுக்கின்றது. பல்வேறு சாகுபடிப் பணிகளை மேற்கொள்ள டிராக்டர்களும், இதர கருவிகளும், வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி பண்ணைக்குத் தேவையான திறன் ஓரளவிற்கு வழங்கப்பட்டு விவசாயிகள் தக்க தருணத்தில் சாகுபடிப் பணிகளை செய்து முடிக்க வகை செய்யப்படுகிறது. நிலச் சமன்பாட்டு வேலைகளை செவ்வனே செயல்படுத்த, இத்துறையானது 135 புல்டோசர் களையும், 175 டிராக்டர்களையும் தேவையான விவசாயிகளுக்கு வாடகைக்கு அளித்து வருகிறது.

1985-86 ஆம் ஆண்டில், நிலச்சமன் செய்ய, 6,700 எக்டேர் (1,68,000 மணிகள்) மற்றும் இயந்திர உழவை செய்ய 21,400 எக்டேர் (75,000 மணிகள்) குறியீடுகளாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதுவரையில், 1985 ஆம் ஆண்டு டிசம்பர் வரை, நிலச்சமன் செய்தலில் 6,279 (1,56,969 மணிகள்) எக்டேர்களும், இயந்திர உழுவையில் 26,040 எக்டேர்களும் (91,141 மணிகள்)

சாதனை அடையப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டிற்கு, நிலச் சமன் செய்தலில் 6,700 எக்டேர்களும் (1,68,000 மணிகள்), இயந்திர உழவையில் 21,400 எக்டேர்களும் (75,000 மணிகள்) குறியீடுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**சிறு பாசனம்:**

தமிழ்நாட்டில் குழாய் கிணறுகள், துளைக் கிணறுகள், வடி முனைக் குழாய் கிணறுகள் அமைத்தும் மற்றும் பாறைக் கிணறுகளை ஆழப்படுத்துவதின் மூலமும் நிலத்தடி நீரை அதிக மாக விவசாயத்திற்குப் பயன்படுத்த வேளாண்மைப் பொறியியல் துறை வழிவகை செய்து வருகின்றது. நிலத்தடியில் உள்ள நீர் ஊற்றுக்கள் நீரின் தன்மை, அளவு போன்றவைகளை நிலவியற் பௌதிக அளவைகள் மூலம் கண்டுபிடிக்க இத்துறை உதவுகிறது. இத்துறையானது விசைத் துளைக் கருவி களையும், கைத்துளைக் கருவிகளையும், காற்றழுத்தக் கருவி களையும், விவசாயிகளுக்கு வாடகை முறையில் வழங்கி குழாய் கிணறு அமைத்தல், வடிமுனைக் குழாய் கிணறு அமைத்தல், வறண்ட கிணற்றை நீர்வளமுடையதாக ஆக்க, பக்க துளை யிட்டும், வெடிவைத்து ஆழப்படுத்துதல் போன்ற அனைத்துப் பணிகளையும் செய்து தருகின்றது. இத்துறையில் 176 விசைத் துளைக் கருவிகளும், 103 பாறை வெடிக் கருவிகளும், 57 நீண்ட துளையிடு கருவிகளும், 410 கைத்துளைக் கருவிகளும், 22 காற்ற ழுத்தக் கருவிகளும், 2 மின்சார லாகிங் கருவிகளும், 19 மின் னியல் நீர் ஆய்வுக் கருவிகளும் உள்ளன. இத்துறையினரால் அமைக்கப்பட்ட கிணறுகளை சுத்திகரித்தும், சோதனை செய்தும், விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. நீர் இறைக்கும் இயந்திரங் களை தேர்ந்தெடுக்க தக்க ஆலோசனைகளும் மின் சக்தியை மிச்சப்படுத்த உதவும் சீரிய ''புட்வால்வுகள்'' பற்றியும், விவ சாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

நிலத்திற்கடியில் குழாய்களை பதித்து பாசனத்திற்கான நீரை அதிகப்படுத்தவும், சிறந்த நில மேம்பாடு மூலம் நீர்ப் பாய்ச்சும் திறமையை அதிகப்படுத்தவும், புதிய நீர்ப்பாசன முறைகளான தெளிப்பு மற்றும் சொட்டு நீர்ப்பாசன முறை களைப் புகுத்தவும் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. இம் முயற்சியால் சொட்டு மற்றும் தெளிப்பு பாசன முறைகளை அறிமுகப்படுத்திட ரூ. 10.17 இலட்சம் செலவில், ஒரு புதிய திட்டம் சென்ற செப்டம்பர் 1985–ல் அனுமதிக்கப்பட்டது. இதில் ரூ. 10.00 இலட்சம், தெளிப்பு மற்றும் சொட்டு நீர்ப் பாசன முறைக்ளைக் கையாளும் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தினால் சுமார் 200 விவசாய பெருங்குடிகள் பயன் பெறுவார்கள்.

1985–86 ஆம் ஆண்டில் 5,000 குழாய் கிணறுகளும், 3,000 வடிமுனைக் குழாய் கிணறுகளும், 2,500 கிணற்று துளை கிணறு களும் மற்றும் 3,000 கிணறுகளை ஆழப்படுத்தவும், குறியீடுகள்



நிர்ணயிக்கப்பட்டது. 1985 டிசம்பர் திங்கள் வரை 3,772 குழாய் கிணறுகளும், 2,621 வடிமுனைக் குழாய் கிணறுகளும், 2,971 கிணற்று துளைக் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 2,534 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டில் 5,000 குழாய் கிணறுகளும், 3,000 வடிமுனைக் குழாய் கிணறுகளும், 2,500 கிணற்று துளைக் கிணறுகளும், 3,000 கிணறுகளை ஆழப்படுத்தவும் குறியீடுகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மேலும் புதிய பாசன முறைகளும் விவசாயி களிடையே அறிமுகப்படுத்தப்படும்.

மண் மற்றும் நீர்வளப் பராமரிப்பு.

நாளுக்கு நாள் பெருகி வரும் மக்கள் தொகையின் உணவு, உடை மற்றும் இதர தேவைகளுக்கு ஏற்ப நீர் மற்றும் நில வளப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

நீர்ப்பிடிப்பு பகுதிகள் வாயிலாக மேற்கொள்ளப்படும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு முறைகளினால், மண்ணரிப்பைத் தடுக்கவும், நல் நிலங்கள் சீர்குலைவடைவதை தடுக்கவும், காற்றரிப்பு மற்றும் ஓடையரிப்பினால் பாதிக்கப்பட்ட நிலங் களை விளைநிலங்களாக மாற்றவும், நீர்சேகரம் மூலம், மிகச் சிறு பாசன வசதிகளை ஏற்படுத்தவும், ஊரக மக்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிக்கவும் உதவுகிறது.

மலைப் பிரதேசம் மற்றும் சமவெளிகளிலும் மண் மற்றும் நீர் பராமரிப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. காற்றரிப்பினால் பாதிக்கப்படும் நிலங்களை பாதுகாக்க, மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும், ஓடை யரிப்பினால் பாதிக்கப்படும் நிலங்களை பாதுகாக்க தென்னாற் காடு மாவட்டத்திலும், மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக, வடஆற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி, சேலம் மற்றும் திருச்சி மாவட்டங்களிலும், தர்மபுரி மற்றும் புதுக்கோட்டை மாவட் டங்களில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளிலும், சிறப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

குந்தா மற்றும் கீழ்பவானி நீர்த்தேக்கங்களில் மிக அதிக அளவில் வண்டல் படிவதை தடுக்கவும், நிலங்களை அறிவியல் முறையில் உபயோகப்படுத்தவும், மத்திய அரசின் நிதி உதவி யோடு, குந்தா மற்றும் கீழ்ப்பவானி நதிப் பள்ளத்தாக்குப் பகுதி களில், மண் வளப்பாதுகாப்பு பணிகள் செயல்படுத்தப்படு கின்றன. மானாவாரி சாகுபடி நிலங்களில், நீர்வளப்பாதுகாப்பு மற்றும் நீர்சேகரம் செய்தலை அறிமுகப்படுத்த, திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு முன்னோடி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1985 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் துவக்கப் பட்ட இத்திட்டத்திற்கு 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 10.10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 1

**மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டம்.**

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் விஞ்ஞான முறையிலான மண்வளப் பாதுகாப்பு முறைகளின்படி, இயற்கைச் சமநிலையை பாதுகாக்க ஆவன செய்யப்படுகிறது.

கடந்த பல்லாண்டுகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு திட்டங்களைச் செயல்படுத்துவதில் காட்டிய கவனத்தையும், திறமையையும் கருத்தில் கொண்டு, மேற்கு மலைத் தொடர்ச்சியில் உள்ள பெரிய நதிப் பள்ளதாக்கு நீர் மின் நிலைய திட்டப் பகுதிகளில் உள்ள நீர் வரத்துப் பகுதிகளில் "தற்கால நிலை அறிக்கையை" தயாரிக்கும் பொறுப்பினை திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒப்படைத்து ரூ. 12.00 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை தொலை உணர்வு நுணுக்கங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்த அறிக்கையின் மூலம் தற்போதைய நில உபயோகத்தையும், மண் அரிப்பு மற்றும் அதைச் சார்ந்த குறிப்புகளையும் அளிக்கும்.

மண் வளப் பாதுகாப்பு திட்டங்களில் 1985-86 ஆம் ஆண்டிற்கான திட்டக்குறியீடுகளும், டிசம்பர் 1985 முடிய அடையப்பட்ட சாதனைகளும் 1986-87—க்கான குறியீடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை—I

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | 1985—86 ஆண்டு குறியீடு. | டிசம்பர் 1985 முடிய சாதனை. | 1986—87 ஆண்டு குறியீடு. |
|---|---|---|---|
| | | (பரப்பு எக்டேர்களில்) | |
| (1) | (2) | (3) | (4) |
| 1 மலை மற்றும் சமதளங்களில் மண் வளப் பாதுகாப்பு | 50,000 | 47,441 | 50,000 |
| 2 காற்றரிப்பு தடுப்பு திட்டம்— மதுரை மாவட்டம் .. | 1,200 | 1,208 | 1,200 |
| 3 காற்றரிப்பு தடுப்பு திட்டம்—திருநெல்வேலி மாவட்டம் | 900 | 916 | 900 |
| 4 ஓடை பராமரிப்பு—தென்னாற்காடு மாவட்டம் | 1,000 | [illegible] | [illegible] |



1986 ஏப்ரல் 1]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5 மலைவாழ் மக்கள் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு | 150 | 151 | 230 |
| 6 குந்தா மற்றும் கீழ் பவானி நீர்வரத்து பகுதிகளில் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் .. | 3.100 | 2,348 | 3,100 |
| 7 நீர்வளப் பாதுகாப்பு மற்றும் நீர் அறுவடை முன்னோடி திட்டம் .. .. | 325 | 211 | 470 |
| 8 மேற்கு மலைத் தொடர்ச்சியில் அமராவதி நீர் வரத்துப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு | 640 | 428.70 | 650 |
| 9 மேற்கு மலைத் தொடர்ச்சியில் வைகை நீர்வரத்து பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு | 300 | 213 | 950 |
| | சமஉயர கற்சுவர்கள் 4,000 | சமஉயர கற்சுவர்கள் 1,098 | |
| | சமஉயர வரப்புகள். | சமஉயர வரப்புகள். | |

**பாசன பகுதி மேம்பாட்டுத் திட்டம் :**

விஞ்ஞான ரீதியில் நீர்ப்பாசன முறைகளை, காவிரி படுகையில் 1967 ஆம் ஆண்டும், சாத்தனூர் பாசன பகுதியில் 1969—ஆம் ஆண்டும், இத்துறை செயல்படுத்தியது. நீர் பராமரிப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், மேற்படி திட்டமானது, காவேரி, மற்றும் சாத்தனூர் பாசன பகுதிகளில் தீவிரப்படுத்தப்பட்டும், பெரியார், சாத்தனூர் மற்றும் பரம்பிக்குளம்—ஆளியாறு பாசன பகுதிகளிலும் துவங்கப்பட்டும் உள்ளது.

இத்துறையானது பாசன பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், நீரை சிறந்த முறையில் உபயோகப்படுத்தவும், நெற் பயிருக்கான பாசன முறைகளை வகுத்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

தனித்தனி பாசன வாய்க்கால்கள் அமைத்து, வயல்வழி பாசனம் செய்யப்படுவதை தடுப்பதும், நீரின் அளவை நெறிப் படுத்த கட்டுமானங்கள் அமைப்பதும், எல்லா நிலத்திற்கும் ஒரே அளவில் நீர் கிடைக்க வழி வகுக்கும் சுழற்சிமுறைப் பாசனமும், சிறந்த நீர் பராமரிப்பு செயல்களாகும்.

1985–86-ஆம் ஆண்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களைத் தீவிரப்படுத்தவும், புதிய திட்டங்களை துவக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1985 ஆம் ஆண்டில், ஐரோப்பிய பொருளாதார குழுவின் ஒத்துழைப்பின்கீழ் 200 எக்டேர் அளவிற்குள் பாசன வசதி யுள்ள ஏரிகள் மேம்பாடு திட்டம் ரூ. 17.57 இலட்சம் செலவில் துவக்கப்பட்டு, அதில் ஒரு கோட்டமும் நான்கு உபகோட்டங் களும் துவக்கப்பட்டன. 1985–86 ஆம் ஆண்டில், திட்ட செலவிற்காக ரூ 37.50 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பரம்பிக்குளம்-ஆளியார் பாசன பகுதி மேம்பாடு திட்டத்திற்காக, ரூ. 30.98 கோடிகள் ஒதுக்கப்பட்டு, அதில் 1985–86 ஆம் ஆண்டிற்கு மட்டும் ரூ. 170.95 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சாத்தனூர் பாசன பகுதி மேம்பாடு திட்டத்தை தீவிரப்படுத்த, ஒரு கோட்டமும், ஒரு புதிய துணைக் கோட்டமும் ரூ. 14.40 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டது.

பாசனப் பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ், 1985–86 ஆம் ஆண்டின் குறியீடுகளும், 1985–86-ல் அடைந்த சாதனை களும், 1986–87 ஆம் ஆண்டிற்கான குறியீடுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அளவு : எக்டேரில்)

| வரிசை எண்ணும் பாசன பகுதியின் பெயரும். | 1985–86 குறியீடு. | டிசம்பர் 1985 முடிய சாதனை. | 1986-87-ம் ஆண்டு குறியீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 காவேரி பாசன பகுதி | 21,600 | 20,410 | 21,600 |
| 2 பெரியார் வைகை பகுதி .. .. | 13,000 | 5,691 | 13,000 |
| 3 கீழ்பவானி பகுதி .. | 5,000 | 3,237 | 5,000 |
| 4 சாத்தனூர் பகுதி .. | 2,000 | 1,833 | 3,000 |
| 5 சுழற்சிமுறைப் பாசனம்— | | | |
| (1) காவேரி பாசன பகுதி .. | 1,000 | 1,009 | 1,000 |
| (2) பெரியார் வைகை பகுதி | 1,000 | 1,123 | 1,000 |
| (3) கீழ்பவானி பகுதி | 1,000 | 745 | 1.000 |
| 6 ஏரிப்பாசன மேம்பாட்டுத் திட்டம் (200 ஹெக்டேர் நிலத்திற்கு குறைவாக பாசன வசதியுள்ளவை) (மாவட்டங்கள்: செங்கை, தென்னாற்காடு, வட ஆற்காடு, பசும்பொன்முத்து ராமலிங்கம்). | 3,000 | 273 (பிப்ரவரி 1986 வரை) | 4,000 |
| 7 பரம்பிக்குளம்-ஆளியார் பாசன பகுதி. | .. | தற்போது தொடங்கப் பட்டது. | 10,000 |



சிறப்புத் திட்டங்கள் :

1. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்:

ஊரக மக்களிடையே காணப்படும் வறுமை நிலையை அகற்ற ஏற்படுத்தப்பட்ட பல திட்டங்களில் ''ஊரக நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்'' மிகவும் முக்கிய மானதாகும்.

வேளாண்மைப் பொறியியல் துறையானது, இத்திட்டத்தின் கீழ், மிக அதிக அளவில் கசிவு நீர்க்குட்டைகளை கட்டும் பணியினை ஏற்று செயல்படுத்தி, நிலமற்ற விவசாய வேலை யாட்களுக்கு வேலை அளித்ததோடு, சமுதாயத்திற்கு நிரந்தரமாக உதவும் கட்டுமானங்களை கட்டி முடித்தது. கசிவு நீர்க்குட்டைகளை தகுந்த இடத்தில் அமைப்பதால், நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தவும் நீர் தேக்கங்களிலும் கால்வாய்களிலும் வண்டல் மண் படிவதை தடுக்கவும், வேலை யற்ற காலங்களில், ஊரக மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் ஏதுவாகிறது. இத்திட்டத்தின்கீழ் 1,754 கசிவு நீர்க்குட்டைகளும், தடுப்பணைகளும் ரூ. 14.15 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு, மேற்படி திட்டமானது சென்ற 1985 ஆம் ஆண்டு செப்டம்பரில் முடிவுற்றது.

2. மண் மேடிட்ட நிலங்களை சீரமைத்தல் :

கடந்த நவம்பர் 1985-ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் தமிழ்நாட்டில், தென் ஆற்காடு மற்றும் செங்கல்பட்டு மாவட் டத்தில் பயிர்களும், விளை நிலங்களும் சேதமடைந்தன. மணல் மேடிட்ட விளை நிலங்களை சீரமைக்க, வேளாண்மைப்

பொறியியல் துறையானது ''போர்க் கால அடிப்படையில்'' செயல்பட்டு வருகின்றது. 1985—86-ல் ரூ. 20.25 இலட்சம் செலவில், சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு, இலவசமாகவும், மற்ற விவசாயிகளுக்கு, ஆகும் செலவில் 50 சதவீதம் மானியமாகவும், வழங்கப்படுகிறது. மேலும் அளிக்கப்படும் மானியம் ரூ. 1,500-க்கு மிகாமல் இருக்கும். அதற்கு மிஞ்சி ஏற்படும் செலவினம் மண்வளப் பாதுகாப்பின்கீழ் கடனாக வழங்கப்படும்.

3. புதிய திட்டங்கள் :

1986—87-ஆம் ஆண்டில் இத்துறையின் தலைமையகத்தில் வடிவமைப்பு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும். வேளாண்மைப் பொறியியல் துறையின் உட்கோட்டங்களில் பயன்படுத்துவதற்காக இரண்டு சுமை ஊர்திகளும் வாங்கப்படும்.

மேற்கண்ட திட்டங்களினுடன், கீழ்க்காணும் திட்டங்களிலும் தனிக் கவனம் செலுத்தப்படும்:—

1. காவேரிப் பாசனப் பகுதியில். நெற்கதிர் அடிக்கத் தேவையான களங்கள், வேளாண்மைப் பொறியியல் துறையானது ரூ. 20.00 இலட்சம் செலவில், 100 கதிர் அடிக்கும் களங்களை கட்டவுள்ளது. ஒவ்வொரு களத்தின் மொத்த மதிப்பீடு சுமார் ரூ. 20,000 ஆகும். இப்பணி காவிரி பாசனப் பகுதி திட்டத்தின் பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்தப்படும்.

2. காவேரி, பெரியார், வைகை மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகள் ஒவ்வொன்றிலும் 1,000 ஹெக்டேர் பரப்புகளில் மதகுகள் அடிப்படையில் விவசாயிகளின் நிலப்பரப்பு, நிலத்தன்மை மற்றும் பயிரின் தேவை ஆகியவற்றை கணக்கில் கொண்டு, நீர்ப்பாசனம் செய்ய சுழற்சிப் பாசனத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த 1,000 எக்டேர் பரப்பு பகுதிகளில், ஹெக்டேருக்கு 15 டன் மகசூலுக்கு குறையாமல் விளைவிக்க, தேவையான இடுபொருட்களும், தொழில் நுட்பங்களும் அளிக்கப்படும். தேவையான சான்றிதழ் பெற்ற உயர் விளைச்சல் தரும் விஸதகள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள், வேளாண்மைக்குத் தேவையான இயந்திரங்களை வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். மேலும் நல்ல மகசூல் பெற தேவையான தொழில் நுணுக்கங்களும் அளிக்கப்படும். இந்தப் பகுதிகளுக்கு தேவையான இடுபொருட்களை வேளாண்மைத் துறையிலிருந்து, பெற்றுத்தர வேளாண்மைப் பொறியியல் துறை உதவிடும்.

3. வேளாண்மைப் பொறியியல் துறை காடுகள் வளர்த்திட நீலகிரி மாவட்டத்தில் 400 ஹெக்டேர் பரப்பில் முக்கியமாக பழ மரங்கள் நட தகுந்த இடங்களைத் தேர்வு செய்யும்.





எண்ணெய் வித்துக்கள் துறை.

சமையல் எண்ணெய்களின் தேவையினை ஈடுசெய்யும் வகையில் மொத்த உற்பத்தியினையும் எண்ணெய்வித்துப் பயிர்களின் சாகுபடி பரப்பினை பெருக்கிடுவதையும் குறிக்கோளாக கொண்டு எண்ணெய் வித்துக்கள் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பினை 14.85 இலட்சம் ஹெக்டேரிலிருந்து 17.10 இலட்சம் ஹெக்டேருக்கும் உயர்த்துவதோடு உற்பத்தியினையும் 14.85 இலட்சம் மெ.டன்னிலிருந்து 19.99 இலட்சம் மெ. டன்னுக்கு அதிகரித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1985-86-ம் ஆண்டின் எண்ணெய்வித்துக்களின் சாகுபடி பரப்பளவு உற்பத்தியினை 14.89 இலட்சம் ஹெக்டேருக்கும், எண்ணெய் உற்பத்தியினை 15.55 இலட்சம் மெ. டன்னுக்கும் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இலக்கினை அடைந்திட முக்கியமாக மானாவாரி பயிர்களின் சாகுபடி பரப்பினை நிலைப்படுத்திடவும் இறவை நிலக்கடலை சாகுபடி பரப்பினை அதிகப்படுத்துவதோடு மொத்த உற்பத்தியினை அதிகரித்திட வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் எள் மற்றும் சூரியகாந்தி சாகுபடி பரப்பினில் மாற்றம் இல்லாமல் நிலைப்படுத்திடவும், சோயா மொச்சைப் பயிரினை நஞ்சைத் தரிசில் தனிப் பயிராகவும் கரும்பு, மஞ்சள் பயிர்களில் ஊடுபயிராகவும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தரமான தென்னம்பிள்ளைகளை விநியோகம் செய்வதும் பரிந்துரை முறையான சாகுபடி வழிகளை கடைப்பிடித்திட செய்வதன் மூலம் தற்போதைய தென்னை சாகுபடி பரப்பினை 1.62 இலட்சம் ஹெக்டேருக்கு அதிகப்படுத்திடவும் உற்பத்தியினை 1.64 கோடி தேங்காய் நெற்றுக்களாக உயர்த்தும் குறிக்கோளுடன் தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

1985-86 ஆம் ஆண்டு ''கரிப்'' பருவம் எண்ணெய் வித்துக்களின் சாகுபடிக்குரிய சாதகமான சூழ்நிலைகளுடன் ஆரம்பித்தாலும் இறுதியில் எதிர்பாராமல் ஏற்பட்ட மழை வெள்ளங்களினால் தஞ்சை, தென்னாற்காடு, செங்கை மாவட்டங்களில் அறுவடைக்குத் தயாராக இருந்த நிலக்கடலை பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது. ''ராபி'' பருவம் எண்ணெய்வித்துப் பயிர் களின் சாகுபடிக்கு பொதுவாக சாதகமாக இருந்து வருகிறது.

1985–86 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டமும், எதிர் பார்க்கப்படும் சாதனைகளும், 1986–87 ஆம் ஆண்டிற்கான திட்டமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

பரப்பு: இலட்சம் ஹெக்டேரில்
உற்பத்தி: இலட்சம் டன்களில்

| பயிர் | 1985-86 இலக்கு பரப்பு | 1985-86 எதிர் நோக்கும் சாதனை. | 1985-86 உற்பத்தி இலக்கு | 1985-86 உற்பத்தி எதிர் நோக்கும் சாதனை. | 1986-87 இலக்கு பரப்பு | 1986-87 இலக்கு உற்பத்தி |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| நிலக்கடலை .. | 11.82 | 11.82 | 14.11 | 14.11 | 11·99 | 14.95 |
| எள் .. | 1.60 | 1.60 | 0.68 | 0.68 | 1.60 | 0.79 |
| சூரியகாந்தி .. | 1.28 | 1.28 | 0.67 | 0.67 | 1.32 | 0.92 |
| ஆமணக்கு .. | 0.19 | 0.24 | 0.09 | 0.12 | 0.21 | 0.34 |
| மொத்தம் .. | 14.89 | 14.94 | 15.55 | 15.58 | 15.12 | 17.00 |
| தென்னை .. | 1.62 | 1,62 | 1.64 | 1.64 | 1,70 | 1.72 |
| | | | (கோடி நெற்றுக்கள்) | | | (கோடி நெற்றுக்கள்) |



**விதை விநியோகம்:**

1981–82 வரை நிலக்கடலை மொத்த சாகுபடியில் 2 விழுக்காடு பரப்பிற்கு மட்டுமே தரமான விதைகளை விநியோகம் செய்துவந்த குறிக்கோள் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வந்துள்ளது. 1985–86 ஆம் ஆண்டு நிலக்கடலைக்கு 5 விழுக்காடாகவும், எள் சாகுபடியில் 15 விழுக்காடு, சூரியகாந்தியில் 50 விழுக்காடு, ஆமணக்கில் 30 விழுக்காடு தரமான விதைகள் வழங்கப்பட்டுள்ளது. இதே செயல் திட்டம் 1986-87 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடைப்பிடித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சான்று பெற்ற விதைகள் உற்பத்தியினை கணிசமாக அதிகரிப்பதன் மூலமாக நிலக்கடலையில் 5 விழுக்காடு பரப்புக்கு தரமான விதை விநியோகம் செய்யும் இலக்கு நிறைவேற்றப்படும். 1986-87–ல் 600 மெ.டன். சான்று பெற்ற விதைகள் உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. கருவித்துக்கள், ஆதாரவித்துக்கள் உற்பத்தி செய்திட முரசவாக்கம் மற்றும் நெய்வேலி பண்ணையில் 12.50 எக்டேர் நிலத்தில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தொழில் நுணுக்க மேற்பார்வையுடன் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்:**

தமிழகத்தில் சுமார் 70 முதல் 80 விழுக்காடு எண்ணெய் வித்து பயிர்களை மானாவாரியாகவே சாகுபடி செய்யப்படுவதால் மானாவாரி சாகுபடி மேம்பாட்டு உத்திகளை கடைப்பிடிப்பதை வலியுறுத்தி அதன் மூலம் 1986–87-ல் மானாவாரி பயிரின் உற்பத்தியை அதிகப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி வேளாண்மை பெருமக்களுக்கு நிலக்கடலைக்குத் தேவையான இடுபொருள்களான ஜிப்சம், ரைசோபியம். நுண்ணூட்டச் சத்து, எள் பயிருக்குத் தேவையான மாங்கனீஸ் சல்பேட் அசோஸ்பைரில்லம் ஆகியவைகளை மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மூலம் மான்ய விலையில் அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய உதவியின்கீழ் உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளுக்கு வழங்கப்படும் மான்யம் தொடர்ந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. எள் மகசூலை அதிகப்படுத்திட தரமான விதைகளை வழங்கி கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை கடைப்பிடித்து பெருவிளக்கப்பண்ணைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சூரியகாந்தி உற்பத்தியினை பெருக்கிட வழங்கப்பட்ட சூரியகாந்தி உயரிய வித்துக்கள் உழவர்களை, குறிப்பாக தென்மாவட்ட உழவர்களை பெரிதும் கவர்ந்துள்ளது. 1985-86-ல் 200

குவிண்டால் சூரியகாந்தி உயரிய வித்துக்கள் வழங்கப்பட்டுள்ளது. 1986–87-ல் 303 குவிண்டால் உயரிய வித்துக்கள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

தென்னை அபிவிருத்தித் திட்டங்கள்:

தமிழகத்தில் தென்னையைப் பொறுத்தவரை தற்போது 1.62 இலட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு 164 கோடி நெற்றுக் கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1985–86-ல் 30.25 இலட்சம் நெட்டை தென்னம்பிள்ளைகளும் 5.95 இலட்சம் நெட்டை குட்டை வீரிய ஒட்டு தென்னம்பிள்ளைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

1986–87-ல் சாகுபடி பரப்பினை 1.70 இலட்சம் எக்டேருக்கு உயர்த்திடவும் உற்பத்தியினை 1.72 கோடி நெற்றுக்களாக அதிகரித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இலக்கினை அடைந்திட தரமான நெட்டை தென்னம்பிள்ளைகளையும் நெட்டை குட்டை மற்றும் குட்டை நெட்டை வீரிய ஒட்டு தென்னம்பிள்ளைகளையும் அரசு தென்னை நாற்றுப் பண்ணை களில் உற்பத்தி செய்து 30.25 இலட்சம் நெட்டை தென்னம் பிள்ளைகளும், 5.75 இலட்சம் நெட்டை குட்டை தென்னம் பிள்ளைகளும், 0.20 இலட்சம் குட்டை நெட்டை தென்னம் பிள்ளைகளும் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. பயிர் பாது காப்பு மற்றும் உரமிடும் பணிகளை விரிவுபடுத்துவதன் மூலம் தென்னை உற்பத்தியினை கூடுதலாக்கிடவும் திட்டமிடப் பட்டுள்ளது. இயற்கை இன விரோதிகளை அபிவிருத்தி செய்து வினியோகம் செய்வதன் மூலம் கருந்தலைப் புழு மற்றும் காண்டாமிருக வண்டு ஆகிய பூச்சிகளின் இனப்பெருக்கத்தினை மட்டுப்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. வாடல் நோய் பாதிக்கப்பட்ட (10,000) மரங்களை அழிக்கும் பணி 1985–86-ம் ஆண்டில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இது 1986–87-ம் ஆண்டும் தொடர்ந்து நீடிக்கப்படும்.

வெள்ள நிவாரணப் பணிகள்:

1985 நவம்பரில் ஏற்பட்ட பெருமழை வெள்ளம் பயிர்களுக்கு பெருத்த சேதத்தினை ஏற்படுத்தி உள்ளது. அதிலும் குறிப்பாக தஞ்சை, தென்னாற்காடு, செங்கை மாவட்டங்களில் நிலக்கடலை பயிருக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. இதைத் தவிர புதிதாக நடப்பட்ட தென்னம்பிள்ளைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டதோடு புயல் காற்றினால் தென்னை மரங்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்டுள்ளன.

இந்த வெள்ளத்தினால் ஏற்பட்ட இழப்பினை ஈடுகட்டிட அரசு சுமார் 10.00 இலட்சம் ரூபாய்க்கு சிறு/குறு விவசாயி களுக்கு இனாமாக நிலக்கடலை விதை மற்றும் தென்னம்பிள்ளை கள் வழங்கியுள்ளது.



தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள்:

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை மேம்படுத்தும் நோக்குடன் தோட்டக்கலைத் துறையால் கீழ்க்குறிப்பிட்ட பணி கள் செய்யப்பட்டு வருகின்றன:—

1. தரமான செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகம்.
2. பல்வகைப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
3. மாவட்டங்களில் தீவிர தோட்டக்கலை மேம்பாடு.
4. மலைப்பகுதிகளில் தோட்டக்கலை அபிவிருத்தி.
5. மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாடு.
6. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாடு.
7. தோட்டக்கலையில் செயல்முறை பயிற்சி அளித்தல்.

1. தரமான செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகம்:

தோட்டக்கலை தொழிலமைப்பை நிலைப்படுத்தி உழவர் தம் வாழ்வும், நாட்டின் வளமும் சிறந்தோங்கிட அடிப்படையான தரமான தோட்டக்கலை நடவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் பணியில் 54 தோட்டக்கலை பண்ணைகள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. பழப்பயிர்களின் நடவுப் பொருட்கள் 1985–86 ஆம் ஆண்டில் 30 இலட்சம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது. இந்நிலை 1986–87 ஆம் ஆண்டில் 35 இலட்சங்களாக உயர்த்தப்படும்.

2 பல்வகைப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்:

2.1. வாழை:

நவ்லாக் மற்றும் முதலைப்பட்டியில் உள்ள உயரிய வாழைத் தோட்டங்களில் தரமான வாழைக் கன்றுகள் உற்பத்தி செய்யப் படுகின்றன. முடிக்கொத்து நோய் தாக்காத வாழைக் கன்றுகள் சின்ன கல்ராயன் மலையில் உள்ள உயரிய வாழைத் தோட்டத் தில் உற்பத்தி செய்யப்படுகிறது. உயரிய வாழைக் கன்றுகள்

1985–86 ஆம் ஆண்டில் 3.25 இலட்சம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இப்பணி 1986–87 ஆம் ஆண்டில் 3.30 இலட்சம் அளவில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும். உற்பத்தி திறனை அதிகரித்திட ஏதுவாக இலைப் புள்ளி நோய்க்கு எதிராக பயிர் பாதுகாப்பு 2,000 எக்டேரிலும், நூற் புழுத் தாக்குதலை தவிர்த்திட, கன்றுகள் முன்செய் நேர்த்தி 300 எக்டேரிலும், 1985–86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டில், இப்பணிகள் முறையே 2,200 எக்டேரிலும், 300 எக்டேரிலும் மேற்கொள்ளப்படும். அத்துடன் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நுட்பத்தினை 56 செயல் விளக்கங்கள் மூலம் எடுத்துக் காட்டப்படும்.

2,2, மா:

1985–86 ஆம் ஆண்டில் 1.40 இலட்சம் 'மா' ஒட்டுச் செடிகள் விநியோகிக்கப்பட்டன. தரமான 'மா' ஒட்டுச் செடிகள் 1986–87 ஆம் ஆண்டில் 2.75 இலட்சம் எண்கள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும். 'மா' வில் தற்போதைய உற்பத்தித் திறனை அதிகரித்திட ஏதுவாகவும், பழங்களை செவ்வனே பாதுகாத்து நல்ல விலைக்கு விற்பனை செய்யும் நோக்குடனும் 'நபார்டு' உதவியுடன் தர்மபுரி மாவட்டத்தில் 'மா' மேம்பாட்டு திட்டம் 400 எக்டேரில் நன்கு செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மா தண்டு துளைப்பான் மற்றும் தத்துப் பூச்சிக்கு எதிராக பயிர் பாதுகாப்பு, தருமபுரி மாவட்டத்தில் 5,000 எக்டேரில் 1985–86 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

2,3, எலுமிச்சை:

நச்சுரி நோய் தாக்குதலால் எலுமிச்சை சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையைப் போக்கிட ஏதுவாக, இந்நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட எலுமிச்சை செடிகள் வெப்பப் பிராந்திய பழப் பண்ணை குடுமியான்மலையில் ஆண்டு தோறும் ஒரு இலட்சம் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இத்திட்டம் 1986–87-ல் தொடர்ந்து செயல்படும்.

2,4 கமலா ஆரஞ்சு:

மலை வாழை முடிக்கொத்து நோயால் கீழ் பழனி மலைப் பகுதிகளில், அழிவுற்ற பகுதிகளில் கமலா ஆரஞ்சு சாகுபடியினை புகுத்தும் நோக்குடன், 75 எக்டேர் பரப்பளவு கூடுதலாக இப்பயிர் சாகுபடியின்கீழ் கொண்டுவர ஏதுவாக, நாற்றுகள்



விநியோகிக்கப்படுகின்றன. 1985–86-ல் 0.25 இலட்சம் செடிகள்
விநியோகிக்கப்பட்டன. 1986–87-ல் 0.30 இலட்சம் செடிகள்
விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2.5. அன்னாசி :

அதிக மகசூல் தரவல்ல 'கியூ' இரக அன்னாசி நாற்றுக்கள்,
கொல்லிமலை மற்றும் பேச்சிப்பாறை ஆகிய இடங்களில் உள்ள
நாற்றங்கால்களிலிருந்து 1985–86 ஆம் ஆண்டில் 4.00 இலட்சம்
நாற்றங்கால்களிலிருந்து விநியோகிக்கப்பட்டது. 4.50 இலட்சம
உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. 4.50 இலட்சம
உற்பத்தி செய்யப்பட்டு ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டு
அளவில் 1986–87 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டு
விநியோகிக்கப்படும்.

2.6. சீமைஇலந்தை, சீதா, மாதுளை :

சீமை இலந்தை,
வறட்சியைத் தாங்கவல்ல பழச் செடிகளான சீமை இலந்தை,
சீதா, மாதுளை, விளாம்பழம், நெல்லி போன்றவற்றை பெரு
அளவில் சாகுபடிக்கு புகுத்தும் நோக்குடன் இவற்றின் நடவுப்
பொருட்கள் அதிக அளவில் விநியோகம் செய்யப்படுகின்றன.

(அ) காய்கறிகள் :

2.7. விவசாயிகளின் சான்றிதழ் பெற்ற காய்கறி விதை
களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், காய்கறி விதைப்
பண்ணைகள் தனியார் தோட்டங்களில் அமைக்கப்பட்டு தரமான
காய்கறி விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்
படுகின்றன. குன்னூர் மற்றும் சின்னகல்ராயன் மலைப்
பகுதிகளில் உள்ள காய்கறி விதை உற்பத்தி மையங்களிலிருந்து
1985–86 ஆம் ஆண்டில் 5 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்
பட்டது. 1986–87 ஆம் ஆண்டில் 6 மெட்ரிக் டன் அளவில்
சான்றிதழ் சாய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்படும்.

2.8. காய்கறி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 80 மெட்ரிக்
டன் காய்கறி விதைகளும், 10 இலட்சம் காய்கறி நாற்றுக்களும்,
15 மெட்ரிக் டன் நுண்ணூட்டச் சத்தும், உழவர்கட்கு விநியோகிக்
கப்பட்டதுடன், 120 செயல் விளக்கப் பாத்திகளும் 1985–86-ல்
அமைக்கப்பட்டது. இப்பணிகள் 1986–87 ஆம் ஆண்டில்
தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதுடன் காய்கறி விதை
விநியோகம் 85 மெட்ரிக் டன்களாக உயர்த்தப்படும்.

2.9. நகர காய்கறி அபிவிருத்தி திட்டமானது, சென்னை,
வேலூர், திருச்சி மற்றும் மதுரை நகரங்களில் வீட்டுக் காய்கறி
தோட்டம் அமைத்தலை ஊக்குவிக்கும் நோக்குடன் செயல்
படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 6.70 மெட்ரிக் டன்

[1986 ஏப்ரல் 1

காய்கறி விதைகளும் 8 இலட்சம் காய்கறி நாற்றுக்களும், 4.50
இலட்சம் பழச் செடிகளும், 99 மெட்ரிக் டன் உரங்களும்,
24.5 மெட்ரிக் டன் தூள் மற்றும் 880 லிட்டர் திரவ பயிர்
பாதுகாப்பு மருந்துகளும் 1985-86 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்
பட்டது. இது 1986-87 ஆம் ஆண்டில் முறையே 7 மெட்ரிக்
டன் 8 இலட்சம் 4.75 இலட்சம், 100 மெட்ரிக் டன் 25
மெட்ரிக் டன் மற்றும் 900 லிட்டராக அதிகரிக்கப்படும்.

2.10 இரண்டு இலட்சம் ரூ. மதிப்புள்ள வீரிய ஒட்டு இரக
காய்கறி விதைகள் 25 விழுக்காடு விலையில் உழவர்கட்கு
1985-86 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டது போல் 1986-87
ஆம் ஆண்டிலும் தொடர்ந்து விநியோகம் செய்யப்படும் மேலும்,
மதுரை நகரின் காய்கறி தேவையை பூர்த்தி செய்திட ஏதுவாக,
பெரியார்-வைகை பாசன திட்டப் பகுதிகளில், காய்கறி சாகு
படியினை அதிகரித்திட பணிகள் மேற்கொள்ளப்படும். உருளைக்
கிழங்கு உற்பத்திப் பரப்பளவை தொடர்ந்து அதிகரிக்கும் நோக்
கத்துடன் ஆண்டுதோறும் 575 மெட்ரிக் டன் தரமான உருளைக்
கிழங்கு விதைகள் கொடைக்கானல் மற்றும் ஒசூர் பகுதிகளில்
விநியோகம் செய்யப்படுகின்றன.

2. வாசனைத் திரவியம் மற்றும் மலைப் பயிர்கள்:

2.11. மிளகு :

வீரிய ஒட்டு மிளகு-பன்னியூர்-1 மற்றும் இதர இரகங்களில்
வேர் பிடித்த குச்சிகள் 1985-86 ஆம் ஆண்டில் பேச்சிப்பாறை
மற்றும் கூடலூரில் உள்ள நாற்றங்கால்களிலிருந்து 4.00 இலட்சம்
அளவில் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வுற்பத்தியளவு,
1986-87-ல் 4.85 இலட்சமாக உயர்த்தப்பட்டு மலை பகுதி
களில் வாழும் உழவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

2.12. முந்திரி :

தமிழ்நாட்டில் முந்திரி உற்பத்தித் திறனை அதிகரிக்கும்
நோக்குடன் கட்டுக்கோப்பு சாகுபடி முறையினை காலத்தே மேற்
கொள்வதன் அவசியத்தை எடுத்துணர்த்தும் பொருட்டு 350
செயல் விளக்கங்களும், 3.20 எக்டேர் பரப்பில் விதையில்லா
இனப்பெருக்க மையமும் தோட்டக்கலைப் பண்ணைகளில்
1985-86 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர,
2,200 வின் பதியம் மற்றும் இதர வகை விதையில்லா இனப்
பெருக்க செடிகளும் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும்.
தேயிலைக் கொசு தாக்குதலுக்கு எதிராக பயிர்ப் பாதுகாப்பு
1,500 எக்டேரிலும் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகள் யாவும்
1986-87 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்படும்.



1986 ஏப்ரல் 1]

2.13. காபி :

கிழக்கு மலைத் தொடர்ச்சி பகுதிகளிலும் காபி பயிரினை
அதிகம் புகுத்தும் நோக்குடன், சின்னகால்ராயன் மலையில்
100 எக்டேர் பரப்பில் மாதிரி காப்பித் தோட்டம் அமைக்கும்
பணி நடைபெற்று வருகிறது. 1986-87 ஆம் ஆண்டில்
4 இலட்சம் காப்பி நாற்றுகள் விநியோகிக்கப்படும்.

2.14. வெற்றிலை :

1985-86 ஆம் ஆண்டில் வெற்றிலை வாடல் நோயை கட்டுப்
படுத்தும் நோக்குடன், கோவை, சேலம், திருச்சி, மதுரை மற்றும்
திருநெல்வேலி மாவட்டங்களில் பயிர்ப்பாதுகாப்பு பணி 75
எக்டேரிலும் மேற்கொள்ளப்பட்டது. 20 செயல் விளக்கப் பாத்தி
களும் 1985-86ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணி
கள் 80 எக்டேராகவும் 25 எண்ணாகவும் 1986-87 ஆம்
ஆண்டில் உயர்த்தப்படும்.

2.15

பல்வகைப்பட்ட மலைப் பயிர்களின் வளத்தை மேம்படுத்தும்
வண்ணம், வளமுள்ள பகுதிகளில் தெரிவு செய்யப்படுவதுடன்,
500 எக்டேர் நிலப்பரப்பு கூடுதல் சாகுபடியின் கீழ் கொண்டு
வர இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.
1985-86 ஆம் ஆண்டில் மலைப் பயிர்களின் கீழ் 500 எக்டேர்
கொண்டு வரப்பட்டது.

2.16 மலர் மேம்பாடு :

மல்லிகை, கனகாம்பரம், ரோசா, நிலச் சம்பங்கி, சாமந்தி
போன்ற மலர்கள் சாகுபடியினை அதிகரித்திட ஏதுவாக இடு
பொருட்கள் 32 எக்டேர் பரப்பிற்கு மானிய விலையில் வழங்கப்
படுகின்றன. ஆண்டுதோறும் அலங்கார செடிகளின் விதை
பொட்டலங்கள் 5,000 எண்ணிக்கைகளும், அலங்கார செடிகள்
5000 எண்ணிக்கைகளும் விநியோகிக்கப்படுவதுடன், 10 தோட்
டக்கலை கண்காட்சிகளும், 50 செயல் விளக்கங்களும் அமைக்
கப்படுகின்றன.

3. மாவட்டங்களில் தீவிர தோட்டக்கலை மேம்பாடு :

குறைந்த வருவாய் தரவல்ல பயிர்கள் சாகுபடி பகுதிகளை
அதிக வருவாய் ஈட்டவல்ல தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியின்
கீழ் பயிர்மாற்றுத் திட்ட அடிப்படையில் கொண்டுவரும் நோக்கு
டன், தீவிர தோட்டக்கலை அபிவிருத்தி பணிகள், வட ஆற்காடு,
தஞ்சாவூர், திருச்சி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில்
1985-86 ஆம் ஆண்டில் காய்கறி
மேற்கொள்ளப்படுகின்றன.

விதைகள், செடிகள் மற்றும் இதர இடு பொருட்கள் 14,000
எக்டேருக்கு விநியோகிக்கப்பட்டது. இது 1986-87 ஆம் ஆண்டில்
14,500 எக்டேராக உயர்த்தப்படும்.

4. மலைப் பகுதிகளில் தோட்டக்கலை அபிவிருத்தி :

கோவை, பெரியார், சேலம், தர்மபுரி, வட ஆற்காடு,
திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்
களில் உள்ள மலைப் பகுதிகளில் தோட்டக்கலை பயிர்களின்
வளத்தை மேம்படுத்தும் நோக்குடன், இடுபொருட்கள் மானிய
விலையில் வழங்கப்பட்டு கூடுதல் சாகுபடிக்கு வழிவகை செய்யப்
படுகிறது. வருடாந்திர மற்றும் நிரந்தர தோட்டக்கலைப்
பயிர்களின் கீழ ஆண்டுதோறும் 3,500 எக்டேர் சாகுபடிக்கு
கொண்டு வரப்படுகிறது.

நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மலைப்பகுதி
மேம்பாடு திட்டமானது நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாடு
அடிப்படையில் செயல் படுத்தப்படுகிறன. மண்வளப் பாதுகாப்பு
பணி 1,200 எக்டேரிலும் தேயிலை தோட்டங்களில்
பயிர் பாதுகாப்பு 8,000 எக்டேரிலும் மேற்கொளைப்
படுவதுடன், 90 இலட்சம் தேயிலை பதியன்களும் 250 மெட்ரிக்
டன் தரமான விதை உருளைக் கிழங்குகளும் 1985-86 ஆம்
ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டது. இப்பணிகள் 1986-87 ஆம்
ஆண்டில் பின்வருமாறு மேற்கொள்ளப்படும். 1200 எக்டேரில்
மண்வளப் பாதுகாப்பு பணி 10,000 எக்டேரில் தேயிலைத்
தோட்டங்களில் பயிர் பாதுகாப்பு 75 இலட்சம் தேயிலை
பதியன்கள் உற்பத்தி மற்றும் விநியோகம், 250 மெட்ரிக் டன்
தரமான விதை உருளைக் கிழங்கு உற்பத்தி மற்றும் விநியோகம்.

தோட்டக்கலை விரிவாக்கப் பணிகளைத் திருத்தி அமைத்தல்:

நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பணிகள் பயிற்சி
வழி தொடர்பு திட்டத்தின் கீழ் திருத்தியமைக்கப்பட்டு, உழவர்
கட்கு அதிக அளவில் பயனளிக்கும் வகையில் விரிவாக்கப்பணி
மேற்கொள்ளப்படுகிறது. கொடைக்கானல் மலைப் பகுதிகளில்
பயிற்சி வழி தொடர்புத் திட்டம் தோட்டக்கலை பணியாளர்
களால் செயல்படுத்தப்படுகிறது.

5. மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம்:

திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மித
வெப்ப மண்டல பழங்கள் மற்றும் வாசனைத் திரவிய பயிர்களின்
சாகுபடியினை மேம்படுத்தும் நோக்குடன் ஆண்டுதோறும்
800 எக்டேர் பரப்பிற்கு இடுபொருட்கள் மானிய விலையில்
வழங்கப்படுகின்றன. மதுரை மாவட்டம் மலை அடிவாரப்
பகுதிகளிலும், காமராஜர் மாவட்டத்திலுள்ள அர்ஜுனா நதி



நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும், 450 ஹெக்டேரில் தோட்டக்கலை
பயிர்களின் வளத்தை மேம்படுத்தும் பணிகள் ஆண்டுதோறும்
மேற்கொள்ளப்படுகின்றன.

கோவை மாவட்டத்திலும், மேற்கு மலைத் தொடர்ச்சி பகுதி
களில் தோட்டக்கலை மேம்பாட்டிற்கு ஏதுவாக இத்திட்டம் விரி
வாக்கப்பட்டு 1985-86 ஆம் ஆண்டில் 10 ஹெக்டேரில் தோட்டக்
கலை விரிவாக்கப்பணி மேற்கொள்ளப்பட்டது. இது 1986-87 ஆம்
ஆண்டில் 80 எக்டேராக அதிகரிக்கப்படும்.

6. ஒருங்கிணைந்த ஆதிவாசிகள் மேம்பாட்டுத் திட்டம்:

ஐந்து மாவட்டங்களிலுள்ள பதினைந்து ஆதிவாசிகள் பகுதி
களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தரமான விதைகள்,
பழச்செடிகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மானிய
விலையில் 3,000 ஆதிவாசிகள் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்
படுகின்றன. சின்னகல்ராயன்மலை மற்றும் தகரக்குப்பம் ஆகிய
இடங்களில் உள்ள மாபெரும் பழப்பண்ணைகள் முழு அளவில்
செயல்படும்போது இம்மலைவாழ் ஆதிவாசிகளுக்கு இவை செயல்
விளக்கங்களாக அமைவதுடன், வேலை வாய்ப்பினையும் நல்கும்.
பச்சைமலையில் தோட்டக்கலைப் பண்ணை ஒன்று 1986-87 ஆம்
ஆண்டில் சுமார் 10 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்கப்பெறும்.

7. தோட்டக் கலையில் செயல்முறைப் பயிற்சி அளித்தல்:

இத்துறையில் பணியாற்றும் களப்பணியாளர்கட்கு, தொழில்
நுட்ப பயிற்சி, குடுமியான்மலையில் உள்ள மத்திய தோட்டக்
கலை பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. தோட்டக்
கலையில் செயல்முறை பயிற்சியானது, இரண்டாண்டு பட்டயப்
பயிற்சியும், ஓராண்டு மற்றும் ஆறுமாத கால சான்றிதழ்
பயிற்சியும் தரமணியில் அமைந்துள்ள தோட்டக்கலைப் பயிற்சி
நிலையத்தில் அளிக்கப்படுகின்றன.

மூன்றாவது தமிழ்நாடு 'மா' கண்காட்சி ஜூன் 85-ல் சேலத்தில்
நடத்தப்பட்டது. 'கோகோ', 'மா' மற்றும் திராட்சை பற்றிய
கருத்தரங்குகளும் இத்துறையால் 1985-86ல் நடத்தப்பட்டது.
1986-87 ஆம் ஆண்டில் நான்காவது தமிழ்நாடு 'மா' கண்
காட்சியினை மதுரையில் நடத்திடவும் மூன்று தோட்டக்கலை
பயிர்கள் பற்றிய கருத்தரங்குகளை நிகழ்த்திடவும் உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

தோட்டக்கலை பயிர்கட்கு சொட்டு நீர்பாசனத்தை அமைப்
பதன் முக்கியத்துவத்தை உழவர்கட்கு எடுத்தியம்பும் நோக்குடன்
1986-87 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர், அண்ணா, தருமபுரி
மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மைய அரசு நிதி உதவி
யுடன் அமைத்துக் கொடுத்திட திட்டம் முன் மொழியப்பட்
டுள்ளது.

## விதைச் சான்றளிப்பு.

உயர் விளைச்சல் காண்பதற்கு தரமான விதைகள் மிகவும் அவசியமென்பதை உழவர்கள் பெரிதும் உணர்ந்துள்ளதால், நம்து மாநிலத்தில் தரமான விதைகளின் தேவை சீராக அதிகரித்து வருகின்றது. சான்றளிக்கப்பட்ட தரமான விதை உற்பத்தியை உறுதி செய்யும் பொருட்டு, விதை சான்றளிப்புத் துறை 1966ஆம் ஆண்டு மத்திய விதைச் சட்டம் மற்றும் 1966ஆம் ஆண்டு விதிகளின்படி விதை சான்றளிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. உழவர்களது வெற்றிகரமான பயிர் உற்பத்திக்கு தரம் உயர்ந்த விதைகளைக் கொடுக்க வேண்டுமென்றால், உயரிய தரமான விதைகளைத் தெரிந்தெடுப்பது முதல் சுத்திகரிக்கப்பட்ட விதைகளை உற்பத்திக்காக விநியோகம் செய்யும் வரை தரக்கட்டுப்பாட்டுப் பணிகள் மிகவும் அவசியமாகின்றன. விதைச் சான்றளிப்புத்துறை தரமான விதை உற்பத்தியையும் விநியோகத்தையும் சட்ட திட்ட முறைகளுக்கொப்ப வலியுறுத்துகின்றது.

விதைச் சான்றளிப்பின் கீழ் 1985-86ஆம் ஆண்டு 34,375 ஏக்கர் பயிர்கள் சான்றளிப்புக்குப் பதிவு செய்யப்பட்டது, இத்திட்டத்தின்படி 12,?80 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது.

1986-87ஆம் ஆண்டில் 57,175 ஏக்கர் விதைச்சான்றளிப்புக்காக பதிவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியினை வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, எண்ணெய்வித்துத்துறை மற்றும் பிற நிறுவனங்களின் விதை உற்பத்தித் திட்டங்களுக்கு ஏற்ப இத்துறையும். சான்றளிப்பு செய்திட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

விதைப்புத் தன்மை, தூய்மை. தரமான விதைகளை அறிவியல் நுட்ப அடிப்படையில் . உற்பத்தி செய்வது, சுத்தம் செய்தல், சேமித்து வைத்தல் போன்றவை பற்றி விவசாயத்துறை அலுவலர்களுக்கும் விதைப் பண்ணையில் விதை உற்பத்தி செய்பவர்களுக்கும் பயிற்சி அளிக்க ஒரு பயிற்சி நிலையம் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1980-81 ஆம் ஆண்டில், வீரிய ஒட்டுப் பருத்தி விதையில் உற்பத்தியின் பரப்பளவு 140 ஏக்கர் மட்டுமே இருந்தது. 1985 ஆம் ஆண்டில் 775 ஏக்கர் வீரிய ஒட்டுப் பருத்தி உற்பத்தியின் கீழ் சான்றளிப்புக்குப் பதிவு செய்யப்பட்டது. இதன் பயனாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பண்ணை தொழிலாளர்களுக்கு இரண்டு இலட்ச மனித நாட்களுக்கு கூடுதலாக வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வீரிய ஒட்டுப் பருத்தி விதை உற்பத்தி அதிகரிப்பினால், தமிழகத்தின் தேவையை நிறைவு செய்த பின் ஆந்திரா, மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களின்





விதை தேவைக்கும் அனுப்ப முடிகிறது. 1986–87-ல் 875 ஏக்கரில் வீரிய ஒட்டுப் பருத்தி உற்பத்தித் திட்டம் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

வீரிய ஒட்டு விதை பரிசோதனையை துரிதப்படுத்த அனுசரணையாக இருக்கும் பொருட்டு ஒரு கண்ணாடி ஆய்வகம் அமைக்க 5 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டடம் கட்டப்பட்டு அது முடியும் தருவாயில் இருக்கிறது.

## விதை ஆய்வு.

தரமான விதைகள் விநியோகிப்பதை கண்காணிக்க தனித்து இயங்கக்கூடிய விதை ஆய்வகம், 1981 முதல் விதைச் சான்று இயக்கத்தில் பணிபுரிவதுடன் விதைச் சட்டத்தை அமுல்படுத்தி போலி விதைகள் விற்பதைத் தடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விதைச் சான்று மற்றும் விதை ஆய்வகப் பணிகளுக்கு உதவியாக கோயம்புத்தூர், மதுரை மற்றும் குடுமியான்மலை ஆகிய மூன்று இடங்களில் அறிவிக்கப்பட்ட விதை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

1985–86 ஆம் ஆண்டில் (1986 பிப்ரவரி வரை) 4,878 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. இது தவிர 6,432 விதை விற்பனை இடங்கள் இவ்வியக்கத்தினால் ஆய்வு செய்யப்பட்டது.

1986–87-ல் 5,800 விதை மாதிரிகள் எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## வேளாண்மை விளைபொருள் விற்பனைத் துறை.

வேளாண்மை விளைபொருள் விற்பனைத்துறை கீழ்க்கண்ட பணிகளை செயல்படுத்துகிறது:—

1. விற்பனைக்குழுக்கள் மூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்தலும் நிர்வகித்தலும்.
2. அக்மார்க் தரக்கட்டுப்பாடு.
3. பருத்தி தரம் பிரித்தல்.
4. வணிகமுறை தரம் பிரித்தல்.
5. பயிற்சி.
6. பருத்தி சான்றுரையும் சட்ட அமுலும்.

[1986 ஏப்ரல் 1

1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் :

வேளாண் பெருமக்களுக்கு தங்களின் விளை பொருட்களுக்கு உரிய நல்ல விலை பெற்றுத்தரும் நோக்கத்துடன் தமிழகத்தில் 13 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 269 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. பெரியார் மாவட்டத்திற்காக அண்மையில் ஒரு விற்பனைக்குழு அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

1985–86-ல் (பிப்ரவரி 1986 வரை) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வந்த வேளாண்மை விளைபொருள் வரத்தும் விற்பனைக் குழுக்களின் வருமானமும் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| வரத்துக்கள் | .. 5,02,000 மெட்ரிக் டன். |
| வருமானம் | .. ரூ. 393.25 லட்சம். |

விற்பனைக் குழுவின் செயற்திறனை விரிவாக்கும் பொருட்டு மூன்று ஆண்டு வளர்ச்சித் திட்டம் ஒன்று விற்பனைக் குழுக்களின் நிதியிலிருந்து செயல்படுத்த உருவாக்கப்பட்டுள்ளது. இது தவிர, பெரிய நகரங்களில் காய், கனிக்காக தனியாக விற்பனைக் கூடங்களை மத்திய மான்யம் பெற்று அமைக்க தீர்மானிக்கப் பட்டுள்ளது. இத்தகைய விற்பனைக் கூடங்களில் குளிர்பதன சேமிப்புக் கூடங்களும், சுகாதார வசதிகளும் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகள், தங்கள் விளை பொருட்களை குறைவான விலையில் விற்பனை செய்யும் சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு மத்திய–மாநில அரசுகளின் உதவியுடன் 89 ஊரகக் கிட்டங்கிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. 1986-87-ல் மேலும் 15 ஊரகக் கிட்டங்கிகள் கட்டி முடிக்கப்படும். இந்த ஊரகக் கிட்டங்கிகள் சிறு மற்றும் குறு விவசாயிகளின் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும்.

2. அக்மார்க் தரம் பிரிப்பு :

இத்திட்டத்தின்கீழ் 36 தரம் பிரிப்பு ஆய்வுக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இவை சமையல் எண்ணெய்கள், நெய், தேன், மசாலாபொருட்கள், ஆகியவற்றை தரம் பிரித்து அவற்றின் தூய்மையையும் தரத்தையும் நிர்ணயிக்கின்றன. இவற்றைத் தவிர. அரிசி, பருப்பு, பழங்கள், முட்டை, மஞ்சள், வெல்லம், பாக்கு முதலியனவும் அக்மார்க் முறையில் தரம் பிரிக்கப் படுகின்றன. 1985–86-ல் (பிப்ரவரி 1986 முடிய) 4,58,139 குவிண்டால் உணவுப் பொருட்கள் இவ்வாறு தரம் பிரிக்கப் பட்டுள்ளன.

பதினோரு இடங்களில் அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் சொந்தக் கட்டடங்களில் செயல்படுகின்றன. 1985-86 ஆம் ஆண்டு பல்லடம் ஆய்வுக் கூடத்திற்கு கட்டிடம் கட்டும் பணி மேற்



1986 ஏப்ரல் 1]

கொள்ளப்பட்டு வருகிறது. 1986–87-ல் மேலும் 3 அக்மார்க் ஆய்வுக் கூடங்களுக்கு கட்டடங்கள் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது.

மத்திய அரசினரால் புது டெல்லியில் ஜனவரித் திங்கள் 15-ல் நடைபெற்ற மத்திய வேளாண்மை விற்பனை மற்றும் ஆய்வுத் துறையின் பொன் விழாவில் அகில இந்திய அளவில் தமிழ் நாட்டிற்கு தரம் பிரித்தலில் இரண்டாவது பரிசாக கேடயம் கொடுக்கப்பட்டது.

3. பருத்தி தரம் பிரிப்பு:

தற்போது பதினோரு பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்கள் விற்பனைக் கூடத்திற்கு விற்பனைக்கு வரும் பருத்தியை தரம் பிரிப்பு செய்வதால் விவசாயிகள் தங்களது பருத்தியின் தரத்திற்கேற்ப நல்ல விலை பெற முடிகிறது. 1985–86-ம் ஆண்டில் (பிப்ரவரி 1986 வரை) இத்தரம் பிரிப்பு மையங்கள் 1.56 இலட்சம் குவிண்டால் பருத்தியை தரம் பிரித்திருக்கின்றன. 1986–87-ல் இரு தரம் பிரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

4. வணிகமுறை தரம் பிரிப்பு:

102 வணிகமுறை தரம் பிரிப்பு நிலையங்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகளின் விளை பொருட்கள் இங்கே தரம் பிரிக்கப்படுவதால், விவசாயிகள் தமது விளைப் பொருட்களின் தரத்திற்கேற்ப நல்ல விலையைப் பெற முடிகிறது. 1985–86-ம் ஆண்டில் (பிப்ரவரி 1986 வரை) 34,73,003 குவிண்டால் பல்வேறு வேளாண்மை விளை பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டுள்ளன.

5. பயிற்சி:

திருச்சிராப்பள்ளியிலுள்ள விற்பனைத்துறை இயக்கத்தில் செயல்படும் பயிற்சி மையம் இத்துறையின் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் விற்பனைக் குழுக்களின் மேற்பார்வை யாளர்கட்கு 'அக்மார்க்' மற்றும் வணிகமுறை தரம் பிரிப்பு பற்றிய நுட்பங்களை பற்றிய பயிற்சியை அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 60 பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் 1986–87-ம் நிதியாண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.

6. பருத்தி சான்றுரையும் சட்ட அமுலும்:

பருத்தி விதைகளின் தூய தன்மையைக் காப்பாற்றுவதும் பருத்தி, அரவை மற்றும் பஞ்சு அழுத்தம் தொழில் கூடங்களில் பருத்தி மற்றும் பஞ்சில் கலப்படம் செய்வதைத் தடுக்கவும்; இத் திட்டம் வழிவகை செய்கிறது. இது தவிர. தமிழகத்தில் கிடைக்கக்கூடிய பருத்தியின் அளவையும் வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய பருத்தியின் அளவினையும் கணக்கிட்டு ஒப்பு நோக்க இத்திட்டம் உதவுகின்றது.

[1986 ஏப்ரல் 1

## கரும்புச் சாலை மேம்பாட்டும் திட்டம்

தமிழ்நாட்டில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட முக்கியமான தொழில்களில் சர்க்கரைத் தொழில் ஒன்றாகும். தற்போது இம்மாநிலத்தில் 23 சர்க்கரைத் தொழிற்சாலைகள் உள்ளன. கரும்பு தோட்டத்திலிருந்து ஆலைக்கு உரிய நேரத்தில் விரைவாக கரும்பை கொண்டு சேர்க்க ஏதுவாக ''கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டம்'' என்ற திட்டம் ஏற்படுத்தப்பட்டு ஏற்கனவே உள்ள சாலைகளைப் புதுப்பித்தல் மற்றும் புதிய சாலைகளை அமைத்தல் போன்ற பணிகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்திற்குத் தேவையான நிதி அந்தந்த ஆலைகளுக்குக் கொண்டுவரப்படும் கரும்புகளின் மீது டன்னுக்கு ரூ. 5 வீதம் விதிக்கப்படும். மேல்வரி (செஸ்) தொகையிலிருந்து சேகரிக்கப்படுகிறது. புதிய சாலைகள் அமைக்கும் பணி சம்பந்தப்பட்ட பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களின் எண்ணங்களை உறுதி செய்த பின்னர் சர்க்கரைத் துறை இயக்குநரின் பரிந்துரைக்கேற்ப செயல்படுத்தப்படுகிறது.

1981–82 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆண்டு டிசம்பர் முடிய இத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு:—

| வருடம். | செலவிடப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1981–82 | 230.24 |
| 1982–83 | 250.67 |
| 1983–84 | 253.35 |
| 1984–85 | 225.46 |
| 1985–86 | 166.89 |

(டிசம்பர் 1985 வரை)

## நகர்ப்புற கலவை எருத் திட்டம்

நகராட்சி நிர்வாக இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள 98 நகராட்சிகளும், 8 நகரியங்களும் நகர்ப்புற கலவை எரு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. கலவை எரு உற்பத்தி குறியீடாக 1985-86-ல் 3,64,600 மெட்ரிக் டன் நிர்ணயிக்கப்பட்டு டிசம்பர் 1985 முடிய 1,84,578 மெட்ரிக் டன் கலவை எரு உற்பத்தி செய்யப் பட்டுள்ளது.

நல்ல தரமான கலவை எருவினை உற்பத்தி செய்து அதன் விற்பனையை அதிகப்படுத்தும் பணியை ஊக்குவிப்பதற்காக உள்ளாட்சி அமைப்புகளிடையே போட்டி ஒன்றை நடத்தி பரிசு வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

## கழிவுநீரைப் பயன்படுத்தும் திட்டம்

தற்போது 23 உள்ளாட்சி நிறுவனங்கள் 265 ஏக்கரில் கழிவு நீர்ப் பண்ணைகளை நிர்வகித்து வருகின்றன. 1986–87-ல் மேலும் 100 ஏக்கர் நிலத்தில் புல் மற்றும் பயனுள்ள சாகுபடியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 1]

## வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் மத்திய அரசு தொடங்கிய
சிறப்புத் திட்டமாகும். பல அபிவிருத்திப் பணிகள் மூலம்
நீண்ட காலமாக வறட்சித் தாக்குதலுக்குட்பட்ட பகுதிகளை
மேம்படுத்துவதும், வறட்சித் தாக்குதலினால் இப்பகுதிகளில்
ஏற்படும் கடுமையை ஓரளவு குறைப்பதும் மத்திய அரசின் நிதி
உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.
இத்திட்டம், இராமநாதபுரத்தில் 7 வட்டாரங்களிலும் காமராஜர்
மாவட்டத்தில் 5 வட்டாரங்களிலும், பசும்பொன் முத்துராம
லிங்கம் மாவட்டத்தில் 6 வட்டாரங்களிலும், தர்மபுரி மாவட்டத்
தில் 12 வட்டாரங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில்
4 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம்
1985–86 ஆம் ஆண்டிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் 9
வட்டாரங்களில் மேற்கொள்வதற்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் செயற்படுத்தும் 43 வட்டா
ரங்களுக்கு 1985–86 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு, வட்டாரம்
ஒன்றுக்கு ரூ. 12.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.516 இலட்சம்
ஆகும். இத்திட்டச் செலவினை மத்திய அரசும் மாநில அரசும்
50 : 50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

2. ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், 1986–87
ஆம் ஆண்டிலிருந்து வறட்சிக்குட்பட்ட வட்டாரம் ஒன்றிற்கு
நிதி ஒதுக்கிடை ரூ. 15 இலட்சமாக உயர்த்தி, மத்திய அரசு
ஒப்புதல் அளித்துள்ளது. எனவே, 1986–87 ஆம் ஆண்டு வறட்
சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்திற்கு மத்திய அரசின் நிதி
ஒதுக்கீடு ரூ. 645 இலட்சமாகும்.

[1986 ஏப்ரல் 1

## தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம்

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் 1966–ஆம்
ஆண்டு நிறுவப்பட்டது:

இதன் முக்கிய நோக்கங்கள்:—

(1) வேளாண்மையை வளர்ச்சி பெறச் செய்யவும் நவீன
மயமாக்க உதவும் பொருட்களை தயாரிப்பதற்கான தொழிற்
சாலைகளை ஊக்குவித்தல், நிறுவி தானே நடத்தல்.

(2) வேளாண் உற்பத்தி பொருள்களை பதப்படுத்துவதற்
கான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல், நிறுவி தானே நடத்தல்.

(3) மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகள் விரைவில் வளர்ச்சி
பெற ஊக்குவித்தல்.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.400
இலட்சமாகும். இதில் ரூ. 360 இலட்சம் மதிப்புள்ள பங்கு
மூலதனம் செலுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு ரூ. 195
இலட்சம் மதிப்பு பங்குகளையும், இதரவற்றை மத்திய அரசும்
வைத்துள்ளன.

**உரங்கள்.**

விவசாயிகளுக்குத் தேவையான "பல்வேறு வகை உரங்கள்
எளிதாக கிடைப்பதற்காக இக்கழகம் தெரிந்தெடுக்கப்பட்ட
நிறுவனங்கள் தயாரிக்கும் பல்வேறு வகை உரங்களின் விற்ப
னையை மேற்கொண்டுள்ளது. 1985-86-ல் (டிசம்பர் 1985 வரை)
குறியீடான 80,000 மெட்ரிக் டன்னுக்கு பதிலாக 53,100
மெட்ரிக் டன் உரம் விற்பனை செய்யப்பட்டது. ஜனவரி 1986
முதல் 1986 மார்ச் வரை 26, 900 மெட்ரிக் டன் உரம் விற்பனை
யாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1986–87–க்கு நிர்ணயிக்கப்
பட்ட விற்பனை குறியீடு 1,20,000 மெட்ரிக் டன் உரமாகும்.

**டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை.**

விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உதிரி பாகங்களை
தேவையான நேரத்தில் சீராக விநியோகம் செய்யும் பொருட்டு
இக்கழகம் பல்வேறு தரமுள்ள உதிரி பாகங்கள், டயர்கள், டியூப்
கள் மற்றும் மின்கலங்கள் விற்பதற்கு பல்வேறு விற்பனை
நிலையங்களை கொண்டுள்ளது. தற்சமயம் இக்கழகம் 15
சில்லறை விற்பனை நிலையங்களை கொண்டுள்ளது. இவற்றில்
41 தமிழ்நாட்டிலும் ஒன்று பாண்டிச்சேரியிலும் உள்ளன.



1986 ஏப்ரல் 1]

1985–86 ஆம் ஆண்டில் (1985 டிசம்பர் வரை) இக்கழகம்
140 டிராக்டர்களையும், 450 பவர் டில்லர்களையும் விற்பனை
செய்துள்ளது. 1986–87-ல் 250 டிராக்டர்களையும் 450 பவர்
டில்லர்களையும் விற்பதை குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**பூச்சிக் கொல்லி மருந்து திட்டம்**

இக்கழகம் 1972 ஆம் ஆண்டு முதல் பிரசித்தி பெற்ற
பி.எச்.சி. 10% தூள், என்டிரின் 20% ஈ.சி. மற்றும் இதர வகை
பூச்சிக் கொல்லி மருந்துகளை உற்பத்தி செய்யும் பணியினை
மேற்கொண்டது. ஆரம்பத்தில் தனியார் நிறுவனங்களுக்கு
சொந்தமான உபகரணங்களில் தயாரிக்கப்பட்டு மேற்கூறிய
தயாரிப்புக்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தன. 1976 ஆம்
ஆண்டில் ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்து
தயாரிக்கும் தொழிற்சாலையை இக்கழகம் நிறுவியது. ரூ.4
இலட்சம் செலவில் தேவையான வசதிகள் கொண்ட இரண்டாவது
ஆலையையும் நிறுவியது. இந்திய தர நிர்ணயக்கழகத்தின்
தரத்திற்கேற்ப இக்கழகத்தால் தயாரிக்கப்படும் தரமான பூச்சி
கொல்லிமருந்துகள் விவசாயிகளுக்கு இக்கழகத்தின் கிளை
நிலையங்கள் வாயிலாகவும் வேளாண்மை கிடங்குகள் வாயி
லாகவும் விநியோகிக்கப்படுகின்றன.

இக்கழகம் 1985–86–ல் 2.970 மெட்ரிக் டன் தூள் மருந்து
கள் மற்றும் 60,450 லிட்டர் திரவ மருந்துகள் விற்பனை
செய்ய திட்டமிட்டது. 1985–86–ல் (டிசம்பர் 1985 வரை)
1,375 மெட்ரிக் டன் தூள் மருந்துகளையும் 24,200 லிட்டர்
திரவ மருந்துகளையும் விற்பனை செய்துள்ளது. மீதமுள்ள
மூன்று மாதங்களில் 1,595 மெட்ரிக் டன் தூள் மருந்துகளை
யும் 36,250 லிட்டர் திரவ மருந்துகளையும் விற்பனை செய்யும்
என எதிர்பார்க்கப்படுகிறது. 1986–87-ல் 3,000 மெட்ரிக் டன்
தூள் மருந்துகளையும் 1,00,000 லிட்டர் திரவ மருந்துகளை
யும் விற்க திட்டமிட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் மத்திய
அரசுக்குச் சொந்தமான மத்திய பூச்சிக் கொல்லி மருந்து
தயாரிக்கும் கழகத்திடமிருந்து எட்டு புதிய பூச்சிக்கொல்லி
மருந்துகளை தயாரிக்க அனுமதி பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட புதிய பூச்சிக் கொல்லி மருந்துகளை
தயாரிக்க ரூ. 15 இலட்சம் செலவில் கூடுதல் வசதிகள் செய்யப்
பட்டு வருகின்றன.

**மீன்பிடி வலைத் திட்டம்.**

இக்கழகம் கிண்டியில் ஆண்டொன்றுக்கு 60 மெட்ரிக் டன்
நைலான் பாலி எத்திலின் மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் நவீன
ஆலையை சொந்தமாக வைத்திருக்கிறது. இக்கழகத்தால்
தயாரிக்கப்படும் மீன்பிடி வலைகள் அதன் தரத்தால் விற்பனை
யில் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.

1985—86 ஆம் ஆண்டின் குறியீடான 23 மெட்ரிக் டன் வலைகள் தயாரிப்புக்கு எதிராக 1985—86-ல் (டிசம்பர் 1985 முடிய) 11.83 மெட்ரிக் டன் மீன்பிடி வலைகள் தயாரிக்கப்பட்டன. 1986 ஜனவரி முதல் மார்ச் வரை 11.17 மெட்ரிக் டன் மீன்பிடி வலைகள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1986—87—ல் 30 மெட்ரிக் டன் வலைகள் தயாரிக்க திட்ட மிடப்பட்டுள்ளது.

இலைப்புரத மாவு ஆலை, உடுமலைப்பேட்டை

சிறு விவசாயிகள் தங்கள் உற்பத்திக்கு ஏற்ப நல்ல விலை பெறுவதற்காக இக்கழகம் கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் தேவையான சத்துணவாக லூசரின் என்ற புல் வகையைப் பக்குவப்படுத்தி இலைப் புரத மாவு தயாரிக்கும் ஒரு முன்னோடி ஆலையை உடுமலைப்பேட்டையில் நிறுவியுள்ளது. 1985—86 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1985 வரை) இக்கழகம் விற் பனை குறியீடான 240 மெட்ரிக் டன்னுக்கு பதிலாக 161 மெ. டன் இலைப் புரத மாவை விற்பனை செய்துள்ளது. மீதம் உள்ள மூன்று மாதங்களில் (ஜனவரி 1986 முதல் மார்ச் 1986 வரை) 79 மெட்ரிக் டன் இலைப் புரத மாவை விற்பனை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1986-87-ல் 360 மெட்ரிக் டன் இலைப் புரத மாவு விற்பனை குறியீடாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

எண்ணெய் பிழிந்தெடுக்கும் ஆலை, போச்சம்பள்ளி.

ரூ. 56 இலட்சம் முதலீட்டில் சூரியகாந்தி வித்துக்களை பிழிந்தெடுக்க போச்சம்பள்ளியில் நிறுவப்பட்ட ஆலை 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தனது வர்த்தக ரீதியான உற்பத்தியைத் துவக்கியது. தேவையான அளவு சூரியகாந்தி வித்துக்கள் கிடைக்காததால் இந்திய அரசிடம் 1981 ஆம் ஆண்டில் நிலக்கடலையிலிருந்து எண்ணெய் பிழிய அனுமதி பெறப் பட்டது.

போச்சம்பள்ளியில் உற்பத்தியாகும் சூரியகாந்தி எண்ணெய் ''சனோலா'' என்ற வணிகப் பெயரில் விற்கப்படுகிறது. சனோலா தென் மாநிலங்களிடையே குறிப்பாக தமிழ்நாட்டில் மிகவும் பிரசித்தி பெற்று இருக்கிறது. இதுவரை சனோலா தனியார் வியாபார ஸ்தாபனங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது. 1985-86 ஆம் ஆண்டிலிருந்து இக்கழகம் நேரடி வியாபாரத்தை மேற்கொண்டுள்ளது. 1985—86-ல் (டிசம்பர் 1985 வரை) 3,180 மெட்ரிக் டன் சூரியகாந்தி வித்துக்களி லிருந்து எண்ணெய் பிழியப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 மாதங்





களில் 2,720 மெட்ரிக் டன் சூரியகாந்தி வித்துக்களிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1986-87-ல் 5,000 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளைப் பிழிந்து 1,900 மெட்ரிக் டன் எண்ணெய் தயாரிக்க திட்டமிடப் பட்டுள்ளது;

கரைத்து எண்ணெய் எடுக்கும் ஆலை நாமக்கல்.

இக்கழகம், நாமக்கல்லில் உள்ள செக்கு பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கும் மற்றும் அதன் சம்பந்தப்பட்ட பொருட்களை தயாரித்து விற்பனை செய்வதற்குமான கூட்டுறவு இணையகத்திடமிருந்து எண்ணெய் கரைத்தெடுக்கும் தொழிற் கூடத்தை 1977 ஆம் ஆண்டில் எடுத்துக்கொண்டது. இவ் வாலை வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 1977 டிசம்பரில் தொடங்கியது. இவ்வாலை நாளொன்றிற்கு 15 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டிலிருந்து அல்லது 20 மெட்ரிக் டன் பிண்ணாக்கி லிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் திறன் கொண்டது.

1985-86—ல் 2,400 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டை பிழிந் தெடுக்க திட்டமிடப்பட்டது. இக் குறியீடுக்கு எதிராக 1985 டிசம்பர் வரையில் 2,385 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டது. 1986-87—ல் 6,000 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்க திட்டமிடப் பட்டுள்ளது.

கரைத்து எண்ணெய் எடுக்கும் ஆலை பொனக்குளம்

இக்கழகம் காதி மற்றும் கிராமப்புறத் தொழில்கள் வாரியத் திடமிருந்து ஒரு எண்ணெய் பிழிந்தெடுக்கும் ஆலையை ஏற்று அதனை புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பொனக் குளத்தில் நிறுவியது. இவ்வாலை நாளொன்றிற்கு 30 மட்ரிக் டன் அரிசித் தவிட்டை பிழிந்தெடுக்கும் திறன் கொண்டது. 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இவ்வாலை இயங்கத் தொடங்கியது. நடப்பு ஆண்டில் (1985-86) 3,800 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டை பிழிந்தெடுக்க திட்டமிடப்பட்டது. ஆனால் 1985—86-ல் (டிசம்பர் 1985 வரை) 1,750 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டை பிழிந்தெடுத்தது. மீதமுள்ள மூன்று மாத காலத்தில் 2,050 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1986-87—ல் 8,000 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 1

**பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கான மூலப்பொருட்களை தயாரித்தல்**

இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட் என்னும் நிறு வனத்துடன் ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகங்கள் இணைந்து கூட்டு முயற்சியாக ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கோலூர் என்னும் இடத்தில ''சதர்ன் பெஸ்டிசைட்ஸ் கார்ப்ப ரேஷன் லிமிடெட்'' என்ற பெயரால் ஒரு தொழிற்சாலையை நிறுவி உள்ளது. இக்கழகம் அதில் ரூ. 39.78 இலட்சம் மதிப் புள்ள பங்குகளை எடுத்துக் கொண்டுள்ளது. ஆலை நிறுவும் பணி முடிவடைந்து விட்டது. இவ்வாலை கூடிய விரைவில் அதன் சோதனை ஓட்டத்தை துவக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**கேஜ் வீல் தயாரிப்பு.**

விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு இக்கழகம் 'கேஜ் வீலை' தொடர்ந்து தயார் செய்கிறது. இந்தத்தயாரிப்பு இக்கழகத்தின் திருச்சி கிளை நிலையத்தில் நடை பெறுகிறது' கேஜ்வீல்கள் பவர் டில்லர்களுக்காக முக்கியமாக தயாரிக்கப்படுகிறது. இவ்வாண்டு 140 பவர் டில்லர்களுக்கான கேஜ் வீல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரித்தல்**

இக்கழகம் பிரான்ஸ், எகிப்து மற்றும் பம்பாய் ஆகிய இடங் களில் உள்ள மூன்று நிறுவனங்களில் தொழில்நுட்ப கூட்டுறவின் மூலம் மலர்களிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கும் ஆலை ஒன்றை திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த தென்காசி தாலுக்காவில் நிறுவுவதற்கான திட்டத்தை இறுதியாக்கியுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மூலதனம் ஏறத்தாழ ரூ. 125 இலட்ச மாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது: இக்கழகம் சரி ஒப்புரவு முதலீட்டில் 39 சதவிகிதத்தை அதாவது தோராயமாக ரூ. 13.05 இலட்சத்தை தனது பங்காக அளிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாலை 750 மெட்ரிக் டன் மல்லிகை மலர் களைப் பக்குவப்படுத்தும் அமைப்புத் திறனை கொண்டிருக்கும். இதன் முழுத்திறனும் ஆலை இயங்கத் தொடங்கிய மூன்றாம் ஆண்டிலேயே பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அயல்நாட்டு கூட்டுறவாளர்கள் இவ்வாலையின் முழு உற்பத்தியையும் அதன் உற்பத்தி செலவுக்கு மேல் 20 சதவீதத் திற்கு குறையாத விலையை கொடுத்து வாங்கிக்கொள்வதற்கு சம்மதித்துள்ளார்கள்



1986 ஏப்ரல் 1]

**சத்துணவு தயாரிக்கும் பிரிவு**

தமிழ்நாடு அரசின் சத்துணவு அளிக்கும் திட்டத்திற்குத் தேவையான சத்துணவை தயாரித்து அளிப்பதற்கு இக்கழகம் எண்ணியுள்ளது. மாதமொன்றிற்கு 750 மெட்ரிக் டன் சத் துணவு தயாரிக்கும் திறன் கொண்ட இரண்டு பகுதிகளை ஒன்றை மதுரையிலும் மற்றொன்றை சென்னையிலும் நிறுவ எண்ணி யுள்ளது.

இவ்வாலை ஒவ்வொன்றிற்கும் மொத்த திட்ட மூலதனம் ஏறத்தாழ ரூ. 133.44 இலட்சம் ஆகும். இதில் ஆரம்ப காலத் தில் தேவைப்படும் மூலப் பொருட்களின் விலையான ரூ. 50.43 இலட்சமும் அடங்குகிறது.

[1986 ஏப்ரல் 1

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (என்கோஃபெட்) 1972-ம் ஆண்டு 220 வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்களும், 12 மாவட்ட அளவிலான கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்கள் இணைந்த மாநில அளவிலான கூட்டுறவுச் சங்கமாக அமைக்கப்பட்டது.

2. விவசாய பொறியியல் சேவைகளை, விவசாய சேவை மையங்களை வட்டார அளவிலும் மாவட்ட அளவிலும் நிறுவு வதன் மூலம் கிராமப்புற விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். இந்த விவசாய சேவை மையங்கள் விவசாய கருவிகள், இயந்திரங்கள் முதலானவற்றை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குதலையும், விவசாயிகளுக்குச் சொந்தமான உபகரணங்களைப் பழுது நீக்குதலையும், மற்றும் விவசாய இடுபொருட்களாகிய விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் முதலியவற்றை வினியோகம் செய்வதையும் முக்கிய பணிகளாகக் கொண்டுள்ளது.

3. இணையத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 100 இலட்சங்களாகும். இதில் 31-12-1985 வரை செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூபாய் 21.28 இலட்சங் களாகும்.

1. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் மற்றும் அதனைச் சார்ந்த மையங்களில் தற்போதைய நடவடிக்கைகள்.

ஒருங்கிணைப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் டீசல் என்ஜின்கள் மற்றும் மின்சார மோட்டார் பம்பு செட்டுகளை நியாயமான விலையில் பிரதம நிலவள வங்கி மூலம் கடன் பெறும் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. 1985-86 (31-12-1985 முடிய) 583 டீசல் என்ஜின் பம்பு செட்டுகளையும், 27 மின்சார மோட்டார் பம்பு செட்டு களையும் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. 1-1-1986 முதல் 31-3-1986 வரையில் உள்ள காலத்தில் 300 டீசல் என்ஜின் பம்பு செட்டுகளையும் 10 மின்சார மோட்டார் பம்பு செட்டு களையும் இணையம் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1986 ஏப்ரல் 1]

வணிக நடவடிக்கைகள்

இவ்விணையம், தன்னுடன் இணைந்த சேவை மையங்கள் மூலமாகவும், நேரடியாகவும் விவசாய இடுபொருட்களையும், மற்றும் வேளாண்மைக் கருவிகளையும் வினியோகம் செய்து வருகின்றது. 1985 டிசம்பர் திங்கள் வரை ரூ. 86·49 இலட்சம் மதிப்புள்ள இடுபொருட்களையும் வேளாண் கருவிகளையும் வழங் கியுள்ளது. 1986 ஜனவரி முதல் மார்ச்சு மாதம்வரை ரூ. 30.00 இலட்சம் மதிப்புள்ள இடுபொருட்களையும் கருவிகளையும் வினியோகம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாபெரும் விவசாய உற்பத்தித் திட்டம்

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தமிழக அரசு மூலம் நடத்தப்படுவதும் கிராம அபிவிருத்தி இயக்குநரால் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாபெரும் விவசாய உற்பத்தித் திட்டத்தின் கீழ் இணையம் டிசம்பர் 1985 வரையிலான காலத் தில் 53 டீசல் என்ஜின்களையும், 7 மின்சார மோட்டார்களையும் வினியோகம் செய்துள்ளது.

வாடகைப் பணி மற்றும் பழுது பார்க்கும் பணிகள்

இணையத்துடன் இணைந்த சங்கங்களிடம் விவசாயிகளுக்கு சேவை செய்வதற்கென 233 இயந்திர கலப்பைகள், 183 இழுவை இயந்திரங்கள், 167 எண்ணெய் இயந்திரங்கள், 310 விசைத் தெளிப்பான்கள், 14 பாறை உடைக்கும் காற்றழுத்த சாதனங்கள் ஒரு ஆழ்கிணறு தோண்டும் கருவி, மற்றும் 25 விசைக் கலப்பைகள் ஆகியவைகள் உள்ளன. இதன் மூலம் அவை விவசாயிகளுக்கு உதவி புரிந்து வருகின்றன. அது மட்டுமல்லா மல் டிராக்டர்களுடன் இணைந்த டிரெயிலர்கள் மூலம் வறட்சி பணி பகுதிகளில் குடிநீர் வினியோகிக்கும் பணிகளையும் மேற் கொண்டுள்ளது. டிராக்டர்கள் வாடகைப் பணி மூலம் வட்டார மையங்களும், மாவட்டச் சங்கங்களும் சேர்ந்து 1985-86-ம் ஆண்டில் டிசம்பர் 1985 வரை ரூ. 53.08 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது. 1986 ஜனவரி முதல் மார்ச்சு வரை யிலான காலத்தில் இச்சங்கங்கள் டிராக்டர்கள் வாடகைப் பணி மூலம் ரூ. 16 இலட்சம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இணையம் 6 சாலை உருளைகளை (Road Rollers) வாங்கி கிராமப்புறப் பகுதிகளில் சாலை போடும் பணிக்காகவும், சாலைகளை சீர் செய்யும் பணிக்காகவும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வாடகைக்கு வழங்கி வருகிறது. இதன் மூலம் இவ்வாண்டில் 31-12-1985 வரையிலான காலத் தில் இணையம் ரூ. 1.61 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது. 1986 ஜனவரி முதல் மார்ச்சு வரை இச்சாலை உருளைகளை வாடகைக்கு விடுவதன் மூலம் ரூ. 0.75 இலட்சம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### இணையத்தைச் சார்ந்த மையங்களின் வியாபார பணிகள்

இணையத்தைச் சார்ந்த மையங்கள் விவசாய இடுபொருட்களான விதைகள், உரம், பூச்சி மருந்து மற்றும் விவசாயக் கருவிகள் போன்றவற்றை விவசாயிகளுக்கு அளிக்கும் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றன. 1985–86–ம் ஆண்டில் (31–12–1985 முடிய) இச்சங்கங்கள் ரூ. 758.46 இலட்சம் மதிப்புள்ள இடு பொருட்களை வினியோகம் செய்துள்ளன. மேலும் இச்சார்பு மையங்கள் 1986 ஜனவரி முதல் மார்ச்சு வரையிலான காலத்தில் ரூ. 365.00 இலட்சம் பெருமானத்திற்கு வினியோகம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தானிய சேமிப்பு உலோக குதிர்கள் வினியோகம் செய்தல்

மத்திய அரசின் "தானிய பாதுகாப்புத் திட்டத்தின்" கீழ் நவீன தானிய சேமிப்பு உலோகக் குதிர்களை விவசாயிகளுக்கு வினியோகம் செய்வதை இணையம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இதன் கீழ் ரூ. 57 இலட்சம் வட்டியில்லா கடனாக இம்மாநிலத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த அரசு இணையத்திற்கு அளித்தது. இதில் ரூ. 49 இலட்சத்தை இணையம் திருப்பிக் கட்டியுள்ளது. இணையம் தனது மாவட்ட மற்றும் வட்டார வேளாண்மைச் சங்கங்களின் உதவியோடு 1–4–1985 முதல் 31-12–1985 வரையிலான காலத்தில் 602 உலோகக் குதிர்களை தயாரித்து வினியோகம் செய்துள்ளது. இணையம் 1986 ஜனவரி முதல் மார்ச்சு வரையிலான காலத்தில் 450 உலோகக் குதிர்களை தயாரித்து வினியோகம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண்மைக் கருவிகளை தயாரித்து வழங்குதல்

தமிழக அரசின் நிதி உதவியைக் கொண்டு நட்டு வெட்டிகள் மற்றும் பசுந்தாள் உரம், மிதி கருவி, சமன்படுத்தும் கருவி, உழும் கருவி, பாத்தியமைக்கும் கருவி, விதையினையும் உரத்தையும் சீராக நிலத்தில் இடும் கருவி முதலான வேளாண் கருவிகளைத் தயாரித்து வினியோகம் செய்யும் பணியை இணையம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டம் மற்றும் வட்டார அளவிலான மையங்கள் மூலம் செயல்படுத்துகின்றது. முதல் கட்டமாக திருச்சி மாவட்ட வேளாண்மைச் சங்கத்தால் தயார்செய்த தட்டு வெட்டிகள் 2-9-1985 அன்று விவசாயிகளுக்கு வழங்கி அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.



### வேளாண் பணிமையங்கள் நிறுவுதலும் நவீன விவசாயக் கருவிகளை பிரபலப்படுத்துதலும்:

இந்திய அரசினால் தயாரிக்கப்பட்ட மத்திய அரசு ஆதரவு
திட்டத்தின்கீழ் விவசாய உற்பத்தியைப் பெருக்க கால்நடை
களால் இழுக்கப்படும் நவீனமயமாக்கப்பட்ட விவசாயக் கருவி
கள் மற்றும் கையால் இயக்கப்படும் கருவிகளின் உபயோகத்தை
தீவிர செயல்முறைகள் மூலம் பரப்பவும், வாடகைக்கு விடவும்,
விவசாயிகள் அதனை விரும்பி ஏற்று தங்கள் உபயோகத்திற்குக்
கொண்டு வரவும் 36 வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்து மத்திய
அரசுத் திட்டத்தை இணையம் செயல்படுத்துகிறது. இத்திட்டத்
தின் கீழ் சிறு விவசாயிகளுக்கு 25 விழுக்காடு, நடுத்தர விவசாயி
களுக்கு 331/3 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி
விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மான்ய விலையில் கால்நடை
களால் இழுக்கப்படும் விவசாயக் கருவிகளும் கைக்கருவிகளும்
வினியோகம் செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்கென 1985–86
ஆம் ஆண்டில் 62.20 இலட்சம் ரூபாய் நிதி உதவியினை
அரசு வழங்கியுள்ளது. இத்திட்டம் நன்கு இயங்கி வருகிறது.
மார்ச்சு 1986–க்குள் இது வெற்றிகரமாக முடிக்கப்படும்.

1986–87-ல் இத்திட்டம் மேலும் 32 வட்டாரங்களுக்கு விஸ்
தரிக்கப்பட இருக்கிறது. கூடுதலான நவீனமயமாக்கப்பட்ட
விவசாயக் கருவிகளையும், இயந்திரங்களையும் வழங்கி வாட
கைக்கு விடுவதன் மூலம் தற்போது இயங்கி வரும் 72 மையங்
களை மேலும் பலப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

1985–86 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், நாமக்கல்லில் இரண்டாவது கால்நடை மருத்துவக்கல்லூரி ஒன்று நிறுவப்பட்டது. கோயம்புத்தூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளநிலை அறிவியல் (வன இயல்) என்ற புதிய பட்டப்படிப்பு ஒன்றும் துவக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டம், கிள்ளி குளத்தில் அமைந்துள்ள மூன்றாவது விவசாய கல்லூரிக்கு தேவையான நடப்பு செயல் திட்டங்கள் மற்றும் அத்யாவசியமான தேவைகள் வலுப்படுத்தப்பட்டன.

1986–87 ஆம் ஆண்டில் இருந்து கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது:—

(அ) பால்வள தொழில் நுட்பம், பால்வள வேதியில் மற்றும் பால்வள விரிவாக்கம் ஆகிய பாடங்களில் முதுநிலைப் பட்ட படிப்புகள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் துவங்க உள்ளது.

(ஆ) வேளாண்மையில் ஆளுகை அறிவியல் பற்றி புதிய முதுநிலை பட்ட மேற்படிப்பு கோவை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் துவங்கப்பெறும்.

(இ) திறந்த வெளி பல்கலைக்கழக கொள்கைக்கேற்ப வேளாண்மையில் தொலைநோக்கு கல்வி பட்டப்படிப்பு (B.Ag. Tech) ஒன்று இப்பல்கலைக்கழகத்தில், செயலாக்கத்தில் ஈடுபடும் விவசாயிகளின் நன்மைக்கு துவங்கப் பெறும்.

(ஈ) பள்ளியை விட்டு நின்றவர்களின் சுயவேலை வாய்ப்புக்காக பயிர் பாதுகாப்பில் புதிய பட்டயப்படிப்பு துவங்கப் பெறும்.

பயிர் ஆராய்ச்சி.—1985-86 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 1! பயிர் இரகங்கள் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன-

| | | | |
|---|---|---|---|
| 1. | நெல் | .. .. | வெள்ளைப்பொன்னி |
| 2. | நெல் | .. .. | ஏ. எஸ். டி. 16 |
| 3. | சோளம் | .. .. | கோ. 26 |
| 4. | கம்பு | .. .. | கோ. 7 |
| 5. | பனி வரகு | ... .. | கோ. 3. |



| | | | |
|---|---|---|---|
| 6. | கொண்டைக்கடலை | .. | கோ. 3 |
| 7. | நிலக்கடலை | .. | வி.ஆர்.ஐ.1 |
| 8. | சூரியகாந்தி | .. | கோ.2 |
| 9. | தீவனகாராமணி | .. | கோ.5 |
| 10. | தீவனச் சோளம் | .. | கோ.27 |
| 11. | மஞ்சள் | .. | பி.எஸ்.1 |
| 12. | பப்பாளி | .. | கோ.6 |
| 13. | புடல் | .. | கோ.2 |
| 14. | துவரை | .. | பி.எஸ்.1 |
| 15. | கேந்தி | .. | எம்.டி.யூ.1 |

வேளாண்மைப் பல்கலைக்கழக பொறியியல் பிரிவில் கீழ்க்கண்ட புதிய உபகரணங்களும், சாதனங்களும் உருவாக்கப் பட்டுள்ளன:—

1. ஹைட்ராலிக் டைனமோ மீட்டர்.

2. புஞ்சை நிலத்தில் களையெடுக்கும் கருவி.

3. மாடுகளால் இழுத்துச் செல்லப்படும் இரும்புக் கலப்பை.

4. விதை மற்றும் உரம் போடும் கருவி.

5. நீர் இறைப்பதற்கேற்ற மலிவு விலை காற்றாலை.

6. பெப்பைன் உலர்த்தும் சூரிய உலர்த்தி.

7. வேளாண் கழிவுகளை பிரிக்க செய்யும் கருவி.

1985-86-ம் ஆண்டில் வேளாண்மையில் 19 ஆராய்ச்சித் திட்டங்களும், கால்நடை பராமரிப்பில் 8 ஆராய்ச்சிகளும், 3 மீன் வளத்திட்ட ஆராய்ச்சிகளும் தொடங்கப்பட்டுள்ளன. வேளாண்மையில் 23 ஆராய்ச்சித் திட்டங்களும், கால்நடை அறிவியலில் ஒன்றும் மற்றும் மீன்வள ஆராய்ச்சியில் ஒன்றுமாக ஆராய்ச்சிப் பணிகள் முடிக்கப்பெற்று முடிவுகள் இந்த ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

**விரிவாக்கக் கல்வி:**

பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சித் திட்டங்களின் மூலம் கண்டறியப்படும் நவீன தொழில் நுட்ப முறைகளை, விரிவாக்கக் கல்வி நெறியகம், விரிவாக்கக் கல்வி மையங்களான வேளாண் அறிவியல் மையங்கள், தாவர மருந்தக மையங்கள் தேசிய செயல் விளக்கத் திட்டங்கள் மற்றும் மாவட்டம் தோறும் மாதாந்திர மண்டல செயல்பாட்டுக் கருத்தரங்குகள் ஆகியவை மூலம் செயலுக்குக் கொண்டு வருகிறது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் உதவியுடன்
விருதாச்சலத்தில் ஒன்றும், காட்டுப்பாக்கத்தில் ஒன்றுமாக இரு
புதிய வேளாண் அறிவியல் மையங்கள் இவ்வாண்டில் நிறுவப்
பட்டன.

வேலூர், திருநெல்வேலி மற்றும் உதகையில் உள்ள சந்திநல்லா
ஆகிய இடங்களில் மேலும் மூன்று வேளாண் அறிவியல்
மையங்கள் நிறுவுவதற்கான செயற்குறிப்புகள் இந்திய

வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஆய்வில் உள்ளன.

**உழவர்களின் நிலங்களில் புதிய இரகங்கள் வளர்ப்பு மற்றும் மதிப்பாய்வு செய்தல்.**

உழவர்களின் நிலங்களில் 1,600-க்கும் மேற்பட்ட இடங்களில்,
பல்வேறு வகைப்பட்ட பயிர் வகைகளின் 36 இரகங்கள்
பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம், வடபாதிமங்கலம்,**

1974-ல் நிறுவப்பட்ட தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்
தில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடிகள் ஆகும். இது
வரை இக்கழகத்திற்கு அரசிடமிருந்து வழங்கப்பட்ட பங்கு மூல
தனம் ரூ. 27.50 இலட்சங்களாகும். அவ்வப்பொழுது அரசினால்
வழிவகைக்கான முன்பணம் வழங்கப்படுகிறது. இக்கழகத்திற்கு
சொந்தமான 4,051.74 ஏக்கர் நிலப்பரப்பு 13 மையங்களாக
அமைந்துள்ளது. இந்த நிலங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள
நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி மற்றும் திருவாரூர் வட்டங்
களில் அடங்கியுள்ளன.

1985–86 ஆம் வருடத்தில் இக்கழகம் 580 ஏக்கரில் குறுவை
சாகுபடியையும், 1,401 ஏக்கரில் சம்பா சாகுபடியையும், 291
ஏக்கரில் கரும்பு சாகுபடியையும், 1,027 ஏக்கரில் பருப்பும்
சாகுபடி செய்தது. 1985-86-ம் வருடத்தில் 90 ஏக்கரில் பாசப்
பருப்பு வகைகளை பயிரிட திட்டமிட்டிருக்கிறது.

பல்வேறு காரணங்களினால் இக்கழகம் தொடர்ந்து நஷ்டம்
அடைந்து வருகிறது. இக்கழகத்ினுடைய எதிர்காலப்பணி அரசின்
தீவிர பரிசீலனையில் உள்ளது.



**தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம்.**

தேசிய பால்வள வாரியத்தின் எண்ணெய் வித்துக்கள் மற்றும்
தாவர எண்ணெய் அபிவிருத்தித் திட்டங்களை, அதன் நிதி
உதவியுடன் தமிழகத்தில் செயல்படுத்திட ஒரு இணைப்பு நிறுவன
மாக 1981 ஜனவரி திங்களில் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்
வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் ஏற்படுத்தப்பட்டது.
இந்த இணையம் கிராம அளவில் உற்பத்தியாளர்களைக் கொண்
டும், மாநில அளவில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்
களாகவும் கொண்ட இரண்டு அடுக்கு கூட்டுறவு முறையினை
உடையதாகும். தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள்
உற்பத்தியாளர் இணையம் நிலக்கடலை பயிர் செய்யும் உழவர்
களுக்கு நியாயமான செயல் தொடர்புகளை ஏற்படுத்தும்
நோக்கத்துடனும் மற்றும் இடைத்தரகர்களின் இன்னல்களைத்
தவிர்த்து உற்பத்தியாளர்கள் விளைச்சலை அதிகரிக்கக் கோரும்
வகையிலும் செயல்பட்டு வருகிறது.

இவ்விணையத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடி
யாகும். இத்திட்டம் 1981-82 முதல் தொடர்ந்து எட்டு ஆண்டு
களுக்கு நீடிக்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் மொத்த நிதி
ஒதுக்கீடான ரூ. 15.61 கோடி 54:46 என்ற விகிதத்தில் கடனாக
வும், மானியமாகவும் தேசிய பால் வள வாரியத்தினால் வழங்கப்
படுகிறது. இத்திட்டம் வட ஆற்காடு, தென்னாற்காடு மற்றும்
செங்கலபட்டு மாவட்டங்களில் 20 வட்டங்களில் மானாவாரி
மற்றும் இரவை நிலக்கடலை உற்பத்திக்கு வழி கோலுகிறது.

இத்திட்டம், உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி செய்வதற்கான
வசதிகளையும், கொள்முதல், விற்பனை மற்றும் பக்குவப்படுத்து
தல் ஆகிய வழிமுறைகளை ஒழுங்குபடுத்தி, நிலைப்படுத்துவதன்
மூலம் உபயோகிப்பாளர்கள் தரும் விலையில் பெரும் பகுதி
உற்பத்தியாளர்களுக்கே கிடைக்க வழி செய்வதுடன் அல்லாமல்,
எண்ணெய் விலையை நிலை நிறுத்த செயல்பட்டு வருகிறது.
எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனை திட்டம் செயல்
படுத்தப்படும் பகுதிகளில் பெருக்கவும் உறுப்பினர் உற்பத்தியாளர்
களுக்கு அதிக விலை கிடைக்கவும், இத்திட்டத்தில் முதலிடம்
அளிக்கப்படுகிறது. திட்டப் பகுதியில் உற்பத்தித் திறனை மேம்
படுத்தும் குறிக்கோளுடன், உழவியல் மற்றும் உற்பத்தி நுணுக்க
ஆலோசனைகளை, சங்க அங்கத்தினர்களுக்கு இவ்விணையத்தின்
தொழில் நுட்ப அலுவலர்கள் வழங்குகின்றனர். உற்பத்திசெய்யும்
அங்கத்தினர்களுக்குத் தேவையான இடுபொருட்களை வழங்கு
வதுடன் உற்பத்தியான விளைபொருட்களை போட்டி விலையில்
விற்பதற்கும் தேவையான வசதிகளைப் பெற இணையம்

வழி வகுக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம், டிசம்பர் 1985 வரை திட்டப் பகுதி களில் 19,231 அங்கத்தினர்களைக்கொண்டு 188 உழவர்கள் சங்கங்களை அமைத்து 38,000 எக்டேர் நிலப்பரப்பில் நிலக் கடலை சாகுபடி செய்வதற்கு வேண்டிய நடவடிக்லககளை மேற் கொண்டு வருகிறது. மேலும் செயல்முறை விளக்கப் பாத்திகள் அமைத்தல், பயிர்பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளல், சாகுபடியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், இடுபொருட்சள் வழங்குதல் ஆகிய பலவகையான விரிவாக்கப் பணிகளை இவ் விணையத்தின் திட்ட அலுவலர்கள் செயல்படுத்தி வருகின்றனர். தரமான விதைகளை உற்பத்தி செய்தலும், அதன் விணியோ கத்தை மேற்கொள்ளுதலும் இத்திட்டத்தில் இணையத்தின் மற்றுமொரு முக்கிய பணியாகும். இத்திட்ட விரிவாக்கப் பணி களை திறம்பட மேற்கொள்ளும் வகையில் நெய்வேலியில் 122 எக்டேர் நிலப்பரப்பில் தரமான விதை உற்பத்திக்கும் உழவர் களுக்கு பயிற்சி அளிக்கவும் ஏற்ற வகையில் உழவியல் மையம் மற்றும் மாவட்டப் பண்ணை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

உற்பத்தித் திறன் மேம்பாட்டிற்காக எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் கீழ்வருமாறு (31-1-1986 வரை):—

| | | |
|---|---|---|
| அமைக்கப்பட்ட சங்கங்கள் | .. | 188 |
| சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் | .. | 19,231 |
| உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு | .. | 38,000 எக்டேர். |
| நிலக்கடலை கொள்முதல் | .. | 2,003 டன்கள் (10,000 டன்கள் கூடுத லாக இப்பருவத்தில், மார்ச் முதல் ஜூன் முடிய கொள்முதல் செய்யப்படும்). |
| தரமான விதை வினியோகம் | .. | 127 டன்கள் |
| இடுபொருள் வினியோகம் | .. | 3,335 டன்கள் |
| அமைக்கப்பட்ட செயல்முறை விளக்கப் பாத்திகள். | .. | 123 எண்ணிக்கைகள் |





1986-87 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் திட்டப்பணிகள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| அமைக்கவிருக்கும் புதிய சங்கங்கள் எண்ணிக்கை. | | 91 |
| சேர்க்கப்படவிருக்கும் புதிய உறுப் பினர்களின் எண்ணிக்கை. | | 6,000 |
| உள்ளடக்கப்படவிருக்கும் கூடுதல் நிலப்பரப்பு. | | 7,500 எக்டேர். |
| நிலக்கடலை கொள்முதல் | .. | 25,000 டன்கள். |
| தரமான விதைகள் வினியோகம் | .. | 650 டன்கள். |

பக்குவப்படுத்துதல் மற்றும் விற்பனை:

மேற்கூறப்பட்ட அமைப்பு, ஏனைய உற்பத்தி நடவடிக்கை கள் தவிர இவ்விணையம் திருவண்ணாமலை, மற்றும் விருத்தாச் சலம் ஆகிய இடங்களில் எண்ணெய் பிழிவதற்கான வசதிகளைச் செய்துள்ளது.

இதற்காக ரூ. 304.80 லட்சம் செலவில் நாள் ஒன்றுக்கு 135 டன்கள் நிலக்கடலை விதைகள் அரைக்கும் திறன் கொண்ட இரண்டு நிலக்கடலை எண்ணெய் பிழியும் ஆலைகளைத் தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திலிருந்து இவ்விணையம் பெற்றுள்ளது. ஆண்டுதோறும் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கப்பட்ட 30,000 டன்கள் நிலக்கடலையை இந்த இரண்டு எண்ணெய் பிழியும் ஆலைகளில் எண்ணெய் பிழிவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளது.

இவ்விணையம், எண்ணெய்வித்து உற்பத்தியாளர்கள் மற்றும் எண்ணெய் உபயோகிப்பாளர்களுக்கும் இடையிலுள்ள தொடர்பை வலுப்படுத்தும் வகையில் தாவர எண்ணெய் மற்றும் பிண்ணாக்கு ஆகியவைகளின் விற்பனையை மேற்கொண்டுள்ளது. இவ்விணையம் நிலக்கடலை எண்ணெய்க்கு ''பியூர்நட்'' என்றும் சுத்திகரிக்கப்பட்ட நிலக்கடலை எண்ணெய்க்கு ''வின்னர்'' என்றும் வணிகச் சின்னங்களை ஏற்படுத்தி அங்காடியில் விற்பனை யைத் துவக்கியுள்ளது. இவை உபயோகிப்பாளர்களுக்கு 1 கிலோ பாலிதீன் பைகள், 1 கிலோ புட்டிகள் மற்றும் 5கிலோ டின்களில் அடைத்து விற்பனை செய்யப்படுகின்றன. இணையம் இவைகளை நல்ல தரமுடைய மற்றும் நியாயமான விலையில் உபயோகிப் பாளர்களுக்கு வழங்குகிறது. விற்பனை நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான விளம்பரம் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மூலம் ஆதரவு தரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிண்டியில், பாலிதீன் பைகளில் எண்ணெய் நிரப்புவதற்காக எண்ணெய்

[1986 ஏப்ரல் 1

கொள்கலன் நிரப்பு நிலையப் பணியினை இணையம் துவக்கி யுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் 31-1-1986 முடிய இணையம். 3,014 மெட்ரிக் டன்கள் நிலக்கடலை விதைகளை திருவண்ணா மலை மற்றும் விருத்தாசலத்திலுள்ள எண்ணெய் பிழியும் ஆலை களில் பக்குவப்படுத்தியுள்ளது. இணையம் 31–1–1986 வரை 664 மெட்ரிக் டன்கள் பிழியப்பட்ட எண்ணெயையும் 1,231 மெட்ரிக் டன்கள் பிண்ணாக்கையும் விற்பனை செய்துள்ளது. இணையம் 1986-87-ல் 4,000மெட்ரிக் டன்கள் பிழிந்த எண்ணெய், 1,000 மெட்ரிக் டன்கள் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், ஆகியவைகளை மொத்தமாகவும் மற்றும் உபயோகிப்பாளர் சிக்கங்களிலும் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இணையத்தின் சொந்த ஆலைகளில் உற்பத்தி செய்யும் எண்ணெ யுடன் தேசிய பால் வள வாரியம் இறக்குமதி செய்யும் 690 மெட்ரிக் டன்கள் சோயா மொச்சை எண்ணையும் மற்றும் 779 மெட்ரிக் டன்கள் ரேப் விதை எண்ணெயையும் இணையம் விற்பனை செய்துள்ளது.



1986 ஏப்ரல் 1]

## இணைப்பு II

(76-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

1986–87 ஆம் ஆண்டுக்கான குடிநீர் வழங்கலுக்கான 49 ஆம் எண் கோரிக்கை நிதி மதிப்பீடு.

ரூ. 127.1394 கோடி

**முன்னுரை:**

தமிழக அரசு, மாநிலத்திலுள்ள அனைத்து கிராமப்புற மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கிராம குடிநீர்த் திட்டம் இருபது அம்சத் திட்டத்தில் சிறப்பான இடத்தையும் பெறுகிறது.

நகர்ப்புறக் குடிநீர்த் திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளிக் கப்பட்டு, பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் பல செயலாக்கத்தில் உள்ளன.

சென்னைப் பெருநகர் தவிர தமிழ்நாடு முழுவதும், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் பணிகளுக்கான திட்டங் களை தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் செயற்படுத்தி வரு கிறது. சென்னை நகருக்கான இப்பணிகளை சென்னைப் பெரு நகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் நிறை வேற்றி வருகிறது.

**ஊரக குடிநீர்த் திட்டம்:**

ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான திட்டம் பெரிய அளவில் செயலாக்கப்பட்டு வருகிறது. ஒரு ''குடியிருப்பு'' என்பது குறைந்தது 100 நபர்களாவது வாழும் பகுதியாகவும் அருகில் உள்ள பிறிதொரு குடியிருப்பிலிருந்து 250 மீட்டர் தொலைவில் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும். 1976–77 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி குடியிருப்புகள் கீழ்க் கண்ட ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:—

| வகை எண். | விளக்கம். | குடியிருப்பு களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | நீர் ஆதாரங்கள் இல்லாத குடியிருப்புகள் .. | 3,567 |
| 2 | குடிக்கத் தகுதியற்ற நீர் ஆதாரங்கள் உடைய குடியிருப்புகள் .. .. .. .. | 2,051 |

| வகை எண். (1) | விளக்கம். (2) | குடியிருப்புகளின் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 3 | குடிக்கத் தகுதியுள்ள நீர் ஆதாரங்கள் இருப்பினும் அனைத்து பருவத்திலும் குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகள் .. .. .. | 6,487 |
| 4 | குடிப்பதற்கு ஏற்ற மற்றும் அனைத்து பருவங்களிலும் நீர் கிடைக்கும் குடியிருப்புகளாக இருப்பினும், நீர் நிலைகள் தனியாருக்குச் சொந்தமான அல்லது பாதுகாக்கப்படாத நீர் ஆதாரங்கள் கொண்டவை .. . | 4,955 |
| 5 | குடியிருப்பிற்குள்ளே நல்ல நீர் நிலைகள் இல்லாமல் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் மாற்று நீர் நிலைகள் பெற்ற குடியிருப்புகள் .. | 1,107 |
| | மொத்தம் .. | 18,167 |
| 6 | நல்ல நீர் நிலைகள் கொண்ட குடியிருப்புகள் .. | 28,908 |
| | ஆக மொத்தம் .. | 47,075 |

இக்கணக்கெடுப்பின்படி, வகை ஒன்று முதல் ஐந்து வரை அடங்கியுள்ள 18,167 குடியிருப்புகள் போதுமான குடிநீர் வசதியற்ற, பிரச்சனைக் குடியிருப்புகளாக உள்ளன.

18,167 பிரச்சனைக் குடியிருப்புகளில் 3,465 குடியிருப்புகளுக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ரூ. 25.97 கோடி செலவில் 14.19 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் குடிநீர் வழங்கும் பணி நிறைவேற்றப்பட்டது. எஞ்சியுள்ள 14,702 குடியிருப்புகளுக்கு அடுத்து வரும் ஐந்தாண்டுத் திட்ட காலங்களில் குடிநீர் வசதி செய்து தர வேண்டியிருந்தது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம்:

31–3–1985 உடன் முடிவு பெற்ற ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 14,702 பிரச்சனைக் குடியிருப்புகளில் 11,614 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. 1982–83, 1983–84 ஆண்டுகளில் பருவ மழை பொய்த்து மாநிலம் முழுவதும் வறட்சி நிலை நிலவிய காரணத்தால், பல நீர் நிலைகள் வறண்டு போயின. நிலத்தடிநீர் மட்டம் மேலும் தாழ்ந்தது. இச்சூழ்நிலையில் குடிநீர் பிரச்சனை இல்லாதவையாக இருந்த 12,340 குடியிருப்புகள் திட்டக்காலத்தில் பிரச்சனை குடியிருப்புகளாக மாறின. அத்துடன் பொதுவான மக்கள் தொகை



பெருக்கத்தினாலும், ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமில்லாதவர்களுக்கான வேலை வாய்ப்பு காப்புறுதித் திட்டம் மற்றும் ஆதி திராவிடர் வீட்டு வசதி வாரியத்தால் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் குடியிருப்புகள் அமைக்கப்பெற்றதாலும் புதியதாக 2,486 குடியிருப்புகள் தோன்றின. எனவே, 14,826 குடியிருப்புகளுக்கு நாம் குடிநீர் வசதி செய்து தரவேண்டியிருந்தது. இவற்றில் 4,891 குடியிருப்புகளுக்கும் ஏற்கெனவே உள்ள பிரச்சனை குடியிருப்புகளில் 11,614 குடியிருப்புகளுக்கும் ஆக மொத்தம் 16,505 குடியிருப்புகளுக்கு 92.8 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் ரூ. 198.03 கோடி செலவில் ஆறாவது திட்டக் காலத்தில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. இதற்கு, அடிப்படைத் தேவைத் திட்டம் (ரூ.63 கோடி), ஊரக குடிநீர் வரைவுத் திட்டம் (ரூ. 45.19 கோடி) மற்றும் தன்னிறைவுத் திட்டம் (ரூ. 89.84 கோடி) ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செலவிடப்பட்டது. எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணி ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொடரப்படுகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்:

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 13,023 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளிக்கப்பட வேண்டிய நிலை இருந்தது. இத்திட்ட முதல் ஆண்டில் இருபது அம்ச திட்டத்தின் கீழ் 2,000 குடியிருப்புகளுக்கும் அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ் 1,500 குடியிருப்புகளுக்கும் ஆக மொத்தம் 3,500 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தர குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இதற்காக, அடிப்படைத் தேவைகள் திட்டத்தின் கீழ் ரூ. 24.68 கோடியும், மைய அரசின் மானியமாக விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ. 20.07 கோடியும் நிதி ஒதுக்கப்பட்டது. இந்த 3,500 குடியிருப்புகளில் 1986 ஆம்ஆண்டு பிப்ரவரி வரை 2,286 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்குவதற்கானபணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதனால் 8.10 லட்சம் மக்கள் பயன் அடைவர்.

1986-87 ஆம் ஆண்டுத் திட்டம்:

அடிப்படைத் தேவைகள் திட்டத்தின் கீழ் 1986–87 ஆம் ஆண்டில் ஊரக குடிநீர் திட்டப் பணிகளுக்கு ரூ. 30.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மத்திய அரசு ரூ. 15.44 கோடி மானியமாக அளிக்க ஒப்புதல் தெரிவித்துள்ளது. இருபத்தைந்து இலட்சம் மக்கள் தொகை கொண்ட 3,500 குடியிருப்புகளில் குடிநீர்த் திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்படும். ஏழாவது திட்ட காலத்தில் ஊரக குடிநீர்த் திட்டத்தின் மூலம் 10,900 ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ் இதற்காக ரூ. 175 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய அரசிடமிருந்து ரூ. 100 கோடி மானியமாகவும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**மறு கணக்கெடுப்பு செய்வது:**

ஊரகப் பகுதிகளில் குடிநீர் ஆதாரங்களின் தற்போதைய நிலையைக் கண்டறிந்து, குடியிருப்புகளை வகைப்படுத்துமுகத் தான், மறு கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதியதாக ஏற்பட்டுள்ள பிரச்சனை குடியிருப்புகளையும், ஏற் கனவே குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தும், அவை வறண்டோ, தூர்ந்தோ பயன் தராதவையாக மாறிவிட்ட குடிநீர்த் திட்டங்களைக் கொண்ட குடியிருப்புகளையும் கண்ட றியும் வகையில் மறு கணக்கெடுப்பு அமையும். மேற்கூறியவாறு, மறு ஆய்வு செய்யும்பொழுது வரும் கோடை காலத்தில் உள்ள நிலவரத்தையும் கருத்தில் கொள்ளுமாறும் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பணி 1986 செப்டம்பர் மாதம் முடிவடையுமென எதிர்பார்க்கப் படுகிறது. இந்த மறு ஆய்வின் அடிப்படையில் குடிநீர் வசதி செய்து தரப்பட வேண்டிய குடியிருப்புகளின் எண்ணிக்கை தற்போதைய கணக்கின்படி எஞ்சியுள்ள பிரச்சனைக் குடியிருப்புகளின் எண்ணிக்கையிலிருந்து மாறுபடக் கூடும்.

ஊரக குடிநீர் திட்டப் பணிகள் பின்வரும் மூன்று வகைப் படும்:—

(1) தனி கையிறைப்பான் திட்டங்கள்.
(2) தனி விசையிறைப்பான் திட்டங்கள்.
(3) கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்.

ஊரக குடிநீர் திட்ட நிதியில் ஐந்தில் மூன்று பங்கு தனி விசையிறைப்பான் திட்டம் மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டங் களுக்கு செலவிடப்படுகிறது. மீதமுள்ள இரண்டு பங்கு கையிறைப்பான் திட்டத்திற்குச் செலவிடப்படுகிறது. 1983—84-ல் இருந்து மேற்குறித்த பிரிவு இரண்டு மற்றும் மூன்றில் உள்ள திட்டங்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் வழங்கி வருகிறது. ஊரக குடிநீர் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் வழங்கிய கடன் குறித்த விபரங்கள் பின் வருமாறு:—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1983—84 .. .. | 496.07 |
| 1984—85 .. .. | 630.00 |
| 1985—86 .. .. | 696.16 |

**வறட்சி நிவாரணப் பணிகள்:**

1982—83 மற்றும் 1983-84 ஆண்டுகளில் தொடர்ச்சியாக பருவ மழை பொய்த்ததின் காரணமாக வறட்சி நிலை கடுமையாகியது. அப்போது தமிழ்நாடு முழுவதும் பஞ்சத்தைப் போக்க ஏற்பட்ட குடிநீர்ப் ரூ. 43·95 கோடி செலவில் ஊரகப் பகுதிகளில் 22,230 ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன.



1985-86 இல் கோயம்புத்தூர், அண்ணா, சேலம், திருச்சி, மதுரை மற்றும் பெரியார் மாவட்டங்களில் மிகவும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவிய பகுதிகளில் 571 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்:**

பொதுவாக, நிலத்தடி நீர் மட்டம் மாநிலத்தின் பல பகுதி களில் தாழ்ந்து கொண்டே போனதால், குடியிருப்புகளுக்கு அருகிலேயே நீடித்துப் பயன் தரும் நீர் ஆதாரங்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. அருகாமையில் அமைந்துள்ள குடியிருப்புகள் அனைத்திற்கும் ஒரு சேர பயன்படக்கூடிய கூட்டு குடிநீர்த் திட் டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் ஆய்வுச் செலவுகள் குறை வதுடன், தொடர்ந்து நிரந்தரமான பயன் கிடைக்க வாய்ப்பும் ஏற்படுவதால், ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பரவலாக அமைக்கப்படுதலே சிறந்தது எனக் கருதப்படுகிறது.

பல இடங்களில் உள்ள எஃகு மேல்நிலைத் தொட்டிகள் பழுதடைந்து விட்டதாகத் தெரியவருவதால், இவைகளுக்குப் பதிலாக தற்போதைய மக்கட் தொகையின் தேவைகளுக்கேற்ப சிமெண்ட் கான்கிரீட் மேல்நிலைத் தொட்டிகள் கட்ட உத் தேசிக்கப்பட்டுள்ளன.

**சாதனங்கள்:**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் போதுமான துளைக் கருவிகள் இல்லாததால் ஊரக குடிநீர் திட்டங்களை விரைந்து செயல்படுத்த இயலாத நிலை உள்ளது. பழுதடைந்த மற்றும்பழைய துளைக்கருவிகளுக்குப் பதிலாக புதிய கருவிகளைப் பெற வாரியம் திட்டமிட்டுள்ளது. யுனிசெப் நிறுவனம் சமீபத்தில் வாரியத்திற்கு ஒரு துளைக் கருவியை அளித்துள்ளது. அடிப்படைத் தேவைகள் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஐந்து புதிய துளைக் கருவிகளை வாங்குவதற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமது நிதி யிலிருந்து, மேலும் ஐந்து ஆழ்துளைக் கருவிகளை வாங்கவுள்ளது.

**வெளிநாட்டு உதவியுடன் நிறைவேற்றப்படும் திட்டங்கள்:**

(அ) உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பெற உள்ள குடிநீர் மற்றும் குறைந்த செலவிலான துப்புரவு திட்டங்கள்.

கோவை, மதுரை, சேலம் ஆகிய மூன்று பெரும் நகரங் களுக்கும் 75 நடுத்தர மற்றும் சிறு நகரங்களுக்கும் 740 வழியோர மற்றும் பிரச்சனை குடியிருப்புகளுக்குமான குடிநீர்த் திட்டமும் மேலும் 14 சிறு நகரங்களுக்கு குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டமும் உலக வங்கி உதவியுடன் நடைபெற்று வருகின்றது. இத்திட்டங்களின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:—

(அ) பவானி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 1,250 லட்சம் லிட்டர் அளவு கூடுதலாக, கோவை மாநகர் மற்றும் கோவை மாவட்டத்தில் உள்ள 20 சிறு நகரங்கள் மற்றும் 476 வழியோரக் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்குதல்.

(ஆ) வைகை அணையிலிருந்து மதுரை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு மொத்தம் 900 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்குதல்.

(இ) காவிரி ஆற்றிலிருந்து நாளொன்றுக்கு 850 லட்சம் லிட்டர் கூடுதலான அளவு குடிநீர் சேலம் மற்றும், அம் மாவட்டத்தில் உள்ள 11 சிறு நகரங்கள் மற்றும் 264 வழியோர கிராமக் குடியிருப்புகளுக்கும் வழங்குதல்.

(ஈ) போதுமான நீர் ஆதாரம் இல்லாத 44 நடுத்தர நகரங்களுக்கு, குழாய்க் கிணறு, திறந்தவெளிக் கிணறு, ஊடுருவல் கிணறுகள் மூலம் போதுமான அளவு குடிநீர் வசதி செய்து தருதல்.

(உ) 14 சிறு நகரங்களுக்கு குறைந்த செலவிலான துப்புரவு வசதி செய்து தரும் ஒரு முன்னோடித் திட்டம்.

(ஊ) குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தும் பணியாளர்களுக்கு நீர் நிலை மேற்பார்வை மற்றும் நிர்வாகித்தலில் பயிற்சிகள் அளிப்பது.

உலக வங்கித் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 149.42 கோடியாகும். இதில் 740 கிராமக் குடியிருப்புத் திட்டங்களுக்காக ரூபாய் 14.14 கோடி செலவிடப்படும். இத் திட்டத்தினால் பயனடையவிருக்கும் மக்கட் தொகை 38.90 இலட்சம் ஆகும்.

உலக வங்கித் திட்டத்திற்கான உடன்பாடு வாஷிங்டனில் 14-11-1984-இல் கையெழுத்தாகியது. நிதி உதவி பிப்ரவரி 1985 முதல் கிடைத்தது. உலக வங்கிக் கடனை 8½ சதவீத வட்டியுடன் 25 ஆண்டுகளில் (ஐந்தாண்டுகள் மாரடோரியம் உட்பட) திருப்பிச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 13 கோடி மானியமாகவும் ரூ. 11 கோடி கடனாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

பயனடையும் நகரங்கள் அவைகளின் மக்கட் தொகை, திட்டச் செலவுகள் குறித்த முழுவிவரம் அட்டவணையில் தரப்பட் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் செயலாக்கம் தொடங்கப்பட்டுள்ளது. 42 துணைத் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள் ளது. அவற்றுக்கு திட்ட வடிவமைப்பு தயாரிப்புப் பணி நடைபெற்று வருகிறது. நில எடுப்பு பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. 1986-87 இல் இத்திட்ட செயலாக்கத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.





குடிநீர் ஆதாரங்களின் நிர்வாக ஆய்வு:

நீர் ஆதாரங்களை நிர்வகித்தல் குறித்த ஆய்வும் உலக வங்கித் திட்டத்தின் ஒரு அம்சமாகும். இந்த ஆய்வு பொன்னையாறு, பெரியாறு, வைகை மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளில் மேற்கொள்ளப்படுகிறது. இப்படுகைகளில் நீர் ஆதாரங்களை கண்டறிந்து அவற்றின் மூலம் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களை, வருங்காலத்தில் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளை பரிந்துரைப்பது இந்த ஆய்வின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் (UNDTCD) நிபுணர்களால், தமிழ்நாடு நிலத்தடி நீர் துறையின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வரும் இந்த ஆய்வுப் பணி 1988 பிப்ரவரி மாதத்தில் முடிவடையும்.

கையிறைப்பான்களைப் புதுப்பித்தல்:

கையிறைப்பான்களை இலகுவாக இயக்கவும் தரத்தினை உயர்த்தவும் டேனிடா (DANIDA) மற்றும் யுனிசெப் (UNICEF) நிறுவனங்கள் உதவியுடன் பழைய கையிறைப்பான்களை அகற்றி அவற்றிற்குப் பதிலாக இந்தியா மார்க்-2 கையிறைப்பான்களைப் பொருத்தும் பணி 1982-83 முதல் தொடங்கப்பட்டது.

டேனிடா நிறுவனம் 2,500 கையிறைப்பான்களை தென்னாற்காடு மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள பழையனவற்றை புதுப்பிப்பதற்காக தந்துள்ளது. இம்மாவட்டங்களிலுள்ள எல்லா கையிறைப்பான்களையும் புதுப்பிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. மற்ற மாவட்டங்களிலும் இப்பணியினைத் தொடர யுனிசெப் நிறுவனம் 7,407 இந்தியா மார்க்-2 கையிறைப்பான்களை தர ஒப்புதல் அளித்து 5,215 கையிறைப்பான்களை அளித்துள்ளது. இதுவரை 2,150 கையிறைப்பான்கள் புதுப்பிக்கப் பட்டுள்ளன. இத்திட்டம் 1986—87இல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம்:

1978—79—இல் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ள 726 குடியிருப்புகளில் மக்கள் உபயோகிக்கும் குடிநீரில் உடல் நலத்திற்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய அளவில், லிட்டருக்கு 1.5 மில்லி கிராமுக்கும் அதிகமாக புளூரைடு கலந்திருப்பது கண்டறியப்பட்டது. இந்த 726 குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு நல்ல குடிநீரை தொலைவிலிருந்து கொண்டுவர ஒரு குடிநீர்த் திட்டம் ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தேவைத் திட்டத்தின் நிதியிலிருந்து 10 சதவீதம் ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. அடிப்படைத் தேவை திட்டத்தின் நிதியிலிருந்து 1985–86 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலம் வழங்கப்பெற ரூ. 1.5 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த தொகை பழுதடைந்த நீர் ஆதாரங்களை புதுப்பிப்பதற்கும் துருப்பிடித்த நிலையிலுள்ள எஃகு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பதிலாக சிமெண்ட் காங்கிரீட் தொட்டிகளை அமைப்பதற்கும் பயன்படுத்தப்படும். பேரூராட்சிகளில் உள்ள சுமார் 9,000 கையிறைப்பான்கள் மற்றும் விசையிறைப்பான் களை பராமரிப்பதற்காக ரூ. 50 இலட்சம் பேரூராட்சிகள் இயக்குநர் பொறுப்பில் தனியே அனுமதிக்கப்பட்டுள்ளது.

1986-87-ல் அடிப்படை தேவைகள் திட்டத்தின் ஒதுக் கீட்டின் 10 சதவீதமான ரூ. 3 கோடியளவிற்கு, ஊரக குடிநீர்த் திட்டங்களில் வரும் கையிறைப்பான்கள் மற்றும் விசையிறைப் பான்களின் பராமரிப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இறைப்பான்களில் ஏற்படும் பழுதுகளை அவ்வப்போது சரி செய்யும் வகையில் போதுமான உதிரிபாகங்களை இருப்பில் வைத்துக்கொள்ளுமாறு, மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நூறு கையிறைப் பான்களுக்கு மேல் உள்ள ஒன்றியங்களில் கூடுதலாக ஒரு பொருத்துனரை நியமனம் செய்து கொள்வதற்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் இறைப்பான்கள் செயல்படும் இடங்களைக் காட்டும் வகையில் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு அவைகள் அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளன. இறைப்பான்களை உடன் கண்டறியும் வகையில் அவைகளுக்கு வரிசை எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இறைப்பான்கள் நல்ல முறையில் செயல் படுகின்றனவா என்பதை அவ்வப்போது கண்டறிந்து தக்க பராமரிப்பு பணிகளை செய்ய வேண்டி முன்னறிவிப்பின்றி புலத் தணிக்கை மேற்கொள்ள வேண்டுமென சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள் ளனர். செப்பனிடும் பணிகளை களப்பணியாளர்கள் சீராக செயல்படுவதற்கு வசதியாக ஒரு வழிகாட்டி நூல், ஊரக வளர்ச்சி இயக்குநரால் தயாரித்தளிக்கப்பட்டுள்ளது.

நகரக் குடிநீர்த் திட்டம்:

மாநிலத்திலுள்ள 762 நகரங்களில் (சென்னை நீங்கலாக இரண்டு மாநகராட்சிகள், 98 நகராட்சிகள், 8 நகரியங்கள், 13 ஊராட்சி நகரியங்கள் மற்றும் 641 பேரூராட்சிகள்) 289 நகரங்கள் குடிநீர் வசதிபெற்றுள்ளன. மீதமுள்ள 473 நகரங் களில் 142 நகரங்களில் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 54 நகரங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 24 நகரங்களுக்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.





நகரக் குடிநீர் திட்டங்களுக்கு ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூபாய் 177.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அண்ணா மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல் நகருக்கு (வைகை) பேரணையிலிருந்து நீர் கொண்டு வருவதற்கான குடிநீர் மேம்பாட்டு திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலிருக்கும் கீழ்க் கண்ட குடிநீர் திட்டங்களின் பராமரிப்பு செலவுக்கென ரூபாய் 60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :—

1. ஆவடியிலுள்ள பாதுகாப்புத்துறை தொழிற்சாலை களுக்கு குடிநீர் திட்டம்.

2. நாளொன்றுக்கு 136.4 இலட்சம் லிட்டர் நீர் வழங்கப் படும் தூத்துக்குடி குடிநீர் திட்டம்.

3. நாளொன்றுக்கு 909 இலட்சம் லிட்டர் நீர் வழங்கப் படும் தூத்துக்குடி குடிநீர் திட்டம்.

4. திருச்சியிலுள்ள மண்டல பொறியியல் கல்லூரிக்கு குடி நீர் வழங்கும் திட்டம்.

5. திருச்சியிலுள்ள சிறு ஆயுத தொழிற்சாலைக்கு குடி நீர் வழங்கும் திட்டம்.

நகரக் கழிவு நீரகற்று திட்டம்:

கோவை, மதுரை, சிதம்பரம், பெரியகுளம், திருவொற்றியூர் உதகமண்டலம், காஞ்சிபுரம் நகரங்கள் மற்றும் அரவங்காடு நகரியத்திலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் நடைமுறையில் உள்ளது. மன்னார்குடி, கும்பகோணம், திருமங்கலம், சாத்தூர் நகரங்களிலும் மேட்டூர் நகரியத்திலும் இத்திட்டம் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே நடைமுறையில் உள்ளது. கழிவு நீரகற்றும் திட்டம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, பழனி, சேலம் மற்றும் லெப்பைக்குடிக்காடு ஆகிய நகரங்களில் செயற் பாட்டில் உள்ளது. ஈரோடு, வேலூர், கடலூர், திருப்பூர் நகரங்கள் மற்றும் மாமல்லபுரம் நகரியத்திற்கும் கழிவு நீரகற்று திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகரப்பகுதிகளில் கழிவு நீரகற்று திட்டங்களுக்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 15.40 கோடி நிதி ஒதுக்கப்பட் டுள்ளது. எல்லா மாவட்ட தலைநகரங்களுக்கும் கழிவு நீரகற்று திட்டங்களை செயல்படுத்த அரசு கருதுகிறது. சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் நகரங்களில் கழிவு நீரகற்று திட்டங்களுக்கான ஆய்வுப் பணி விரைவில் தொடங்கப்பட வுள்ளது.

குறைந்த செலவிலான துப்புரத் திட்டம்:

குறிப்பாக நகர்ப்புறங்களில் பொது மக்கள் சுகாதார வாழ்வு பெறுவதற்கு சுற்றுப்புற துப்புரவு மிகவும் அவசியம். தற்போதைய கழிவு நீர் அகற்று திட்டங்களுக்கு அதிக நிதி தேவைப்படுவதால் இவைகளை பெருமளவில் எல்லா இடங்களிலும் செயல்படுத்த இயலவில்லை. எனவே ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யப்பட்ட குறைந்த செலவிலான துப்புரவுந் திட்டம் குறிப்பிட்ட சில நகரங்களில் செயல்படுத்தப்படும்.

இதற்கான முன்னோடித் திட்டம் ஒன்று உலக வங்கி உதவியுடன் 14 சிறு நகரங்களில் ரூபாய் 7.10 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் தற்போதுள்ள 19,300 உலர்ந்த கழிவறைகளுக்குப் பதிலாக 11,500 புதிய தனிக் கழிவறைகளும், 1,200 பொதுக்கழிவறைகளும் அமைக்கப்படும். இத்திட்டத்தின் கீழ்வரும் 14 நகரங்களின் பட்டியல் இணைப்பில் தரப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 6.23 இலட்சம் மக்கள் பயனடைவர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமையக அதிகாரங்களைக் மண்டலங்களுக்கு பகிர்ந்தளித்தல்:

தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் பெருமளவில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மண்டல அலுவலகங்கள் அமைத்து தற்போது வாரியத்தின் தலைமைப் பொறியாளர்களிடம் உள்ள அதிகாரங்களை, மதுரை, வேலூர், கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் ஏற்படுத்தப்படும் மண்டல தலைமைப் பொறியாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். மதுரையை தலைமையிடமாகக் கொண்ட தெற்கு மண்டலம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. மற்ற மண்டலங்கள் 1986–87-ல் அமைக்கப்பட உள்ளன. வாரியத்தின் கணக்குப் பிரிவு பணிகளும் தக்க முறையில் மண்டல அலுவலகங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும். இவ்வாறு வாரியத்தின் நிர்வாகத்தை சீரமைப்பதனால், திட்டங்கள் தீட்டுதல், மற்றும் திட்ட செயலாக்கம் தொடர்பான பணிகள் மிக விரைவாக நடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் 1978 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்டது.





சென்னைப் பெருநகரில், வளர்ந்துவரும் மக்களின் தொகைக்கு ஏற்ப குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றுவதற்கான பணிகளை சீராகவும், திட்டமிட்டும் செயல்படுத்த திறனும், சாதனங்களும் கொண்ட ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட வேண்டும் என்பதே இவ்வாரியம் ஏற்படுத்தப்பட்டதின் நோக்கமாகும்.

இவ்வாரியம் அமைக்கப்பட்டபின், சென்னை நகரின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று அமைப்பின் அபிவிருத்திக்காக பல பணிகள் விரைவு படுத்தப்பட்டன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இவ்வாரியம் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 1,543 இலட்சம் செலவிலும், கழிவு நீரகற்றுதற்காக ரூ. 2,018 இலட்சம் செலவிலும், பணிகளைச் செயல்படுத்தியுள்ளது. வாரியம் நிறைவேற்றிய மூலதனப் பணிகளுக்கு அரசு பாதி மானியம், பாதி கடன் என்ற அடிப்படையிலும், வறட்சி நிவாரணப் பணிகள் போன்ற சிறப்புத் திட்டங்களுக்கு முழு மானியமாகவும் நிதி உதவி அளிக்கிறது. 1981–83 ஆண்டுகளில், சென்னை நகரில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக அரசு, வாரியத்திற்கு ரூ. 1,011 இலட்சம் மானியமாக வழங்கியது. 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் பெய்த பெருமழையினால் பாதிக்கப்பட்ட குடிநீர் பிரதானக் குழாய்கள் மற்றும் மின் பெருக்கிகள் ஆகியவற்றில் ஏற்பட்ட பழுதுகளை செப்பனிட ரூ. 25.15 இலட்சம் மானியமாக, வாரியத்துக்கு வழங்கப்பட்டது.

1986–87 ஆம் ஆண்டின் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு.

| | குடிநீர் விநியோகம். | கழிவு நீரகற்றுதல் | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| திட்டப் பணிகள் | 625.00 | 304.32 | 929.32 |
| சென்னை பெருநகர் கழிவு நீரகற்றும் திட்டம். (கிருஷ்ணா குடிநீர் திட்டம்.) | 4,750.00 | 0.01 | 4,750.01 |
| செயற்கை மழைத் திட்டம். | 13.00 | — | 13.00 |
| மொத்தம் | 5,388.00 | 304.33 | 5,692.33 |

தற்போது நாளொன்றுக்கு (250 இலட்சம் லிட்டர் நிலத்தடி நீர் உள்ளிட்ட) 2,450 இலட்சம் லிட்டர் அளவு குடிநீர் சென்னை நகருக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சென்னைப் பெரு நகரைச் சுற்றி அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 550 இலட்சம் லிட்டர் அளவு நிலத்தடி நீர் வழங்கப்படுகிறது.

வாரிய கட்டுப்பாட்டில் இயங்கும் குழாய் கிணறுகள், இந்தியா மார்க்-2 பம்புகள், லாரிகளில் நீர் தொட்டிகள், கழிவு நீரகற்று நிலையங்கள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| (1) நகரின் குடிநீர் வழங்கு குழாய்களின் மொத்த நீளம். | 1,440 கி.மீ. |
| (2) நகரின் கழிவு நீரகற்றும் குழாய்களின் மொத்த நீளம். | 1,282 கி.மீ. |
| (3) கிணற்றுப் பகுதிகளில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை. | 75 |
| (4) நகரின் குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை. | 4,209 |
| (5) நகரிலுள்ள இந்தியா மார்க்-2 பம்புகளின் எண்ணிக்கை. | 1,125 |
| (6) சத்துணவுத் திட்ட மையங்களில் வைக்கப் பட்டுள்ள குடிநீர்த் தொட்டிகளின் (உருக்குத் தொட்டிகள்) எண்ணிக்கை. | 397 |
| (7) நலிந்த பிரிவு மக்களின் குடிநீர் உபயோகத்திற்கென வைக்கப்பட்டுள்ள உருக்குத் தொட்டிகள். | 455 |
| (8) நகரின் குடிநீர் விநியோகத்திற்கென பயன் படுத்தப்படும் லாரிகளின் எண்ணிக்கை. | 42 |
| (9) கழிவு நீரேற்று நிலையங்கள் .. .. | 61 |
| (10) கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (முடிவடையும் தறுவாயில் உள்ள ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் உட்பட). | 3 |

ஆ. குடிநீர் வழங்கல்—நிறைவேற்றிய பணிகளும் திட்டங்களும் ;

சென்னை நகரில் பரவலாக உள்ள 73 குடிசைப் பகுதிகளில் வாழும் ஒரு இலட்சம் மக்களுக்கு குடிநீர் வசதியளிப்பதற்காக பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டன. பொருளாதார ரீதியாக நலிவுற்ற பிரிவினர் பெருமளவு வாழும் பகுதிகளில் சீரான வகையில் குடிநீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





2. வட சென்னையில், 4 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில், குடிநீர் வசதியை அபிவிருத்தி செய்ய, தாமரைப்பாக்கம் நிலத்தடி கிணற்றுப் பகுதிகளிலிருந்து, நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் நிலத்தடி நீரும் கூடுதலாகக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3. கூடுதலான குடிநீர் வழங்குவதற்காக, மின் இறைப் பான்கள் பொருத்தப்பட்ட 14 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய நிலத்தடி நீர்த்தொட்டி ஒன்று, இராயபுரம் அண்ணா பூங்காவில் அமைக்கப்பட்டுள்ளது.

4. 1978 இல் சென்னை நகரத்துடன் இணைக்கப்பட்ட பன்னிரெண்டு பஞ்சாயத்துப் பகுதிகளிலும் குடிநீர் வழங்கு குழாய்கள் அமைக்கும் பணி செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதில் திருவான்மியூர் பகுதிக்கான திட்டம் முடிக்கப்பட்டு செயலாக்கப்பட்டுள்ளது. சாலிக்கிராமம், கொடுங்கையூர் மற்றும் கோடம்பாக்கம் பகுதிகளுக்கான திட்டம் விரைவில் செயல்பட உள்ளது. கனகம் தரமணி, வேளச்சேரி, எருக்கஞ்சேரி கொளத்தூர், வில்லிவாக்கம், திருமங்கலம் ஆகிய பகுதிகளிலும் இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. தொலைவிலுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து இப்பகுதிகளுக்குக் குடிநீர் கொண்டுவர குழாய் அமைக்கும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

5. நகரத்தில் பழைய மற்றும் அடைபட்ட நீர் வழங்கு குழாய்கள் படிப்படியாக புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

6. தற்போது குடிநீர் வசதி பெறாத நகரின் பகுதிகளுக்கு குடிநீர் கொண்டுவரும் வகையில், பிரதான பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு வருகின்றன.

7. கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில், கூடுதலாக நாள் ஒன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறனுள்ள நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் நீர் சுத்திகரிப்புத் திறன் கூடுவதுடன் குடிநீரின் தரமும் கூடுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கு முறையில் தடைகள் ஏற்படுவதைத் தவிர்க்குமுகத்தான், பெரிய குழாய்கள் பொருத்தப்பட்டு கீழ்ப்பாக்கத்திலுள்ள நீரேற்றும் விசை இயந்திரங்களின் திறன் கூட்டப்பட்டுள்ளது.

8. ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் உதவியோடு ஆரணி-கொடுதலை ஆற்றுப்படுகைகளில், நீர் புவியமைப்பு மற்றும் செயற்கை நீர் செலுத்தும் முறைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு புதிய நிலத்தடி நீர் அமைப்புகளை அறுதியிட்டுள்ளது. இந்நீர் அமைப்புகளை ஆதாரமாகக் கொண்டு ஓரளவுக்கு சென்னைக்கு வழங்கப்படும் குடிநீர் அளவினைக் கூட்ட முடியும்.

9. வாரிய மற்றும் மாநில அரசின் பிற துறைகளைச் சார்ந்த
அலுவலர்கட்கு பணிப் பயிற்சி கொடுப்பதற்காக கீழ்ப்பாக்கம்
நீரேற்று நிலையத்தில் ஒரு பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது.
இப்பயிற்சி வாய்ப்பு பிற மாநிலத்தை சார்ந்த அலுவலர்கட்கும்
வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய பயிற்சி மையம் நாட்டி
லேயே முதலாவதாக நமது மாநிலத்தில் தான் உருவாக்கப்பட்
டுள்ளது. இதுவரை 495 வகுப்புகள் நடத்தப்பெற்று 3,541
அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்புத் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு வளர்ச்சிக் குழு
மத்தின் உதவியோடு நீர் கசிவு கண்டுபிடித்தல், பராமரிப்பு
மற்றும் நீர் ஆதாரங்கள் குறித்து திட்டமிடுதல் போன்ற பணி
களில், வாரியத்தை சார்ந்த பொறியாளர்கட்கு குறுகிய கால
பயிற்சி தரப்பட்டுள்ளது.

கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம்:

சென்னை நகரத்தின் வளர்ந்து வரும் குடிநீர்த் தேவையை
நிறைவு செய்யும்முகத்தான், தொலை நோக்கு திட்டமாக
கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்
திட்டம் பூண்டி, செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் நீர்த்
தேக்கங்களுக்கு 1,200 கோடி கனஅடி நீர் கொண்டுவரப்பட
வகை செய்கிறது.

தமிழ்நாடு-ஆந்திர மாநில எல்லையில் தொடங்கி சென்னைக்கு
அருகில் உள்ள நீர்த்தேக்கங்கள் வரையில் கால்வாய் அமைக்கும்
பணியினை மாநிலப் பொதுப்பணித் துறை மேற்கொண்டுள்ளது.
இந்நீர்த் தேக்கங்களில் இருந்து குழாய்களின் மூலம் நீர் கொண்டு
வருதல், சுத்திகரித்தல் குழாய்களின் மூலம் குடிநீர் விநியோகம்
செய்தல், மற்றும் இதனால் கூடுதலாக வரக்கூடிய கழிவுநீரினை
அகற்றுதலும், சென்னைக் குடிநீர் வாரியத்தின் பொறுப்பாகும்.
இப்பணிகளுக்கு 1983-ம் ஆண்டின் விலைகளின்படி ரூபாய் 268
கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நீர் சுத்திகரிப்பு
நிலையம் அமைத்தல் மற்றும் குழாய் பதித்தல் போன்ற பணிகளை
செயற்படுத்தத் தேவையான நிலக் கையகப்படுத்து நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்காக 1986-87
ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 250 இலட்சம்
மானியமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்:

கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் நிறைவேறுவதற்கு சில ஆண்டுகள்
ஆகக்கூடும் என்பதால், குறுகிய கால அடிப்படையில், ஏற்கனவே
தயாரிக்கப்பட்டுள்ள பெருந்திட்டத்துடன் இணையக்கூடிய, குடி
நீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தேவைப்படுகிறது.



அண்மையில் முடிவுற்ற ஐக்கிய நாடுகளின் வளர்ச்சிப்பணி திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, பூண்டி, கன்னிகைப் பேர் மற்றும் கொடுதலை ஆற்றுப் படுகைகளில் நிலத்தடிநீர் வளங்கள் உள்ளதை அறுதியிட்டுள்ளது. மேற்குறித்த நீர் ஆதாரங்களில் கிணறுகள் அமைக்கப்பெற்று நாள் ஒன்றுக்கு 550 லட்சம் லிட்டர் அளவுநீர் எடுக்க ரூ. 98 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. குழாய்க் கிணறுகள், பிரதான நீர்க் குழாய்கள், பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பகிர்மானக் குழாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளும் இம்மதிப்பீட்டில் அடங்கும். இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, உலக வங்கியின் உதவி கோரப் பட்டுள்ளது.

சென்னை நகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவினை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டு இத்திட்டத்தின் முதற்கட்ட பணிகளுக்கு ரூ. 15 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு தற்போது முப்பது ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

கழிவு நீரகற்றல்.—நிறைவேற்றிய பணிகளும் திட்டங்களும் :

(1) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் ஆய்வின் விளைவாக, மிக இன்றியமையாத 15 கழிவுநீர் உந்து நிலையங்கள் சீரமைக்கப்பட்டு, அதிக திறன் உள்ள விசை இயந்திரங்கள் கொண்டதாக, மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

(2) கிண்டி பகுதியிலும், ஆளுநர் மாளிகை அருகிலுள்ள அடையாறு தெற்குப் பகுதியிலும், அரும்பாக்கம், அமைந்தகரை ஆகிய பகுதிகளிலும் கழிவுநீர் அகற்றும் திட்டத்தைச் செயற்படுத்த கழிவு நீர்க் குழாய்கள், கழிவு நீரேற்று நிலையங்கள், மற்றும் அதிக சக்தி உள்ள மின்விசை இயந்திரங்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன; தியாகராயநகர், நந்தனம், கீழ்ப்பாக்கம் பகுதியிலுள்ள பழைய கழிவுநீர்க் குழாய்கள் அகற்றப்பட்டு, புதிய குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஐந்து பகுதிகளில் பழைய குழாய்களை மாற்றும் பணி தொடங்கப்பெற உள்ளது.

(3) ஜார்ஜ்டவுன் பகுதியிலுள்ள 21 தெருக்களில் பெரிய அளவு வடிகுழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதியிலுள்ள 47,000 மக்கள் பயனடைந்துள்ளனர்.

(4) சென்னை நகரின் மூன்று, நான்கு மற்றும் ஐந்தாவது மண்டலங்களிலிருந்து வரும் கழிவுநீரை சுத்திகரிக்க கோயம்பேடு, நேசப்பாக்கம், பெருங்குடி ஆகிய இடங்களில் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. கொடுங்கையூரில் சென்னை நகரின் முதலிரண்டு மண்டலங்களிலிருந்து வரும் கழிவு நீரினை சுத்திகரிக்க, ஒரு புதிய சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணி விரைவில் முடிக்கப்பட உள்ளது. இந்நிலையம் 1986-87-ல் செயற்படத் தொடங்கும்.

(5) ஜோதியம்மாள் நகர், வெங்கடசாமிபுரம், கங்கைகரை புரம், ஆஞ்சநேயநகர் ஆகிய குடிசைப் பகுதிகளில் உள்ள கழிவு களை, நகர வடிகால் திட்டத்துடன் இணைக்கும் பணி முடிக்கப் பட்டு விட்டது. ஆசீர்வாதபுரத்தில் பணி முடிவடையும் தரு வாயில் உள்ளது. மேல்பத்தடை, பள்ளிப்பட்டு, மாம்பலம் குளக் கரை, திருவான்மியூர், மற்றும் வில்லிவாக்கம் பகுதிகளுக்கான கழிவு நீரகற்றுத் திட்டப் பணிகள் விரைவுபடுத்தப்படும்.

(6) திருவான்மியூர் மற்றும் வில்லிவாக்கம் பகுதியில் கழிவு நீர்த் திட்டத்துடன் இணைக்கத்தக்க வசதிகள் பெற்ற பகுதி களின், கழிவு நீர் அகற்றும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

(7) நந்தனம் பகுதியிலிருந்து வரும் கழிவுநீர் அடையாறு நதியில் கலப்பதைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய கழிவு நீர் நிலைய அமைப்புப் பணிகள் முடிவு பெற்றுள்ளன.

(8) சென்னை நகரின் பெருகி வரும் மக்கட்தொகை, நகரப் பகுதிகளின் இடையே தோன்றிவரும் குடிசைப்பகுதிகள் மற்றும் அதிக அளவில் பெருகி வரும் பல அடுக்கு மாடிக் குடியிருப்புகளும் நகரில் உள்ள பழைய கழிவுநீர் அகற்றும் அமைப்பினை மிகவும் பாதித்துள்ளன. இவைகளை கழிவுநீர் குழாய்களில் அவ்வப்போது அடைப்புகள் ஏற்பட்டு சில இடங்களில் கழிவுநீர் வழிந்து ஓடு வதற்கும் காரணமாகின்றன. இந்நிலையை மாற்றவும் புதிய கழிவுநீரகற்று நிலையங்களை அமைக்கவும் வாரியம் பல்முனை நடவடிக்கை எடுத்து வருகிறது.

(9) கழிவுநீர்க் குழாய்களில் ஏற்படும் அடைப்பினை நீக்க தேவையான உபகரணங்கள் மற்றும் நவீன முறையில் துரித மாக இப்பணியை ஆற்ற தேவைப்படும் சாதனங்களையும் பெற வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதனால் கழிவுநீர்த் திட்டங்களை விரிவுபடுத்தவும் இயலும்.

செயற்கை மழைத் திட்டம்:

குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்துவதற்காக தமிழக அரசி னால், சோதனை முறையில் செயற்கை மழைத் திட்டம் மேற் கொள்ளப்பட்டது. கடந்த 1985 ஆம் ஆண்டு பருவமழைக் காலத்தில் மூன்றாவது முறையாக இத்திட்டம் நடைபெற்றது. இதற்காக வாங்கப்பட்ட தனிரக விமானம் இந்திய விமானப் போக்குவரத்து விதிகளின் கீழ், தற்போது பதிவு செய்யப் பட்டுள்ளது. இவ்விமானத்திற்குப் "பறப்பதற்கான தகுதிச் சான்றிதழ்" விமானப் போக்குவரத்துத்துறையின் தலைமை இயக்குநரால் வழங்கப்பட்டுள்ளது. 1985-ல் ஜுலை முதல் நவம்பர் வரையிலான பருவ காலத்தில் இவ்விமானம் முழுமையாக பயன்படுத்தப்பட்டது.





அமெரிக்க நிறுவனமான திருவாளர்கள் "அட்மாஸ்பெரிக்ஸ்" நிறுவனத்தினரின் ஒரு விமானியும் மற்றும் இரண்டு ரேடார் வானியல் நிபுணர்களும் அடங்கிய குழு ஒன்று, இப்பணியில் ஈடுபட்டுள்ள நமது பணியாளர்களுக்கு இத்திட்டத்தில் பயிற்சி யளித்துள்ளது. அரசு இத்திட்டத்தின் செயலாக்கத்தினை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது. விமானப் பராமரிப்பு மற்றும் பணியாளர்கள் அமர்த்தல் போன்ற சார்புடைய பொறுப்புக் களையும் வாரியமே மேற்கொள்ளும். இதற்காக ரூ. 13·00 இலட்சம் மானியமாக 1986–87 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இணைப்புகள்.

உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப் பெற உள்ள குடிநீர் மற்றும் குறைந்த செலவிலான சுகாதாரத் துப்புரவுத் திட்டங்கள்—

| வரிசை எண். | விவரம். | 1981 ஆம் ஆண்டு மக்கட் தொகை. | செலவினம். (ரூபாய் (இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பிரிவு—1 கோயம்புத்தூர் மற்றும் 20 நகரங்கள் .. .. | 8,76,536 | 3,683.58 |
| 2 | பிரிவு—2 மதுரை .. .. .. .. .. | 8,17,562 | 3,521.45 |
| 3 | பிரிவு—3 சேலம் மற்றும் 11 நகரங்கள் .. .. .. | 5,28,547 | 3,302.03 |
| 4 | பிரிவு—4 44 நகரங்கள் .. .. .. .. | 4,69,888 | 2,131.79 |
| 5 | பிரிவு—5 குறைந்த செலவிலான சுகாதார துப்புரவுத் திட்டம் 14 நகரங்களில் .. | 6,22,140 | 709.55 |
| 6 | 740 கிராம குடியிருப்புகள் (பிரிவு 1 மற்றும் 3 இல்) .. | 5,73,401 | 1,413.51 |
| | மொத்தம் .. | 38,88,074 | 14,491.91 |
| 7 | பிரிவு—6 சாதனங்கள் மற்றும் பயிற்சியும் ஆலோசனையும் | | 350.00 |
| 8 | பிரிவு—7 கோவையில் நீர் அளமானிகள் பொருத்துவதற்கான சுழல் நிதி | | 100.00 |
| | | | 14,941.91 அல்லது ரூபாய் 149.42 கோடி. |



உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்றப்பெற உள்ள குடிநீர் மற்றும் குறைந்த செலவிலான சுகாதாரத் துப்புரவு திட்டங்கள்.

| வரிசை எண். | நகரத்தின் பெயர். | மாவட்டம். | நிலை. | 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை. | செலவினம். (இலட்சங்களில்). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | பிரிவு—1. | | | | |
| 1 | கோயம்புத்தூர் ... .. | கோயம்புத்தூர் | மாநகராட்சி | 7,00,923* | 2,124.50 |
| 2 | மதுக்கரை ... .. | ஷை | பேரூராட்சி | 8,100 | 90.30 |
| 3 | செட்டிப்பாளையம் .. | ஷை | ஷை | 6,509 | 60.33 |
| 4 | எட்டிமடை .. .. | ஷை | ஷை | 6,145 | 52.62 |
| 5 | ஒத்தக்கால்மண்டபம் .. | ஷை | ஷை | 6.175 | 55.15 |
| 6 | திருமலையம்பாளையம் .. | ஷை | ஷை | 4,400 | 58.10 |
| 7 | வெள்ளலூர் .. .. | ஷை | ஷை | 13,838* | 69.12 |
| 8 | பெரியநாயக்கன்பாளையம் | ஷை | ஷை | 21,000 | 231.54 |
| 9 | நரசிம்மநாயக்கன்பாளையம் | ஷை | ஷை | 5,779* | 33.80 |
| 10 | கூடலூர் .. .. | ஷை | ஷை | 8,481 | 38.56 |
| 11 | துடியலூர் .. .. | ஷை | ஷை | 11,926 | 160.74 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 12 | சர்க்கார்சாமகுளம் .. | கோயம்புத்தூர் | பேரூராட்சி | 3,025 | 20.59 |
| 13 | சின்னவேடம்பட்டி .. | ஷை | ஷை | 5,968* | 90.42 |
| 14 | இடிகரை .. .. | ஷை | ஷை | 5,045 | 27.66 |
| 15 | காளப்பட்டி .. | ஷை | ஷை | 6,200 | 62.93 |
| 16 | சரவணம்பட்டி .. | ஷை | ஷை | 5,045 | 59.74 |
| 17 | வெள்ளக்கிணறு .. | ஷை | ஷை | 7,371 | 76.03 |
| 18 | கண்ணம்பாளையம் .. | ஷை | ஷை | 6,950 | 60.47 |
| 19 | கருமாத்தம்பட்டி .. | ஷை | ஷை | 12,765 | 62.52 |
| 20 | இருகூர் .. .. | ஷை | ஷை | 14,400 | 96.04 |
| 21 | பல்லடம் .. .. | ஷை | ஷை | 16,491* | 157.42 |
| | | | | | 3,683.58 |



| வரிசை எண். | நகரத்தின் பெயர். | மாவட்டம். | நிலை. | 1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கட் தொகை. | செலவினம் (இலட்சங்களில்). |
|---|---|---|---|---|---|
| | பிரிவு—2. | | | | |
| 1 | மதுரை .. | .. மதுரை | மாநகராட்சி | 8,17,562* | 3,251.45 |
| | பிரிவு—3 | | | | |
| 1 | சேலம் .. | .. சேலம் | நகராட்சி | 3,61,177 | 1,623.42 |
| 2 | ஆத்தூர் .. | .. ஷை | ஷை | 50,537* | 700.13 |
| 3 | சூரமங்கலம் .. | .. ஷை | ஷை | 26,624* | 236.79 |
| 4 | மேச்சேரி .. | .. ஷை | ஷை | 15,247 | 97.56 |
| 5 | ஓமலூர் .. | .. ஷை | ஷை | 10,309* | 59.34 |
| 6 | கருப்பூர் .. | .. ஷை | ஷை | 9,303 | 60.33 |
| 7 | கண்ணன்குறிச்சி | .. ஷை | ஷை | 11,411 | 87.33 |
| 8 | அயோத்திபட்டிணம் | .. ஷை | ஷை | 7,605 | 57.80 |
| 9 | வாழப்பாடி .. | .. ஷை | ஷை | 8,315 | 76.62 |
| 10 | ஏதாபூர் .. | .. ஷை | ஷை | 10,800 | 84.54 |
| 11 | பெத்தநாயக்கன்பாளையம் | .. ஷை | ஷை | 9,755 | 121.13 |
| 12 | நரசிங்கபுரம் .. | .. ஷை | ஷை | 7,464 | 97.04 |
| | | | | | 3,302.03 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| | பிரிவு—4 | | | | |
| 1 | பொன்னேரி .. | .. செங்கல்பட்டு | பேரூராட்சி | 16,029* | 40.26 |
| 2 | பள்ளிப்பட்டு .. | .. டிை | டிை | 7,284 | 26.95 |
| 3 | கும்மிடிப்பூண்டி | .. டிை | டிை | 6,976 | 41.74 |
| 4 | பள்ளிக்கொண்டா | .. வடாற்காடு | டிை | 16,391* | 37.95 |
| 5 | திருவலம் .. | .. டிை | டிை | 4,896 | 17.68 |
| 6 | அம்மூர் .. | .. டிை | டிை | 7,030 | 26.54 |
| 7 | கீழ்பென்னாத்தூர் | .. டிை | டிை | 9,998 | 36.81 |
| 8 | ஒடுகத்தூர் .. | .. டிை | டிை | 7,300 | 39.46 |
| 9 | பென்னாடம் .. | .. தென்னாற்காடு | டிை | 12,400 | 35.40 |
| 10 | கிள்ளை .. | .. டிை | டிை | 9,100 | 48.72 |
| 11 | வடக்கானந்தல் | .. டிை | டிை | 14,970 | 24.59 |
| 12 | வளவனூர் .. | .. டிை | டிை | 13,448 | 41.60 |
| 13 | திட்டக்குடி .. | .. டிை | டிை | 15,880 | 49.20 |
| 14 | தேவூர் .. | .. டிை | சேலம் | 8,300 | 48.49 |
| 15 | அரசிரமணி .. | .. டிை | டிை | 15,600 | 67.90 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 16 | கணியூர் .. | .. கோயம்புத்தூர் | பேரூராட்சி | 6,990 | 19.23 |
| 17 | சென்னசமுத்திரம் | .. பெரியார் | டிை | 7,000 | 28.94 |
| 18 | குகளூர் .. | .. டிை | டிை | 11,090 | 73.44 |
| 19 | அத்தாணி .. | .. டிை | டிை | 7,120 | 42.67 |
| 20 | கூடலூர் .. | .. நீலகிரி | டிை | 21,660 | 112.11 |
| 21 | பெருமகளூர் .. | .. தஞ்சாவூர் | டிை | 5,929 | 25.42 |
| 22 | நீடாமங்கலம் .. | .. டிை | டிை | 6,561* | 21.33 |
| 23 | சீர்காழி .. | .. தஞ்சை | நகராட்சி | 25,508* | 143.15 |
| 24 | காட்டுப்புத்தூர் .. | .. திருச்சிராப்பள்ளி | பேரூராட்சி | 10,217 | 34.16 |
| 25 | கல்லக்குடி .. | .. டிை | டிை | 8,100 | 68.46 |
| 26 | உடையார்பாளையம் | .. டிை | டிை | 9,617 | 39.86 |
| 27 | புள்ளம்பாடி .. | .. டிை | டிை | 6,600 | 42.87 |
| 28 | கிருஷ்ணராயபுரம் | .. டிை | டிை | 8,540 | 41.38 |
| 29 | அரியலூர் .. | .. டிை | டிை | 20,635* | 184.59 |
| 30 | வேடசந்தூர் .. | .. மதுரை | டிை | 6,308* | 32.64 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 31 | தேவாரம் .. | .. மதுரை | பேரூராட்சி | 15,800 | 107.10 |
| 32 | கோம்பை .. | .. ஷை | ஷை | 14,550 | 52.96 |
| 33 | பண்ணைபுரம் .. | .. ஷை | ஷை | 8,158 | 46.92 |
| 34 | கீரனூர் .. | .. ஷை | ஷை | 5,390* | 22.21 |
| 35 | பரவை .. | .. ஷை | ஷை | 11,080* | 44.57 |
| 36 | வீரபாண்டி .. | .. ஷை | ஷை | 11,500 | 51.33 |
| 37 | இலுப்பூர் .. | .. புதுக் கோட்டை | ஷை | 8,654 | 51.24 |
| 38 | கமுதி .. | .. இராமநாத புரம் | ஷை | 13,200 | 56.38 |
| 39 | அபிராமம் .. | .. ஷை | ஷை | 9,020 | 23.87 |
| 40 | புதுவயல் .. | .. ஷை | ஷை | 6,304 | 26.83 |
| 41 | கண்டனூர் .. | .. ஷை | ஷை | 6,128 | 23.25 |
| 42 | சாம்பவர்வடகரை | .. திருநெல் வேலி | ஷை | 10,520 | 28.89 |
| 43 | கீழப்பாவூர் .. | .. ஷை | ஷை | 14,800 | 66.92 |
| 44 | ஆழ்வார்குறிச்சி | .. ஷை | ஷை | 7,907 | 35.78 |
| | | | | | 2,131.79 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| | பிரிவு—5 | | | | |
| 1 | பொள்ளாச்சி .. | .. கோவை | நகராட்சி | 82,115* | 62.61 |
| 2 | ஆம்பூர் .. | .. வட ஆற்காடு | ஷை | 66,026* | 65.93 |
| 3 | செங்கற்பட்டு .. | .. செங்கற்பட்டு | ஷை | 47,324* | 54.55 |
| 4 | பண்ருட்டி .. | .. தென் ஆற் காடு | ஷை | 43,036* | 45.55 |
| 5 | ஆத்தூர் .. | .. சேலம் | ஷை | 50,537* | 65.01 |
| 6 | கூனூர் .. | .. நீலகிரி | ஷை | 44,750* | 57.25 |
| 7 | தேனி—அல்லிநகரம் | .. மதுரை | ஷை | 53,023* | 63.75 |
| 8 | பட்டுக்கோட்டை | .. தஞ்சாவூர் | ஷை | 49,484* | 63.72 |
| 9 | சீர்காழி .. | .. ஷை | ஷை | 25,508* | 30.02 |
| 10 | தென்காசி .. | .. திருநெல்வேலி | ஷை | 49,214* | 64.49 |
| 11 | கோபிசெட்டிபாளையம் | .. பெரியார் | ஷை | 43,846* | 57.57 |
| 12 | துறையூர் | திருச்சிராப் பள்ளி | ஷை | 23,599* | 30.12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | அறந்தாங்கி .. | .. புதுக்கோட்டை | நகராட்சி | 23,227* | 24.92 |
| 14 | கொடைக்கானல் | .. மதுரை | நகரியம் | 20,451* | 24.06 |
| | | | | | 709.55 |

குறிப்பு:—பிரிவு 1 முதல் 4 .. .. குடிநீர் வழங்குதல்.

பிரிவு 5 .. .. குறைந்த செலவில் சுகாதார துப்புறவு திட்டம்.

* 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் அடங்கிய துணை திட்டப்பகுதி.

கணக்கெடுப்பு மக்கள் தொகை இல்லாத பகுதிகளில் எதிர்பார்ப்பு எண்ணங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

**தவணைத்நாள்.**

சே எண் :

ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 22/11/91 | | | |
| 21/6/93 | | | |
| 24/8 | 27/8 | | |
| 30.6.95 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.